சிலுவையின் முக்கியத்துவம் என்ன?

டெரிக் பிரின்ஸ்

Originally published in English under the title
"What's So Important About The Cross?"

Printed by Derek Prince Ministries

TA/3000/0522

ISBN 978-93-92947-07-0

"WHAT'S SO IMPORTANT ABOUT THE CROSS" (Tamil)

"SILUVAIYIN MUKIYATHUVAM YENNA?"

Published by permission in the Tamil language.

Cover Design: DPM-Asia/Pacific

For orders & other enquiries please contact :
DEREK PRINCE MINISTRIES - INDIA

C/o DPM EXIM
A-40, Anna Nagar Main Road,
Sivapragasam Salai, Tennur, Trichy - 620 017
E-mail: admin@derekprince.in
Phone : 00-91-98430 55414 / 95855 38201

Derek Prince
MINISTRIES INDIA

பொருளடக்கம்

முன்னுரை:

பகுதி ஒன்று : மையத்தில் சிலுவை

பகுதி இரண்டு : என் வாழ்வில் சிலுவை

முன்னுரை

தேவனுடைய ஆசீர்வாதங்கள் மற்றும் இரக்கத்தின் ஊற்று

சில ஆண்டுகளுக்கு முன் என் நண்பராகிய ராஸ் பேட்டர்சனுடன் நான் சிங்கப்பூரில் ஊழியம் செய்துகொண்டிருந்தேன். அவர் சீனா நாட்டின் டெரிக் பிரின்ஸ் ஊழியங்களுக்கு தலைவராக இருக்கிறார். கூட்டங்களுக்கு மத்தியில் நாங்கள் ஷாப்பிங் செய்யும் ஒரு ஸ்தலத்தில் நடந்துகொண்டிருந்தோம். ஒரு குறிப்பிட்ட கடை ஜன்னல் முன் நாங்கள் நின்று அங்கே வைக்கப்பட்டிருக்கும் பொருட்களை தற்செயலாக வாங்கும் எண்ணம் இல்லாமல் பார்த்துக் கொண்டிருந்தோம். திடீரென்று ராஸ் என்னிடம் சொன்னார் ”சபை தன்னுடைய கடை ஜன்னலில் எத்தனையோ பொருட்களை வைத்திருக்கிறது, ஆகையால் சிலுவையின் தரிசனத்தை அது இழந்துவிட்டது.”

இந்த வார்த்தைகளை ராஸ் சொன்ன நொடியில் *இது எவ்வளவு உண்மை* என்று நான் எனக்குள் யோசித்தேன். பின்பு நான் அவருடைய கருத்தை சிந்தித்தபோது அது என்னை பற்றிக்கொண்டது. சபை மற்ற பல பொருட்களை தன் ''ஜன்னலில்'' எப்படி வைத்திருக்கிறது என்பதை நான் பார்த்தேன். சபைக்கு இன்று பல கருத்துக்கள் முன் வைக்கப்படுகிறது - எப்படி சுகம் பெறுவது, எப்படி விடுதலை பெறுவது, எப்படி செழிப்பது, எப்படி தீர்க்கதரிசனம் கூறுவது, எப்படி நல்ல தகப்பனாய் இருப்பது, எப்படி பலமுள்ள திருமண வாழ்வு நடத்துவது போன்ற பல போதனைகள் கொடுக்கப்படுகின்றன.

இப்படிப்பட்ட போதனைகளை நான் விமர்சிக்கவில்லை, ஏனென்றால் அது போன்ற பல மையக்கருத்துக்களை நானே போதித்துள்ளேன். ஆனால் இதை ''எப்படி செய்வது'' என்ற போதனைகள் சிலுவையில்லாமல் செயலாற்றாது என்பதை நாம் மனதில் கொள்ளவேண்டும். தேவனுடைய எல்லா ஆசீர்வாதம் மற்றும் எல்லா இரக்கத்தின் ஊற்றும் *இயேசு கிறிஸ்துவின் சிலுவைதான்* என்று நாம் ஒருபோதும் மறந்துபோக கூடாது. சிலுவையை மையமாக கொள்வதிலிருந்து நாம் திருப்பப்பட்டால் மற்ற எல்லா ஆசீர்வாதங்களுக்கும் உண்மையான அர்த்தம் இல்லை.

சிலுவையை தவிர நமக்கு அநேக நல்ல கோட்பாடுகள் நெறிமுறைகள் மற்றும் சட்டங்கள் நமக்கு உண்டு -- ஆனால் இவைகளை நாம் கடைப்பிடிக்க தவறுகிறோம். பின்பு இந்த கோட்பாடுகளுக்கு தக்கதாக நாம் வாழ முடியவில்லையென்று நாம் அறியும் போது, அவைகளை நம்முடைய தளத்திற்கு மெதுவாக தாழ்த்திவிடுகிறோம். ''நம்முடைய தளம்'' புதிய ஏற்பாட்டின் அளவுகோல்களை எட்டாது என்பதை உங்களுக்கு நான் நினைப்பூட்டுகிறேன். நம்முடைய தளத்தில் வாழ்வு வாழ்வது இறுதியாக நமக்கு எவ்வித நித்திய மதிப்பும் இல்லாததாய் இருக்கும்.

ஆகவே நாம் என்ன செய்ய வேண்டும்**?** நாம் முதலாவது செய்யும் எல்லாவற்றின் மையத்திலும் சிலுவையை வைப்பதின் முக்கியத்துவத்தை அறிந்து கொள்ளவேண்டும். இப்புத்தகத்தில் நாம் கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தில் எல்லா அம்சத்தின் மையத்திலும் சிலுவை இருக்க வேண்டும் என்ற உண்மையை நான் விவரிக்க விரும்புகிறேன். இந்த அஸ்திபாரத்தை நாம் உறுதிசெய்தவுடன், நமது வாழ்வு முழுவதிலும் இச்சத்தியத்தை எப்படி செயல்முறையாக பயன்படுத்துவது என்பதையும் நாம் தியானிப்போம்.

பகுதி ஒன்று

மையத்தில் சிலுவை

அதிகாரம் 1

சிலுவையும் மனித ஞானமும்

சிலுவையை வாழ்வின் மையத்தில் வைப்பதின் அவசியத்தை அப்போஸ்தலனாகிய பவுல் நன்கு அறிந்திருந்தார். கொரிந்துவில் இருந்த சபையின் பங்காக இருந்த புதிய கிறிஸ்தவர்களுக்கு அவர் எழுதின முதல் நிரூபத்தில் இதை அவர் தெளிவாக வெளிப்படுத்தினார். 1 கொரிந்தியரின் முதல் இரண்டு அதிகாரங்கள் எனக்கு மிகவும் பிரியமானவை, ஏனெனில் அவைகள் இந்த உலகத்தின் ஞானத்திற்கும், சிலுவையின் செய்திக்கும் உள்ள வித்தியாசத்தைக் குறித்துப் பேசுகின்றன.

பவுல் ஞானத்தைக் குறித்து எழுதினபோது, தன் காலத்திலிருந்த கிரேக்க தத்துவ சாஸ்திரத்தை மனதில்வைத்து எழுதுகிறார். நான் ஒரு கிறிஸ்தவனாகும் முன், ஏழு ஆண்டுகள் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் கிரேக்க தத்துவம் படித்து வந்தேன். கிரேக்க தத்துவம் மற்றும் மனித ஞானத்தைக் குறித்து பவுலின் வார்த்தைகள் எவ்வளவு உண்மையும், ஏற்றதுமாயிருக்கிறதென்று என்னால் புரிந்து கொள்ள முடிகிறது.

ஒரு ஆச்சரியமான குறிக்கோள்

பவுலின் எழுத்துக்களிலிருந்து, அவர் மிக உயர் படிப்புடையவர் என்றும், கிரேக்க தத்துவத்தைக் குறைவின்றி அறிந்தவரென்றும் தெளிவாக தெரிகிறது. அதுமட்டுமல்ல, தனது காலத்தின் யூத மத போதனைகளிலும் அவர் தேர்ச்சிப்பெற்றவர்.

இதை நமது பின்னணியாக வைத்துக்கொண்டு, 1 கொரிந்தியர் 2லிருந்து ஒரு பகுதியை நாம் பார்க்கலாம்:

> *சகோதரரே நான் உங்களிடத்தில் வந்தபோது, தேவனைப் பற்றிய சாட்சியைச் சிறந்த வசனிப்போடாவது ஞானத்தோடாவது அறிவிக்கிறவனாக வரவில்லை. இயேசு கிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி, வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன். அல்லாமலும் நான் பலவீனத்தோடும் பயத்தோடும் மிகுந்த நடுக்கத்தோடும் உங்களிடத்தில் இருந்தேன். உங்கள் விசுவாசம் மனுஷருடைய ஞானத்திலல்ல, தேவனுடைய பெலத்தில் நிற்கும்படிக்கு, என் பேச்சும் என் பிரசங்கமும் மனுஷ ஞானத்திற்குரிய நயவசனமுள்ளதாயிராமல், ஆவியினாலும் பெலத்தினாலும் உறுதிப்பட்டதாயிருந்தது.* (1 கொரி. 2:1-5)

''வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன்'' என்ற வியக்கவைக்கும் ஒரு அறிக்கையை பவுல் இங்குச் செய்கிறார். இந்த வாக்கியத்தை யார் சொன்னாலும் அது அபூர்வமாகதான் இருக்கும். ஆனால் ஒரு யூதனுக்கு, இது மிகவும் அபூர்வமான ஒன்று - ஏனென்றால், காலங்கள்தோறும் யூத மக்கள், அறிவை விலையேறப்பெற்ற ஒன்றாக கருதி உள்ளார்கள். அதிகம் படித்த ஒரு யூதன், "வேறொன்றையும் ... அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன்" என்று கூறும்போது, நாம் ஒரு கேள்வியைக் கேட்க வேண்டிய அவசியம் எழுகிறது: *இப்படிப்பட்ட தீர்மானத்திற்குப் பவுல் வருகிறதற்கு என்ன காரணம் இருந்திருக்க கூடும்?*

இந்தக் கேள்விக்குப் பதில் அளிக்கும்முன், பவுல் வாழ்ந்த காலத்தின் சரித்திர சூழலை நாம் புரிந்துகொள்வது அவசியம்.

அப்போஸ்தலர் 18ல், பவுலின் கொரிந்து பட்டணத்து ஊழியம் விவரிக்கப்பட்டுள்ளது. ஆனால் அதற்கு முந்தின அதிகாரத்தில், அத்தேனே பட்டணத்தில் பவுல் செய்த ஊழியத்தைக் குறித்து பதிவிடப்பட்டிருக்கிறது. அக்காலத்தில், அத்தேனே பட்டணம் உலகத்தின் பல்கலைக்கழக பட்டணமாக இருந்தது. தத்துவம் மற்றும் மனித ஞானத்தின் மையமாக இருந்தது - "மதச்சார்பின்மை" என்று அழைக்கப்படும் கருத்தின் ஊற்று இதுவே.

ஆச்சரியப்படும் விதமாக, அத்தேனே பட்டணத்தில் பவுல், கேட்போருக்கேற்ப தனது செய்தியை மாற்றிக்கொண்டார். அப்போஸ்தலர் 17ல், மார்ஸ் மேடையில் பேசும்போது, அவர் அந்தப் பட்டணத்தின் அறிவுசார்ந்த மற்றும் சமூதாயத்தின் உயர் தளத்திலிருந்தவர்களுடன் பேசினார். அதற்கேற்றவாறு கிரேக்க தத்துவ சாஸ்திரத்தின் அடிப்படையில் அவர் அவர்களுடன் பேசி, ஒரு கிரேக்க கவிஞனையும் மேற்கோள் காட்டினார். ஆனால், அப்போஸ்தலர் 17ன் கடைசி சில வசனங்கள் காண்பிப்பது போல, அவருடைய உரையாடலின் விளைவுகள் மிகச் சொற்பமாக இருந்தன. ஒரு சிலர்தான் விசுவாசித்தார்கள். மார்ஸ் மேடையில், தனது பிரசங்கத்தைச் சரியான திசையில்தான் பவுல் எடுத்துச் சென்றாரா என்பது, விவாதத்திற்குரிய காரியமாகவே இருக்கிறது.

அத்தேனே பட்டணத்தை விட்டு, பவுல் அடுத்தது கொரிந்து பட்டணத்திற்குச் சென்றார். இது ஒரு மிகப்பெரிய துறைமுக பட்டணம். ஒரு துறைமுக பட்டணத்திற்கேற்ப, இது பல்வேறு பொல்லாப்புகளால் நிறைந்திருந்தது: விபசாரம், ஓரினச்சேர்க்கை, வேசித்தனம் மற்றும் எல்லாவித பணம் பறித்தலுக்கும் காரணமாக இருந்தது. அத்தேனே மற்றும் கொரிந்து பட்டணங்களுக்கு இடையே, எங்கோ ஓர் இடத்தில், ''கொரிந்து பட்டணத்தை நான் சென்றடைந்தவுடன், இயேசு கிறிஸ்துவை, அதுவும் சிலுவையில் அறையப்பட்ட அவரைத் தவிர, நான் அறிந்திருந்த எல்லாவற்றையும் மறக்கப்போகிறேன்" என்ற தீர்மானத்தைப் பவுல் செய்தார்.

கொரிந்துவில் பவுலின் ஊழியத்தின் விளைவுகள் மகாப் பெரியதாக இருந்தது. முழு பட்டணமும் கலக்கப்பட்டது. கொரிந்துவின் ஆதி கிறிஸ்தவ சமுதாயத்தில், சுமார் இருபத்தையாயிரம் கிறிஸ்தவர்கள் இருந்தார்கள் என்று வரலாற்றாசிரியர்கள் கணிக்கின்றனர். இந்த எண்ணிக்கையைப் பார்க்கும்போது, அத்தேனேவில் பவுலுக்கு உண்டான மந்தமான விளைவுகளுக்கு இவை முற்றும் மாறுபட்டதாக இருக்கின்றன. வித்தியாசத்தை உண்டு பண்ணினது என்ன? செய்திதான்: *சிலுவையில் அறையப்பட்ட இயேசு கிறிஸ்து.*

சிலுவையைப் பற்றி என் சொந்த சாட்சி

1 கொரிந்தியர் 1:18-25ஐ என் சொந்த சாட்சியாகவே நான் எண்ணுகிறேன். வாழ்க்கைக்கான விடைகளைக் கண்டறிய நான் ஏழு ஆண்டுகள் கிரேக்க மற்றும் தற்காலத்து தத்துவவியலைப் படித்து வந்தேன். "மொழி தத்துவவியல்" அல்லது "தர்க்க நேர்மறையாக்கம்" என்று அழைக்கப்பட்ட மனநிலையே அக்காலங்களில் நடைமுறையில் இருந்தது. கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் இரண்டு ஆண்டுகளுக்கு நான் லூட்விக் விட்ஜென்ஸ்டைன் என்பவரின் மாணவனாக இருந்தேன். அவரே அந்த மொழி தத்துவவியலின் தகப்பனாக கருதப்பட்டார். அவர் திறமைமிக்க மனிதன்தான் - ஆனால் நிச்சயமாக ஒரு கிறிஸ்தவன் அல்ல. ஆகவே பவுலின் இந்த வார்த்தைகளுடன் நான் ஆழமாக ஒத்துப்போக முடியும்:

> *சிலுவையைப்பற்றிய உபதேசம் கெட்டுப் போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது, இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவபெலனாயிருக்கிறது. அந்தப்படி: ஞானிகளுடைய ஞானத்தை நான் அழித்து, புத்திசாலிகளுடைய புத்தியை அவமாக்குவேனென்று எழுதியிருக்கிறது. ஞானி எங்கே? வேதபாரகன் எங்கே? இப்பிரபஞ்சத் தர்க்கசாஸ்திரி எங்கே? இவ்வுலகத்தின் ஞானத்தை தேவன் பைத்தியமாக்கவில்லையா? எப்படியெனில்,*

தேவஞானத்துக்கேற்றபடி உலகமானது சுயஞானத்தினாலே தேவனை அறியாதிருக்கையில், பைத்தியமாகத் தோன்றுகிற பிரசங்கத்தினாலே விசுவாசிகளை இரட்சிக்க தேவனுக்குப் பிரியமாயிற்று. யூதர்கள் அடையாளத்தைக் கேட்கிறார்கள், கிரேக்கர் ஞானத்தைத் தேடுகிறார்கள். நாங்களோ சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம்; அவர் யூதருக்கு இடறலாயும் கிரேக்கருக்குப் பைத்தியமாயும் இருக்கிறார். ஆகிலும் யூதரானாலும் கிரேக்கரானாலும் எவர்கள் அழைக்கப் பட்டிருக்குறார்களோ அவர்களுக்குக் கிறிஸ்து தேவபெலனும் தேவஞானமுமாயிருக்கிறார். இந்தப்படி, தேவனுடைய பைத்தியம் என்னப்படுவது மனுஷருடைய ஞானத்திலும் அதிக ஞானமாயிருக்கிறது; தேவனுடைய பலவீனம் என்னப்படுவது மனுஷருடைய பலத்திலும் அதிக பலமாயிருக்கிறது.

(1 கொரிந்தியர் 1:18 - 25)

அதுவே என் சாட்சி. தேவனுடைய இரக்கத்தினால், நான் தேவனை மனித ஞானத்தினால் அறிந்துகொள்ளவில்லை. ஆகிலும், சிலுவையின் பைத்தியமாய் தோன்றும் பிரசங்கத்தை நான் கேட்டபோது, நான் மறுமொழி கொடுத்து இரட்சிக்கப்பட்டேன். ஒரு டாக்சி ஓட்டுனர் பிரசங்கித்ததைக் கேட்க, ஒரு பெந்தேகோஸ்தே சபைக்குச் சென்ற கேம்பிரிட்ஜ் அறிஞர் நான். அவர் பிரசங்கித்துக் கொண்டிருந்தபோது, ஒரு குறிப்பை விளக்க, அவர் ஒரு பெஞ்ச் மீது ஏறி நின்று பிரசங்கித்துக்கொண்டிருந்தார். திடீரென்று அந்தப் பெஞ்ச் உடைந்து, அவர் பெரும் சத்தத்துடன் கீழே விழுந்தார். பைத்தியக்காரத்தனத்தில், இதற்கு மேல் போக வேண்டுமென்றால், எங்கே போவீர்கள் என்று தெரியாது. ஆனால் இரட்சிப்பின் செய்திக்கு என் இருதயத்தை திறக்க செய்த நெம்புகோல், அவருடைய செய்திதான்.

சிலுவையின் அர்த்தம்

இந்தப் புத்தகத்தில் நாம் தொடர்வதற்கு முன், "சிலுவை" என்று நான் கூறும்போது, எதைக் குறித்துப் பேசுகிறேன் என்று தெளிவுப்படுத்த விரும்புகிறேன். பலவேறு பின்னணியிலிருந்து வரும் பல்வேறு மக்களுக்கு, சிலுவை என்பது, அவர்கள் தங்கள் கழுத்தில் தொங்கவிடும் ஒரு சின்னமாகவே இருக்கிறது. அல்லது தங்கள் வீடுகள், சபைகளில் உள்ள ஒரு சின்னமாகவே உள்ளது. அப்படிப்பட்ட செயல்களை நான் குறைகூறவில்லை. உண்மையைச் சொன்னால், கடுமையான கிறிஸ்தவ எதிர்ப்பு சூழல்களில் நான் இருந்துள்ளபோது, தன் கழுத்தில் ஒரு சிலுவையை அணிந்திருக்கும் நபரைக் கண்டு நான் சந்தோஷம் அடைந்திருக்கிறேன். ஏனென்றால், அவர்கள் இருக்கும் சூழலில் அது ஒரு தைரியமான அறிக்கையாக இருக்கிறது.

ஆனால், நான் சிலுவையைக் குறித்துப் பேசும்போது, நான் ஒரு சின்னத்தைக் குறித்து பேசவில்லை. பழங்காலத்தில் மரணத்தை அளிக்கும் ஒரு தண்டனை முறையைக் குறித்தும் நான் பேசவில்லை. ''சிலுவை'' என்று நான் கூறும்போது, *சிலுவையில் ஏற்பட்ட இயேசுவின் தியாக மரணத்தைக் குறித்தும், அது நமக்காக சாதித்த யாவையும்* குறித்தே நான் பேசுகிறேன். அந்த முழு வாக்கியத்தையும் திரும்ப, திரும்ப பயன்படுத்தாமல், அதை எளிய விதத்தில் "சிலுவை" என்று குறிப்பிடப்போகிறேன்.

சிலுவையின் ஸ்தானத்தை வேறெதுவும் ஏன் எடுத்துக்கொள்ள கூடாது என்பதற்குப் புதிய ஏற்பாடு, நமக்குப் பல காரணங்களை முன் வைக்கின்றது. ஏன் பொதுவாக சபையிலும், குறிப்பாக நம் தனிப்பட்ட வாழ்விலும், சிலுவை மையத்தில் இருக்க வேண்டும் என்பதை வேதாகமம் நமக்குத் தெளிவாக போதிக்கிறது. பின் வரும் அத்தியாயங்களில், ஏன் சிலுவையை நமது சபை மற்றும் வாழ்வில் மையமாகக்கொள்ள வேண்டும் என்பதற்கு, வலிந்து ஈர்க்கின்ற ஆறு காரணங்களை நாம் சிந்தித்து பார்க்கப்போகிறோம்.

அதிகாரம் 2

அனைத்திற்கும் போதுமான ஒரே பலி

ஒரு பூரணமான பலி

சிலுவையைக் குறித்து, நாம் மையத்தில் வைக்கவேண்டிய முதல் அம்சம் என்னவென்றால், *ஒரே குறைவற்ற, எல்லாவற்றிற்கும் போதுமான ஒரு பலியைக்* குறிக்கிறது. இந்த அம்சத்தைக் குறித்த நமது ஆராய்வைத் துவக்க, எபிரெயர் 10ல் உள்ள ஒரு பகுதியை நாம் ஆராய்ந்து பார்ப்போம். இது பழைய உடன்படிக்கையின் ஆசாரியர்களை, புதிய ஏற்பாட்டின் பிரதான ஆசாரியரான இயேசு கிறிஸ்துவிலிருந்து வேறுபடுத்திக் காண்பிக்கிறது. மிகவும் உரைக்கத்தக்க வேற்றுமைகளில் ஒன்று, அவர்களுடைய நிலைப்பாடுகளில் காணப்படுகிறது: பழைய உடன்படிக்கையின் ஆசாரியர்கள் ஊழியம் செய்யும்போது, எப்போதும் நின்று கொண்டே இருந்தனர் - அவர்கள் ஒருபோதும் உட்கார்ந்ததில்லை. ஆனால், புதிய உடன்படிக்கையின் பிரதான ஆசாரியர், என்றென்றைக்குமுள்ள ஒரே பலியைச் செலுத்தினவுடன், அவர் தேவனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்தார்.

பழைய ஏற்பாட்டின் ஆசாரியர்களின் பணி, ஒரு போதும் நிறைவடையாததால், அவர்கள் நின்றுகொண்டே இருந்தனர். ஆனால், இயேசு தம்முடைய வேலையைப் பூரணமாக நிறைவேற்றினபடியால் அவர் உட்கார்ந்தார் - அதை மறுபடியும் செய்ய வேண்டிய அவசியம் அவருக்கு இல்லை. இந்த மிக முக்கியமான கோட்பாடை எபிரெயரின் புத்தகம் எப்படி விவரிக்கிறது என்பதை நாம் வாசிக்கலாம்:

> *அன்றியும், எந்த ஆசாரியனும் நாடோறும் ஆராதனை செய்கிறவனாயும், பாவங்களை ஒருக்காலும் நிவிர்த்திசெய்யக்கூடாத ஒரேவித பலிகளை அநேகந்தரம் செலுத்திவருகிறவனாயும் நிற்பான். இவரோ, பாவங்களுக்காக ஒரே பலியைச் செலுத்தி, என்றென்றைக்கும் தேவனுடைய வலதுபாரிசத்தில் உட்கார்ந்து, இனித் தம்முடைய சத்துருக்களைத் தமது பாதபடியாக்கிப் போடும்வரைக்கும் காத்துக்கொண்டிருக்கிறார். ஏனெனில் பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை ஒரே பலியினாலே இவர் என்றென்றைக்கும் பூரணப்படுத்தியிருக்கிறார்.*
>
> (எபிரெயர் 10:11-14)

இப்பகுதி, மிகத் தீவிரமான மொழி நடைகளில், இயேசு செயதவற்றின் பூரணத்தை வெளிப்படுத்துகிறது. ஒரே பலியினாலே ''*அவர் பூரணப்படுத்தியிருக்கிறார்.*'' அதற்கான கிரேக்க வினைச்சொல் வினை முற்றடைந்த நிலையில் உள்ளது, அதற்கு அர்த்தம் - *ஏதோ ஒன்றைப் பிழையற்ற விதத்தில் செய்து முடித்தல்* என்பதே. அது முடிந்தது; நிறைவு பெற்றுவிட்டது - இனி ஒரு முறை அல்லது மறுபடியும் மறுபடியும் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. இந்தப் பூரண பலி முழுக்காலம் மற்றும் முழு நித்தியத்தையும் உள்ளடக்குகிறது.

எபிரெயரின் எழுத்தாளர் இயேசுவைக் குறித்து, ''*இவரோ, பாவங்களுக்காக ஒரே பலியைச் செலுத்தி, என்றென்றைக்கும் தேவனுடைய வலதுபாரிசத்தில் உட்கார்ந்து...*'' என கூறுகிறார் (எபிரெயர் 10:12). இன்னொரு பலியைச் செலுத்த போவதே இல்லை என்பதால்தான் இயேசு உட்கார்ந்தார். ஒரே பலியினால், ஒவ்வொரு மனிதனுடைய ஒவ்வொரு தேவைக்கும், அவர் பூரணமான மற்றும் குறைவற்ற ஒரு ஏற்பாடு செய்து விட்டார்.

ஒரு தீர்க்கதரிசன முன்பார்வை

இயேசு செலுத்தின பலியின் தன்மையை, 700 ஆண்டுகளுக்கு முன்பே, தீர்க்கதரிசியாகிய ஏசாயா தீர்க்கதரிசனமாக விவரித்தார். இயேசுவின் பரிகாரம் செய்யும் பலிக்கு, ஒரு சிறந்த முன்னோட்ட காட்சியாக ஏசாயா 53ம் அதிகாரம் அமைந்துள்ளது. இயேசுவின் பெயர் குறிப்பிடப்படாவிட்டாலும், அவர் ஒருவர்தான் இந்த நிவாரணத்திற்கு ஏற்றவராக இருக்கிறார். ஏசாயா 53:6:

> *நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பித்திரிந்து, அவனவன் தன்தன் வழியிலே போனோம்; கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார்.*

முழு மனுகுலத்தின் பிரச்சனையை ஏசாயா மிகத் தெளிவாக எடுத்துரைக்கிறார் - இது நம்மெல்லாருக்கும் பொதுவாக இருக்கக்கூடிய ஒரு பிழை. நாம் ஐரோப்பியர்களாக இருக்கலாம், அமெரிக்கர்களாக இருக்கலாம், ஆசியர்களாக இருக்கலாம் அல்லது ஆப்பரிக்கர்களாக இருக்கலாம், ஆனால் இந்த ஒரு வாக்கியம் நம்மெல்லாருக்கும் பொருத்தமானது: *''நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பித்திரிந்து, அவனவன் தன்தன் வழியிலே போனோம்.''* நாமெல்லாரும் தேவனுக்கும், அவருடைய நிபந்தனைகளுக்கும் நம்முடைய முதுகைக் காண்பித்து, நம் சொந்த வழிகளில் சென்று விட்டோம்.

வேதம் இதை "அக்கிரமம்," என்று அழைக்கிறது. இது ஒரு கடுமையான வார்த்தை. இதற்கு மிகச் சிறந்த தற்காலத்து மொழிபெயர்ப்பு ''கலகம்'' என்பதாகும். இந்த ஸ்தலத்தில் பயன்படுத்தப்படும் எபிரெய வார்த்தைகளைத் தொடர்ந்து பார்க்கும்போது, முழு மனுகுலத்தின் அக்கிரமத்தை அல்லது கலகத்தை, தேவன் இயேசுவின் மீது "சந்திக்க செய்தார்" என்பதுதான் அந்த எபிரெய சொற்களுக்கு நேர் பொருளாகும்.

"அக்கிரமம்" என்பது கலகத்தின் பொல்லாத விளைவுகளையும், தண்டனையையும் கூட உட்படுத்துகிறது. நம்மெல்லாருடைய கலகத்தையும், தேவன் இயேசுவிடம் வைத்தபடியினால், இயேசுவின் தியாக பலி பூரணமானது. அது மட்டுமல்ல, அந்த கலத்தினால் உண்டான விளைவுகளையும், அதின் நியாயத்தீர்ப்பும் கூட அவர்மேல் செலுத்தப்பட்டது. எளிய மொழியில் சொன்னால், நியாயமாக நம்மீது வரவேண்டிய எல்லாப் பொல்லாப்பும் இயேசுவின் மீது வந்தபடியால், தேவ குமாரனின் பாவமற்ற கீழ்ப்படிதலினால் உண்டான சகல நன்மையும் நமக்கு வழங்கப்பட்டது. இவை எல்லாவற்றையும் இயேசு அந்த ஒரே பலியினால் செய்தார்.

ஏசாயா 53:10ல், தீர்க்கதரிசி இந்தச் சித்திரத்தை இன்னும் ஒரு படி முன்னே கொண்டு செல்கிறார்:

> *கர்த்தரோ அவரை நொறுக்கச் சித்தமாகி, அவரைப் பாடுகளுக்குட்படுத்தினார்; அவருடைய ஆத்துமா தன்னைக் குற்றநிவாரணபலியாக ஒப்புக்கொடுக்கும்போது, அவர் தமது சந்ததியைக் கண்டு, நீடித்தநாளாயிருப்பார், கர்த்தருக்குச் சித்தமானது அவர் கையினால் வாய்க்கும்.*

இந்த இடத்தில், இயேசுவின் தியாக பலியைக் குறித்த சித்தரிப்பு மட்டுமல்ல, அவருடைய உயிர்தெழுதலைக் குறித்த தெளிவான முன்னறிவிப்பும் இருக்கிறது. வசனங்கள் 8-9ல் "*ஜீவனுள்ளோருடைய தேசத்திலிருந்து அறுப்புண்டு போனதைக்*" குறித்து விவரிக்கப்பட்டுள்ளது. வேறு விதமாக சொன்னால், அவருடைய ஜீவன் அவரை விட்டு எடுக்கப்பட்டது. ஆகவே தீர்க்கதரிசி "*அவர் தமது சந்ததியைக் கண்டு, நீடித்தநாளாயிருப்பார்*" என்று சொல்லும்போது, இந்த உண்மைகள் அவருடைய உயிர்த்தெழுதலின்றி நடக்க முடியாது.

இயேசுவின் "*ஆத்துமாவை*" தேவன் முழு மனுகுலத்திற்கான பாவ நிவாரண பலியாக அல்லது குற்றநிவாரண பலியாக்கினார் என்று

ஏசாயா **53:10**ல் கூறுகிறார். இக்கோட்பாட்டின் பரிமாணத்தை, வரம்புகளுக்குட்பட்ட நம்முடைய மனித மனதால் அறிந்துகொள்ள முடியாது. இயேசு சிலுவையில் தொங்கியபோது, நம்முடைய வியாதிகளும் வேதனைகளும் அவருடைய *சரீரத்தின்*மேல் சுமத்தப்பட்டன, ஆனால் நம்முடைய பாவமோ அவருடைய *ஆத்துமாவின்*மேல் சுமத்தப்பட்டது. பிழையற்ற நீதியுள்ள அவருடைய பரிசுத்த ஆத்துமா, நம்முடைய பாவத்தினால் பாவமாக்கப்பட்டது. ஆகையால், அந்தப் பலியினால், அவர் மரித்தபோது நம்முடைய பாவத்தை அவர் சுமந்து சென்றார்.

பாவத்திற்கான ஒரே பரிகாரம்

முழு வேதாகமத்திலும் ஒரே மாற்றமில்லா செய்திதான் உள்ளது: *பாவத்திற்கு ஒரே பரிகாரம்தான் உண்டு - பலி.* பழைய ஏற்பாட்டின் ஒவ்வொரு பலியும் சிலுவையில் இயேசுவின் பலியை தீர்க்கதரிசனமாக எதிர்நோக்குகிறதாக இருக்கிறது. இந்த பின்னணியில் எபிரெயருக்கு எழுதின நிருபத்தை புரிந்துகொள்வது அவசியமாகும். எபிரெயர் **10:3-4**ல், எழுத்தாளர் இப்படியாக கூறுகிறார்:

> *அப்படி நிறுத்தப்படாதபடியால், பாவங்கள் உண்டென்று அவைகளினாலே வருஷந்தோறும் நினைவுகூருதல் உண்டாயிருக்கிறது. அல்லாமலும், காளை வெள்ளாட்டுக்கடா இவைகளுடைய இரத்தம் பாவங்களை நிவிர்த்திசெய்யமாட்டாதே.*

பழைய ஏற்பாட்டில், ஒவ்வொரு ஆண்டும் பலிகள் செலுத்தப்பட்டபோதும், பாவங்கள் செய்யப்பட்டுள்ளன என்பதை அது நினைப்பூட்டியது. மேலும் அந்தப்பலிகள், பாவங்களை நீக்கிப்போட கூடாதவையாக இருந்தன. உதாரணத்திற்கு, ஒன்று பாவ நிவிர்த்தி செய்யும் நாள்தான் இஸ்ரவேலின் பிரதான பலி செலுத்தப்படும் நாள். ஆனாலும் அது ஒரு வருடத்திற்குத்தான் செல்லுபடியாகும் - அது பாவத்தை நீக்கக்கூடாமல் இருந்தது. வெறும் பாவத்தை

மூடிப்போட்டது. மறுபடியும் பலி செலுத்தப்படும் வரை அந்தப் பரிகாரம் ஆண்டு முழுவதும் பாவத்தை மூடியது. பாவத்தை எதிர்கொள்ள வேண்டும் என்பது ஒவ்வொரு ஆண்டும் யூத மக்களுக்கு நினைப்பூட்டப்பட்டது; ஒரு ஆண்டிற்கு மட்டும்தான் அதைச் செய்ய முடிந்தது.

ஆனால் இயேசுவைக் குறித்து எபிரெயரின் எழுத்தாளர் இப்படியாக கூறுகிறார், *''அப்படியிருந்ததனால், உலகமுண்டானது முதற்கொண்டு அவர் அநேகந்தரம் பாடுபட வேண்டியதாயிருக்குமே; அப்படியல்ல, அவர் தம்மைத்தாமே பலியிடுகிறதினாலே பாவங்களை நீக்கும்பொருட்டாக இந்தக் கடைசிக்காலத்தில் ஒரேதரம் வெளிப்பட்டார்.''* (எபிரெயர் 9:26). இதன் விளைவாக இனி பாவத்திற்கு எந்தப் பலியும் தேவையில்லை. 2 கொரிந்தியர் 5:21ல் இதை விளக்கும் வண்ணமாக பவுல் எழுதுகிறார், *"நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்."*

2 கொரிந்தியரில் இந்த வசனத்தை வாசிக்கும் அநேகர், பவுல் பழைய ஏற்பாட்டு பலிகளை மனதில் வைத்திருந்தார் என்பதை உணருவதில்லை. பழைய ஏற்பாட்டின் விதிகள்படி, பலியிடப்பட்ட பிராணி, அதைப் பலியிட்டவனுடைய பாவத்தோடு ஒன்றிணைந்திருந்ததென்று நாம் உணரும்போதுதான், இந்தச் சூழலை நாம் புரிந்துகொள்கிறோம். ஆகவே இயேசு சிலுவையில் பலியானபோது, அவர் நம்முடைய பாவத்துடன் இணைக்கப்பட்டார். இது ஒரு எளிய ஆனால் ஆழ்ந்த பரிமாற்றமாகும். தம்முடைய நீதியைக்கொண்டு நாம் நீதிமான்களாக்கப்பட, நம்முடைய பாவத்தைக் கொண்டு தேவன் இயேசுவை பாவமாக்கினார். இதுதான் பாவத்திற்கான தேவனுடைய ஏற்பாடு - இதைத் தவிர வேறு ஏற்பாடு இல்லை.

இந்தப் பறிமாற்றத்தைக் குறித்து நான் ஒரு அறிக்கையை முன்வைக்க விரும்புகிறேன் - இதை அனுதினம் செய்வது நலமாகும்.

நீங்கள் வேதத்திலும், இயேசுவிலும் விசுவாசம் வைக்கிறவராக இருந்தால், இந்த வார்த்தைகள் உங்களைக் குறித்தும் உண்மையே:

அவருடைய நீதியைக் கொண்டு நான் நீதிமானாக்கப்பட, தேவன் என்னுடைய பாவத்தைக் கொண்டு இயேசுவைப் பாவமாக்கினார்.

இந்த அறிக்கையை அடிக்கடி சத்தமிட்டு சொல்லும்படி உங்களை நான் உற்சாகப்படுத்துகிறேன்.

"சகலமும்" வழங்கப்பட்டுள்ளது

இயேசுவின் பலியின் போதுமான தன்மையை ரோமர் **8:31-32**ல் பவுல் வலியுறுத்துகிறார்:

> *இவைகளைக்குறித்து நாம் என்னசொல்லுவோம்? தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்? தம்முடைய சொந்தக் குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடேகூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி?*

இயேசுவின் பலியினால், நமக்கு *"எல்லாம்"* வழங்கப்பட்டுள்ளது. இயேசுவைத் தந்த பிதாவாகிய தேவன், நம்மிடமிருந்து எதையும் தடை செய்து வைக்கமாட்டார் மாறாக, "அவரோடேகூட நமக்கு எல்லாவற்றையும் இலவசமாக கொடுப்பார்." இயேசுவின் ஒரே பலி, தேவனுடைய கிருபை மற்றும் ஏற்பாட்டின் முழு நிறைவையும் கட்டவிழ்க்கிறது. நமக்கு வேறெந்த அடிப்படையும் தேவையில்லை — ஏனென்றால் வேறு அடிப்படை இல்லை. இதைப் புரிந்து கொள்வது மிகவும் முக்கியம்—ஏனென்றால் சிலுவையில் இயேசுவின் தியாகத்தின் அடிப்படையைத் தவிர, வேறெந்த அடிப்படையிலும், தேவனிடம் நீங்கள் இரக்கமும் கிருபையும் பெற வந்தால், தேவன் உங்கள் தேவையைச் சந்திக்கமாட்டார். இயேசுவின் பலியைத் தவிர வேறெந்த அனுமானமும் ஒரு பொய்யான அடிப்படையாகவே உள்ளது.

நம்முடைய நற்கிரியைகளின் அடிப்படையிலோ, நம்முடைய மத உணர்வுடைமை, குடும்ப பின்னணி, அறநெறி அல்லது நல் நோக்கங்களின் அடிப்படையிலோ நாம் தேவனிடம் வர முடியாது, ஏனென்றால் இவற்றில் ஒன்றும் தேவனைக் கவருவதில்லை. அவை தேவனுடைய இரக்கத்தையும், கிருபையையும் கட்டவிழ்ப்பதில்லை. இயேசு நம்முடைய பாவத்தைக்கொண்டு பாவமாக்கப்பட்டார், நம்முடைய ஸ்தானத்தில் மரித்தார் மற்றும் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார் என்ற உண்மை, தேவனுடைய இரக்கத்தையும் கிருபையையும் கட்டவிழ்க்கும் ஒரே கிரியாஊக்கி.

இந்த நித்திய உண்மையைத் தியானிக்காமல் ஒரு நாளைக் கூட கடந்து போக விடாதீர்கள். இந்த உண்மையை உங்கள் சிந்தை, வார்த்தை மற்றும் ஜீவனின் மையத்திலிருந்து ஒரு போதும் அகல விடாதீர்கள். சிலுவை தன் ஸ்தானத்தை விட்டு அகலும் என்றால், தேவனுடைய கிருபையின் நிறைவை நீங்கள் அதற்கு மேல் அனுபவிக்க முடியவில்லை என்பதையே உணருவீர்கள். நீங்கள் போராடுகிறவர்களாகவும், திகைத்து நிற்பவர்களாகவும், குழப்பம் நிறைந்தவர்களாகவும் காணப்படுவீர்கள். பல நேரத்தில், நீங்கள் குற்ற உணர்வுள்ளவர்களாக, என்ன நடக்கிறதென்பதை அறியாமல் இருப்பீர்கள். இப்படிப்பட்ட எல்லா அனுபவங்களின் பின்னணியும், சிலுவை உங்கள் வாழ்வின் மையத்திலிருந்து அகலுவதுதான்.

சட்டப்பூர்வமானதிலிருந்து அனுபவத்திற்கு

எபிரெயரின் எழுத்தாளர் *"ஏனெனில் பரிசுத்தமாக்கப் படுகிறவர்களை ஒரே பலியினாலே இவர் என்றென்றைக்கும் பூரணப்படுத்தியிருக்கிறார்"* (எபிரெயர் 10:14) என்று கூறுகிறார். இங்கே நாம் மனித பகுதிக்கு வருகிறோம்: *"பரிசுத்தமாக்கப்படுகிறவர்கள்."* இங்கே இலக்கண காலம் மாறுகிறது. இயேசு கிறிஸ்து செய்தது பூரணமாக்கப்பட்ட ஒன்று —ஆனால் நாம் அதைச் சுதந்தரிப்பது தொடர்ச்சியானது. இதை நாம் புரிந்துகொள்வது மிகவும் அவசியம். நாம் மறுபிறப்பு அடைந்தபோது, சட்டப்பூர்வமாக

நாம் எல்லாவற்றையும் சுதந்தரித்து கொண்டோம். நாம் தேவனுடைய பிள்ளைகளானோம், தேவனுடைய சுதந்திரரானோம், இயேசு கிறிஸ்துவின் உடன் சுதந்திரரானோம். முழு சுதந்திரமும் சட்டப்பூர்வமாக நம்முடையதாய் இருக்கிறது.

ஆனால், செயல்முறையாக நாம் இன்னும் எல்லாவற்றையும் அடையவில்லை. நீங்களும் நானும் உண்மையுள்ளவர்களாக இருப்போமானால், நம்மில் ஒருவரும் இன்னும் சிலுவையில் இயேசு நமக்காக செய்த யாவற்றையும் நாம் சொந்தமாக்கிக்கொள்ளவில்லை என்பதை ஒத்துக்கொள்வோம். நாம் பரிசுத்தமாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறோம். நமக்குள் ஒரு செயல் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதன் விளைவாக இயேசு சிலுவையில் செய்த யாவும், நம்முடைய வாழ்வில் செயல்படுத்தப்பட்டுக்கொண்டிருக்கிறது.

நாம் கிறிஸ்தவ வாழ்வை இவ்விதமாக முன்வைக்கலாம்: சட்டப்பூர்வமானதிலிருந்து செயல்முறையானதிற்கு கடந்து வருதல். நாம் மறுபிறப்படைந்தபோது, கிறிஸ்துவுக்குள் நமக்கிருக்கும் சுதந்திரம் சட்டப்பூர்வமாக நம்முடையதாகிவிட்டது. ஆனால் அனுபவ ரீதியில் நாம் அதைச் சொந்தப்படுத்திக்கொள்ள வேண்டும். புது பிறப்பைக் குறித்து யோவான் 1:12 இப்படியாக கூறுகிறது:

> *அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார்.*

புதிய பிறப்பில், நாம் "ஆகும்படி" அதிகாரம் பெற்றோம். நாம் என்ன செயல்தொடரில் "ஆகிறோம்" என்பது எபிரெயர் 10:14ல் "*பரிசுத்தமாக்கப்படுகிறோம்*" என்று விவரிக்கப்பட்டுள்ளது. ஆனால் *பயன்படுத்தினாலொழிய* அதிகாரத்திற்கு அர்த்தமில்லை. நாம் எந்த அளவிற்கு ''ஆகியிருக்கிறோம்,'' இன்னும் எவ்வளவு ''ஆக வேண்டியதிருக்கிறது ?"

ஒரே பலியினாலே இயேசு எல்லா மனிதருடைய எல்லா தேவைக்கும், பூரணமான மற்றும் போதுமான ஒரு ஏற்பாடை செய்திருக்கிறார் என்பதை நினைவு கூறுங்கள். அவருடைய பலி, எல்லாவற்றிற்கும் போதுமானது. இந்த அதிகாரத்தை நாம் முடிவுக்குக் கொண்டுவர, இந்த அற்புதமான பலியை உங்களுக்காக நீங்கள் அங்கீகரிக்க விரும்புகிறீர்களா? பின் வரும் ஜெபத்தைக்கொண்டு நாம் இதைச் செய்யலாம்:

ஆண்டவராகிய இயேசுவே, உம்முடைய நீதியைக்கொண்டு நான் நீதிமானாக்கப்பட, என் பாவத்தைக் கொண்டு தேவன் உம்மை பாவமாக்கினார் என்பதை அறிக்கை செய்கிறேன். இந்த அற்புதமான பரிமாற்றத்திற்குள் நான் நுழைய முடியும் என்பதற்காக நன்றி. உம்முடைய போதுமான பலியினால், சட்டப்பூர்வமாக எனக்குரிய அந்தச் சுதந்திரத்தை நான் பெற்றுக்கொள்கிறேன். சிலுவையில் நீர் எனக்காக செய்த தியாகத்தின் அடிப்படையில், எனெக்கென்று ஏற்பாடு செய்த இரக்கத்தையும் கிருபையையும் அடைந்து, அதில் நடைபோட நான் வருகிறேன். ஆமென்.

அதிகாரம் 3

இயற்கைக்கப்பாற்பட்ட கிருபையின் கட்டவிழ்த்தல்

சிலுவையை நாம் மையத்தில் வைக்க வேண்டியதின் இரண்டாவது காரணம் என்னவென்றால், சிலுவை தேவனுடைய இயற்கைக்கு அப்பற்பட்ட கிருபையை நம்முடைய வாழ்வில் கட்டவிழ்க்கிறது. கிறிஸ்தவம், சில சட்டங்களின் தொகுப்பல்ல. நான் ஒரு பெரிய கூட்டத்தில் பேசிக்கொண்டிருந்தபோது ‘‘கிறிஸ்தவம், சில சட்டங்களின் தொகுப்பல்ல" என்று மிக சாதாரணமாக சொல்லி விட்டேன். அந்தக் கூட்டத்தார் என்னை ஆச்சரியத்துடன் பார்த்தனர். ‘‘தேவனில்லை’’ என்று நான் சொல்லியிருந்தால், அவர்கள் அந்தளவிற்கு அதிர்ச்சி அடைந்திருக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன்.

கிறிஸ்தவன் சில சட்டங்களின் தொகுப்பல்ல என்பது எனக்குப் பல ஆண்டுகள் கழித்து தெளிவாகி விட்டது. இது பழைய ஏற்பாட்டிலுள்ள சட்டத்திற்கு எப்படி மாறுபட்டதாய் இருக்கிறது என்பதைப் பார்க்கலாம். கிறிஸ்துவுக்குப் பின் வந்த முதலாம் நூற்றாண்டின் முடிவு வரை, மோசேயின் மூலம் தேவனால் வழங்கப்பட்ட சட்டங்களின் கீழ் ஆயிரத்து நானூறு வருடங்களாக இஸ்ரவேல் செயலாற்றிக்கொண்டு வந்தது. ரோமர் 7:12ல், மோசேயின் நியாயப்பிரமாணம், பிழையற்றது, நீதியானது மற்றும் நல்லது என்று பவுல் கூறுகிறார். சட்டங்கள் என்று வந்தால், மோசேயின் நியாயப்பிரமாணத்தை விட நாம் நல்ல சட்டத்தை இயற்ற முடியாது. ஆனால் மோசேயின் நியாயப்பிரமாணம் நீதிக்கான ஒரு வழியை

ஏற்படுத்தி இருந்தால், இயேசு வர வேண்டிய அவசியம் இருந்திருக்காது.

கிருபையைக் குறித்து அதிகம் பேசுகிற கிறிஸ்தவர்களுக்குத்தான் அதைக் குறித்து மிக குறைவான அறிவு இருக்கிறதுபோல எனக்குத் தோன்றுகிறது. நாங்கள் சட்டத்திற்குக் கீழ் இல்லை என்று கூறுகிற மக்கள் அவர்கள்தான். ஆனால் அவர்களே சொந்தமாக, மிகவும் குழப்பமான சில மத சட்டங்களை உருவாக்கி கொள்ளுகிறார்கள். மோசேயின் நியாயப்பிரமாணமே நீதியைக் கொண்டு வர முடியவில்லை என்றால், பாப்டிஸ்டு, பெந்தேகோஸ்தே அல்லது கத்தோலிக்க சட்டங்களும் அதைக் கொண்டுவரமுடியாது.

மனித பிரச்சனை

நாம் மோசேயின் நியாயப்பிரமாணத்தை இன்னும் சிறப்பாக வடிவமைக்க முடியாது. ஆனாலும் மோசேயின் நியாயப்பிரமாணம் தோல்வி அடைந்தது. ஏன்? நியாயப்பிரமாணத்தில் எந்த பிரச்சனையும் இல்லை—ஆனால், மனிதனுடைய மாம்சீக சுபாவத்தில்தான் பிரச்சனை இருக்கிறது. நம்முடைய மனித தன்மையின் பெலவீனத்தின் நிமித்தமாக, நம்மால் எந்தச் சட்டத்தையும் கையாள முடியாது. இதைப் பவுல் கலாத்தியர் 3:11-12ல் மிக தெளிவாக கூறுகிறார்:

> *நியாயப்பிரமாணத்தினாலே ஒருவனும் தேவனிடத்தில் நீதிமானாகிறதில்லையென்பது வெளியரங்கமாயிருக்கிறது. ஏனெனில், விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே. நியாயப்பிரமாணமோ விசுவாசத்திற்குரியதல்ல; அவைகளைச் செய்கிற மனுஷனே அவைகளால் பிழைப்பான்.*

நியாயப்பிரமாணத்தாலே, எந்த நபரும் தேவனிடத்தில் நீதியை ஒருபோதும் பெற முடியாது என்று பவுல் கூறுகிறார். நியாயப்பிரமாணம்

என்று கூறும் போது மோசேயின் மூலம் கொடுக்கப்பட்ட சட்டத்தையே, பவுல் மனதில் வைத்து பேசுகிறார். ஆனால், மோசேயின் சட்டம் மட்டும் அல்ல, எந்தச் சட்டத்தை கைக்கொண்டாலும், தேவனிடத்தில் ஒருவனும் நீதியை அடைய முடியாது. அப்படிப்பட்ட நீதியைப் பெற உதவும் எந்தச் சட்டமும் கிடையாது.

நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்வதினால் நாம் நீதிமானாக்கப்படுவதில்லை என்பது புதிய ஏற்பாட்டில் அதிகம் கூறப்பட்டுள்ள வாக்கியம். ஆகிலும், இதுவே கிறிஸ்தவர்களால் தொடர்ந்து அசட்டைப்பண்ணப்படும் வாக்கியமாகவும் உள்ளது. புதிய ஏற்பாட்டில் குறைந்த பட்சம் 12 இடங்களிலாவது, தேவனிடம் நீதியைப் பெற நாம் சட்டங்களைக் கைக்கொள்வது வீண் என்று ஏதோ ஒரு விதத்தில் கூறப்பட்டுள்ளதை நாம் காணலாம். ஆனால், பெரும்பாலான கிறிஸ்தவர்களின் மனதில், சரியான சட்டங்களைக் கைக்கொண்டால், நாம் தேவனோடு சரி செய்து கொள்ளலாம் என எண்ணுகிறார்கள். இது நிச்சயம் செயலாற்றாது - ஏனென்றால், நம்முடைய சுய முயற்சியினால் உருவாக்கப்படும் நீதியைத் தேவன் ஏற்றுக்கொள்வதில்லை.

உண்மையைச் சொன்னால், சட்டங்களைக் கைக்கொள்ள முயற்சிப்பது, விடுதலை அல்லது நீதியின் நேர் எதிர்மறையானதையே உருவாக்குகின்றது. சட்டங்களைக் கைக்கொள்வதில் கவனம் செலுத்துவோர், ''சட்டப்பூர்வமானவர்களாக'' மாறிவிடுகின்றனர். இப்படி மாற்றப்படுவதினால், தாங்கள் எந்தச் சபைப் பிரிவைச் சேர்ந்திருக்கிறார்களோ, அதுவே முற்றிலும் உண்மை என அம்மக்கள் நம்ப ஆரம்பிக்கின்றனர். "எங்கள் சட்டங்கள்தான் சரி, நாங்கள் அவைகளைக் கைக்கொண்டு நடப்பதால் நீதிமான்களாய் இருக்கிறோம்; எங்கள் சட்டங்களைக் கைக்கொண்டு நடக்காதவர்கள், எங்கள் அளவிற்கு நீதிமான்கள் அல்ல'' என்று கூறுகிறார்கள். சட்டப்பூர்வமான நடவடிக்கையால், தாங்கள் கைக்கொள்ளும் சட்டங்களின் அடிப்படையில், சபையை பல்வேறு குழுக்களாக உடைத்து விடுகின்றனர்.

சிலுவையின் உட்பிரவேசம்

நாம் நியாயப்பிரமாணத்தால் நீதிமான்கள் ஆக முடியாததால், சிலுவையின் நோக்கம் என்ன? நம்முடைய வாழ்விற்காக அதன் வல்லமையைப் பெற்றுக்கொள்வது எப்படி?

சிலுவையின் நோக்கங்களில் ஒன்று, நம்முடைய எல்லா ஞானம் மற்றும் நீதியை முடிவுக்குக் கொண்டு வருவதாகும். நம்முடைய வல்லமை முற்றிலும் குறைவுள்ளது என்ற மேலான பாடமாக சிலுவை இருக்கிறது. இதை எளிதாக சொல்லிவிடலாம் ஆனால் அன்றாட வாழ்வில் இதைக் கடைப்பிடிப்பது எளிதல்ல. நம்முடைய முடிவுக்கு நாம் வந்தால்தான் தேவனுடைய கிருபைக்குள் பிரவேசிக்க முடியும் என்பதுதான் உண்மை.

இந்தப் புத்தகத்தை வாசித்துக்கொண்டிருக்கும் நீங்கள், நிச்சயமாக உங்கள் வாழ்விலுள்ள சில பிரச்சனைகள் மற்றும் அழுத்தங்களைக் குறித்து சிந்தித்துக்கொண்டிருக்கிறீர்கள். சில நேரங்களில், நம்முடைய பிரச்சனைகளின் விளைவாக, நாம் “தேவனே, என்ன செய்கிறீர்?” என்று கேட்கிறோம். பதில் இதுதான்: தேவன் மென்மையாக ஆனால் உறுதியாக உங்களை உங்களின் முடிவுக்குக் கொண்டுவருகிறார், உங்கள் எல்லா சிறந்த பிரயாசங்களை முடிவுக்குக் கொண்டு வருகிறார், நீங்கள் செய்யக் கூடிய மிக சிறந்தவை போதுமான நன்மையாக இருக்க துவங்கக்கூட இல்லை என்பதை அறிய உதவி செய்துகொண்டிருக்கிறார். ஏன்? ஏனென்றால் தம்மிடமிருந்து முழுமையாக வந்த ஒரு விடுதலையை அவர் உங்கள் வாழ்வில் கொடுக்க சித்தமாயிருக்கிறார் - காரியத்தைச் செய்து முடிக்கதக்க நன்மையான ஒன்று.

சிலுவை இன்னும் வலிமையுள்ளது

இப்புத்தகத்தின் முதலாம் அதிகாரத்தில் நாம் பார்த்த ஒரு பகுதிக்குத் திரும்புவோம். அங்கே, இதைக் குறித்து பவுல் தெளிவாக எழுதுகிறார்:

யூதர்கள் அடையாளத்தைக் கேட்கிறார்கள், கிரேக்கர் ஞானத்தை தேடுகிறார்கள், நாங்களோ சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம்; அவர் யூதருக்கு இடறலாயும் கிரேக்கருக்குப் பைத்தியமாயும் இருக்கிறார். ஆகிலும் யூதரானாலும் கிரேக்கரானாலும் எவர்கள் அழைக்கப்பட்டிருக்கிறார்களோ அவர்களுக்குக் கிறிஸ்து தேவபெலனும் தேவ ஞானமுமாயிருக்கிறார். இந்தப்படி தேவனுடைய பைத்தியம் என்னப்படுவது மனுஷடைய ஞானத்திலும் அதிக ஞானமாயிருக்கிறது. தேவனுடைய பலவீனம் என்னப்படுவது மனுஷருடைய பலத்திலும் அதிக பலமாயிருக்கிறது.

(1 கொரிந்தியர் 1:22 - 25)

கொரிந்துவில் இருந்தவரைப், பவுல் சிலுவையில் அறையப்பட்டவராக கிறிஸ்துவைப் பிரசங்கித்தார். கிறிஸ்துவைப் பெரும் போதகராகவோ, அற்புதமான சுகமளிப்பவராகவோ பிரசங்கிப்பது எளிது. ஆனால் அந்தச் செய்தி மட்டும் போதாது. நாம் கிறிஸ்துவை *சிலுவையில் அறையப்பட்டவராய்* பிரசங்கிக்க வேண்டும். நம்முடைய சொந்த வல்லமை மற்றும் ஞானம் முடிவுக்கு வரும்போதுதான், கிறிஸ்துவைத் தேவனுடைய வல்லமையாகவும், தேவனுடைய ஞானமாகவும் நாம் கண்டடைகிறோம். பவுலின் முடிவு ஒரே அற்புதமான வாக்கியத்தில் அடங்கியுள்ளது: "*தேவனுடைய பைத்தியம் எனப்படுவது மனுஷடைய ஞானத்திலும் அதிக ஞானமாயிருக்கிறது. தேவனுடைய பலவீனம் என்னப்படுவது மனுஷருடைய பலத்திலும் அதிக பலமாயிருக்கிறது.*"

ஒரே வார்த்தையில் சொன்னால், தேவனுடைய பைத்தியமும், தேவனுடைய பெலவீனமும் சிலுவையே. சிலுவைதான் பெலவீனத்தின் உச்சக்கட்டம். சிலுவையில் வேதனையுடன் தன் கடைசி மூச்சுவிட்டு மரிக்கும் ஒரு மனிதனைவிட பெலவீனமான ஒன்றை நாம் கற்பனை செய்து பார்க்க முடியாது. அது மட்டுமல்ல, தேவன், ஒரே பூரண

மனிதனாகிய தன் குமாரனை இந்த உலகத்திற்கு அனுப்பி, அவரைக் கொடூர குற்றவாளிக்கு ஒத்த மரணத்தை அடைய செய்ததும் முற்றிலும் முட்டாள்தனமாகவே தோன்றுகிறது. ஆகவே, சிலுவை முற்றிலும் பெலவீனமாயும், முற்றிலும் பைத்தியமாகவும் இருக்கிறது.

நம்முடைய வாழ்வில், நம்முடைய புத்திசாலித்தனம், ஞானம், பெலன் மற்றும் நீதி முடிவுக்கு வரும்போது, நாம் ஒரு அருமையான கண்டுபிடிப்பை அடைகிறோம். அது என்ன? சிலுவையானது மனிதனுடைய பெலத்தை விட பெலனாயும், மனித ஞானத்தை விட ஞானமாக இருக்கிறது என்பதுதான். கிரேக்க தர்க்கவியலில் எனக்கு உள்ள பின்னணியின் பேரில், மறுபடியும் இவ்வார்த்தைகள் முற்றிலும் உண்மையாக இருக்க காண்கிறேன்.

சிலுவையில், தேவனுடைய பலவீனம், மனிதனுடைய பெலத்திலும் அதிக பெலனாக இருக்கிறது, தேவனுடைய பைத்தியம், நம்முடைய ஞானத்திலும் அதிகமாகவும் உள்ளது. ஆனால் பிரச்சனை இதுதான்: நம்முடைய சொந்த பெலத்தையும், சொந்த ஞானத்தையும் விட்டுவிடுவது, நம்மில் அநேகருக்குக் கடினமாகவே இருக்கிறது. நம்மில் பெரும்பாலானோர், தேவனுடைய ஞானத்தையும், பெலத்தையும் வாஞ்சிக்கிறோம். ஆனால், அதே சமயம் நம்முடைய ஞானத்தையும், பெலத்தையும் பற்றிக்கொண்டு நிற்க விரும்புகிறோம். அவைகளுக்கு ஏதோ நித்திய மதிப்புள்ளது போல, நாம் அவைகளைப் பற்றிக்கொள்ள விரும்புகிறோம்.

உண்மை என்னவென்றால், தேவன் அந்த அடிப்படையில் நம்முடன் இடைபடுபவர் அல்ல. தேவன் தம்முடைய கிருபையை நம்முடைய வாழ்வில் கட்டவிழ்க்கும் முன், நாம் நம்முடைய சொந்த ஞானம் மற்றும் பெலத்தின் முடிவுக்கு வர வேண்டும்.

பவுலின் "மாம்சத்திலிருந்த முள்"

பவுல் இந்த மைய கருத்தைக்கொண்டு சில ஆச்சரியமான அறிக்கைகளைச் செய்கிறார்: தனிப்பட்ட அனுபவத்திலிருந்து, 2

கொரிந்தியர் 12:7ல் அவர் எழுதுகிறார்,

> *அன்றியும், எனக்கு வெளிப்படுத்தப் பட்டவைகளுக்குரிய மேன்மையின் நிமித்தம் நான் என்னை உயர்த்தாத படிக்கு, என் மாம்சத்திலே ஒரு முள் கொடுக்கப்பட்டிருக்கிறது; என்னை நான் உயர்த்தாதபடிக்கு, அது என்னைக் குட்டும் சாத்தானுடைய தூதனாயிருக்கிறது.*

தேவன் தமக்குக் கொடுத்த வெளிப்பாடுகளைக் குறித்து பவுல் பேசுகிறார். வெளிப்பாடுகளைப் பெறுகிறவர்கள், அவைகளைப் பெறும்போது ஜாக்கிரதையாக இராவிட்டால், அவர்கள் எளிதில் பெருமையில் அகப்படக்கூடும். ஆனால், தேவன் பவுலை அதிகமாக நேசித்த படியால், அந்தப் பெருமையிலிருந்து காக்க, ஒரு விசித்திரமான வழியைப் பயன்படுத்தினார். நான் அதை எப்படி காண்கிறேன் எனில், பவுல் செல்லும் இடமெல்லாம் அவனைப் பின்தொடர, தேவன் "சாத்தானின் ஒரு தூதனை" கட்டவிழ்த்தார். அது ஒவ்வொரு இடத்திற்கும் அவனைப் பின்தொடர்ந்து, பிரச்சனைகளையும், துன்புறுத்தலையும் ஊக்குவிக்கும். இவ்விதமாக, பவுல் தாழ்மையாக காக்கப்பட்டார்.

நம்மில் அநேகர் தாழ்மையாக இருக்க விரும்புகிறேன் என கூறுவோம். ஆனால், அந்த வேண்டுதலுக்குத் தேவன் பதிலளிக்கும் விதத்தை நாம் பார்த்து, ஆச்சரியப்பட்டுபோவோம். பவுல் கூறுவதை மறுபடியும் கவனியுங்கள்:

> *அன்றியும், எனக்கு வெளிப்படுத்தப் பட்டவைகளுக்குரிய மேன்மையின் நிமித்தம் நான் என்னை உயர்த்தாத படிக்கு, என் மாம்சத்திலே ஒரு முள் கொடுக்கப்பட்டிருக்கிறது; என்னை நான் உயர்த்தாதபடிக்கு, அது என்னைக் குட்டும் சாத்தானுடைய தூதனாயிருக்கிறது.*

"மாம்சத்தில் முள்" என்ற சொற்றொடர், பழையஏற்பாட்டிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு உருவகமாகும். தேசத்திலிருக்கும் கானானியரை முற்றிலும் அளிக்க, யோசுவா இஸ்ரவேல் புத்திரருக்கு கொடுத்த ஓர் எச்சரிக்கையைக் குறிக்கின்றது. கானானியரை தங்களுடன் இணைந்து வாழ அனுமதித்தால், அவர்கள் இஸ்ரவேலருக்கு *"விலாக்களுக்குச் சவுக்காகவும், கண்களுக்கு முள்ளுகளாகவும்"* மாறிவிடுவார்கள் என்று சொன்னார் (யோசுவா 23:13). நம்மில் அநேகர், நாமாக உருவாக்கிக்கொண்ட 'மாம்சத்தின் முட்களைக்'' கொண்டிருக்கிறோம். ஏன் **?** ஏனென்றால் நாம் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குள் வந்துவிட்டோம், ஆனால் அநேக "கானானியர்" இன்னும் மீதி இருக்க அனுமதித்திருக்கிறோம்.

ஆனால், பவுலின் வாழ்க்கையில் இருந்த முள்ளிற்கு அவர் பொறுப்பல்ல. அது தேவன் அவருடைய வாழ்வில் செய்த கிரியை. நாம் பவுலின் சரித்திரத்தை ஆராய்ந்தால், அவர் மற்ற அப்போஸ்தலர்களிலிருந்து வித்தியாசமானவராக இருந்தார். அவர்கள் எல்லாருக்கும் பிரச்சனைகள் இருந்தன, அவர்கள் துன்புறுத்தப்பட்டார்கள், ஆனால் பவுலின் பிரச்சனைகள் ஒரு தனிப்பிரிவாகவே இருந்தன. கிட்டத்தட்ட அவர் போன பட்டணங்களில் எல்லாம் கலகம் ஏற்பட்டது.

மிக வேடிக்கையான அம்சங்கள் அந்தக் கலகத்தைத் தூண்டிவிடும். பிலிப்பி பட்டணத்தில், குறி சொல்லும் அடிமைப்பெண்ணுக்குள் இருந்த பிசாசைத்தான் துரத்தினார். ஆனால், திடீரென்று முழு பட்டணத்திலும் பெரிய இரைச்சல் உண்டானது. சில மணி நேரங்களுக்குள், பவுலும் அவருடைய உடன் வேலையாளாகிய சீலாவும், உச்சக்கட்ட பாதுகாப்பு சிறையில் அடைக்கப்பட்டனர். அது இயற்கை அல்ல. எவ்வளவு தர்க்கம் செய்து பார்த்தாலும், அதற்கு விளக்கம் இல்லை. அவனுக்கு விரோதமாக காரியங்களைத் தூண்டிக்கொண்டிருந்த சாத்தானின் ஒரு தூதனிருந்தான். அடிப்படையாக, பவுல் எங்குச் சென்றாலும் அங்குக் கலகம்

உண்டானது. அவர் எங்குச் சென்றாலும் ஒன்று கலகம் உண்டானது அல்லது எழுப்புதல் உண்டானது - அல்லது இரண்டும் உண்டாயின!

போதுமான கிருபை

இந்தத் துன்புறுத்தலை ஏற்படுத்தின தொடர் பிரசன்னத்தைக் குறித்து எழுதுகையில் பவுல் கூறுகிறார்: *“அது என்னைவிட்டு நீங்கும்படிக்கு நான் மூன்றுதரம் கர்த்தரிடத்தில் வேண்டிக்கொண்டேன்”* (2 கொரிந்தியர் 12:8). ஆனால், தேவன் அந்த முள்ளை நீக்க மறுத்தார். சில நேரங்களில், தேவன் நம்முடைய ஜெபங்களுக்குப் பதில் அளிக்காத போது, “இல்லை” என்பதும் ஒரு பதில்தான் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். பவுலுக்குத் தேவன் கொடுத்த பதில் என்னவென்றால், *“என் கிருபை உனக்குப்போதும், பலவீனத்தில் என் பலன் பூரணமாய் விளங்கும்”* (2 கொரிந்தியர் 12:9). அது எவ்வளவு உண்மையானது.

நம்முடைய பலத்தில் நாம் செயலாற்றும்போது, தேவனுடைய பலத்தை அடையாளம் காண, நமக்கு வழியில்லை. நாமோ, மற்றவர்களோ, தேவனுடைய பலத்தைக் காண முடியாது - ஏனென்றால் அது நம்முடைய பலத்தாலும், ஞானத்தாலும் மறைக்கப்பட்டுப் போகிறது. ஆனால், நம்முடைய பலத்தின் முடிவுக்கு நாம் வரும் போது, நமக்குப் புது பெலன் உண்டென்று காண்கிறோம். அந்த நொடியில், இந்தப் பெலன் தேவனால் உண்டானது என்பதை அறிகின்றோம். நம்முடைய பெலவீனத்தில்தான் தேவ பெலன் பூரணமாக்கப்படுகிறது. ஆகையால்தான் பவுலால் கூற முடிந்தது:

> *ஆகையால், கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி, என் பலவீனங்களைக்குறித்து நான் மிகவும் சந்தோசமாய் மேன்மைபாராட்டுவேன். அந்தப்படி நான் பலவீனனாயிருக்கும்போதே பலமுள்ளவனாயிருக்கிறேன்; ஆகையால் கிறிஸ்துவினிமித்தம் எனக்குவரும் பலவீனங்களிலும்,*

நிந்தைகளிலும், நெருக்கங்களிலும், துன்பங்களிலும், இடுக்கண்களிலும் நான் பிரியப்படுகிறேன்.

(2 கொரிந்தியர் 12:9-10)

நான் வேதத்தின் அடிப்படையிலான அறிக்கைகளைச் செய்வதில் விசுவாசம் கொண்டவன் - ஆனால் பலவீனங்களில் இன்பம் காணுதலைக் குறித்துப் பவுல் செய்யும் அறிக்கையைச் செய்ய நான் ஒருவருக்கும் சொல்ல மாட்டேன். நான் அதைச் செய்வதற்கு ஆயத்தப்பட எனக்குப் பல ஆண்டுகள் ஆனது. நான் நான்றாக இருக்கும் நாட்களில்தான் - இந்த அறிக்கையைச் செய்யக்கூடிய நிலைக்கு நான் வந்துள்ளேன். ஆனால், பரிசுத்த ஆவியானவராலே வழி நடத்தப்பட்டாலொழிய, ஒருவரையும் இந்த அறிக்கையைச் செய்ய நான் சொல்ல மாட்டேன், ஏனென்றால், ஒரு முறை செய்தாலும், அதற்கு அவர்கள் தங்களை அர்ப்பணித்து விடுகிறார்கள்.

அப்படிப்பட்ட அறிக்கையைச் செய்யும் முன் நன்கு சிந்தனை செய்யுங்கள். அதில் பிரியப்பட ஆயத்தமாயிருக்கிறீர்களா - அதை பொறுத்துக் கொள்வதல்ல, சகிப்பதல்ல, கிருபையோடு பாடுபடுவது மட்டுமல்ல - பெலவீனங்கள், சோர்வுகள், துன்பங்கள், துன்புறுத்தல்கள் மற்றும் தேவைகள்?

பெலவீனத்தில் பவுல் ஏன் பிரியப்பட விரும்புகிறார்? ஏனென்றால், அவர் இந்த இரகசியத்தை கற்றுக்கொண்டிருந்தார்: நம்முடைய சொந்த பெலன், ஞானம் மற்றும் வளங்களின் முடிவிற்கு நாம் வரும்போதுதான், தேவன் தம்முடைய கிருபையை கட்டவிழ்க்கிறார்.

''மனித திறமை முடிவடையும் இடத்தில்தான் கிருபை ஆரம்பமாகிறது'' என்ற வாக்கியத்தை நான் ஏற்றுக்கொள்ள கற்றுக்கொண்டுள்ளேன். நமக்காக, நாமே ஒரு காரியத்தை செய்யக்கூடியவர்களாய் இருக்குமளவும் தேவனுடைய கிருபையை பெறும் தகுதி நமக்கில்லை. நம்முடைய பெலத்தில் நாம் செயலாற்றிக்கொண்டிருக்கும் போது, தேவன் தம்முடைய கிருபையைக்

கட்டவிழ்க்க வேண்டிய அவசியம் என்ன? ஆனால், நாம் செய்ய வேண்டிய ஒரு காரியத்தைச் செய்ய முடியது என்ற நிலைக்கு வரும்போதுதான் தேவ கிருபை கட்டவிழ்க்கப்பட தகுதி பெறுகிறோம்.

தேவனுடைய குமாரனுடைய விசுவாசம்

கலாத்தியர் 2:20ல் பவுலின் இன்னொரு அறிக்கையை நாம் காண்கிறோம். தன் விசுவாசத்தையும், நிலையையும் பவுல் எத்தனை முறை அறிக்கை செய்கிறார் என்பதைக் காணும்போது, அது சுவாரசியமாக இருக்கிறது. புதிய ஏற்பாட்டில், அப்போஸ்தலர்கள் எதிர்மறையான அறிக்கைகளைச் செய்வதை நீங்கள் எங்கும் காண முடியாது. ஆனால், தற்காலத்திலுள்ள கிறிஸ்தவர்களும், அவர்கள் ஊழியர்களும் கூட, "இதைச் செய்ய முடியாது," "இதில் விருப்பம் இல்லை," "என்னால் முடிந்தால்," "என்னால் முடியாது," போன்ற அநேக எதிர்மறையான அறிக்கைகளை நாம் கேட்கலாம்.

அப்போஸ்தலர்கள் இவ்விதமாக பேசினதில்லை - அவர்கள் தன்னம்பிக்கை உள்ளவர்களாய் இருந்தபடியால் அல்ல, மாறாக தங்கள் சுயபெலத்தின் முடிவிற்கு அவர்கள் வந்திருந்தபடியால் அப்படி பேசினார்கள். ஆகையால் பவுல் இந்த அறிக்கையை செய்கிறார்:

> *கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைதாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன். (கலாத்தியர் 2:20)*

ஆங்கில மொழிபெயர்ப்புகளைப் போல, தமிழிலும் "தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஆனால் கிங் ஜேம்ஸ் ஆங்கில மொழிபெயர்ப்பு, ''தேவனுடைய குமாரனுடைய விசுவாசத்தினாலே'' என்று கூறுகிறது. என்

விசுவாசத்தில் நான் சார்ந்திருக்கவில்லை. இயேசு எனக்குள் வாழ வந்தபோது, அவர் தம்முடைய விசுவாசத்தோடு வந்தார்.

இங்குச் சிலுவையில் கிறிஸ்துவின் தியாகத்தின் விளைவாக தன் சுய ஜீவியத்தின் முடிவுக்கு வந்துவிட்டதாக பவுல் கலாத்தியர் 2:20ல் வலியுறுத்துகிறார். பவுல் சிலுவையினிடத்திற்கு வந்தபோது, அவர் மரித்தார். இப்போது, பவுல் ஜீவிக்கவில்லை. அவருக்குள் கிறிஸ்து ஜீவிக்கிறார்.

இதை உங்கள் தனிப்பட்ட அறிக்கையாக மாற்ற, உங்களுக்கு நான் சவால் விடுகிறேன்:

> *நான் கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையில் அறையப்பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைதாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்.*

பரிசுத்தத்திற்கான திறவுகோல்

பவுலின் அறிக்கையை புரிந்துகொள்வதுதான் புதிய ஏற்பாட்டின் பரிசுத்தத்திற்கானத் திறவுகோல் என்று நான் நம்புகிறேன் - “*அதையல்லாமல்*” வேதம் கூறுகிறது “*பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே*” (எபிரெயர் 12:14). லேவியராகமம் 11:45ல், தேவன், “*நான் பரிசுத்தர் ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள்*” என கூறுகிறார். பழைய ஏற்பாட்டில், பரிசுத்தம் என்பது சில சிக்கலான சட்டங்களைக் கைக்கொண்டு நடப்பதாக இருந்தது.

புதிய ஏற்பாட்டில், பரிசுத்தத்தைக் குறித்து விசுவாசிகளுக்கு எழுதும்போது, பேதுரு லேவியராகமத்திலுள்ள இந்தப் பகுதியை

மேற்கோள் காட்டுகிறார்: *"நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள்"* (1 பேதுரு 1:16). ஆனால் பழைய ஏற்பாட்டின் பரிசுத்தத்திற்கும், புதிய ஏற்பாட்டின் பரிசுத்தத்திற்கும் ஒரு முழுமையான வித்தியாசமுண்டென்பதை நாம் உணர்வது அவசியம். பழைய ஏற்பாட்டு பரிசுத்தம் மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொண்டு நடப்பதாக இருந்தது. புதிய ஏற்பாட்டு பரிசுத்தமோ, குறிப்பிட்ட சட்டங்களைக் கைக்கொள்வதைச் சார்ந்ததல்ல, ஆனால், கிறிஸ்து தமக்குள் நாம் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்ற, நமக்கு உதவிசெய்கிறார். சுயத்திற்கு மரித்து, கிறிஸ்துவை நமக்குள்ளிருந்து தமது வாழ்வை வெளிப்படுத்த அனுமதிப்பதால், நாம் புதிய ஏற்பாட்டு பரிசுத்தத்தைப் பெறுகிறோம்.

ஆகவே, அது என்னுடைய பரிசுத்தம் அல்ல, அது கிறிஸ்துவினுடையது. இதை இப்படியாக நான் விவரிக்க விரும்புகிறேன்: "இது போராடுவதல்ல, விட்டுக்கொடுப்பதாகும்; இது பிரயாசமல்ல, ஐக்கியப்படுதலாகும் - கிறிஸ்துவுடன் ஒன்றிணைவதாகும்."

தன் பக்தியுள்ள வாழ்விற்காக அதிகம் ரசிக்கப்பட்ட ஒரு பெண்மனி இருந்தார்கள். ஒரு நாள், இன்னொரு கிறிஸ்தவர் அவர்களைப் பார்த்து, ''சகோதரியே, நீங்கள் சோதனையை எப்படி எதிர்கொள்கிறீர்கள் ?" என்று கேட்டாராம். உடனே அவர்கள், "பிசாசு கதவைத் தட்டும்போது, இயேசு அவனுக்குப் பதிலளிக்க நான் விட்டுவிடுகிறேன்" என்றார்களாம்.

அவளுடைய வாக்கியத்தை சுருக்கமாக சொல்ல வேண்டுமானால்: "நான் அல்ல கிறிஸ்துவே" என்பதாகும். கிறிஸ்துவுக்குள் வெற்றி வாழ்வு, நான் என்ன செய்யக்கூடும் என்பதினால் வராது - என்னுடைய சிறந்த முயற்சியினாலோ, ஆவிக்குரிய புயபலத்தினாலோ உண்டாகாது. அது விட்டுக்கொடுத்தலினால் உண்டாகும். கிறிஸ்து தமது கிரியையை என்னில், என் மூலம், எனக்காக செய்ய அனுமதித்து நான் வாழ்கிறேன்.

கனிகொடுக்க கிளை நறுக்குதல்

யோவன் 15ம் அதிகாரத்தில், இயேசு தம்முடைய வாழ்வை நம்மூலம் வாழ்வதாக இன்னொரு உதாரணத்தை நாம் காண்கிறோம். இவ்வாழ்வைச் சிறப்பாய் விளக்க, இயேசு திராட்சைச்செடி மற்றும் கொடிகளின் உதாரணத்தை அந்த அதிகாரத்தில் பயன்படுத்துகிறார்:

> *நான் மெய்யான திராட்சச்செடி, என் பிதா திராட்சத் தோட்டக்காரர்.* (யோவான் 15:1)

> *என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன்; கொடியானது திராட்சச்செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய்க் கனிகொடுக்க மாட்டாததுபோல, நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால், கனிகொடுக்கமாட்டீர்கள். நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது.* (யோவான் 15:4-5)

பிதா தான் திராட்சத்தோட்டக்காரர் என்பதைக் கவனியுங்கள். மற்றவர்கள் கிளை நறுக்குவதைக் குறித்து ஜாக்கிரதையாய் இருங்கள். கிளை நறுக்குதலைச் செய்ய, பிதா ஒருவருக்கே செயற்திறனும் உணர்திறனும் இருக்கிறது. சில சபைகளும் ஐக்கியங்களும் உண்டு - அங்கே தலைவர்கள் கிளையை நறுக்க விரும்புவர் - அவர்கள் எல்லாரையும் நறுக்க விரும்புகின்றனர்.

மனித கிளை நறுக்குதலுக்கு இடம் கொடுப்பதைக் குறித்து எச்சரிக்கையாக செயல்படுங்கள். அது தேவையற்ற வலியை உண்டாகுவது மட்டுமல்லாமல், அதைச் செய்கிறவர்கள் தவறான கிளையை நறுக்கிப்போடவும் கூடும். தேவனுடைய ஜனங்களின் கிளை நறுக்குதலைச் செய்வது ஊழியர்கள் மற்றும் தலைவர்களின் பணியல்ல. தேவனுடைய கிளைநறுக்குதலுக்கு அவர்களை

விட்டுக்கொடுக்க ஊக்குவிப்பது மற்றும் அந்தத் தொடர் செயலில் அவர்களுடன் பங்குபெறுவதும்தான் அவர்கள் பணி.

இயேசுவின் திராட்சச்செடி மற்றும் கொடிகளின் சித்திரத்தில் இருந்து நாம் அதிகமானதைக் கற்றுக்கொள்ள முடியும். கனி கொடுக்க ஒரு திராட்சச்செடியின் கிளை போராடுவதை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா ? கிளையின் பிரயாசத்தால் அது நடப்பதில்லை; திராட்சச்செடியின் ஜீவன் கிளைக்குள் ஓடுவதால்தான் கனி உண்டாகிறது.

இந்த உவமை, தெய்வத்துவத்தின் மூன்று நபர்களையும் ஈடுபடுத்துகிறது. பிதா திராட்சத்தோட்டகாரர், இயேசு திராட்சச்செடி, பரிசுத்த ஆவியானவர் அந்தச் செடிக்குள் இருக்கும் உயிர் சாறாய் இருக்கிறார். நாம்தான் கிளைகள். பரிசுத்த ஆவியானவர், அந்தத் திராட்சச்செடியின் வழியாக பாய்ந்தோடி, கிளைகளைச் சேரும்போது, அந்தக் கிளைகள் ஆவியின் கனியைப் பிறப்பிக்கின்றன.

“கனி” என்ற வார்த்தையே, விளைவுகள் நம்முடைய பிரயாசத்தால் உண்டாகவில்லை என்பதைக் காண்பிக்கிறது. எந்த மரமும், பிரயாசப்பட்டு, கனியை உண்டாக்கினதில்லை. அதேபோல், எந்த கிறிஸ்தவனும் பிரயாசத்தினால் கனியை உண்டாக்க முடியாது. நம்முடைய போராட்டத்திலிருந்து நாம் ஓயும் இடத்திற்கு நாம் வர வேண்டும். - ஒரு விதமாக, நம்முடைய நற்கிரியைகளில் இருந்து ஓய வேண்டும், நம்முடைய பாவங்கள் மட்டும் முடிவுக்கு வந்தால் போதாது, தேவனுக்காக நாம் செய்ய முடியும் என்று எண்ணுகிற எந்த மனித பிரயாசத்தின் கிரியைகளும் முடிவுக்கு வர வேண்டும். இந்தப் பிரயாசங்கள் எல்லாம் முடிவுக்கு வந்து, நாம் இயேசுவுக்கு விட்டுக்கொடுக்க வேண்டும்.

இயேசுவுக்கு சகலத்தையும் நாம் விட்டுக்கொடுத்த பின்பு, பவுலோடு நாமும் *“என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினால் எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலன் உண்டு”* என்று சொல்ல முடியும் (பிலிப்பியர் **4:13**). கிரேக்கத்தில் அவ்வசனத்தை

நேரடியாக வாசித்தால், ''என்னை உள்ளாக வலுவூட்டும் அந்த ஒருவராலே, நான் எல்லாவற்றையும் செய்ய முடியும்'' என்று கூற வேண்டியதிருக்கும்.

நமது அன்பான பரம பிதா

நீங்கள் எல்லா சட்டங்களையும் கைக்கொண்டு, கோட்பாடுகளைப் பின்பற்றி, போதனைகளைக் கேட்டு வாழலாம். ஆனால், சிலுவையின் மூலம் தேவனுடைய கிருபை கட்டவிழ்க்கப்பட்டாலொழிய, நீங்கள் மெய்யான வெற்றியை அடைய முடியாது. உண்மையைச் சொன்னால், தேவனுடைய கிருபையைக் கட்டவிழ்ப்பது எப்படி என்பதை நாம் அறியா விட்டால், சட்டங்கள் நமக்கு உதாவாது. எவ்வளவு அதிகமாக சட்டங்களைக் கைக்கொள்ள முற்படுகிறோமோ, அவ்வளவு நம்முடைய பிரச்சனைகளும் தீவிரமடையும்.

சட்டங்களைக் கைக்கொண்டு நடப்பதே உங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட வழிமுறையாக இருந்தால், முடிவில் சட்டங்களையும் கோட்பாடுகளையும் தூக்கி எறிந்து விட்டு, "இது பிரயோஜனமற்றது, என்னால் செய்ய முடியாது!" என்று கூறுவீர்கள். நீங்கள் சொல்வதும் உண்மையாகதான் இருக்கும். தேவனுடைய சட்டத்தைப் பூரணமாக நிறைவேற்றக்கூடிய ஒரே மனிதர் உண்டு, அவர் பெயர் இயேசு. சிலுவைக்கு அர்ப்பணிப்பதின் மூலம் நம்முடைய சுயத்தின் முடிவுக்கு நாம் வந்து, அவருடைய வாழ்வை நம் மூலம் வாழ நாம் அனுமதிக்கும்போது - அப்போது நிறைவாக நமக்கு வெற்றியைத் தர அவர் வல்லவராக இருக்கிறார். சிலுவையின் மூலம் கட்டவிழ்க்கப்படும் கிருபையை அல்லாமல், நாம் ஒருவரும் உண்மையாய் ஆவியில் நடைபோட முடியாது.

கிருபையைப் பற்றிய அருமையான உண்மை என்னவென்றால், நாம் காரியங்களைச் சரியாக செய்யாவிட்டாலும், தேவன் நம்மைத் தள்ளிவிடுவதில்லை. நாம் எங்கு தவறு செய்தோம் என சுட்டிக் காண்பித்து, மறுபடியும் முயற்சி செய்ய ஊக்குவிக்கிறார். நான்

செய்த தவறுகளையும், நான் தவறாக சென்ற வழிகளையும் நினைத்துப் பார்க்கும் போது, தேவன் தம்முடைய கரங்களை என் மீது வைக்கிறார் என்பதைக் குறித்து நான் ஆச்சரியப்படுகிறேன்.

ஒரு கிறிஸ்தவனாக நீங்கள் போராடிக்கொண்டிருந்தால், நம்பிக்கை இழக்காதீர்கள். தேவன் உங்களுடன் கடுமையாக இடைபடலாம். நீங்கள் புரிந்துகொள்ள முடியாதவைகளை அவர் உங்கள் வாழ்வில் செய்யலாம். ஆனால், அவர் ஒருபோதும் உங்களை விட்டுவிட மாட்டார். சிறுபிராயத்தைக் குறித்த கசப்பான நினைவுகள், உங்களைப் புரிந்துகொள்ளாத அல்லது எப்போதும் அன்பாயிராத பெற்றோரைக் குறித்த நினைவுகள் உங்களுக்கு இருக்கலாம். ஆனால், தேவன் என்னும் இன்னொரு தகப்பன் உங்களுக்கு உண்டென்பதை நினைவுகூறுங்கள். அவர் பொறுமையுள்ளவர், மிகுந்த புரிந்துகொள்ளுதல் உள்ளவர், மற்றும் மிகவும் மென்மையானவர்.

ஒரு ஜெபத்தினாலும், அறிக்கையினாலும், இந்த அதிகாரத்தில் கற்றுக்கொண்ட சத்தியங்களை உறுதி செய்ய விரும்புவீர்களா**?**

ஆண்டவராகிய இயேசுவே, நான் பின்பற்றக்கூடிய எந்தச் சட்டங்களிலும், நியாப்பிரமாணத்திலும், நீர் பாடுபட்டு மரித்த சிலுவை பலமுள்ளதாக இருக்கிறது. அச்சட்டங்களிலிருந்து, சிலுவை என்னை விடுவித்து, இயற்கைக்கு அப்பாற்பட்ட உம்முடைய கிருபைக்கு வழியைத் திறக்கிறது. கர்த்தாவே, உம்முடைய வாழ்வை என்னில் வாழும். பரிசுத்த ஆவியானவரின் சாறு எனக்குள் பாய்ந்தோடி, உம்மையல்லாமல் உண்டாகாத கனியை என் வாழ்வில் பிறப்பிக்கட்டும். சிலுவையின் மூலம் என் வாழ்வில் உண்டான இயற்கைக்கு அப்பாற்பட்ட கிருபைக்காக நன்றி ஆண்டவரே. ஆமென்.

அதிகாரம் 4

இயற்கைக்கப்பாற்பட்ட உறுதிப்பாட்டின் கட்டவிழ்த்தல்

நாம் சிலுவையை மையத்தில் வைக்கவேண்டிய மூன்றாவது காரணம் என்னவென்றால், தேவனுடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட உறுதிப்படுத்துதல், சிலுவையின் செய்தியை நாம் பிரசங்கிக்கும்போது கட்டவிழ்க்கப்படுகிறது. 1 கொரிந்தியர் 2:4-5ஐ நாம் மறுபடியும் திருப்பிக்கொள்வோம், பவுல் அங்கே எழுதுகிறார்:

> *உங்கள் விசுவாசம் மனுஷருடைய ஞானத்திலல்ல, தேவனுடைய பெலத்தில் நிற்கும்படிக்கு, என் பேச்சும் என் பிரசங்கமும் மனுஷ ஞானத்திற்குரிய நயவசனமுள்ளதாயிராமல், ஆவியினாலும் பெலத்தினாலும் உறுதிப்படுத்தப்பட்டதாயிருந்தது.*

பின்பு 2 கொரிந்தியர் 10:10ல், தன் சரீரத்தின் தோற்றம் பலவீனமும், பேச்சு அற்பமுமாயிருந்ததென்று கூறின தன் விமர்சகர்களை மேற்கோள் காட்டி பேசுகிறார். பவுல் சிறந்த சொற்பொழிவாளராகவோ, மற்றவர்களை ஈர்க்கக்கூடிய தோற்றமுடையவராகவோ இல்லாமல் இருந்திருக்க வேண்டும். அவர் குட்டையானவர் மற்றும் வளைந்த கால்களை உடையவர் என்று பாரம்பரியம் சொல்லுகிறது - மிகவும் கவர்ச்சியற்ற தோற்றம். ஆனால் பவுல் தன் பேச்சுத் திறமையையோ, ஞானத்தையோ சார்ந்திருக்கவில்லை. அவர் எல்லாவற்றிற்கும் மேலான ஒரே சிறப்பம்சத்தை சார்ந்திருந்தார்: தான் பிரசங்கித்த செய்திக்கு பரிசுத்த ஆவியானவர் அளித்த இயற்கைக்கு அப்பாற்பட்ட உறுதிப்பாடு.

முழு சுவிசேஷம்

மேல் காணும் பகுதியிலிருந்து, பரிசுத்த ஆவியானவரின் உண்மை நிரூபிக்கப்பட முடியும் என்பதைக் கவனிப்பது அவசியம். அவரோ காணப்படாதவர் - ஆனால் தாம் செய்கின்ற கிரியைகளினாலே அவர் நிரூபிக்கப்படுகிறார். நாம் பரிசுத்த ஆவியானவரைக் காண முடியாது. ஆனால், அவர் செய்யும் அற்புத அடையாளங்களை நாம் காண முடியும். பிரசங்கிக்கப்படுகின்ற செய்திக்கு இவைகளே தேவனுடைய தனிப்பட்ட அத்தாட்சி.

தத்துவம் படித்தவர் என்பதினால், மேல் காணும் பகுதியை நான் அதிகம் விரும்புகிறேன். ஐம்பது ஆண்டுகளுக்கு முன் நான் படித்த தத்துவம், ஆடம்பரமான ஒன்றாய் இருந்தது, ஆனால் இன்று அது காலாவதியானது. அந்த ஞானத்தின் மேல் என் வாழ்க்கையை நான் கட்டியமைத்திருந்தால், இன்று எனக்குக் கீழ், நொருங்கி விழும் அஸ்திபாரம் கொண்டவனாக நான் இருந்திருப்பேன். ஆனால், இயேசுவை நான் சந்தித்தபோது, தேவனுடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையின் அனுபவம் எனக்கு உண்டானது. அந்த உண்மை, என் வாழ்வு முழுவதிலும் அசைக்க முடியாத அஸ்திபாரமாக அமைந்துள்ளது.

பவுல் ரோமர் **15:18** - **19**ல் எழுதுகிறார்:

> *புறஜாதியாரை வார்த்தையினாலும், செய்கையினாலும் கீழ்ப்படியப்பண்ணும்படிக்கு, அற்புத அடையாளங்களின் பலத்தினாலும், தேவ ஆவியின் பலத்தினாலும், கிறிஸ்துவானவர் என்னைக்கொண்டு நடப்பித்தவைகளைச் சொல்வதல்லாமல் வேறொன்றையும் சொல்ல நான் துணிவதில்லை; இப்படி எருசலேம் துவக்கிச் சுற்றிலும், இல்லிரிக்கம் தேசம்வரைக்கும், கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பூரணமாய்ப் பிரசங்கித்திருக்கிறேன்.*

இத்தனை வார்த்தைகளைப் பயன்படுத்தி, தேவன் தம்மைக்கொண்டு செய்தவைகளைத் தவிர, பவுல் தாமாக செய்தவைகளில் தனக்கு அக்கரையில்லை எனக் கூறுகிறார். அற்புத அடையாளங்களின்றி, சுவிசேஷத்தைப் பூரணமாக தாம் பிரசங்கிக்கவில்லை என பவுல் நம்பினார், சிலுவையின் செய்தியைப் பேசும்போது, தேவனுடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட உறுதிப்பாடு, விடுவிக்கப்படும் என்று அவர் அறிந்திருந்தார்,

இருதய கீழ்ப்படிதல்

1950ம் ஆண்டுகளில், நான் கிழக்கு ஆப்பிரிக்காவின் கென்யா தேசத்தில் அமைந்திருந்த ஒரு ஆசிரியர் பயிற்சி கல்லூரியின் முதல்வராக பணியாற்றினேன். அந்தக் காலக்கட்டத்தில், ஆப்பிரிக்க மக்கள் கல்விக்காக பெரும் பிரயாசப்பட்டிருந்தார்கள். அதன் விளைவாக, கல்லூரிக்குச் சென்று, அதின் எல்லா விதிகளையும் பின்பற்றி, சொல்லப்பட்ட யாவையும் செய்ய அவர்கள் ஆயத்தமாக இருந்தனர். அவர்களை ஞானஸ்நானம் பெறச் சொன்னால், பெற்றுக்கொள்வார்கள். அவர்களைப் பாடல் பாடச் சொன்னால் பாடுவார்கள். ஏன்? ஏனென்றால், அவர்களுடைய எதிர்காலமே அதைத்தான் சார்ந்திருந்தது. ஆனால், நானும் எனது முதல் மனைவி லிடியாவும், அங்கு ஓர் ஆண்டு தங்கினபின், அவர்கள் செய்த அதிகமானவைகள், தங்கள் படிப்பிற்கான புறம்பான ஒத்துழைப்பாக இருந்ததே தவிர, உள்ளத்தில் உண்டாகும் கீழ்ப்படிதலல்ல என்று கண்டுபிடித்தோம்.

இந்தப் பாரத்துடன், நூற்றிருபது பேர் கொண்ட முழு மாணவ சங்கத்தையும் நான் கூட்டிச்சேர்த்தேன். அவர்கள் எல்லாரும் கூடி வந்த பிறகு, நான் இப்படியாக பேசினேன்: "நீங்கள் எங்களுடன் ஒத்துழைத்து, நாங்கள் சொல்வதையெல்லாம் நிறைவேற்றும் விதத்திற்காக, உங்களுக்கு நன்றி கூற விரும்புகிறேன். கல்விக்காக அதைச் செய்கிறீர்கள் என்பதை உணருகிறேன். நான் நன்றியுள்ளவன். ஆனால், உங்கள் அநேகருடைய மனதில், பதிலளிக்கப்படாத ஒரு

மாபெரும் கேள்வி உள்ளது. அந்தக் கேள்வி என்னவெனில்: 'இந்த வேதாகமம் உண்மையில் தேவனிடமிருந்து வந்த செய்திதானா, அல்லது ஆப்பிரிக்கருக்கு பொருத்தமில்லாத வெறும் வெள்ளைக்காரனின் புத்தகமா?' "

தாங்கள் யோசித்துக்கொண்டிருந்ததை நான் கூறியதால் அவர்கள் சற்று அதிர்ச்சி அடைந்தார்கள். நான் அடுத்து சொன்னது அவர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியது: "அந்தக் கேள்விக்கு நான் பதில் கூற முடியாது. அதற்கான பதிலைக் கண்டுப்பிடிப்பதற்கான ஒரே வழிதான் உள்ளது. தேவனுடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையை நீங்கள் உங்கள் வாழ்வில் அனுபவித்தால்தான் பதில் கிடைக்கும். அப்போதுதான் அது அமெரிக்காவில் இருந்தோ பிரிட்டனிலிருந்தோ வரவில்லை என்பதை அறிவீர்கள். அது பரலோகத்திலிருந்து வந்தது."

அதைத் தொடர்ந்த சில மாதங்களில், என்னால் இயன்ற மட்டும் எல்லா விதத்திலும், நான் அவர்கள் முன் தேவனுடைய வார்த்தையை வைத்தேன். ஏனென்றால், அவர்களை மாற்றும் வல்லமை அதிலிருந்தது. அதன் பின், சுமார் ஆறு மாதம் நான் கடந்து சென்று ஜெபித்தேன். அதன் விளைவு என்ன? அந்த மாணவர்கள் மீது தேவன் தம்முடைய ஆவியை ஊற்ற ஆரம்பித்தார். தங்கும் விடுதிகளில், அவர்களைத் தூங்க வைக்க இயலவில்லை, ஏனெனில் அவர்கள் ஜெபிப்பதில் ஓய்வில்லாமல் ஈடுபட்டிருந்தார்கள்! அடுத்த ஆறு மாதங்களில், அந்த இளம் ஆப்பிரிக்கேயர் மத்தியில், பரிசுத்த ஆவியானவரின் ஒன்பது வரங்களும் செயலாற்ற கண்டோம். தேவனுடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையை அவர்கள் அனுபவித்த போது, அவர்கள் வாழ்க்கை முற்றிலுமாக மாற்றப்பட்டது - சிலுவையின் செய்தியின் உறுதிப்பாடு இதுவே.

அக்காலக்கட்டத்தில், இரண்டு மாணவர்கள் மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதைக் கண்டோம். ஒருவர் இளம் வாலிபர் மற்றொருவர் ஒரு இளம் பெண். அந்த இளம் பெண்ணின் பெயர் தெரெசா. அவள் மிகவும் வியாதிப்பட்டு தன் கிராமத்தில் இருக்கும் தனது வீட்டிற்குச்

சென்றாள். சில நாட்களுக்குப் பின் தெரெசாவின் சகோதரன் சைக்கிளில் வந்து, அவள் மரித்துக்கொண்டிருக்கிறாள் என்று எங்களுக்கு அறிவித்தான்.

லிடியாவும் நானும், அந்தச் சைக்கிளை எங்கள் காரின் மீது கட்டிக்கொண்டு, அவள் சகோதரனைக் காரில் ஏற்றிச் சென்றோம். நீண்ட பயணத்திற்குப் பின், தெரெசா இருந்த சிறிய மருத்துவமனையை சென்றடைந்தோம். நாங்கள் அங்குச் செல்வதற்குள் அவள் மரித்துவிட்டாள். குடும்பத்தினர் அனைவரும் வெளியே நின்று, அழுது புலம்பிக்கொண்டிருந்தனர். புதிய ஏற்பாட்டில் இருக்கும் காட்சியைப் போலவே இருந்தது. தெரெசா இருந்த அறைக்குள், என்ன செய்யபோகிறோம் என்ற திட்டம் எதுவும் இல்லாமல், நானும் லிடியாவும் சென்றோம். படுக்கையின் இரு பக்கமும் முழங்கால்படியிட்டு, இருவரும் ஜெபித்தோம். சில நிமிடங்கள் சென்ற பின், தெரெசா எழுந்து உட்கார்ந்து, "யாரிடமாவது வேதாகமம் இருக்கிறதா ?" என்று கேட்டாள்.

"என்னிடம் இருக்கிறது" என்றேன்.

"சங்கீதம் 41ஐ வாசியுங்கள்" என்றாள்.

ஆகவே, நான் சங்கீதம் 41ஐ வாசித்தேன். ஏன் அந்தச் சங்கீதத்தை வாசிக்க சொன்னாள் என்று எங்களுக்குத் தெரியாது. பின், தெரெசா தான் மரித்த பின்பு, தன் ஆவி சரீரத்தை விட்டுப் பிரிந்து, மிக அழகான, பிரகாசமான வெளிச்சம் இருந்த ஸ்தலத்திற்குச் சென்றதாக கூறினாள். அந்த இடத்தில், வேதத்திலிருந்து சங்கீதம் 41ஐ வாசித்துக்கொண்டிருந்த ஒரு மனிதன் இருந்தான். ஆகவே, சங்கீதம் 41ல் என்ன இருக்கிறதென்று அறிய விரும்பினாள்!

இயற்கைக்கு அப்பாற்பட்ட தேவனுடைய வல்லமையின் அனுபவம், உள்ளத்திலிருந்து உண்டாகும் கீழ்ப்படிதலை உண்டாக்குகிறது. சிலுவையின் செய்தியையும், தேவனுடைய இராஜ்யத்தின் செய்தியையும் நாம் அறிவிக்கும்போது, அது பரிசுத்த ஆவியானவரின்

இயற்கைக்கு அப்பாற்பட்ட உறுதிப்பாட்டைக் கொண்டு வருகிறது. அந்த உறுதிப்பாடு வரும்போது, இருதயங்கள் மாற்றப்படுகின்றன.

அப்படிப்பட்ட இயற்கைக்கு அப்பாற்பட்ட உறுதிப்பாடிற்காக நீங்கள் ஏங்கிக்கொண்டிருக்கிறீர்களா **?** பின் வரும் ஜெபத்தைக்கொண்டு ஆண்டவருக்கு உங்கள் வாஞ்சையை ஏன் சொல்லக் கூடாது **?**

ஆண்டவரே, என் சொந்த பேச்சு - என் நயவசனம் மற்றும் மனித ஞானத்தை விட அதிகம் விரும்புகிறேன். சிலுவையின் செய்தி பிரசங்கிக்கப்படும்போது, தேவனுடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட உற்திப்பாட்டின் விளைவாக உம்முடைய ஆவியின் வல்லமையின் வெளிப்பாட்டை நான் காண விரும்புகிறேன். ஆண்டவரே, அந்த இயற்கைக்கு அப்பாற்பட்ட விடுதலையை என் வாழ்வில் இன்னும் மகத்தான விதத்தில் இன்று கொண்டு வாரும். ஆமென்.

அதிகாரம் 5

சாத்தானின் தோல்விக்கான ஒரே அடிப்படை

சிலுவையின் மூலம் வெற்றி

நாம் நம்புகிற மற்றும் செய்கிற அனைத்தின் மையத்திலும் சிலுவை ஏன் இருக்க வேண்டும் என்பதற்கான, நான்காவது காரணம் இதோ: சாத்தானின் பூரண தோல்விக்குச் சிலுவை ஒன்று மட்டுமே அடிப்படை. இந்தச் சத்தியம் மிகவும் முக்கியமானது - இதை நாம் கண்டடையக் கூடாதென்று நமது சத்துரு விரும்புகிறான். மேலும் அதைப் பெற்று, புரிந்துகொண்டு, அப்பியாசப்படுத்துவதை தவிர்க, தனது வல்லமையினால் எல்லாவற்றையும் செய்ய முற்படுவான்.

சிலுவையின் மூலம், சாத்தானுக்கு இயேசு கிறிஸ்து ஒரு பூரணமான, நிரந்திர, மாற்றமுடியாத தோல்வியை உடுத்துவித்தார். இந்த நித்திய சத்தியத்தை சாத்தானால் மாற்ற முடியாது. மேலும், தனது தோல்வியை அவன் மிகவும் தாமதமாகதான் உணர்ந்துகொண்டான். சிலுவையில் இயேசுவின் மரணத்தை அவர் நிறைவேற்றி முடித்தபோது,தான் வெற்றி பெற்றுவிட்டான் என்று யோசித்தான். மாறாக, அவன் தனது தோல்வியைத்தான் சாதித்துப்பெற்றுக்கொண்டான். எனவே, சிலுவையில் தனது மறைவுக்குப் பின், இந்தச் சத்தியத்தை சபையின் கண்களுக்கு தெளிவற்றதாக்கி அதை மறைக்க தன் வல்லமையால் இயன்ற எல்லாவற்றையும் அவன் செய்து பார்த்துக்கொண்டிருக்கிறான். உங்கள் வாழ்விலோ அல்லது எந்தச் சூழ்நிலையிலோ நீங்கள் சாத்தானை எதிர்த்து நிற்க விரும்பினால், சிலுவையில் இயேசு அவன் மீது வெற்றி

பெற்றதின் அடிப்படையைத் தவிர வேறெந்த அடிப்படையிலும் நீங்கள் அதைச் செய்ய முடியாது. அப்படிச் செய்தால், நீங்கள் தோல்வி அடைவீர்கள். ஏன்? ஏனென்றால், நமது ஆத்துமாவின் எதிராளி, நம்முடைய சொந்த பெலத்திலும் ஞானத்திலும் நாம் எவ்வளவு பெலவான்களும், புத்திசாலிகளுமாய் இருக்கிறோமோ, அதை விட பலவானும், புத்திசாலியுமாய் இருக்கிறான்.

அசுத்த ஆவிகளிடமிருந்து விடுதலை அளிக்கும் ஊழியத்திற்குள் தேவன் என்னை நடத்தினபோது, பிசாசுகள் நம்முடைய இறையியல் மற்றும் சபை பிரிவுகளால் அச்சுறுத்தப்படுவதில்லை என்பதை கண்டுபிடித்தேன். நீங்கள் சுவிசேஷ சபையினரா, பெந்தேகோஸ்தேயினரா அல்லது கத்தோலிக்கேயரா என்பதைக் குறித்துக் கவலையடைவதில்லை. ஆனால் சிலுவையில் இயேசு நிறைவேற்றின கிரியையின் அடிப்படையில் நீங்கள் பிசாசுகளை எதிர்கொள்ளும்போது, அப்போது அவைகள் ''விசுவாசித்து - நடுங்குகின்றன'' (யாக்கோபு 2:19). சிலுவையில் சாத்தான் சந்தித்த அந்தத் தோல்வியின் உண்மையைக்கொண்டு பிசாசுகளை எதிர்கொள்ளும்போது, அவைகள் நடுங்குகிறதை நான் கண்டுள்ளேன்.

ஒரு பூரண வெற்றி

இயேசு சாத்தானின் மீது வெற்றிபெற்றது எப்படி என்பதை புரிந்துகொள்ள, முதலாவது லூக்கா 11:21-22ல் இயேசு சொல்லும் வாக்கியத்தை நாம் வாசிக்கலாம்:

> *ஆயுதந்தரித்த பலவான் தன் அரமனையைக் காக்கிறபோது, அவனுடையபொருள் பத்திரப்பட்டிருக்கும். அவனிலும் அதிக பலவான் வந்து, அவனை மேற்கொள்வானேயாகில், அவன் நம்பியிருந்த சகல ஆயுதவர்க்கத்தையும் பறித்துக்கொண்டு, அவனுடைய கொள்ளைப்பொருளைப் பங்கிடுவான்.*

இங்கு ஒரு கொடுங்கோலன், அடக்குபவனைக் குறிக்கும்

சித்திரத்தை நாம் காண்கிறோம். அவன் பலமான ஓர் அரண்மனையில், திடநம்பிக்கையுடன் வாழ்கிறான். அதற்கு அவன் பூரண எஜமானாக இருக்கிறான். தன்னால் ஒடுக்கப்பட்டவர்களிடமிருந்து அவன் தவறாக பறித்த கொள்ளைப்பொருளும் அந்த அரண்மனையில் குவித்து வைக்கப்பட்டுள்ளது. தன்னுடைய கட்டுப்பாட்டில் திரளான அடிமைகளையும் அவன் கொண்டிருக்கிறான், அவர்களைத் தன் விருப்பத்தை நிறைவேற்ற நிர்பந்திக்கிறான்.

முழுமையாக ஆயுதம் தரித்து, தன்னைத் தோற்கடிக்க எவராலும் இயலாது என்று சிந்தித்துக்கொண்டு, தன் அரணிற்குள் அமர்ந்துள்ளான். ஆனால் அவனைவிட பலவானான இன்னொருவன், அவனுக்கு விரோதமாக வந்து, அவனைத் தோற்கடிக்கிறான். அதிக பலமுள்ளவன், முதல் மனிதனிடமிருந்து எல்லா ஆயுதங்களையும் பறித்துக்கொண்டு, அவனுடைய அடிமைகளை எல்லாம் விடுதலையாக்கி, அவன் பொருட்களை கொள்ளையிடுகிறான், என்பதைத் தயவு செய்து கவனியுங்கள்.

இந்த உவமையில், முதல் பலவான் சாத்தான். இரண்டாவது பலவான் இயேசு. சாத்தான், தன் அரணில், எல்லாவற்றையும் தன் கட்டுப்பாட்டினுள் வைத்திருந்தான். மனுகுலத்தை அடிமைப்படுத்தி வைத்திருந்தான். நம்முடைய பிதாவாகிய தேவன், நாம் பெற வேண்டும் என்று விரும்பிய சகல ஆஸ்திகளையும், ஆசீர்வாதங்களையும் திருடிக்கொண்டான். தான் தோற்கடிக்கப்படவே முடியாது என்று சிந்தனை செய்து அமர்ந்திருந்தான். இயேசு வந்தார். அதினால் நாம் ஆண்டவருக்கு நன்றி சொல்லி, துதி செலுத்த காரணம் உண்டாயிற்று!

எந்த ராணுவ ஆயுதங்களும் இல்லாமல், சிலுவையில் இயேசு சாத்தானுக்கு, ஒரு பூரண, நிரந்திர, மாற்ற முடியாத தோல்வியை வழங்கினார். சத்துருவைத் தோற்கடித்தவர், அவன் எல்லா ஆயுதங்களையும் உரிந்துகொண்டு, அவனுடைய சிறைகளைப் பார்த்து, ‘‘இப்போது நீங்கள் விடுதலையாகலாம்! நீங்கள் போகும் போது,

அப்படியே கொஞ்சம் கொள்ளைப்பொருளையும் எடுத்துக்கொண்டு போங்கள்" என்றார். எனவே இந்த உவமை, சிலுவை மரணத்தின் மூலம் இயேசு என்ன சாதிப்பார் என்ற அவரின் சொந்த சித்திரத்தைக் குறிக்கின்றது.

இயேசு சாத்தானைத் தோற்கடித்தபோது, என்ன நிறைவேற்றப்பட்டது என்பதை நாம் கொலோசெயர் 2:13-15ல் வாசிக்கிறோம்:

> *உங்கள் பாவங்களினாலேயும், உங்கள் மாம்ச விருத்தசேதனமில்லாமையினாலேயும் மரித்தவர்களாயிருந்த உங்களையும் அவரோடேகூட* (குமாரனாகிய இயேசு கிறிஸ்துவுடன்) *உயிர்ப்பித்து, அக்கிரமங்களெல்லாவற்றையும் உங்களுக்கு மன்னித்து; நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைந்து, அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து, சிலுவையின்மேல் ஆணியடித்து; துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்துகொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின்மேல் சிலுவையிலே வெற்றிசிறந்தார்.*

இயேசு *''துரைத்தனங்களையும் அதிகாரங்களையும்''* உரிந்துகொண்டார் என்று பவுல் இங்குக் கூறுகிறார். இந்த துரைத்தனங்களும் அதிகாரங்களும் சாத்தானின் படைகள். இதே துரைத்தனங்களையும் அதிகாரங்களையும்தான் பவுல் எபேசியர் 6:12ல் குறிப்பிடுகிறார்:

> *ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு.*

இயேசு சாத்தானின் படைகளைத் தோற்கடித்து, அவைகளின் ஆயுதங்களற அவைகளை உரிந்துப்போட்ட பின், அதை வெளியரங்கமாக காட்சிப்படுத்தினார். இதை எந்த அடிப்படையில் செய்தார் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும், ஏனென்றால் அதை நாம் கோட்பாடாக புரிந்துகொண்டு, நம்முடைய வாழ்வில் அப்பியாசப்படுத்தாமல் இருந்துவிடக்கூடும்.

பிசாசை எதிர்கொள்ளுதல்

மனுகுலத்திற்கு எதிரான, சாத்தானின் மிகப்பெரிய ஆயுதம் குற்றமனசாட்சி. சிலுவையில் இயேசு நிறைவேற்றின கிரியையினால், குற்றமனசாட்சியின் மேல் அவர் முழுமையான வெற்றியைப் பெற்றார். என்னுடைய கற்பனையில், பல காலங்களுக்கு முன், மனுகுலத்தை சீரழிக்க, சாத்தானின் முயற்சியில் என்ன நடந்திருக்கும் என்பதைக் குறித்த ஒரு எளிய சித்திரம் இதோ.

முதலாவது, சாத்தானுக்கு யோபுவின் காலத்தில் தேவனுடைய சமூகத்திற்குள் வர அனுமதி இருந்ததென்று அறிந்திருக்கிறோம். இதை நாம் எப்படி அறிந்திருக்கிறோம்? ஏனென்றால், வேதம் கூறுகிறது, தூதர்கள் தங்களை ஆண்டவருக்கு முன் நிறுத்த வந்தபோது, சாத்தானும் அவர்களுடைய கூட்டத்தில் இணைந்துகொண்டான். (யோபு 1:6-7ஐ பார்க்கவும்.) இது அவனுக்கு இயல்பான ஒன்று, ஏனென்றால் அவனுடைய மனநிலை, “தேவனே நான் தவறு செய்துவிட்டேன் என்று அறிவேன். ஆனால் இதோ இருக்கிறேன். இன்னும் உம்முடைய சமூகத்தில் வருகிறேன்” என்பதாக இருந்தது.

என்னுடைய புரிந்துகொள்ளுதலில், சாத்தானை அடையாளம் கண்ட ஒரே நபர் தேவன்தான், ஏனென்றால் சாத்தான் தன்னை ஒளியின் வேஷந்தரித்த தூதனாய் மாறுவேடம் போடக்கூடும் என்று பவுல் கூறுகிறார். (2 கொரிந்தியர் 11:14ஐ பார்க்கவும்.) அவனுடைய இருப்பு வெளியாக்கப்பட்டவுடன், யோபைக் குறித்து தேவனுக்கும் சாத்தானுக்கும் இடையில் ஒரு உரையாடல் நடந்தது. (என்னைக்

குறித்து அந்த உரையாடல் நடக்கவில்லை என்பதைக் குறித்து நான் எப்போதும் மகிழ்ச்சி அடைந்துள்ளேன்!)

சாத்தானை ஒரு ஆணவம் நிறைந்த, எதிர்க்கின்ற, வீண் பெருமை பாராட்டுகின்றவனாகவே நான் சித்தரிக்கின்றேன். தன் பெரிய வாயால், தேவனிடம், "தேவனே, கேளும், நீர் நீதியுள்ள, நியாயமான, பரிசுத்த தேவன் என்று அறிவேன். நான் கலகக்காரன் என்றும் அறிவேன். அந்த அக்கினி கடலைக் கண்டு, அங்குதான் செல்கிறேன் என்பதையும் அறிவேன். நான் அங்கே செல்ல தகுதியுள்ளவன் என்பதும் எனக்குத் தெரியும், அதைக் குறித்து நான் விவாதம் செய்யவில்லை. ஆனால், ஒரு காரியம் சொல்ல விரும்புகிறேன்: உமது சாயலில், உமது ரூபத்தில், நீர் உண்டாக்கி நேசிக்கும் அந்த மனிதர்கள் - என்னைப் போல கலகக்காரர்களாய் இருக்க, அவர்களை இணங்கச் செய்து விட்டேன். ஆகவே, இதை நினைவில் வைத்துக்கொள்ளும், என்னை அந்த அக்கினி கடலுக்கு அனுப்பும்போது, உமது நீதியின்படி நீர் அவர்களையும் என்னுடன் அனுப்பத்தான் வேண்டும்."

இந்தச் சவாலுக்குத் தேவன் எப்படி பதில் அளிக்க வேண்டும்? தேவன் இதற்கு பதிளிக்கும் விதத்தில், ஒரு வார்த்தையும் பேசவில்லை. (சில நேரங்களில் சாத்தானை எதிர்கொள்ள அவனுடன் வழக்காடுவதை விட, அவனைக் கண்டுகொள்ளாமல் இருப்பதே சிறந்தது. அது அவனை மிகவும் கலக்கும்.) தேவன் ஒன்றும் சொல்லவில்லை, ஆனால் அவரிடம் ஒரு திட்டம் இருந்தது. அவருடைய திட்டம் "இயேசு."

இயேசு கடைசி ஆதாமாக உலகத்தில் வந்தார். (1 கொரிந்தியர் 15:45ஐ பாருங்கள்.) அவர் ஆதாமின் சந்ததியுடன் தன்னை முற்றிலும் அடையாளப்படுத்திக்கொண்டார். சாத்தான் அவரைத் தொடர்ந்துபோய், இறுதியில் அவருடைய மரணத்தை சாதித்தான். மேசியா மரித்து விட்டால், தேவனுடைய இராஜ்ஜியத்தை அவரால் நிறுவ முடியாது என்று சத்துரு நினைத்தான். ஆனால், இயேசு சிலுவையில் மரித்தபோது, அவர் முழு ஆதாமின் சந்ததியினுடைய பிரதிநிதியாக

மாறினார். நம்மெல்லாருடைய குற்றமும் அவர் மேல் வைக்கப்பட்டது. அதற்கான முழு கிரயத்தையும் அவர் செலுத்தினார். அவர் மரித்து, அடக்கம்பண்ணப்பட்டபோது, நம்முடைய குற்றமணைத்தும் நிரந்திரமாக தள்ளிவைக்கப்பட்டது. அவருடைய மரணம் மற்றும் உயிர்த்தெழுதலினால், நாம் தேவனுடைய ராஜ்யத்தை நமக்குள் பெற முடியும். நம்முடைய கடமை ஒன்று மட்டும்தான் - இதை விசுவாசத்துடன் நம்ப வேண்டும்.

அதற்கேற்ப, சிலுவையின் கிரியையினால், மனுகுலம் அக்கினி கடலிலிருந்து விடுபட, தேவன் ஒரு வழியை ஏற்படுத்திவிட்டார். தம்முடைய நியாயத்தில், தேவன் நம்மை மன்னித்து, சாத்தானை தண்டிக்க முடியும், ஏனென்றால், சாத்தானுக்கு அக்கினி கடலைத் தவிர வேறெந்த எதிர்காலமும் உண்டென்ற ஒரு யோசனை வேதத்தில் எங்கும் குறிப்பிடப்படவில்லை.

இயேசு, தன் மீது தூதரின் தன்மையை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆகவே, அவர் தூதர்களின் ஸ்தானத்தை எடுக்க முடியாது. இயேசு கடைசி ஆதாம்; எனவே அவர் முழு ஆதாமின் சந்ததிக்கும் ஈடாக நின்றார் - ஆதாமின் சந்ததிக்காக மட்டும் நின்றார். தேவன் மனுகுலத்தை குறித்து ஏன் இவ்வளவு அக்கறை கொண்டிருந்தார் என்பதைக் கண்டறிய நித்தியம் போதாது. ஆனால், இயேசு செய்த செயலின் அடிப்படையில், தேவன் எப்போது வேண்டுமானாலும் சாத்தானை நியாயமாய் தண்டிக்க முடியும். தங்கள் சார்பில் செலுத்தப்பட்ட இயேசுவின் பலியை அங்கிகரிக்கின்ற ஒவ்வொருவரையும், தேவன் நியாயமாய் விடுதலை செய்யவும் முடியும்.

குற்றமனசாட்சியிலிருந்து விடுதலை

இயேசுவின் மரணத்தினால், இரண்டு பகுதிகளில் நம்முடைய குற்றமனசாட்சியில் இருந்து விடுப்பட தேவன் ஏற்பாடு செய்துள்ளார். ஒன்று நம்முடைய கடந்த கால குற்றமனசாட்சியோடு தொடர்புடையது; மற்றொன்று எதிர்கால குற்றமனசாட்சியோடு தொடர்புடையது.

முதலாவது, தேவன் கடந்த காலத்திற்காக ஏற்பாடு செய்தார். நம்முடைய எல்லா கீழ்ப்படியாமையின் செயல்களும் இயேசுவுக்குள் தண்டிக்கப்பட்டன. கொலோசெயர் 2:13ல், தேவன் நம்முடைய எல்லா மீறுதல்களையும் நமக்கு மன்னித்தார் என்று பவுல் கூறுகிறார். மறுபடியும், தனது நியாயத்தை சமரசம் செய்துகொள்ளாமல், அவரால் நம்மை மன்னிக்க முடியும் - நம்முடைய கடந்த காலத்தை சுத்தமாக்குகிறார்.

நீங்கள் இயேசுவை உண்மையாய் விசுவாசிப்பவர்களாய் இருந்து, அவருடைய ஏற்பாடை அங்கிகரித்திருக்கிறீர்கள் என்றால், பரலோகத்தின் ஆவணங்களில், கடந்த காலத்திலிருந்து, உங்களுக்கு விரோதமான ஒன்றும் இல்லை. நீங்கள் செய்த அனைத்து பொல்லாத செயல்களும் அழிக்கப்பட்டுவிட்டன. தேவன் அவைகளை இனி நினைப்பதில்லை என்று கூறியுள்ளார். (எரேமியா 31:34ஐ பார்க்கவும்.) இந்தக் கடந்தகால பாவங்களை அவர் கடல் ஆழத்தில் தள்ளி விட்டார். (மீகா 7:19ஐ பாருங்கள்.) காரிடென்பூம் அம்மையார் சொல்வது போல: அந்தக் கடலின் அருகே தேவன் ஒரு விளம்பர பலகையை வைத்திருக்கிறார், அதில் ''மீன் பிடிக்கக்கூடாது!'' என்று எழுதப்பட்டிருக்கிறது.

இயேசுவில் விசுவாசம் வைப்பவர்களாக, நம்முடைய கடந்த கால பாவங்கள் எல்லாம் இனி ஒருபோதும் நினைக்கப்படாதபடி முற்றிலுமாய் மன்னிக்கப்பட்டன என்ற உறுதியான நம்பிக்கை நமக்கு இருக்க வேண்டும். நாம் பாவங்களை அறிக்கை செய்து விட்டுவிடாமல் இருந்தால், இது உண்மை ஆகாது. அந்தப் பாவங்களை அறிக்கை செய்வதே தீர்வு, ஏனென்றால் *“நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்”* (1 யோவான் 1:9).

ஆனால், தேவன் இன்னமும் எதிர்காலத்திற்கு ஓர் ஏற்பாடு செய்ய வேண்டியதாக இருந்தது, இல்லாவிட்டால் நாம் மறுபடியும் சென்று

பாவம் செய்ய துவங்கிவிடுவோம். இந்த ஏற்பாடை செய்வதற்கு, தம்மிடத்தில் நீதியை அடைவதற்கு, மோசேயின் நியாயப்பிரமாணத்தின் படி செய்ய வேண்டும் என்ற நிபந்தனையை அவர் அகற்றினார். தேவன் நியாயப்பிரமாணத்தை, அதின் கட்டளைகளோடும், கற்பனைகளோடும் சிலுவையில் ஆணி அடித்தார் என்று பவுல் கூறுகிறார். (கொலோசெயர் 2:14ஐ பார்க்கவும்.) நீங்கள் சிலுவைக்கு வந்து, அதின் வல்லமையில் தொடரும்போது, நீதியைப் பெறுவதற்கான வழியாக நியாயப்பிரமாணத்தின் சட்டத்திற்கு நாம் புறம்பே இருக்கிறோம். (இந்தக் கருப்பொருளைக் குறித்துப் பின் வரும் ஓர் அதிகாரத்தில் தியானிப்போம்.)

விசுவாசத்தினால் மட்டுமே நீதி

ஆனால், நியாயப்பிரமாணத்தை அகற்றுவதால், நமக்கு ஒரு கேள்வி எழும்புகிறது: நீதிக்கு இனி நியாயப்பிரமாணத்தை கைக்கொள்வது நிபந்தனை அல்லவென்றால், பின்னே நிபந்தனைத்தான் என்ன? இப்போது, எளிதாக சொன்னால், நீதிக்கான நிபந்தனை விசுவாசம் மட்டுமே. நாம் சில சட்டங்களைக் கடைப்பிடிப்பதால் நீதிமான்களாக எண்ணப்படுவதில்லை, மாறாக இயேசு கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசமே இதை நமக்காக செய்கிறது.

இப்படிப்பட்ட விசுவாசத்திற்கு உதாரணமாக, பவுல் ஆபிரகாமை பயன்படுத்துகிறார். ஆதியாகமம் 15:6ல் இருந்து அவர் எடுத்துக்கூறி, *"ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது"* (ரோமர் 4:3) என்று எழுதுகிறார். விசுவாசம் ஆபிரகாமுக்கு நீதியாக எண்ணப்பட்டது. ரோமர் 4:22-25ல் பவுல் நிறைவாக கூறுகிறார்:

> *ஆகையால் அது அவனுக்கு (ஆபிரகாம்) நீதியாக எண்ணப்பட்டது. அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டதென்பது, அவனுக்குமாத்திரமல்ல, நமக்காகவும் எழுதப்பட்டிருக்கிறது. நம்முடைய*

> *கர்த்தராகிய இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவரை விசுவாசிக்கிற நமக்கும் அப்படியே எண்ணப்படும். அவர் நம்முடைய பாவங்களுக்காக ஒப்புக்கொடுக்கப்பட்டும், நாம் நீதிமான்களாக்கப்படுவதற்காக எழுப்பப்பட்டும் இருக்கிறார்.*

ஆகவே, இயேசு சிலுவையில் என்ன சாதித்தார் என்பதை நாம் விசுவாசித்தால், நாமும் ஆபிரகாமுடன் ஒரே பிரிவில்தான் இருக்கிறோம். இயேசு நம்முடைய பாவங்களுக்காக மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கப்பட்டு, நாம் நீதிமான்களாக்கப்பட்டு, அவருடைய நீதி நமக்கு பகிர்ந்தளிக்கப்பட மரித்தோரிலிருந்து உயிர்ப்பிக்கப்பட்டார் என்று வேதம் கூறுகிறது.

ஆகவே, ஆபிரகாமுக்கு நிகழ்ந்தது போல, நம்முடைய விசுவாசத்தின் அடிப்படையில் நீதி நமக்குப் பகிர்ந்தளிக்கப்படுகிறது. சட்டங்களைக் கைக்கொண்டு ஆபிரகாம் நீதியை சம்பாதிக்கவில்லை - அவருடைய விசுவாசத்தினால் நீதி வந்தது. அதேபோல், நாம் என்ன செய்கிறோம் என்பதினால் நமக்கு நீதி பகிர்ந்தளிக்கப்படுவதில்லை - நாம் என்னத்தை விசுவாசிக்கிறோம் என்பதினால் அது நமக்கு உண்டாகிறது.

தேவனால் அங்கிகரிக்கப்படும் நீதிக்கு ஒரே அடிப்படை விசுவாசமே. சுவிசேஷத்தை நான் புரிந்துகொண்ட வரையில், தேவன் அந்த விசுவாசம் என்னும் நிபந்தனையோடு வேறு எதையும் இணைக்க அனுமதிப்பதில்லை.

விசுவாசம் மற்றும் ஏதோ ஒன்று கூட்டப்படுவதினால் நீதி நமக்கு பகிர்ந்தளிக்கப்படுவதில்லை: விசுவாசம் மற்றும் நற்கிரியைகளினால் அல்ல, விசுவாசம் மற்றும் சபையினால் அல்ல, விசுவாசம் மற்றும் ஞானஸ்நானத்தினால் அல்ல, அல்லது விசுவாசம் மற்றும் நல்லெண்ணங்களினாலும் அல்ல.

சீர்திருத்தத்தின் கூக்குரலே “சோலா ஃபைடு” (Sola Fide) - *விசுவாசத்தினால் மட்டுமே* என்பதாக இருந்தது. சீர்திருத்தத்தில் மீட்டெடுக்கப்பட்ட மகா பெரிய சத்தியம் இதுவே. விசுவாசத்தினால் மட்டுமே நாம் தேவனிடத்தில் நீதிமான்களாக எண்ணப்பட முடியும். நீதியை பெறுவதற்கான வழியாக இருந்த மோசேயின் நியாயப்பிரமாணத்தை அவர் அகற்றினது மட்டுமல்ல, அதை வேறு எந்தச் சட்டத்தினாலும் மாற்றீடு செய்யவில்லை. அதற்காக நாம் அவரைத் துதிக்க வேண்டும்.

இந்தச் சத்தியத்தை நான் பல வருடங்களாக போதிக்கையில், கிறிஸ்தவர்கள் வாயைப் பிளந்து, என்னை ஆச்சரியத்தோடு பார்ப்பதைக் கண்டிருக்கிறேன். ஆனால் இதுவே சுவிசேஷத்தின் மைய சத்தியமாக உள்ளது, ஆனால் சுவிசேஷத்தை விசுவாசிக்கிறேன் என்று கூறும் எத்தனை மக்கள் இந்த அடிப்படை உண்மையைப் புரிந்துகொள்ளாமல் இருக்கிறார்கள் என்பது நம்மை வியக்கவைக்கும்.

கிறிஸ்துவின் மூலம் சமாதானம்

நாம் குற்றமனசாட்சியிலிருந்து விடுதலைக்குள் பூரணமாக பிரவேசிக்கையில், நமக்கு எதிரான சத்துருவின் மிகப்பெரிய ஆயுதத்தை நம்மால் தோற்கடிக்க முடியும். நாம் இன்னொரு வசனத்தைக் கவனிப்போம். சிலுவையில் இயேசு நமக்காக செய்ததைக் குறித்து தொடர்ந்து பேசும் பவுல், கூறுகிறார்:

> *எப்படியெனில், அவரே நம்முடைய சமாதான காரணராகி, இருதிறத்தாரையும் ஒன்றாக்கி, பகையாக நின்ற பிரிவினையாகிய தடுச்சுவரைத் தகர்த்து, சட்டத்திட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தை தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்து, இருதிறத்தாரையும் தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாகச் சிருஷ்டித்து, இப்படிச் சமாதானம்பண்ணி, பகையைச் சிலுவையினால் கொன்று, அதினாலே இருதிறத்தாரையும் ஒரே சரீரமாக தேவனுக்கு ஒப்புரவாக்கினார்.* (எபேசியர் 2:14-16)

தம்முடைய சிலுவை மரணத்தினால், இயேசு *“சட்டத்திட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தை”* ஒழித்து, அந்த சட்டத்தினால் உண்டாகும் பகையையும் ஒழித்தார். நியாயப்பிரமாணத்தின் தேவைகளை கவனிப்பதால் சமாதானம் வருவதில்லை; அது பகையையும் பிரிவினையையும் கொண்டு வரும்.

முதலாவது, சுமார் மூவாயிரத்தி ஐநூறு ஆண்டுகளுக்கு அது யூதனுக்கு, யூதனல்லாதவனுக்கும் பகைமையை உண்டாக்கியுள்ளது. மோசேயின் நியாயப்பிரமாணத்தை கைக்கொள்ளும் அநேக யூதர்கள், அதை கைக்கொள்வதினால், தாங்கள் நியாயப்பிரமாணத்தை கைக்கொள்ளாதவர்களிலும் நீதிமான்கள் என நம்புகிறார்கள். ஆனால், நியாயப்பிரமாணத்தை கைக்கொள்ளாத அநேகர், தாங்கள் யூதருக்கு ஒப்பாக அல்லது அவர்களை விட நல்லவர்களாக தங்களைப் பிரகடனப்படுத்துகிறார்கள். இவ்விரண்டு குழுக்களுக்கும் இடையில் பகைக்கான வெளிப்படையான அம்சமாக இது உள்ளது.

இரண்டாவதாக, நியாயப்பிரமாணம் தேவனுக்கும் மனிதனுக்கும் இடையில் பகையைக்கொண்டுவருகிறது. நாம் நியாயப்பிரமாணத்தின் கீழ் வந்து, அதைத் தகர்க்கும்போது, தேவனுக்குப் பகைஞராக மாறுகிறோம்.

இந்தப் பகைமையின் வெளிச்சத்திலும், நாம் நீதியை அடைவதற்கும், தேவன் மோசேயின் நியாயப்பிரமாணத்தின் நிபந்தனைகளை தள்ளிவைக்க வேண்டியதாயிற்று. மறுபடியும் நியாயப்பிரமாணத்தை, *“சட்டத்திட்டங்களில் அடங்கிய நியாயப்பிரமாணத்தின் சட்டம்”* என்று பவுல் கூறுகிறார். நியாயப்பிரமாணத்தை பற்றிக்கொண்டிருப்பது, பெருங்கடலில் தவறி விழுந்து, பிழைப்பதற்காக ஒரு பலகையைப் பிடித்துக்கொண்டிருக்கும் ஒரு நபரின் மனநிலைக்குச் சமானம். அந்தப் பலகை நியாயப்பிரமாணத்தைக் குறிக்கிறது - அதை விட்டால் நாம் மூழ்கிவிடுவோம் என்று நம்புகிறோம்.

உண்மையைச் சொன்னால், அதை விட்டுவிட்டு, நாம் மூழ்கத்தான் வேண்டும், ஏனென்றால் அந்தப் பலகை நம்மை ஒருபோதும்

காப்பாற்றாது. நாம் கிறிஸ்துவுடன் மரிப்பதால் மூழ்குகிறோம், சிலுவையில் அவருடைய பலியைப் பெற்றுக்கொள்ளுகிறோம், ஒரு புதிய வாழ்க்கைக்குள் எழும்புகிறோம். பவுல் எழுதினது போல:

> *கிறிஸ்து இயேசுவுக்குள் ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம்பண்ணப்பட்டோம்.* (ரோமர் 6:3-4)

தொடர் மன்னிப்பு

நாம் கிறிஸ்தவ வாழ்க்கையை வாழும்போது, நமக்குப் பிரச்சனைகள் வரலாம், தோல்விகளும் வரலாம். ஆனால் நம்முடைய விசுவாசம் தொடர்ந்து நமக்கு நீதியாக எண்ணப்படுகிறது. பேதுரு தம்மை மூன்று முறை மறுதலிப்பார் என்று கடைசி இராபோஜனத்தில் இயேசு அவரை எச்சரித்தார். பின்பு, அவர் பேதுருவிடம்:

> *"சீமோனே, சீமோனே, இதோ, கோதுமையைச் சுளகினால் புடைக்கிறதுபோலச் சாத்தான் உங்களைப் புடைக்கிறதற்கு உத்தரவு கேட்டுக்கொண்டான். நானோ, உன் விசுவாசம் ஒழிந்துபோகாதபடிக்கு உனக்காக வேண்டிக்கொண்டேன்: நீ குணப்பட்டபின்பு உன் சகோதரரை ஸ்திரப்படுத்து என்றார்."*
>
> (லூக்கா 22:31-32).

பேதுரு தம்மை மறுதலிக்கக்கூடாதென்று இயேசு ஜெபிக்கவில்லை. பேதுருவின் விசுவாசம் ஒழிந்துபோகாதபடி அவர் ஜெபித்தார். இது

எப்படி இருந்ததானால், “பேதுரு, நீ அநேக தவறான காரியங்களைச் செய்யபோகிறாய். ஆனால் என்னை விசுவாசித்துக்கொண்டே இருப்பாயானால், அவை எல்லாவற்றில் இருந்தும் உன்னை வெளியே கொண்டுவருவேன்” என்று இயேசு கூறுவதுபோல் இருந்தது. இது நம் அனைவருக்கும் நற்செய்திதான். நாம் விசுவாசித்துக்கொண்டே இருந்தால், தேவன் நம்மைக் கடந்துவர செய்வார்.

நம்முடைய விசுவாசத்தின் தகப்பனான ஆபிரகாமின் வாழ்வை யோசித்துப் பார்த்தால், ஆபிரகாம் அநேக தவறுகளைச் செய்தார் என்று காண்கிறோம் - அவருக்கு நீதி அளிக்கப்பட்ட பின்னும். இரண்டு முறை அவர் தம்முடைய மனைவியை புறஜாதி ராஜாக்களின் அந்தப்புரத்திற்குள் அழைத்துச் செல்ல அனுமதித்திருந்தார் - அது நல்ல காரியம் அல்ல. (ஆதி.12:10-20; 20.)

தேவன் ஆபிரகாமின் தீர்மானத்தை அங்கிகரிக்கவில்லை என்று நம்புகிறேன். ஆகிலும் ஆபிரகாம் அந்தத் தீர்மானத்தை செய்து நிறைவேற்றும் போதும், அவனுடைய விசுவாசம் அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டுக்கொண்டிருந்தது. இந்த வியப்பூட்டும் உண்மையை விசுவாசிகள் பற்றிக்கொண்டால், அவர்கள் விடுதலையின் பெருமூச்சு விடுவார்கள்.

அதற்கென்று, தேவன் தவறுகளைச் செய்ய நம்மை உற்சாகப் படுத்துகிறார் என்று அர்த்தமல்ல. ஆனால், உண்மையாக அவர் விரும்புவதைச் செய்யத்தேடி, நாம் தவறுகள் செய்யும் போது, நம்முடைய விசுவாசம் நமக்கு நீதியாக எண்ணப்படுகிறது. தேவனுடைய பிள்ளைகள், நியாயப்பிரமாணத்தை பிடித்துக்கொண்டிருக்க தேவையில்லை என்ற புரிந்துகொள்ளுதலில் ஓய்ந்திருக்க வேண்டும். இயேசுவையும், அவர் சிலுவையில் செய்ததையும் அவர்கள் விசுவாசித்துக்கொண்டே இருக்க வேண்டும்.

ஆக்கினைத்தீர்ப்பு மற்றும் குற்றஞ்சுமத்துதலில் இருந்தும் விடுதலை

கல்வாரி சிலுவையின் ஏற்பாட்டினால், தேவன் நம்மைக் குற்றங்களில் இருந்து விடுதலை செய்தார். இனி குற்றஞ்சுமத்த சாத்தானுக்கு வேறொன்றும் இல்லை. ரோமர் 5:1ல், “*இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துமூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்*” என்று நமக்குச் சொல்லப்பட்டுள்ளது. நாம் ஆக்கினைத்தீர்ப்பின் சுமையில் இருந்தும் விடுவிக்கப்பட்டுள்ளோம், ரோமர் 8:1ல் கூறப்பட்டுள்ளதுபோல்: “*ஆனபடியால், கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல், ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பில்லை.*”

ரோமரின் முதல் எட்டு அதிகாரங்களை நான் ஒரு ஆவிக்குரிய பயணமாக காண்கிறேன் - அதை “ரோம புனிதயாத்திரை” என்று அழைக்கிறேன். புனித யாத்திரையின் பயண இலக்கு 8ம் அதிகாரம், அதாவது ஆவியினால் நடத்தப்படும் வாழ்க்கை. இயேசு கிறிஸ்துவோடு நமக்கு இருக்கும் நித்திய, பிரிக்கமுடியாத இணைப்பின் உண்மைக்குள் நாம் பிரவேசிக்கும்போதுதான் இந்த யாத்திரையின் நிறைவுக்கு வருகிறோம். (ரோமர் 8:35-39ஐ பார்க்கவும்.)

8ம் அதிகாரம் வெற்றியின் அதிகாரம். ஆனால், ஒன்றாம் வசனம் தான் அந்த அதிகாரத்தினுள் நுழையும் வாசல்: “*ஆக்கினைத்தீர்ப்பு இல்லை....*” நீங்கள் ஆக்கினைத்தீர்ப்பின் கீழ் இருந்தால், 8ம் அதிகாரம் விவரிக்கும் ஆவியினால் நடத்தப்படும் வாழ்க்கையை நீங்கள் வாழ முடியாது. அநேக கிறிஸ்தவர்கள் திரும்ப திரும்ப குற்றமனசாட்சியின் கீழ் வருகின்றனர். அதின் விளைவாக, பரிசுத்த ஆவியிலுள்ள விடுதலையை அவர்கள் இழக்கின்றனர். ரோமர் 8ன் வாழ்க்கையில் அவர்களால் தங்கி இருக்க முடிவதில்லை, காரணம் குற்ற

மனசாட்சிலிருந்து விடுதலை பெறுவதன் அடிப்படையையே அவர்கள் கற்றுக்கொள்ளவில்லை.

குற்றமனசாட்சிக்கும், பாவ உணர்வடைதலுக்கும் பெரும் வித்தியாசம் உண்டு. குற்றமனசாட்சி என்பது தெளிவற்ற மற்றும் பொதுவான ஓர் உணர்வு, ஆனால் உணர்த்தப்படுதல் என்பது குறிப்பிட்ட ஒன்றைக் குறித்து ஏற்படுவது. பரிசுத்த ஆவியானவர் நம்மைப் பாவத்தைக் குறித்து உணர்த்தும்போது, நாம் என்ன தவறு செய்திருக்கிறோம் என்றும் அதைச் சரி செய்ய என்ன செய்ய வேண்டும் என்பதையும் நமக்குத் தெளிவாக அறிவிக்கிறார். பல நேரங்களில், குறிப்பாக நாம் எப்படி மனந்திரும்ப வேண்டும் என்று காண்பிப்பார் - ஒருவேளை அது காயப்பட்டவர்களிடம் நாம் அதை ஒப்புக்கொண்டு, தவறை சீர்செய்வதாக இருக்கலாம்.

குற்றமனசாட்சியோ எப்போதும் தீர்வடைவதில்லை. அந்தக் குற்ற உணர்வு, நாம் போதுமானதைச் செய்யவில்லை, "நல்ல கிறிஸ்தவன்" என்று கூறப்படும் அளவிற்கு வாழ்வில்லை அல்லது எப்படியோ தேவனுக்கு என்மேல் அதிருப்தியாய் இருக்கிறார் என்ற ஒரு தெளிவற்ற உணர்வையே நமக்குக் கொடுக்கிறது. ஆகவே, நாம் குறிப்பிட்டது போல, மனுகுலத்திற்கு விரோதமான சாத்தானின் மிக பெரிய ஒற்றை ஆயுதம் குற்ற உணர்வுதான்.

வெளிப்படுத்தல் 12, சாத்தானும் அவனுடைய தூதர்களும் பரலோகத்தில் இருந்து வெளியேற்றப்படுவதைக் குறித்து விவரிக்கின்றது. சிலர், அங்குச் சித்தரிக்கப்பட்டுள்ள சம்பவம் நடந்தாயிற்று என்று கூறுகின்றனர் ஆனால் தனிப்பட்ட முறையில், அது எதிர்காலத்தில் நடக்க இருக்கும் சம்பவம் என்றே நான் நம்புகிறேன். 10ம் வ்சனத்தில், இன்று நம்முடைய சத்துரு நமக்கு விரோதமாக எப்படி செயலாற்றுகிறான் என்ற ஒரு சிறந்த சித்திரம் கொடுக்கப்பட்டுள்ளது.

> *அப்பொழுது வானத்திலே ஒரு பெரிய சத்தமுண்டாகி: இப்பொழுது இரட்சிப்பும் வல்லமையும் நமது*

> *தேவனுடைய ராஜ்யமும், அவருடைய கிறிஸ்துவின் அதிகாரமும் உண்டாயிருக்கிறது; இரவும் பகலும் நம்முடைய தேவனுக்கு முன்பாக நம்முடைய சகோதரர்மேல் குற்றஞ் சுமத்தும்பொருட்டு அவர்கள் மேல் குற்றஞ்சாட்டுகிறவன் தாழத் தள்ளப்பட்டுப்போனான்.*

சாத்தனின் வெளியேற்றம் எதிர்காலத்தில் இருக்க, தற்போது சாத்தான் எங்கு இருக்கிறான், என்ன செய்கிறான் என்பதை இவ்வசனம் விவரிக்கிறது. அவன் என்ன செய்து கொண்டிருகிறான்? *சாத்தான் நம்மைத் தேவனுக்கு முன்பாக குற்றஞ்சாட்டிக்கொண்டிருக்கிறான்.* சில நேரங்களில் நமக்கு உண்டாகும் இருளான, ஆழமான, சோகமான உணர்ச்சிகளுக்கு இது ஒரு காரணமாக இருகக்கூடும். நம்மைச் சுற்றிலும் குற்றமனசாட்சி மற்றும் ஆக்கினைத்தீர்ப்பின் சூழல் உருவாக்கப்பட்டு வருகிறது, இதை நாம் எதிர்கொள்ள கற்க வேண்டும். நாம் குற்றமுள்ளவர்கள் என்பதை நிரூபிக்கவே சாத்தான் நம்மைக் குற்றஞ்சாட்டுகிறான்.

தேவன் ஏன் சாத்தானின் குற்றச்சாட்டுகளைத் தடுப்பதில்லை என்று நாம் யோசிக்கலாம். அதேனென்றால், தேவன் ஏற்கெனவே அவனைத் தடுத்து நிறுத்தும் வல்லமையை *நமக்கு* அளித்துள்ளார். நமக்காக நாமே செய்யக்கூடியதை அவர் செய்யமாட்டார். வெளிப்படுத்தல் 12இன் 11ம் வசனம், சத்தானின் குற்றச்சாட்டுகளை நாம் தடுத்து, நம்முடைய குற்றமனசாட்சியை மேற்கொள்ளும் வழிக்கான தெளிவான் பதிலை நமக்குத் தருகிறது: *"ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும், தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை* (சாத்தானை) *ஜெயித்தார்கள்."*

தேவனுடைய ஜனங்களுக்கும் சாத்தானுக்கும் ஒரு நேரடி போராட்டம் உண்டென்பதை கவனியுங்கள். சாத்தான் கிறிஸ்தவர்களாகிய நமக்குப் பிரச்சனைகளை உண்டுபண்ண முடியாதென்று சில மக்கள் நமக்குச் சொல்ல விரும்புவர். அக்கருத்து

உண்மையுமல்ல, வேதத்தின் அடிப்படையிலானதும் அல்ல.

வெளிப்படுத்தல் 12:11 சொல்லுகிறது, இயேசுவின் இரத்தம் நமக்காக என்ன செய்கிறது என்பதை நாம் சொந்தப்படுத்தி அறிக்கை செய்யும்போது, நாம் சாத்தானை ஜெயிக்கிறோம். அதுவே நம்முடைய சாட்சி.

பழைய உடன்படிக்கையின் கீழ், பஸ்கா ஆட்டுக்குட்டியின் இரத்தம் இஸ்ரவேலர்களுக்கு நியாயத்தீர்ப்பில் இருந்து தற்காப்பை அளித்தது. முதல் பஸ்கா சடங்கின் போது, நியாயத்தீர்ப்பு மற்றும் மரணத்திலிருந்து பாதுகாப்பு பெற, இஸ்ரவேல் மக்கள் ஆட்டுக்குட்டியின் இரத்தத்தைத் தங்கள் தங்கள் நிலைக்கால்களிலும், வாசல் மேற்சட்டத்திலும் தெளிக்க வேண்டியதாக இருந்தது. இரத்தத்தைத் தெளிக்க, ஈசோப்பு கொழுந்து என்ற ஒரு மூலிகை செடியைப் பயன்படுத்தினார்கள். அந்த ஈசோப்பை, ஆட்டுக்குட்டியின் இரத்தம் இருந்த ஒரு கோப்பையிலே தோய்த்து, இரத்தத்தைத் தெளித்து, பாதுக்காக்கப்பட்டார்கள். (யாத். 12:1-30ஐ பாருங்கள்.)

இயேசு கிறிஸ்துவின் இரத்தம் நமக்காக ஏற்கெனவே சிந்தப்பட்டு விட்டது; நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காக பலியிடப்பட்டிருக்கிறாரே (1 கொரிந்தியர் 5:7ஐ பார்க்கவும்.) அவருடைய இரத்தம் நமக்கு உண்டு, நம்முடைய சாட்சியினாலே அதைப் பூசுகிறோம். சாத்தானை மேற்கொள்ள, இயேசுவின் இரத்தம் நமக்காக என்ன செய்கிறது என்று வேதம் கூறுகிறதோ, அதை நாம் சொந்தப்படுத்தி அறிக்கை செய்கிறோம். பின் வரும் இரண்டு அறிக்கைகள், தேவனுடைய வார்த்தையையே அடிப்படையாக கொண்டவை, அவை இயேசுவின் இரத்தம் மற்றும் சிலுவை நமக்காக சாதிப்பவை எவை என்பதை பிரகடனப்படுத்துகின்றன.

இரத்தத்தின் வல்லமையை அறிக்கை செய்தல்

இயேசுவின் இரத்தம் நமக்காக என்ன செய்கிறது என்பது முதல் அறிக்கை ஆகும், அதற்குரிய வேத வசனங்கள் அடிக்குறிப்புகளில்

கொடுக்கப்பட்டுள்ளன. நீங்கள் குற்றமனசாட்சியால் நியாயந்தீர்க்கப்பட்டோ, சத்துருவின் குற்றச்சாட்டின் பெருஞ்சுமையான நிழலின் கீழ் இருப்பதுபோல் உணரும்போதோ, இந்த அறிக்கையைப் பயன்படுத்த உங்களை உற்சாகப்படுத்துகிறேன். தைரியமாய், விசுவாசத்துடன், சத்தமாக சிலுவையில் சாத்தானின் மீது இயேசுவின் பூரண வெற்றியைப் பேசுங்கள்.

இயேசுவின் இரத்தத்தினால், நான் சாத்தானுடைய கையிலிருந்து மீட்கப்பட்டுள்ளேன்.[1]

இயேசுவின் இரத்தத்தினால், என பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்பட்டன.[2]

இயேசுவின் இரத்தத்தினால் நான் தொடர்ந்து பாவத்திலிருந்து சுத்திகரிக்கப்பட்டுக்கொண்டே இருக்கிறேன்.[3]

இயேசுவின் இரத்தத்தினால், நான் பாவமே செய்யாததுபோல், நீதிமானாக்கப்பட்டிருக்கிறேன்.[4]

இயேசுவின் இரத்தத்தால் நான் சுத்திகரிக்கப்பட்டு, பரிசுத்தமாக்கப்பட்டு, தேவனுக்கென்று பிரித்துவைக்கப் பட்டுள்ளேன்.[5]

இயேசுவின் இரத்தத்தினால் நான் தேவனுடைய பிரசன்னத்திற்குள் வர தைரியம் கொண்டுள்ளேன்.[6]

இயேசுவின் இரத்தத்தினால் நான் சாத்தானின் கிரியையை மேற்கொள்கிறேன்.[7]

இயேசுவின் இரத்தம், பரலோகத்தில் எனக்காக தொடர்ந்து தேவனிடத்தில் பரிந்து பேசிக்கொண்டிருக்கிறது.[8]

[1]எபேசியர் 1:7; 1 பேதுரு 1:19. [2]எபேசியர் 1:7.
[3]1 யோவான் 1:7. [4]ரோமர் 5:9.
[5]எபிரெயர் 13:12. [6]எபிரெயர்10:19
[7]வெளிப்படுத்தல் 12:11 [8]எபிரெயர் 12:24

வெளிப்படுத்தல் 12:11ன் சத்தியங்களை அறிக்கை செய்தல்

இரண்டாவது அறிக்கை வெளிப்படுத்தல் 12:11ஐ அடிப்படையாக கொண்டது, *''மரணமே நேரிடுகிறதாயிருந்தாலும் அதற்குத் தப்பும்படி தங்கள் ஜீவனையும் பாராமல், ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை ஜெயித்தார்கள்.''*

என் சரீரம் பரிசுத்த ஆவியானவரின் ஆலயம்; மீட்கப்பட்டு, சுத்திகரிக்கப்பட்டு, இயேசுவின் இரத்தத்தினால் பரிசுத்தமாக்கப் பட்டது. என் அவையவங்கள் அனைத்தும், தேவனுடைய சேவைக்கும், அவருடைய மகிமைக்கும் அற்பணிக்கப்பட்ட நீதியின் ஆயுதங்கள். பிசாசுக்கு என்னில் இடம் இல்லை, என் மேல் அதிகாரம் இல்லை, எனக்கு விரோதமான தீர்க்கப்படாத கூற்றுக்கள் ஒன்றுமில்லை. மரணமே நேரிடுகிறதாய் இருந்தாலும், என் ஜீவனையும் பாராமல், ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும், என்னுடைய சாட்சியின் வசனத்தினாலும், சாத்தானை மேற்கொள்கிறேன். என் சரீரம் தேவனுக்குரியது, தேவனும் என் சரீரத்திற்குரியவர்.

இந்த அறிக்கைகளைத் தொடர்ந்து செய்வதினால், சிலுவையில் இயேசு சாத்தான் மீது பெற்ற வெற்றியை நாம் அவன் மீது செலுத்தலாம். உங்கள் பயன்பாட்டிற்காக, இந்த அதிகாரத்தில் மட்டுமல்ல, 13ம் அதிகாரத்தின் நிறைவிலும், இப்புத்தகத்தின் இறுதியிலும், இவைகள் கொடுக்கப்பட்டுள்ளன. (அடிக்கடி அறிக்கை செய்ய தகுந்தவை.)

அதிகாரம் 6

மறைவான ஞானத்திற்கான வாசல்

சிலுவை நம்முடைய வாழ்வின் மையத்தில் இருக்க வேண்டியதற்கான ஐந்தாவது காரணம் என்ன வென்றால், அது தேவனுடைய மறைவான ஞானத்திற்கான வாசலாக உள்ளது. இக்கூற்றிற்காக, நாம் மீண்டும் 1 கொரிந்தியர் 2:3ஐப் பார்ப்போம், இவ்வுலகத்தின் ஞானத்தில் நம்முடைய விசுவாசத்தை நாம் நிலைநிறுத்துவதில்லை என்று பவுல் அங்கே கூறுகிறார். இதை தொடர்ந்து 6ம் வசனத்தில், பவுல் வேறு விதமான ஞானத்தைக் குறித்து விவாதிக்க ஆரம்பிக்கிறார்:

> *அப்படியிருந்தும், தேறினவர்களுக்குள்ளே ஞானத்தைப் பேசுகிறோம்; இப்பரபஞ்சத்தின் ஞானத்தையல்ல, அழிந்துபோகிறவர்களாகிய இப்பிரபஞ்சத்தின் பிரபுக்களுடைய ஞானத்தையுமல்ல, உலகத்தோற்றத்திற்கு முன்னே தேவன் நம்முடைய மகிமைக்காக ஏற்படுத்தினதும், மறைக்கப்பட்டதுமாயிருந்த இரகசியமான தேவஞானத்தையே பேசுகிறோம்.*
>
> *(1 கொரிந்தியர் 2:6-7)*

புதிய ஆங்கில வேதாகமம் இதை "ஒரு *மறைவான, தேவனுடைய இரகசிய ஞானம்*" என்னும் சொற்றொடரைக் கொண்டு மொழிபெயர்க்கிறது.

ஞானத்திற்கான ஒரு தேடல்

தத்துவவாதியாக, என்னுடைய ஆரம்ப நாட்களில், நான் ஒரு இரகசியமான, மறைவான ஞானத்தைத் தேடிக்கொண்டிருந்தேன். ஒரு வாலிபனாக, என் சபை அனுபவத்தில், நான் அறிந்திருந்த கிறிஸ்தவத்திற்குள் மெய் ஞானத்தை நான் கண்டடையவில்லை. என்னுடைய தத்துவ ஆய்வின் காலத்திலும் இதை நான் காணவில்லை. என்னுடைய தேடல் தொடர, யோகாவிலும் பல சாத்தியமில்லாத இடங்களிலும் அதை கண்டடையாமல் தேடினேன்.

இறுதியில், இந்த ஞானத்திற்கு ஒரு வாசல் உண்டென்றும் அது ஒரு சிலுவையின் வடிவத்தில் அமைந்துள்ளதென்றும் கண்டேன். சிலுவையின் வழியாக சென்றால், மறுபக்கத்தில், தேவனுடைய இரகசிய, மறைவான ஞானத்தை நீங்கள் காண்பீர்கள். தேவனுடைய ஞானத்தை அடையக்கூடியது எனக்கு எழுச்சியூட்டும் ஒன்றாக உள்ளது.

இது உங்களை எழுச்சியடைய செய்யவில்லை என்றால், *நம்மை மகிமைக்குக் கொண்டுவர தேவன் ஒரு மறைக்கப்பட்ட, இரகசியமான ஞானத்தை ஏற்படுத்தி இருக்கிறார்*, என்று பவுல் கூறும் காரியத்தை நீங்கள் முழுமையாக புரிந்துகொள்ள முடியாது. நம்மை மகிமைக்குள் கொண்டுவரும் அவருடைய திட்டம், இந்த மறைக்கப்பட்ட இரகசிய ஞானத்திற்குள் அடங்கியிருக்கிறது. நீங்கள் சிலுவை என்னும் வாசலின் வழியாக சென்றால், தேவனுடைய மறைவான ஞானத்தைக் கண்டடைய ஆரம்பிப்பீர்கள்.

இக்கருப்பொருளைக் குறித்த தம்முடைய விவாதத்தைப் பவுல் 1 கொரிந்தியர் 2:8-9ல் தொடருகிறார்:

> *அதை இப்பிரபஞ்சத்துப் பிரபுக்களில் ஒருவனும் அறியவில்லை; அறிந்தார்களானால், மகிமையின் கர்த்தரை அவர்கள் சிலுவையில் அறையமாட்டார்களே. எழுதியிருக்கிறபடி: தேவன் தம்மில்*

> *அன்புகூறுகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை.*

தேவனுடைய காரியங்களைப் புலன்கள், தர்க்கம் அல்லது கற்பனைத்திறனினாலோ கண்டடைய முடியாது. 10ம் வசனத்தில் பவுல் நமக்குக் கூறுகிறார்:

> *நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்; அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந்திருக்கிறார்.*

நாம் சிலுவையின் வாசல் வழியாய் வரும்போது, தர்க்கம், கற்பனை அல்லது யூகித்தலால் நாம் ஒருபோதும் கண்டடைய முடியாதவைகளைப் பரிசுத்த ஆவியானவர் நமக்கு வெளிப்படுத்த ஆரம்பிக்கிறார். இவ்விதமான ஞானம் வெளிப்பாட்டால் மட்டுமே வருகிறது. பரிசுத்த ஆவியானவர் கனம்பண்ணுகிற ஒரே நுழைவாயில், சிலுவை மட்டுமே. வேறெந்த அடிப்படையில் நீங்கள் வந்தாலும், அவருக்கு ஆர்வமில்லை. ஆனால் சிலுவையை நீங்கள் மையம் ஆக்கிக்கொள்ளும்போது, “இப்படிப்பட்ட நபரில் நான் அக்கறை கொள்கிறேன்” என்று அவர் கூறுகிறார்.

பரிசுத்த ஆவியானவரை ஈர்க்கும் செயல்களைச் செய்வதை என் வாழ்வின் இலக்காக்கிக்கொண்டுள்ளேன். பரிசுத்த ஆவியானவர் இருந்தால், எல்லாம் நலமாய் நடக்கும். பரிசுத்த ஆவியானவரை ஈர்ப்பதற்கு, நாம் இயேசுவை உயர்த்தி, சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவை பிரசங்கிக்க வேண்டும் என்பதை அறிந்து கொண்டுள்ளேன். இப்படிப்பட்ட செயல்களில் நாம் ஈடுபடும்போது, “அந்த மக்களை எனக்குப் பிடிக்கும். அவர்களோடு இருப்பது எனக்கு சுகமாக இருக்கிறது. அந்தக் கூட்டத்தில் நான் பங்கேற்பேன், ஏனென்றால் இயேசு உயர்த்தப்படும்போது எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது” என்று பரிசுத்த ஆவியானவர் கூறுகிறார்.

பரலோக தளங்களுக்குள் உயர்த்தப்படுதல்

பரலோக வெளிப்பாட்டைத் தேடினதைக் குறித்து, பிலிப்பியர் **3**ல் பவுல் தாமே கூறும் அவருடைய சாட்சி இதோ. யூத மார்க்கத்தில் அவருடைய வாழ்வையும், ஒரு பக்தியுள்ள யூதனாக அவருடைய சுதந்தரத்தையும், இவ்வசனங்களில் அவர் கூறும் சாட்சி குறிப்பிடுகிறது:

> *ஆகிலும், எனக்கு லாபமாயிருந்தவைகளெவைகளோ, அவைகளைக் கிறிஸ்துவுக்கு நஷ்டமென்று எண்ணினேன். அதுமாத்திரமல்ல, என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக்கொண்டிருக்கிறேன். நான் கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கும், நியாயப் பிரமாணத்தினால் வருகிற சுயநீதியை உடையவனாயிராமல், கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் வருகிறதும் விசுவாசமூலமாய் தேவனால் உண்டாயிருக்கிறதுமான நீதியை உடையவனாயிருந்து, கிறிஸ்துவுக்குள் இருக்கிறவனென்று காணப்படும்படிக்கும், இப்படி நான் அவரையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும், அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கும், அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாகி, எப்படியாயினும் நான் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்திருப்பதற்குத் தகுதியாகும்படிக்கும், அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன்; குப்பையுமாக எண்ணுகிறேன். (பிலிப்பியர் 3:7 - 11.)*

பவுலின் மேலான குறிக்கோள், இயேசு கிறிஸ்துவை அறிவதுதான். கிறிஸ்துவை அறியாதவராய் அவர் இதை எழுதவில்லை - ஆயினும்

அவரை இன்னும் அதிகமாக அறிவதே அவருடைய வாஞ்சை. அநேக ஆண்டுகள் பயனுள்ள கிறிஸ்தவ சேவை செய்த பின்னும், இயேசுவை அறிய வேண்டும் என்பதே இன்னும் பவுலின் வாஞ்சையாக இருந்தது.

கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் வல்லமையை அறிய விரும்புகிறேன் என்று பவுல் கூறுகிறார். அந்த வல்லமை "அவருடைய பாடுகளின் ஐக்கியத்தினாலும், அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாகுவதின்'' மூலமே வரும் என்பதையும் அங்கிகரிக்கிறார். சிலுவை இல்லையெனில் - கிரீடமும் இல்லை. தேவனுடைய மகிமையில் பங்கடையச் செய்யும் அவருடைய இரகசிய, மறைவான ஞானத்திற்குச் சிலுவைதான் வழி.

பிலிப்பியர் 3ல் பவுல் கூறும் காரியங்கள் அவர் எபேசியர் 2:4-5,7ல் கூறுபவைகளைப் பூர்த்தி செய்கிறது:

> *தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்புகூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே, அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மை கிறிஸ்துவுடனே கூட உயிர்ப்பித்தார்; கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள். . . . கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடேகூட எழுப்பி, உன்னதங்களிலே அவரோடேகூட உட்காரவும் செய்தார்.*

நம்முடைய மீட்பின் நோக்கம், நம்மை உன்னதங்களில் கிறிஸ்துவுடன் உட்கார செய்வதே. ஆங்கில "வேமவுத் வேதாகம" மொழிபெயர்ப்பு, கிறிஸ்துவுடன் தேவன் நம்மை ''சிம்மாசனம் அமர்த்தினார்" என்று கூறுகிறது. (எபேசியர் 2:யை பார்க்கவும்.)

ஒரு விதத்தில் சொன்னால், சிலுவைக்கு வருவது, மின்தூக்கிக்குள் நுழைவதுப்போல் இருக்கும். மின்தூக்கியினுள் நுழைந்தவுடன், எந்த தளத்திற்குச் செல்ல விரும்புகிறீர்களோ, அந்தப் பொத்தானை அமுக்குகிறீர்கள் - அந்தத் தளத்திற்கு அது உங்களை அழைத்து செல்லும். சிலுவையில் அறையப்படுதலினாலும், மரணத்தினாலும் நாம்

கிறிஸ்துவுக்குள் இருக்கும்போது, அவருடன் நாம் உயிர்ப்பெற்று, அவருடன் உயிர்த்தெழுகிறோம். இது மிகப்பெரியது. ஆனால் முடிவல்ல, ஏனென்றால் மின்தூக்கி சிம்மாசனத்தில் முடிவடைகிறது. நாம் அவருடன் சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கிறோம்! சொந்த முயற்சியினால் நாம் அங்குச் சென்றடைவதில்லை. மின்தூக்கியில் இருப்பதால் செல்கிறோம். அந்த மின்தூக்கிக்கு வாசல் சிலுவை, சிலுவையின் வழியாக நுழைந்தால் மட்டுமே சிங்காசனத்திற்கு தகுதி பெறுகிறோம்.

கூடாரத்தில் வெளிச்சம்

தேவனுடைய மறைவான ஞானத்திற்கு இணையான குறியீடு, மோசேயின் கூடாரத்தில் உள்ளது. மூன்று தனித்துவமான பகுதிகள் கூடாரத்தில் இருந்தன. ஒவ்வொன்றிலும் இருந்த வெளிச்சத்தின் அடிப்படையில் இவைகளை வேறு பிரிக்க முடியும்.

முதலில் இயற்கையான வெளிச்சமுடைய வெளிப்பிரகாரம் இருந்தது: அது சூரியன், சந்திரன் மற்றும் நட்சத்திரங்களால் வெளிச்சம் பெற்றது. வெளிப்பிரகாரத்தில் இருந்து, முதல் திரையின் வழியாக, பரிசுத்த ஸ்தலத்திற்குள் செல்வீர்கள். இங்கு இயற்கையின் வெளிச்சத்தால் நடைபோட முடியாது. பரிசுத்த ஸ்தலத்தில் இருந்த வெளிச்சம், ஒலிவ எண்ணெயினால் எரிய வைக்கப்பட்ட, ஏழு தண்டுகள் உள்ள ஒரு குத்துவிளக்கினால் உண்டானது. இந்த குத்துவிளக்கு அருளப்பட்ட தேவனுடைய வார்த்தையின் வெளிச்சத்தைக் குறித்தது, அதை ஒளிரபண்ணினவர், பரிசுத்த ஆவியானவர்.

ஆனால், பரிசுத்த ஸ்தலம் உங்கள் இலக்கு அல்ல. அந்த முதல் திரையின் வழியாக செல்வது, *உயிர்த்தெழுதலைக்* (கிறிஸ்துவுடனே எழுப்பப்படுதலை) குறிக்கின்றது. இதற்கு விசுவாசத்தில் ஓர் அடி எடுத்து வைப்பது அவசியம் - ஏனென்றால், நாம் தரிசித்து நடவாமல், தேவனுடைய வார்த்தையில் உள்ள விசுவாசத்தினால் நடக்கின்றோம்.

(2 கொரிந்தியர் 5:7ஐ பார்க்கவும்.) ஆனால் இரண்டாம் திரையின் வழியாக செல்லுதல் *பரமேறுதலைக்* குறிக்கின்றது. இரண்டாம் திரைக்குள், மகா பரிசுத்த ஸ்தலத்தினுள், உடன்படிக்கைப்பெட்டியின் மேல், தேவனுடைய பிரசன்னம் தங்கும் ஸ்தலம் இருந்தது. (ஏசாயா 36:17ஐ பார்க்கவும்.) இது பரலோக சிங்காசனத்தைக் குறிக்கின்றது.

இந்த இரண்டாம் திரைக்குள் இருந்துதான் இயேசு தம்முடைய இரண்டு முக்கியமான ஊழியங்களான, இராஜா மற்றும் ஆசாரியன் என்கிற ஊழியங்களைச் செயல்படுத்துகிறார். மாகா பரிசுத்த ஸ்தலத்தினுள் எவ்வித மெழுகுவர்த்தியோ செயற்கை ஒளியோ இல்லை. முற்றிலும் இருட்டான ஸ்தலம். இந்த இடத்தைச் சென்றடையும் இடமாக எத்தனை பேர் தேர்வு செய்வோமோ - ஒரு சிறிய அறை, வெளிச்சம் இல்லாத ஒரு குட்டி அறை மற்றும் ஒரே மரச்சாமான் உள்ள இடம். உற்சாகம் அளிக்கிறதல்லவா?

ஆனால் இந்தக் கூடாரத்தின் சித்திரம் மிகவும் தெளிவானது, ஏனென்றால் கிறிஸ்தவ வாழ்வில் நாம் எவ்வளவு முன்னேறுகிறோமோ, நம்முடைய கவனத்தை திசை திருப்பும் காரியங்கள் குறைந்து விடுகின்றன. இரண்டாவது திரைக்குள் பிரவேசிக்கும் மக்கள், ஒன்றை மட்டும் நாடிச் செல்வார்கள்: தேவன் ஒருவரையே. இரண்டாம் திரைக்குள், நீங்கள் நிபந்தனைகளை நிறைவேற்றினால், இயற்கையும், செயற்கையும் அல்லாத ஒரு வெளிச்சம் தோன்றும். அது *ஷெக்கினா மகிமை* - எல்லாவற்றையும் இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் ஒளிரச் செய்யும் தேவனுடைய நேரடி பிரசன்னம். இது தேவனுடைய மறைவான, இரகசிய ஞானம்.

தேவனோடு இன்னும் முன்னேறுதல்

நீங்கள் இரண்டாம் திரைக்குள் செல்ல தேவை இல்லை; எங்கு வேண்டுமானாலும் நின்று விடலாம். மின்தூக்கியின் சித்திரத்திற்கு திரும்ப வருவோமானால், நீங்கள் இடைமட்ட தளத்தில் அல்லது இரண்டாம் தளத்தில் பொத்தானை அமுக்கி இறங்கி விடலாம். ஆனால் அந்த மின்தூக்கி செல்லக்கூடிய உச்சதளத்திற்குச் செல்ல

விரும்பும் ஏதோ ஒன்று எனக்குள் இருக்கிறது, தேவனுடைய மிக சிறந்த ஊழியக்காரர், ஊழியக்காரிகளின் வாழ்வில், ஒரு ஸ்தலத்தை நான் கண்டுள்ளேன், அது ஒரு விதத்தில் ஒரு தனிமையின் ஸ்தலம் கூட. அங்கே தேவனைத் தவிர எல்லாவற்றையும் துறந்து விடுகிறீர்கள். ஆனால் தேவன் இருக்கும்போது, உங்களுக்கு சகலமும் உண்டு.

இது ரோமர் 8ன் உச்சக்கட்டம் - அங்கு நாம் கிறிஸ்துவுடன் இணைக்கப்பட்டுள்ளோம், அவருடைய அன்பிலிருந்து எதுவும் நம்மைப் பிரிக்க முடியாது. நியாயப்பிரமாணத்திற்கோ, யூத மார்க்கத்தில் தன்னுடைய சுதந்தரத்திற்கோ தான் அக்கறை கொள்ளவில்லை என்று பவுல் கூறுகிறார். தான் இழந்த உடமைகளைக் குறித்தும் அவருக்குக் கவலை இல்லை. அது எதுவும் அவருக்கு முக்கியமல்ல, ஏனென்றால் அவர் வாஞ்சிப்பதெல்லாம், அந்த இரண்டாம் திரைக்குள் இருப்பதுதான்.

பவுலைப் போல, எனக்கும் இயேசு கிறிஸ்துவைக் குறித்த வெளிப்பாடு வேண்டும். வெறும் இறையியலோ, உபதேசமோ எனக்கு வேண்டாம்; இயேசுவைப் பற்றிய ஒரு தனிப்பட்ட, அந்தரங்க வெளிப்பாடு எனக்கு வேண்டும். நம்முடைய ஆத்துமாக்களின் ஏக்கத்தைத் தீர்க்கக்கூடிய ஒரே நிதர்சனமான உண்மை அதுவே. அதற்கு ஒரே வழி சிலுவையின் மூலம் செல்வதுதான்.

இவ்வார்த்தைகளை நீங்கள் வாசிக்கும்போது, உங்களுக்குள் ஓர் எழுச்சி ஏற்படலாம். அது பவுல் கூறினது போல் - இயேசுவை இன்னும் அந்தரங்கமாக அறிந்துகொள்ள வாஞ்சையாக இருக்கலாம். உங்கள் இருதயத்தினுள், மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் நீங்கள் ஏக்கம் கொண்டிருக்கலாம் - சிலுவையின் வாசல் வழியாக சென்று, தேவனுடைய மறைவான ஞானத்திற்குள் பிரவேசிக்க வாஞ்சித்திருக்கலாம்.

நீங்கள் வாஞ்சிக்கிற அனைத்தின் தாக்கத்தையும் நீங்கள் புரிந்துகொள்ளாமல் இருக்கலாம். ஆனாலும், அதைப்பின் வரும் ஜெபத்தின் மூலம் நீங்கள் ஆண்டவருக்குத் தெரியப்படுத்தலாம்:

ஆண்டவராகிய இயேசுவே, நான் உம்மோடு இன்னும் முன்னேற விரும்புகிறேன். அங்கே செல்வதற்குச் சிலுவை மின்தூக்கியாக இருக்குமானால், உச்சக்கட்டத்திற்குச் செல்ல விரும்புகிறேன் - உம்மோடு உன்னதங்களில் சிம்மாசனம் அமர விரும்புகிறேன். உம்முடைய மறைவான, இரகசிய ஞானத்திற்கு வாசலாக இருக்கும் சிலுவைக்காக நன்றி. அந்த ஞானத்தை சென்றடையும் வழியைக் கண்டறிய எனக்கு உதவி செய்யும். ஆமென்.

அதிகாரம் 7

தேவனுடைய அன்பின் உச்சக்கட்ட செயல் வெளிப்பாடு

இப்போது, சிலுவை ஏன் நம்முடைய வாழ்கையின் மையத்திலிருந்து அகலக் கூடாது என்பதற்கான ஆறாவது மற்றும் இறுதி காரணத்தை சிந்திப்போம். காரணம் இதோ: நம்மேல் தேவன் வைத்திருக்கும் அன்பிற்கும், நம்முடைய மதிப்பீட்டிற்கும் சிலுவைதான் உச்சக்கட்ட செயலிலான அவருடைய வெளிப்பாடு. யோவான் 15:13-14ல், இயேசு தம்முடைய சீஷர்களிடம் கூறுகிறார்:

> *ஒருவன் தன் சிநேகிதனுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை. நான் உங்களுக்கு கற்பிக்கிற யாவையும் நீங்கள் செய்வீர்களானால், என் சிநேகிதராயிருப்பீர்கள்.*

ஒரு நபர் மேல் இன்னொருவர் வைத்திருக்கும் அன்பிற்கான உச்சக்கட்ட வெளிப்பாடு என்னெவென்றால், அது அந்த நபர் தனது ஜீவனை மற்றவருக்காக கொடுப்பதற்கு ஆயத்தமாயிருப்பதே. இயேசு, உச்சக்கட்ட அன்பை வெளிப்படுத்த போகிறார் என்பதை தமது சீஷர்களுக்கு அறிவிக்கிறார். தனது மிகவும் பிரியமான நண்பர்களுக்காக, அவர் தம்முடைய ஜீவனை கொடுக்கபோகிறார்.

தேவனுடைய அன்பின் தன்மை

இயேசுவின் மிகவும் ஆழமான இந்த வாக்கியத்தை பின்னணியில் வைத்து, ரோமர் 5:6-10ஐ நாம் பார்க்கலாம். இப்பகுதியில், பவுல்

தேவனுடைய அன்பின் தன்மையையும், அவருடைய கிருபையின் அளவையும் குறித்து விவரித்துச் சொல்கிறார்.

> *அன்றியும் நாம் பெலனற்றவர்களாயிருக்கும்போதே, குறித்த காலத்தில் கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார். நீதிமானுக்காக ஒருவேளை ஒருவன் மரிக்கத் துணிவான். நாம் பாவிகளாயிருக்கையில், கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணுகிறார். இப்படி நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே. நாம் தேவனுக்குச் சத்துருக்களாயிருக்கையில், அவருடைய குமாரனின் மரணத்தினாலே அவருடன் ஒப்புரவாக்கப்பட்டோமானால், ஒப்புரவாக்கப்பட்ட பின் நாம் அவருடைய ஜீவனாலே இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே.*

இப்பகுதியின் ஒரு விரைவான பகுப்பாய்வு, கிறிஸ்து நமக்காக மரித்தபோது, மனிதர்களின் நிலையைக் குறித்த பவுலின் நான்கு வாக்கியங்கள் வெளிப்படுத்துகின்றன. முதலாவது அவர் கூறுகிறார், நாம் "*பெலனற்றவர்களாயிருந்தோம்*" (வசனம் 6). நமக்கு நாமே உதவுவதற்கு நம்மால் ஒன்றும் செய்ய முடியாதிருந்தது; நாம் முற்றிலும் தேவ கிருபையை சார்ந்திருந்தோம்.

இரண்டாவதாக, கிறிஸ்து "*அக்கிரமக்காரருக்காக*" மரித்தார் என பவுல் கூறுகிறார் (வசனம் 6). நாம் அக்கிரமக்காரராயிருந்தோம்; தேவனைப் புண்படுத்தும் தன்மையையும், வாழ்க்கை முறையையும் கொண்டவர்களாக இருந்தோம். தேவனுடைய நினைவுகளுக்கும், வழிகளுக்கும் முற்றிலும் வேறுபட்ட சிந்தனைமுறையும், நடத்தையும் கொண்டிருந்தோம்.

மூன்றாவதாக பவுல் எழுதுகிறார், *"நாம் பாவிகளாயிருக்கையில், கிறிஸ்து நமக்காக மரித்தார்"* (வசனம் 8). நாம் கீழ்ப்படியாதவர்களும், கலகம் செய்கிறவர்களாயும் இருந்தோம் - எவ்விதத்திலும் தேவனை சந்தோஷப்படுத்த முயலாதவர்கள்.

நான்காவதாக மற்றும் இறுதியாகவும், அவர் சொல்லுகிறார் *"நாம் தேவனுக்குச் சத்துருக்களாயிருக்கையில், அவருடன் ஒப்புரவாக்கப்பட்டோம்"* (வசனம் 10). நாம் தேவனுக்கும், அவருடைய வழிகளுக்கும் முற்றிலும் எதிர்த்து நின்றோம்.

கிறிஸ்து நமக்காக மரித்தபோது, நம்முடைய நிலையை விவரிக்க, பவுல் இந்த நான்கு சொற்றொடர்களைப் பயன்படுத்துகிறார். நாம் பெலனற்றிருந்தோம்; உதவியற்றிருந்தோம். நாம் அக்கிரமக்காரர்களாயிருந்தோம்; நம்மைக் குறித்த யாவும் தேவனுக்கு மாறுபட்டிருந்தது. நாம் பாவிகளாயிருந்தோம், கீழ்ப்படியாத கலகக்காரர்களாயிருந்தோம். நாம் சத்துருக்களாயிருந்தோம், தேவனுக்கு முற்றிலும் எதிரானவர்களாக இருந்தோம். அந்நிலையில் நாம் இருக்கும்போது, கிறிஸ்து நமக்காக மரித்தார். அதுதான் நம்மீது தேவன் வைத்திருக்கும் அன்பின் அளவு.

தேவனுடைய அன்பின் உறுதிப்பாடு

தேவனுடைய அன்பின் அளவை நாம் முற்றிலுமாய் கிரகித்துக்கொள்வது நமக்கு அவசியம், ஏனென்றால் தேவன் உண்மையிலேயே தங்களை நேசிக்கிறார் என்று உறுதியில்லாத கிறிஸ்தவர்களை நான் தொடர்ந்து சந்திக்கிறேன். ஒருவேளை, உங்களுக்காக தேவன் கொண்டிருக்கும் அன்பைக் குறித்து உங்களுக்குச் சந்தேகங்கள் எழும்பியிருக்கலாம். கிறிஸ்து உங்களுக்காக மரித்தபோது, நீங்கள் என்ன நிலையிலிருந்தீர்கள் என்பதைக் குறித்து முழுமையான புரிந்துகொள்ளுதல் வரும்வரை, அந்தச் சந்தேகம் தீர்க்கப்படாது.

சிலுவையில் கிறிஸ்து செய்ததின் அடிப்படையைத் தவிர, தேவன்

வேறெந்த அடிப்படையிலும், தம்முடன் சமாதானம்கொள்ள, உங்களை அனுமதிக்கமாட்டார். தேவன் உங்களை உண்மையில் நேசிக்கிறார் என்ற உறுதியைப் பெற, உங்கள் நண்பரின் மனநிலையையோ, நம்பிக்கையான ஊழியக்காரரின் உதவியையோ சார்ந்திருக்கலாம். ஆனால் தேவனுடைய செயல்பாடுகளை நான் சரியாக புரிந்துகொண்டதுண்டானால், அவர் மற்ற எல்லா உறுதியின் ஊற்றுகளையும் உங்கள் வாழ்விலிருந்து சீக்கிரமாய் அகற்றிவிடுவார். ஏன் ? ஏனென்றால் தம்முடைய அன்பைக் குறித்த புரிந்துகொள்ளுதலை நீங்கள் சிலுவையில் இயேசுவின் தியாகத்தைத் தவிர, வேறெதிலும் அடிப்படைகொள்கை வைக்கக்கூடாதென்றே விரும்புகிறார்.

இருளான நேரங்களில், உங்களுக்கு என்ன நடக்கிறதென்று நீங்கள் வியந்து போகலாம். அந்நேரங்களில் தேவன் ஒரே குறிப்பான காரியத்தை மட்டும் இருளில் வெளிச்சமாக்கி காட்டுவார். அது என்னவாக இருக்கும் ? சிலுவை. அப்படிப்பட்ட சூழ்நிலைகளில் அதை மட்டும் நீங்கள் அறிந்தால் போதும். அளவிற்கு அதிகமாக அறிந்திருப்பதே நம்மில் அநேகருடைய பிரச்சனை. கிறிஸ்து நமக்காக மரித்தார் என்று அறிந்திருப்பது போதுமென்ற ஸ்தலத்திற்கு தேவன் நம்மைக் கொண்டுவர விரும்புகிறார்.

தேவனுடைய அன்பின் பேரளவு

தேவனுடைய அன்பின் பேரளவைக் குறித்து ரோமர் **8**ல், பவுல் எழுதுகிறார்:

> *உமது நிமித்தம் எந்நேரமும் கொல்லப்படுகிறோம், அடிக்கப்படும் ஆடுகளைப்போல எண்ணப்படுகிறோம் என்று எழுதியிருக்கிறபடி நேரிட்டாலும், கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ?*
>
> *ரோமர் 8:35-36*

அடிக்கப்படும் ஆடுகளைக் குறித்து **35**ம் வசனம் கூறுகையில், அதை பேசுவது தேவனுடைய ஜனங்கள் என்பதை நாம் கவனிக்க வேண்டும். உலகின் பல பகுதிகளில் இன்று இப்படிபட்ட துன்புறுத்தலை அனுபவித்துக்கொண்டிருக்கும் ஏராளமான கிறிஸ்தவர்கள் உண்டு. நீங்களும் நானும் அதே வகையினத்தில் ஒரு நாள் இணைக்கப்படக்கூடும். இந்த உண்மை ஒருபுறம் இருந்தாலும், அவர்களுக்கும் நமக்கும் இந்த வாக்குத்தத்தம் உண்மையாகவே உள்ளது: நாம் கிறிஸ்துவின் அன்பிலிருந்து பிரிக்கப்பட முடியாது.

> *இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோம். மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும், உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மை பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன்.*
>
> *ரோமர் 8:37-39*

இதுதான் "ரோம மனிதயாத்திரையின்" உச்சக்கட்டம் - பவுல் ரோமரின் முதல் எட்டு அதிகாரங்களில் நம்மை ஒரு ஆவிக்குரிய பயணம் அழைத்துச் சென்று, இந்த வசனத்தில் அதை முடிவுக்கு கொண்டுவருகிறார். இயேசு கிறிஸ்துவோடு பிரிக்கப்படமுடியாத, ஒரு நித்திய இசைவுதான் இதன் உச்சக்கட்டம் - அவருடைய அன்பினால் என்றென்றும், முற்றிலுமாய் சூழப்படுதல்.

தேவனுக்கு நம்முடைய வியக்கத்தக்க மதிப்பு

சிலுவை என்பது, தேவன் நம்மில் வைத்த அன்பின் வெளிப்பாடு மட்டும் அல்ல. அது, அவருக்கு நம்முடைய மதிப்பை வெளிப்படுத்தும் ஒன்றாகவும் உள்ளது. மனோதத்துவ நிபுணர்கள், தங்களிடம் வரும் நோயாளிகளிடம் அதிகம் காணும் ஒரு பிரச்சனை, தாழ்வான சுய-மதிப்பீடுதான். கிறிஸ்துவின் சரீரமாகிய சபையிலும் இது ஒரு பொதுவான பிரச்சனையாக இருக்க நான் காண்கிறேன்.

உங்கள் மதிப்பை அறிவதற்கு ஒரே உண்மையான அடிப்படைதான் உண்டு - அது சிலுவை மட்டுமே. ஒரு பொருளின் மதிப்பு, மக்கள் அதற்கு எவ்வளவு செலுத்த ஆயத்தமாக உள்ளார்கள் என்பதைப் பொறுத்தது, என்று பெரும்பாலான மக்கள் ஒத்துக்கொள்வார்கள். உதாரணத்திற்கு, என் வீட்டை $200,000க்கு நான் விற்க விரும்பி அந்த விலைக்கு அதை சந்தையில் வெளியிடுகிறேன் என்று வைத்துக்கொள்ளுங்கள். அந்த வீட்டிற்கு $120,000க்கு மேல் செலுத்த யாரும் முன் வராவிட்டால், உண்மையில் அதின் மதிப்பு $120,000க்கு மேல் இருக்க முடியாது. மக்கள் என் வீட்டிற்கு எவ்வளவு கொடுத்து வாங்க ஆயத்தமாக இருக்கிறார்களோ, அது அவ்வளவே மதிப்பிடக்கூடியது.

இந்த ஒப்புமையைத் தனி நபராக உங்கள் மதிப்பிற்கு பயன்படுத்தலாம். நீங்கள் உங்கள் மதிப்பு என்ன என்று எண்ணுகிறீர்களோ, அது உங்கள் மதிப்பல்ல என்பதை நான் உங்களுக்கு நினைப்பூட்ட விரும்புகிறேன். மாறாக, தேவன் உங்களுக்காக செலுத்த ஆயத்தமாய் இருக்கும் கிரயமே உங்கள் மதிப்பீடாகும். வியக்கத்தக்க விதமாக, உங்களை மீட்க, அவர் செலுத்தின விலைக்கிரயம், தன்னுடைய சொந்த குமாரனாகிய இயேசுவின் ஜீவனாக இருந்தது. அதைக்காட்டிலும் மேலான மதிப்புள்ள வேறொன்றையும் தேவன் கொடுத்திருக்க முடியாது. எனவே முழு பிரபஞ்சத்திலுள்ள எல்லாவற்றிலும் நம்முடைய மதிப்பு பெரியது. இந்த உண்மை நம்மை வியக்கச்செய்ய வேண்டும்.

இயேசுவின் இரத்தம் என்னும் விலைக்கிரயம் நமக்காக செலுத்தப்பட்டதென்ற புரிதல் அப்போஸ்தலர்களின் மனதில் எப்போதும் இருந்தது. எபேசு சபையின் மூப்பர்களிடம் பேசுகையில், அப்போஸ்தலர் 20ம் அதிகாரத்தில், பவுல் கூறுகிறார்:

> *ஆகையால், உங்களைக்குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங் குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள்.*
>
> அப். 20:28

தயவுசெய்து கவனியுங்கள்: தேவனுடைய இரத்தம்தான் சபையை விலைக்குக்கொண்டது - அதாவது கிறிஸ்துவின் மூலம் சிந்தப்பட்ட தேவனுடைய இரத்தம். அதேபோல் பேதுரு எழுதுகிறார்:

> *உங்கள் முன்னோர்களால் பாரம்பரியமாய் நீங்கள் அநுசரித்து வந்த வீணான நடத்தையினின்று அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல், குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே.*
>
> 1 பேதுரு 1:18-19

"*குற்றமில்லாத*" என்றால் ஜென்ம பாவமில்லாத என்று அர்த்தம். "*மாசற்ற*" என்றால் தனிப்பட்ட பாவமில்லாத என்று அர்த்தம். பேதுருவும் சான்று கூறுவதுபோல், நம்முடைய முழு மீட்பும் ஒரே விதத்தில்தான் சாதிக்கபட்டது: இயேசுவின் இரத்தத்தால். லேவியராகமம் 17:11 சொல்லுகிறது மாம்சத்தின் ஜீவன் அல்லது ஆத்துமா, இரத்தத்தில்தான் உள்ளது - அதைப் பலிபீடத்தில் இஸ்ரவேல் மக்களின் ஆத்துமாக்களுக்காக பாவ நிவிர்த்திசெய்ய கொடுத்தேன்

என்று தேவன் கூறினார்.

தீர்க்கதரிசனமாக, ஏசாயா 53:12 கூறுகிறது: இயேசு தமது ஜீவனை அல்லது ஆத்துமாவை *"மரணத்தில் ஊற்றினார்."* இயேசு தமது இரத்தத்தை சிலுவையில் ஊற்றினபோது, அவர் தமது ஜீவனை - தமது ஆத்துமாவை - மீட்பின் கிரயமாக முழு மனுகுலத்திற்காகவும் கொடுத்தார்.

தேவைப்படும் கிரயத்தைவிட அது அதிகமானது, ஏனென்றால் ஒரு குறைவற்ற, தெய்வீக ஜீவன், சரித்திரத்தின் எல்லா காலங்களிலும் வாழ்ந்த எல்லா மனிதர்களின் உயிர்களைப் பார்க்கிலும் விலையுயர்ந்ததாக இருந்தது. அந்த ஜீவன், நம்மைச் சாத்தானின் கையிலிருந்து மீட்டுக்கொள்ள முழு கிரயமாக செலுத்தப்பட்டது. இயேசுவின் இரத்தத்தால் நாம் மீட்கப்பட்டுள்ளோம் என்று வேதம் கூறுகிறது. (உதாரணத்திற்கு எபேசியர் 1:7; 1 பேதுரு 1:18-19ஐப் பார்க்கவும்.) அந்த அடையாளத்தினால், இயேசு தமது இரத்தத்தை சிந்தின சிலுவையே, தேவன் நம்மில் வைத்த அன்பிற்கும், நமக்கு இடும் மதிப்பீட்டிற்கும் உச்சக்கட்ட வெளிப்பாடாக உள்ளது.

தேவன் கையிலிருக்கும் முத்து

முத்துக்களை விலைக்குக்கொண்ட வியாபாரியைக் குறித்த இயேசுவின் உவமை, தேவன் நம்மில் வைத்த அன்பின் ஒரு அழகான சித்திரமாக உள்ளது. அந்த உவமையை விளக்கிச்சொல்ல அநேக விதங்கள் இருக்கலாம், உங்களுக்குத் தனிப்பட்ட விருப்பமுடையதும் இருக்கலாம். ஆனால் அதைக் குறித்து என் கருத்தை நான் பகிர்ந்துகொள்ளும்போது, தயவு செய்து பொறுமையாக இருங்கள். நான் கொடுக்கவிருக்கும் விளக்கம் தனிப்பட்ட விதத்தில் எனக்கு மிகவும் உண்மையான ஒன்று.

> *மேலும் பரலோகராஜ்யம் நல்ல முத்துக்களைத் தேடுகிற வியாபாரிக்கு ஒப்பாயிருக்கிறது. அவன் விலையுயர்ந்த ஒரு முத்தைக் கண்டு, போய், தனக்குண்டான*

எல்லாவற்றையும் விற்று, அதைக் கொள்ளுகிறான்.
மத்தேயு 13:45-46

இந்த உவமை, இயேசுவை அந்த வியாபாரியாக சித்தரிக்கிறது. அவர் முத்துக்களின் மதிப்பை அறிந்திருந்தார் - அதில் அவர் தொழில் அறிஞர். மிகவும் விலையுயர்ந்த ஒரு முத்தைக் கண்டவர், அதை சொந்தமாக்கிக்கொள்ள, தன்னிடமுள்ள எல்லாவற்றையும் விற்றுவிட்டார்.

முற்றிலும் ஒரு தற்கால, மனித பார்வையில், அந்த வியாபாரி வீட்டிற்கு வந்து தான் வாங்கின பொருளைக்குறித்து தன் மனைவியிடம் விவரத்தை சொல்வதை நான் கற்பனைச்செய்ய விரும்புகிறேன்.

வியாபாரியின் மனைவி கேட்கிறாள், "அலுவலகத்திலிருந்து இன்று ஏன் வீட்டிற்கு நடந்தே வந்தீர்கள்?"

அவன் கூறுகிறான், "நான் காரை விற்றுவிட்டேன்."

"காரை விற்றுவிட்டீர்களா! என்னத்திற்காக?"

"அதை மட்டுமல்ல, வீட்டையும் விற்றுவிட்டேன்."

"வீட்டை விற்றுவிட்டீர்களா. நாம் பண்ணைக்குதான் இடம்பெயர்ந்து போக முடியும்."

"இல்லை, பண்ணையையும் விற்றுவிட்டேன். நமக்குச் சொந்தமான எல்லாவற்றையும் விற்றுவிட்டேன்."

"என்ன? எல்லாவற்றையும் விற்றுவிட்டீர்களா? பயித்தியமா? ஏன் இப்படிப்பட்ட காரியத்தைச் செய்தீர்கள்?"

"ஏனென்றால், நான் மிகவும் விலையுயர்ந்த ஒன்றைக் கண்டுபிடித்தேன், அதின் மதிப்பு எல்லாவற்றிற்கும் மேலானது."

"அப்படி என்ன அது?"

அவன் தன் கையைத் திறந்து செல்லுகிறான், "இந்த முத்துதான்.

இது நமக்குச் சொந்தமான எல்லாவற்றிலும் உயர்ந்த் மதிப்புள்ளது."

அந்த முத்து என்ன? விலையுயர்ந்த அந்த முத்து *நீங்கள்தான்*. ஒரு மனித ஆத்துமா. சரித்திரத்தில் வேறு யாரும் இரட்சிக்கப்படா விட்டாலும், இயேசு உங்களுக்காக மட்டும் மரித்திருப்பார்.

தேவன் உங்களுக்கு இடும் மதிப்பைக் குறித்து உங்களுக்கு சந்தேகம் இருக்குமானால், தேவன் கையிலிருக்கும் அந்த முத்தாக உங்களைச் சிந்தித்து பாருங்கள். "எனக்கு இருந்த எல்லாவற்றையும் செலுத்தி உன்னை விலைக்குக்கொண்டேன்" என்று அவர் கூறும் சத்தம் உங்களுக்கு இப்போது கேட்கட்டும். "நீ எனக்கு அவ்வளவு விலையேறப்பெற்றவன்/ள். அவ்வளவு மதிப்பு எனக்கு இல்லை என்று இனி ஒருபோதும் சொல்லாதே. ஏனென்றால், என் பார்வையில் நீ எல்லாவற்றிலும் மேலானவன்/ள். ஆம், என்னிடம் இருந்த யாவற்றையும் நான் கொடுத்தேன். நீ அவ்வளவு அழகுள்ளவன்/ள், குறைவற்றவன்/ள் - நீ எவ்வளவு விலையேறப்பெற்றவன்/ள் என்பது எனக்குத் தெரியும். நான் விற்றுப்போட்ட எல்லாமும் உன்னைவிட எனக்குப் பெரிதல்ல. நீ தான் என் கையிலுள்ள அந்த முத்து."

நான் பகிர்ந்துகொண்டதை நீங்கள் விசுவாசித்தால், உங்கள் வாழ்க்கை மறுரூபப்படும். உங்கள் மதிப்பை உலகம் தீர்மானிக்க இடமளிக்காதீர்கள் - ஏனென்றால், தேவன் உங்களுக்குச் செலுத்தின விலைக்கிரயமே உங்கள் மதிப்பு.

சபையின் வாழ்விலும், நமது தனிப்பட்ட வாழ்விலும், சிலுவையை ஏன் மையத்தில் வைக்க வேண்டும் என்பதற்கான ஆறு காரணங்கள் மறுபடியும் இதோ:

1. மனுகுலத்தின் குற்றமனைத்தையும் அகற்றும் ஒரே பூரணமான, எல்லாவற்றிற்கும் போதுமான பலி, சிலுவையே.

2. சிலுவையின் மூலம், இய்ற்கைக்கு அப்பாற்பட்ட கிருபை கட்டவிழ்க்கப்படுகிறது.

3. சிலுவையின் மூலம், தேவனுடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட அற்புதங்களும் அடையாளங்களும் கட்டவிழ்க்கப்படுகின்றன.

4. சாத்தானின் பூரண தோல்விக்குச் சிலுவை மட்டுமே அடிப்படை.

5. தேவனுடைய மறைவான, இரகசிய ஞானத்திற்குச் சிலுவையே வாசல்.

6. நம்மேல் தேவன் வைத்திருக்கும் அன்பிற்கும், நம்முடைய மதிப்பீடிற்கும் சிலுவைதான் உச்சக்கட்ட செயலிலான வெளிப்பாடு.

இந்த அதிகாரத்தையும், இப்புத்தகத்தின் பகுதியை முடிவிற்கு கொண்டுவரும் வண்ணமாகவும், ஒரு நிமிடம் ஆண்டவருக்கு நன்றி செலுத்துவோம். முக்கியமாக, நம்மேல் தேவனுடைய அன்பின் அளவை நாம் தியானிக்கும்போது, நன்றி செலுத்த நமக்குப் பெரும் காரணம் உண்டாயிருக்கிறது.

சிலுவைக்காக நன்றி இயேசுவே. சிலுவையில் இயேசு சம்பாதித்த யாவற்றினாலும், என் வாழ்வில் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் அனைத்திற்காகவும் நன்றி. இதைப் பெற்றுக்கொள்கிறேன் - முக்கியமாக இந்த அதிகாரத்தில் வெளிப்படுத்தப்பட்ட சத்தியத்தை, சிலுவை எனக்காகவும், எங்குமுள்ள மனிதர் யாவருக்காகவும் நீர் உம்முடைய அன்பைச் செயலில் வெளிப்படுத்தினீர். சிலுவையின் மூலம், உமது பார்வையில் என் மதிப்பை அறிந்துகொள்ளச் செய்தீர். நான் வியந்து நிற்கிறேன் - என் மேல் உமது மாபெரும் அன்பிற்காக, நன்றியோடு உம்முன் பணிகிறேன். ஆமென்.

பகுதி இரண்டு

என் வாழ்வில் சிலுவை

அதிகாரம் 8

சாத்தானின் தந்திரம்: சிலுவையை மறைத்தல்

இப்புத்தகத்தின் இரண்டாம் பகுதியில், சிலுவையின் கிரியையை நம்முடைய வாழ்வில் செயல்முறையாக எப்படி அப்பியாசப்படுத்துவதென்று நாம் கவனிக்க போகிறோம். நம்முடைய விவாதத்திற்கு அடித்தளமாக, சிலுவையின் கிரியை சாராம்சப்படுத்தி இப்படிச் சொல்லலாம்: *ஒவ்வொரு விசுவாசிக்கும் தேவனுடைய பூரண ஏற்பாடுகளின் அடிப்படை சிலுவையே.* சிலுவையின் மூலம் நமக்குச் சகலமும் வழங்கப்பட்டுள்ளது. காலத்திலும், நித்தியத்திலும், நம்முடைய வாழ்க்கையின் எல்லாப் பகுதிகளிலும் - ஆவிக்குரிய, மனதளவிலான, உணர்ச்சிகள், சரீரப் பிரகாரமான, பொருளாதாரத்திற்கடுத்த, எல்லாத் தேவையும் சிலுவையின் மூலம் நமக்கு வழங்கப்பட்டுள்ளது. வேறெந்த அடிப்படையும் இல்லை. சிலுவையின் அடிப்படையில் பெற்றுக்கொள்ளலாம் அல்லது எதையும் பெற்றுக்கொள்ளாமலும் இருக்கலாம்.

ரோமர் 8:32ல், பவுல் *"தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடேகூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி?"* என்று கூறுகிறார். இவ்வார்த்தைகளை கிரகிக்க முற்படுங்கள். இயேசுவின் மூலம், தேவன் சகலவற்றையும் நமக்கு இலவசமாக கொடுப்பார். ஆனால் இயேசு இல்லையெனில் - ஒன்றுமில்லை. சிலுவையின் அடிப்படையில் நாம் எல்லாவற்றையும்

பெற்றுக்கொள்ள முடியும். ஆனால் அந்த அடிப்படை இல்லையெனில் நமக்கு ஒன்றுமில்லை.

சாத்தானை முற்றிலும் தோற்கடிக்க கிறிஸ்துவின் அடிப்படை சிலுவை என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும். நமக்குப் பதிலீடான அவருடைய தியாகம் மற்றும் மரணத்தினால், தமது வெற்றியுள்ள உயிர்த்தெழுதலினால், மற்றும் ஜெயம்பெற்ற பரமேறுதலினால் இயேசு சாத்தானுக்கும் அவனுடைய ராஜ்யத்திற்கும் ஒரு பூரண, நித்திய, மாற்றமில்லா தோல்வியை உடுத்துவித்துள்ளார். அந்த உண்மையை மாற்ற சாத்தானால் ஒன்றும் செய்ய முடியாது. சிலுவையின் விளைவாக, நாம் சத்துருவின் மீது வெற்றிகொள்ள முடியும். சாத்தானோடு, சிலுவையைத் தவிர, வேறெந்த அடிப்படையில் நாம் யுத்தம் செய்தாலும் நாம் தோல்வியடைவோம். ஆனால், சிலுவையில் இயேசு சாதித்தவையின் அடிப்படையில், நாம் முற்றிலும் ஜெயம்கொள்ள முடியும்.

இயேசுவின் வெற்றியின் பார்வையை இழப்பது

தேவன் நமக்களிக்கும் வளங்கள் யாவற்றிற்கும், சாத்தானின் தோல்விக்கு அடிப்படையும் சிலுவையே என்று சிலுவையைக் குறித்து, நாம் எடுத்துரைத்த இரண்டு முக்கியமான உண்மைகளினால், சாத்தான் சபைக்கு விரோதமாக ஒரு தந்திரத்தை கையாளுகிறான். இயேசுவின் வெற்றியைப் பயனுள்ள விதத்தில், நமது வாழ்வில் அனுதினமும் செயல்படுத்த, இந்த தந்திரத்தையும், அதை எப்படி மேற்கொள்வது என்பதையும் நாம் அறிந்திருக்க வேண்டும்.

சிலுவையில் இயேசு அறையப்பட்டபோது, முதலில் சாத்தான்தான் ஒரு மாபெரும் வெற்றியைப் பெற்றுவிட்டதாக யோசித்தான் என்பதை நாம் கவனித்தோம். ஆனால், தனது மிகுந்த ஏமாற்றத்திற்கு, அதற்கு முற்றிலும் எதிர்மறையான காரியம் நிகழ்ந்துள்ளதை அவன் சீக்கிரமாய் கண்டுப்பிடித்தான். தீடீரென்று, இயேசுவின் கல்வாரி மரணத்தினால், அவனுடைய சகல உரிமைகளும் ரத்தாகி, அவனுடைய

வல்லமையெல்லாம் அவனை விட்டு எடுக்கப்பட்டதை அவன் கண்டான். சிலுவையினால் சாதிக்கப்பட்டதை அவனால் மாற்ற முடியவில்லை. சர்வவல்லவராகிய தேவன், அதை நித்தியத்திற்கும் முடிவு செய்துவிட்டார்.

நீங்கள் சாத்தானின் நிலையிலிருந்து, நீங்கள் சாதிக்க நினைத்துக்கொண்டிருந்ததெல்லாம் இயேசுவின் சிலுவை தியாகத்தினால் முறியடிக்கப்பட்டு விட்டதென்று கண்டுபிடித்திருந்தால், என்ன செய்வீர்கள்? தனது முரண்பட்ட வழியில் சாத்தான் மிகுந்த புத்திசாலி. இந்த உண்மைக்கு முன், சாத்தானுக்கு இருந்த ஒரே வழி, சிலுவையையும், அதின் வல்லமையையும் மறைத்து. இயேசு தங்களுக்காக சம்பாதித்ததை ஜனங்கள் உணராமல் இருக்க தன்னால் இயன்ற யாவற்றையும் செய்வதுதான் என்பதை அவன் அறிந்திருந்தான். (மன்னிக்கப்பட்டு, விடுவிக்கப்பட்டவர்கள் என்பதற்குப் பதிலாக, நம்மை குற்றவாளிகளாக மற்றும் தண்டனைப்பெற்றவர்களாக உணரச் செய்வதற்கு, சாத்தான் சகோதரரைக் குற்றம் சுமத்துகிறான் என்று நாம் விவாதிக்க ஆரம்பித்தபோது, இந்த தந்திரத்தை நாம் வெளியாக்க துவங்கினோம்.)

கிறிஸ்தவர்களாகிய நாம், இயேசு நமக்காக கல்வாரியில் சம்பாதித்த வெற்றியின் தரிசனத்தை இழக்கும்போது, சிலுவையினால் நமக்களிக்கப்பட்ட பயன்களை, நாம் தேடவோ அனுபவிக்கவோ முடியாது. மேலும் சிலுவையின் வல்லமை மறைக்கப்படும்போது, கிறிஸ்து சாத்தானுக்குக் கொடுத்த தோல்வியை நம்மால் அவனுக்கு உடுத்துவிக்கமுடியாது.

இரண்டாயிரம் ஆண்டுகளாக, சாத்தான் செயல்ப்படுத்த நினைக்கும் குறிப்பான தந்திர ஆலோசனை இதுதான். உண்மையைச் சொன்னால், இயேசு சிலுவையில் நமக்காக சாதித்தவைகளைச் சாத்தான் மறைத்துவிடும்போது, சபையில் மிகப்பெரிய பிரச்சனைகள் நிகழ்கின்றன.

உங்களை மயக்கினவன் யார்?

கலாத்தியருக்கு எழுதும் நிரூபத்தில், சாத்தானின் தந்திரத்தை பவுல் மிகத் தெளிவாக விளக்குகிறார். தெளிவை உண்டுபண்ணும் இந்த வார்த்தைகளைக் கலாத்தியர் 3:1ல் நாம் வாசிக்கிறோம்:

> *புத்தியில்லாத கலாத்தியரே, நீங்கள் சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமற்போகத்தக்கதாக உங்களை மயக்கினவன் யார்? இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டவராக உங்கள் கண்களுக்குமுன் பிரத்தியட்சமாய் உங்களுக்குள்ளே வெளிப்படுத்தப்பட்டிருந்தாரே.*

இந்த வசனத்தை நான் பல ஆண்டுகளாக தியானித்துள்ளேன். நான் இதை முதல் முறையாக வாசித்தபோது, வேதத்திலுள்ள அநேக வசனங்களைப்போல, இதையும் வாசித்தேன், கவனித்தேன் ஆனால் அதிகம் சிந்திக்கவில்லை. ஆனால், காலப்போக்கில் இவ்வசனம் என்னை அதிகமான தாக்கத்திற்குள்ளாக்கியது. இன்று சபையிலுள்ள கிறிஸ்தவர்களின் பிரச்சனைகளை புரிந்துகொள்ள இவ்வசனத்தை நான் திறவுகோலாக காண்கிறேன்.

இரட்சிக்கப்பட்டு, ஆவியின் அபிஷேகத்தைப் பெற்று, அற்புதங்களைக் கண்கூடாக கண்ட இந்தக் கலாத்திய கிறிஸ்தவர்களிடம் பவுல் ஓர் ஆச்சரியமான வாக்கியத்தை எடுத்துரைக்கிறார். *"உங்களை மயக்கினவன் யார்?"* என்று எழுதுகிறார். *சூனியம்* (மயக்கத்தை ஏற்படுத்தும் சக்தி) என்பது பூமிக்குள் சாத்தானின் ராஜ்யத்தின் வல்லமைகளின் கட்டவிழ்த்தலை விவரிக்கும் பிரதான வார்த்தை. இவ்வல்லமைகளின் கீழ் கலாத்தியர்கள் வந்துள்ளதாக பவுல் அவர்களுக்குச் சொல்லுகிறார்.

''ஆவியின் நிறைவைப்'' பெற்ற கிறிஸ்தவர்கள் என்று நாம் கூறக்கூடியவர்கள்தான் கலாத்தியர்கள் என்பதை தயவுசெய்து புரிந்துகொள்ளுங்கள். ''ஆவியினால் நிரப்பப்பட்ட'' என்ற

வார்த்தையைக் கேட்டு, சிலருடைய வாழ்க்கையை நான் பார்க்கும்போது, “ஆமாம், நிரப்பப்பட்டவர்கள்தான்... ஆனால் சிறிய விரல் கவசம் அளவு நிறைவு மட்டுமே” என்று நினைத்துக்கொள்வேன். நீங்கள் ஒரு விரல் கவசத்தையும் நிரப்பலாம், ஒரு கோப்பையையும் நிரப்பலாம் அல்லது ஒரு குழியல் தொட்டியையும் நிரப்பலாம். அவைகள் அனைத்தும் நிரம்பும் ஆனால் உள்ளே இருக்கும் தண்ணீரின் அளவு ஒன்றல்ல. இந்த தந்திரத்தை சாத்தான் தங்களுக்கு விரோதமாக பயன்படுத்தியுள்ளான் என்பதை அறியாத அநேக ஆவியினால் நிரப்பப்பட்ட கிறிஸ்தவர்கள் உள்ளனர். அவர்கள் “மயக்கப்பட்டிருக்கிறார்கள்” என்பதை முற்றிலும் அறியாதிருக்கிறார்கள்.

1963ல் இப்படிப்பட்ட வஞ்சனை எனக்கு மிகத் தெளிவாக விவரிக்கப்பட்ட ஒரு சூழ்நிலையில் நான் இருந்தேன். எனது முதல் மனைவி லிடியா மற்றும் தத்தெடுக்கப்பட்ட எங்களது ஐந்து வயது ஆப்பரிக்க மகளுடன் நாங்கள் அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு குடிபெயர்ந்திருந்தோம். சீயாட்டில், வாஷிங்கடனில் உள்ள ஒரு சபைக்குப் போதகர்களாக பணியாற்ற வந்திருந்தோம்.

அந்தச் சபையின் பிரச்சனைகளை நான் அதிகம் விவரிக்க மாட்டேன் ஆனால் ஆவினால் நிரப்பப்பட்ட விசுவாசிகளுக்கு என்ன நடக்ககூடும் என்பதைப் புரியவைக்கும் அளவிற்கு பின்னணியைத் தருகிறேன். இந்தச் சபைக்கு நாங்கள் வருதற்கு முன்னிருந்த போதகரின் மனைவி சபையின் நிர்வாக குழு உறுப்பினர்களில் ஒருவருடன் காதல்கொண்டார். இதன் விளைவாக போதகரின் மனைவி போதகரை விவாகரத்து செய்துகொண்டார், அந்தக் குழு உறுப்பினரும் தனது மனைவியை விவாகரத்து செய்துகொண்டார். அதற்குப்பின் அவர்கள் இருவரும் திருமணம் செய்துகொண்டு, அந்தத் திருச்சபைக்கு போதகர்களாக தொடர்ந்து நீடித்தனர்.

இதெல்லாம் வெளியரங்கமாக அறியப்பட்ட விஷயம், இதில் இரகசியம் ஒன்றுமில்லை. நாங்கள் சீயாட்டில் நகரில் வந்து சேர்வதற்குள் அந்தப் பெண் வெளியேறிவிட்டாள் ஆனால் அந்தச்

சபை இன்னமும் அவளுடைய ஆதிக்கத்தின் கீழ்தான் இருந்தது. சபை மக்களோடு அந்தச் சூழ்நிலையைக் குறித்து நான் பேசும்போது, ‘‘அந்தப் பெண்ணுக்குள் ஏதோ இருக்கிறது. அவள் அன்னை பார்த்தால், என் இரத்தம் உறைந்துபோகிறது, என்னால் பதில் பேச முடிவதில்லை” என்று அவர்கள் கூறுவார்கள்.

இந்தப் பெண், உண்மையில் அந்த முழு சபையின் மேல் முழு கட்டுப்பாடுகொண்டிருந்தாள். லிடியாவும் நானும் இப்படிப்பட்ட ஒரு சூழலைச் சந்தித்ததே இல்லை, என்ன செய்வதென்று தெரியாமல், தேவனைத் தேட ஆரம்பித்தோம். அந்த நேரத்தில்தான் ஆண்டவர் என்னை இந்த வசனத்திற்கு நடத்தினார்: *‘‘புத்திக்கெட்ட கலாத்தியரே! உங்களை மயக்கினவன் யார். . .?”*

அப்போது நான், ‘‘இதுவே விடை. அவர்கள் மயக்கப்பட்டிருக்கிறார்கள்!” என்று கூறினேன்.

முதலில் கிறிஸ்தவர்கள் மயக்கப்படக்கூடும் என்பதை என்னால் நம்பமுடியவில்லை. ஆனால் லிடியாவும் நானும் அந்தச் சத்தியத்தை புரிந்துகொண்டு, ஜெபத்தில் ஒருமனப்பட்டு, அதற்கு எதிர்த்து நின்றபோது, அந்த வல்லமையை முறித்தோம். அதன் விளைவாக, சபை விடுவிக்கப்பட்டது, சபையின் சூழ்நிலையும் ஆவிக்குரிய ஆரோக்கியத்திற்கு நேராக திருப்பப்பட்டது.

மறைக்கப்பட்ட சிலுவையின் விளைவுகள்

கலாத்தியர்கள் மயக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைப் பவுல் எப்படி அறிந்திருந்தார்? கலாத்தியர் 3:1ன் இரண்டாம் பகுதி: *சிலுவையில் அறையப்பட்ட இயேசு கிறிஸ்துவின் தரிசனத்தை அவர்கள் இழந்திருந்தார்கள்,* என்று கூறுகிறது. ஒரு காலத்தில் வீரியம்கொண்டதாக இருந்த ஆவிக்குரிய சபைக்குள் சாத்தானின் வல்லமை புகுந்து, சிலுவையைக் குறித்த அவர்களுடைய புரிந்துகொள்ளுதலைக் களவாடியது. சிலுவையின் உண்மையையும் அதின் வழியாக இயேசு அவர்களுக்குப் பெற்றுத்தந்த யாவையும்

பில்லிசூனியம் மறைத்து விட்டது.

சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவின் தரிசனத்தை இழந்ததின் விளைவாக, கலாத்தியர்கள் மாம்சீகத்திலும், சட்டவாதத்திலும் விழுந்துவிட்டார்கள். பொதுவாக சட்டவாதத்தை நீங்கள் எங்குக் கண்டாலும், அது மாம்சீகத்தின் விளைவாகவே இருக்கும். சட்டதிட்டங்களைக் கைக்கொள்வது மிகவும் ஆவிக்குரிய தோற்றமுடையதாக இருந்தாலும், அது மாம்சத்தின் வெளிப்பாடாகும். அது ஆவிக்குரியத்தன்மையுடன் இணைந்ததல்ல.

பவுல் தொடருகிறார்,

> *ஒன்றைமாத்திரம் உங்களிடத்தில் அறிய விரும்புகிறேன்; நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலேயோ, விசுவாசக் கேள்வியினாலேயோ, எதினாலே ஆவியைப் பெற்றீர்கள்?* (கலாத்தியர் **3:2-5**)

தயவுசெய்து, இந்த உண்மைகளைக் கவனியுங்கள்: கலாத்தியர்கள் இரட்சிக்கப்பட்டு, ஆவினால் நிரப்பப்பட்டிருந்தார்கள், தேவன் அவர்கள் மத்தியில் அற்புதங்களைச் செய்துகொண்டிருந்தார். ஆனாலும் அவர்கள் மயக்கப்பட்டிருந்தார்கள். இப்பகுதியில், சிலுவையின் தரிசனத்தை இழப்பதினால் உண்டாகும் இரண்டு விளைவுகளைக் குறித்துப் பவுல் பேசுகிறார். மறுபடியும், அவைகள் என்ன **?** நியாயப்பிரமாணத்தின் கிரியைகளும், மாம்சத்தின் கிரியைகளும் - வேறு வார்த்தைகளில் கூறினால், சட்டவாதமும் மாம்சீகமும்.

சட்டவாதத்திற்கு, *தேவனிடத்தில் நீதியைப் பெறும் முயற்சியில் சட்டத்திட்டங்களை பின்பற்றுதல்* என்று நான் வரையறை கொடுப்பேன். அது மோசேயின் நியாயப்பிரமாணமாக இருக்கலாம், எந்தச் சபைப்பிரிவின் கட்டுப்பாடாக இருக்கலாம் அல்லது ஒரு தனிப்பட்ட நெறிமுறையாகவும் இருக்கலாம். ஒரு சட்டத்தையோ அல்லது சில விதிமுறைகளையோ பின்பற்றி, தேவனிடத்தில் நீதியை அடைய தேடும் எவரும் சட்டவாதத்தில் அகப்பட்டுள்ளார்கள்.

சட்டவாதத்தின் இன்னொரு விளக்கம் என்னவென்றால்: தன்னிடம் நீதியைப் பெறுவதற்கு தேவன் வைத்திருக்கும் நிபந்தனையுடன் அதையும் கூட்டுதல். நம்முடைய குற்றங்களுக்காக இயேசு மரணத்திற்கு ஒப்புவிக்கப்பட்டு, நாம் நீதிமான்களாக்கப்பட அவர் உயிருடன் எழுப்பப்பட்டார் என்று விசுவாசித்தால் நீதி நமக்கு பகிர்ந்தளிக்கப்படும் என்று தேவன் கூறியுள்ளார். (ரோமர் 4:24-25ஐ பார்க்கவும்.)

விசுவாசத்தைத் தவிர, தேவனிடம் நீதியை அடைவதற்கு வேறு எந்த நிபந்தனையையும் கூட்ட, எந்தப் போதகருக்கோ, சபைக்கோ, ஸ்தாபனத்திற்கோ, வேத போதகருக்கோ அதிகாரம் இல்லை. என்னுடைய புரிந்துகொள்ளுதலின்படி, இயேசுவை நமது பாவங்களுக்காக ஒப்புவித்து, நமது நீதிக்காக அவரை எழுப்பினவரை விசுவாசிப்பதைத் தவிர, சேர்க்கப்படும் எந்த நிபந்தனையும் சட்டவாதமாகும்.

சிலுவையில் நடந்த உண்மையை மறைப்பதில் சாத்தான் வெற்றிபெற்றதினால், கலாத்தியர்கள் அவனால் வஞ்சிக்கப்பட்டார்கள். அதன் விளைவாக, தேவனைப் பிரியப்படுத்த சட்டங்களைக் கைக்கொள்ளும் மாம்சீக முயற்சிக்கு அவர்கள் திரும்பினார்கள் - அவர்களுடைய விஷயத்தில் அது யூத சட்டங்களாக இருந்தன.

சாபத்தின் அச்சுறுத்தல்

கலாத்திய திருச்சபையில் இந்த வஞ்சனையின் தேவையற்ற விளைவுகள் அதிர்ச்சியைக் கொடுக்கின்றன. கலாத்தியர் 3:10 சுட்டிக்காண்பிப்பதுபோல:

> *நியாயப்பிரமாணத்தின் கிரியைக்காரராகிய யாவரும் சாபத்திற்குட்பட்டிருக்கிறார்கள்; நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளெல்லாம் செய்யத்தக்கதாக அவைகளில் நிலைத்திராதவன்*

> *எவனோ அவன் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறதே.*

அநேகர் புரிந்துகொள்ளாத உண்மை என்னவென்றால், மோசேயின் நியாயப்பிரமாணத்தினால், நீதிமானாக்கப்படுவதற்கு, ஒருவன் *முழு* சட்டத்தையும் *எப்போதும்* கைக்கொள்ள வேண்டும். நீங்கள் நியாயப்பிரமாணத்தின் கீழ் உங்களைக் கொண்டுவந்து, அதின் எல்லா அம்சங்களையும் கைக்கொள்ள தவறினால், உங்கள் மேல் நீங்களே சாபத்தைக்கொண்டு வருகிறீர்கள். ஏன்? ஏனென்றால் நியாயப்பிரமாணமே கூறுகிறது *முழு* நியாயப்பிரமாணத்தை *எல்லா* நேரங்களிலும் கைக்கொள்ளாத எவரும் சபிக்கப்பட்டவர்கள்.

கலாத்தியாவிலே, சிலுவை மறைக்கப்பட்டதின் விளைவுகள், சட்டவாதம், மாம்சீகம் மற்றும் சாபமாக இருந்தது. இது மிக ஆழமான ஒரு சிந்தனை.

கலாத்தியரிடம் நிகழ்ந்து கொண்டிருந்ததைக் குறித்து மேலும் அறிய நாம் எரேமியா 17:5க்கு திருப்பிக்கொள்ளலாம்:

> *மனுஷன்மேல் நம்பிக்கைவைத்து, மாம்சமானதைத் தன் புயபலமாக்கிக்கொண்டு, கர்த்தரை விட்டு விலகுகிற இருதயமுள்ள மனுஷன் சபிக்கப்பட்டவன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.*

"கர்த்தரை விட்டு விலகுகிற இருதயமுள்ள" யாவர் மேலும் இந்தச் சாபம் கூறப்பட்டுள்ளது. கலாத்தியரைப்போல, ஒரு கூட்ட மக்கள், தேவனுடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட ஆசீர்வாதம் மற்றும் வல்லமையில் ஆரம்பம் செய்து, பரிசுத்த ஆவியானவர் அவர்கள் வாழ்வில் அசைவாடி, கிரியை செய்து, அவர் மட்டுமே ஏற்படுத்தக்கூடிய விளைவுகள் ஏற்படுத்த பெற்று, அதன் பின் அந்த மக்கள் தங்கள் சுய முயற்சிக்கும், தங்கள் சொந்த திட்டங்கள், அமைப்புகள் மற்றும் நிகழ்ச்சிகளுக்கு திரும்பினால், அவர்கள் தேவனைப் பார்த்து என்ன சொல்லுகிறார்கள்? "தேவனே, பரிசுத்த

ஆவியானவரை எங்களுடன் பெற்றிருந்தது அருமையாக இருந்தது, ஆனால் அவரையல்லாமல் நாங்கள் இன்னும் நன்றாக செயல்படுவோம்.'' தேவனுடைய ஆவியானவரை அவர்கள் உதாசினப்படுத்துகிறார்கள். அதனால்தான் அவர் சாபத்தைக் கூறுகிறார்!

சாபத்தின் கீழ் உள்ளவரின் தெளிவான சித்திரம் அடுத்த வசனத்தில் உள்ளது:

> *அவன் அந்தரவெளியில் கறளையாய்ப்போன செடியைப்போலிருந்து, நன்மைவருகிறதைக் காணாமல், வனாந்திரத்தின் வறட்சியான இடங்களிலும், குடியில்லாத உவர்நிலத்திலும் தங்குவான்.* (எரேமியா 17:6)

இந்த வசனத்திலுள்ள மனுஷனை சுற்றி ஆசீர்வாதங்கள் இருக்கின்றன ஆனால் அவைகள் அவனை எட்டுவதில்லை. மழை அவனை சுற்றி பெய்கிறது, சுற்றியுள்ள நிலம் பலனுள்ளதாக இருக்கிறது. ஆனால் அவன் காய்ந்த, பலனற்ற, சபிக்கப்பட்ட நிலத்தில் வாழ்கிறான்.

சாபம் செயல்படும் விதத்தைக் குறித்தும், அதிலிருந்து மக்கள் எப்படி விடுவிக்கப்பட முடியும் என்பதைக் குறித்தும், தேவன் எனக்கு ஒரு புரிந்துகொள்ளுதலை கொடுத்ததிலிருந்து, சாபத்தின் கீழிருந்த நூற்றுக்கணக்கானோருடன் நான் இடைப்பட்டுள்ளேன். பெரும்பாலான நிகழ்வுகளில் அவர்கள் விடுதலை பெற்றும், ஆசீர்வாதத்தின் ஸ்தலத்தில் மீண்டும் நிலைநாட்டப்பட்டுள்ளதையும் நான் கண்டுள்ளேன்.

ஒரு பரவலான பிரச்சனை

கலாத்தியரின் பிரச்சனையை நான் விவரித்த பிரகாரம் அதை சிந்திக்க உங்களுக்குச் சவால் விடுகிறேன். உங்கள் வாழ்விலும்

ஒரு வேளை அதே பிரச்சனை உள்ளதா? உங்கள் சபையைத் தாக்கிக்கொண்டிருக்கும் பிரச்சனை இதுதானா? ஒரு வேளை, இன்றுள்ள ஒட்டுமொத்த திருச்சபையின் பிரதான பிரச்சனையே இதுதானா?

தேவனுடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட சந்திப்பினால்தான் இன்றுள்ள எல்லா பிரதான சபைப் பிரிவுகளும் உருவாயின. இல்லையெனில், அவர்கள் சரித்திரத்தில் ஒருபோதும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்க முடியாது. நீங்கள் எந்தச் சபைப் பிரிவை எடுத்துக்கொண்டாலும், தேவன் தனது இறையாண்மையில் இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையினால் அவர்களை சந்தித்தபோதுதான் ஆரம்பமானது. ஆனால் வேதனைக்குறிய விதமாக, அந்தச் சபை பிரிவுகளில் வெகு சிலரே இன்னும் தங்களைப் பிறப்பித்த அந்த இறையாண்மைகொண்ட, இயற்கைக்கு அப்பாற்ப்பட்ட வல்லமையைச் சார்ந்துள்ளார்கள். கலாத்தியரைப்போல, ஆவியில் ஆரம்பம் செய்தார்கள் ஆனால் மாம்சத்தில் பூரணப்பட முயற்சிக்கின்றனர். (கலாத்தியர் 3:3ஐ பார்க்கவும்.)

இந்தக் கருத்தை நான் வலியுறுத்துகிறேன், ஏனெனில், நாம் இங்கு விவாதிக்கும் பிரச்சனை உண்மையானது, தற்காலத்திற்குரியது மற்றும் மிகவும் முக்கியமானது. இது திசை தவறிப்போன ஏதோ ஒரு சிறிய குழு மக்களுக்குள் நடக்கும் ஒரு மறைவான பிரச்சனை அல்ல. இயேசு கிறிஸ்துவின் சபைக்கு விரோதமாக சாத்தானின் தந்திரத்தை நாம் வெளிப்படுத்திக்கொண்டிருக்கிறோம். சாத்தானின் முக்கிய ஆயுதம் என்ன? சிலுவையின் உண்மையை மறைத்தல்.

மாம்சீகத்தின் அடையாளங்கள்

பொதுவாக, நான் புரிந்துகொண்டவரை, சிலுவையில் இயேசு நமக்காக சாதித்தவைகளின் தரிசனத்தை இழப்பதன் விளைவாக, ஆவிக்குரியதற்குப் பதிலாக மாம்சீகமானவை மாற்றுப் பொருளாக வந்து விடுகின்றது. மனிதனுக்கு ஆவி, ஆத்துமா மற்றும் சரீரம் உண்டு. ஆத்துமாவுக்கு அதன் நியாயமான செயல்பாடுகள் உண்டு.

ஆனாலும் அது ஆவியின் இடத்தை எடுத்துக்கொள்ள முடியாது. மக்கள் இயற்கைக்கு அப்பாற்பட்டதை விட்டகன்று, தங்கள் சொந்த திறமை மற்றும் பிரயாசங்களைச் சார்ந்துகொள்ள துவங்கும்போது, அவர்கள் ஆவிக்குரியதை விட்டு மாம்சீகத்திற்கு மாறிவிடுகின்றனர்.

பின்வரும் பட்டியலில், மாம்சீகம் தன்னைச் சபையில் வெளிப்படுத்தும் எட்டு வித்தியாசமான வழிகள் கொடுக்கப்பட்டுள்ளன. மத மாற்றீடுகள் ஆவிக்குரிய உண்மையின் இடத்தை எப்படி எடுத்துக்கொள்ள முடியும் என்பதற்கு உதாரணங்கள்.

1. இறையியல் வெளிப்பாட்டின் இடத்தை எடுத்துக்கொள்ளுகிறது. கொள்கைகள் மற்றும் கோட்பாடுகளை உருவாக்க, இறையியல் மனிதனின் சிந்தனைத் திறனைப் பயன்படுத்துகிறது. ஆனால், தேவனிடமிருந்து பெற்ற நேரடி வெளிப்பாடுக்கு அது சமமல்ல.

2. நற்குணத்தின் வளர்ச்சிக்குப் பதில் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. இயேசு மக்களோடு பேசினது மட்டுமல்ல, தன்னைப் பின்பற்ற அவர்களுக்குச் சவால் விட்டார். வேறு விதமாக சொன்னால், வெறும் அறிவுசார்ந்த கருத்துக்களை மட்டும் அவர் கொடுக்கவில்லை. ஒரு வாழ்க்கை முறையை பகிர்ந்தளித்தார். மக்களை அறிவுப்பூர்வமாக பயிற்றுவித்து, நற்பண்பின் வளர்ச்சியை பயிற்றுவித்தலை புறக்கணிப்பது மிகவும் ஆபத்தானது.

3. வேதம் கூறுகிறது, *"மாம்ச சிந்தை தேவனுக்கு விரோதமான பகை"* (ரோமர் 8:7). நாம் மாம்ச மனதிற்கு மட்டும் கல்வியளிக்கும் போது, நாம் தேவனுடைய சத்துருவுக்கு கல்வியளிக்கிறோம். இன்று அநேக இறையியல் கல்லூரிகள், கல்வி அறிவுபெற்ற தேவனுடைய சத்துருக்களை உற்பத்தி செய்துகொண்டிருக்கிறார்கள். இதை நான் நாடக பாணியில் சொல்லவில்லை. இது உண்மை என்று நம்புகிறேன். ராஜ்யத்தின் உண்மையான சுவிசேஷத்தின் முக்கியமான எதிரிகள் சிலர், வேதாகம கல்லூரியின் தயாரிப்புகள் ஆவர்.

4. ஆவிக்குரிய பகுத்தறிவுக்கு, மனோதத்துவம் மாற்றாக வைக்கப்படுகிறது.

5. பரிசுத்த ஆவியானவரின் இயற்கைக்கு அப்பாற்பட்ட வழி நடத்துதலுக்குப் பதிலாக மனித திட்டங்கள் வைக்கப்படுகின்றன. அதேபோல் இயற்கைக்கு அப்பாற்பட்ட வரங்களும், ஊழியங்களும் மாற்றப்படுகின்றன.

6. அற்புத அடையாளங்களுடன் கூடிய இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமைக்குப் பதில் பேச்சுத்திறமை முக்கியத்துவம் பெறுகிறது.

7. விசுவாச நடைக்குப் பதில் தர்க்க அறிவு இடம் பெறுகிறது.

8. நடத்தையின் அளவுகோல்களாக அன்பிற்குப் பதில், சட்டங்கள் இடம்பெறுகின்றன.

சட்டவாதம்

கடைசி குறிப்பு நம்முடைய கவனத்தை மீண்டும் சட்டவாதத்திற்கு திரும்பச் செய்கிறது. நீங்கள் அறிந்திருக்கும் கிறிஸ்தவர்கள் யாரையாவது, சட்டவாதிகள் என்று நீங்கள் அழைக்கக்கூடுமானால், அவர்கள் அன்புள்ளவர்கள் என்று உங்களால் சொல்ல முடியுமா? கிறிஸ்தவ வாழ்வில், சட்டங்களும் அன்பும் ஒன்றோடு ஒன்று போட்டிப்போடுபவையாக உள்ளன. சட்டங்களைக் கைக்கொண்டும், அவைகளை அமல்படுத்துவதிலும் அலுவலாக இருப்பவர்கள் அநேக நேரங்களில் அன்பற்றவர்களாக இருக்கின்றனர். இவ்வுண்மையின் நிலையான வேதாகம உதாரணம் பரிசேயர் ஆவர்.

புதிய ஏற்பாட்டை வாசிக்கையில், இயேசு செய்த அநேக அற்புதங்களுக்கு பரிசேயர் எதிர்த்து நின்றதைக் கவனித்திருக்கிறீர்களா? குருடரின் கண்கள் திறக்கப்பட்டன, முடவர் நடந்தார்கள். ஆனால் தேவனுடைய இரக்கத்திற்காக ஒரு முறை கூட அந்தப் பரிசேயர்கள் பாராட்டை வெளிப்படுத்தவில்லை. மாறாக, ஓய்வு நாளின் சட்டங்களை இயேசு தகர்த்ததற்காக அவர்கள்

ஆட்சேபம் தெரிவித்தனர். கல்நெஞ்சம்கொண்ட பரிசேயன் கூட பிறவி குருடனுடைய கண்கள் திறந்தால் சந்தோஷப்படுவான் என்று நாம் நினைப்போம். ஆனால், இந்தச் சம்பவத்திலும் இன்னும் அநேகவற்றிலும், சட்டவாதம் அன்பை மேற்கொண்டது.

வெளியரங்கமான பாவத்தைவிட அப்போஸ்தலனாகிய பவுல் சட்டவாதத்தைக் குறித்து அதிக கலக்கமடைந்தார், ஏனெனில் அதைவிட இது தந்திரமிக்க மற்றும் ஆபத்தான பிரச்சனை. கலாத்தியாவில் உண்டான பிரச்சனையைக் குறித்துப் பவுல் கேள்விப்பட்டபோது, அவர் ஓர் இறையியல் ஆய்வை எழுதவில்லை. தன் சொந்த கையெழுத்தால் உடனே அவர்களுக்கு ஒரு கடிதத்தை அனுப்பினார் (கலாத்தியர் 6:11ஐ பார்க்கவும்) ஏனென்றால் அவர்களைக் குறித்து அவருக்கு அவ்வளவு ஆழ்ந்த கவலை.

மற்ற எல்லா சபைகளுக்கும் எழுதும் கடிதங்களிலும், அந்தச் சபைக்காக தேவனுக்கு முதலில் நன்றி கூறி பவுல் எழுதுவார். கொரிந்து திருச்சபையில் முறை தவறிய பாலுறவு, விபச்சாரம் மற்றும் கர்த்தருடைய பந்தியில் குடிபோதை இருந்தபோதிலும், கொரிந்தியருக்குத் தேவன் அளித்த கிருபைக்காக அவர் ஆண்டவருக்கு நன்றி சொல்லி, தம் கடிதத்தை துவங்குகிறார். ஆனால் கலாத்தியருக்கு எழுதும்போதோ, அவர் எந்த அளவிற்கு வருத்தப்பட்டாரென்றால், அவர்களுக்காக அவர் தேவனுக்கு நன்றி சொல்லவே இல்லை.

மாறாக, வெளிப்டையாக அவர், *"உங்களைக் கிறிஸ்துவின் கிருபையினாலே அழைத்தவரை நீங்கள் இவ்வளவு சீக்கிரமாய் விட்டு, வேறொரு சுவிசேஷத்திற்குத் திரும்புகிறதைப்பற்றி நான் ஆச்சரியப்படுகிறேன்"* என்று கூறுகிறார். (கலாத்தியர் 6:1ஐ பார்க்கவும்.)

சந்தேகமில்லாமல், சாத்தானின் தந்திரத்தைக் குறித்தும், அதின் செயல்பாடுகளைக் குறித்தும் நான் இந்த அதிகாரத்தில் முன்வைத்தவைகள் நம்மீது ஒரு குழப்பமான விளைவை

ஏற்படுத்தலாம். ஆனால் அடுத்த அதிகாரத்தில், சிலுவையின் வல்லமையை மறைக்க முற்படும் சாத்தானின் செயல்களிலிருந்து நாம் தேவனுடைய தீர்வுக்கு கடந்துபோக உள்ளோம் - இயேசு கிறிஸ்துவின் சிலுவையைக் குறித்த ஒரு வல்லமையான வெளிப்பாடு.

அதிகாரம் 9

தற்காலத்து பொல்லாத யுகத்திலிருந்து விடுதலை

நமக்குள் சிலுவை

கலாத்தியருக்குப் பவுல் எழுதின கடிதத்தில், சிலுவையின் தரிசனத்தை இழப்பதின் ஆபத்துக்கள் மட்டுமல்ல, அதற்கான தேவனுடைய தீர்வையும் அவர் வெளிப்படுத்துகிறார். இப்புதகத்தின் பகுதி 2க்கு ''என் வாழ்வில் சிலுவை'' என்று தலைப்பு கொடுத்துள்ளேன் ஏனென்றால் இதை வாசிக்கும்போது, இயேசு கல்வாரியில் சாதித்தது உங்களுக்குத் தனிப்பட்ட விதத்தில் சொந்தமாக்கப்பட வேண்டும். சிலுவையினால் தேவன் நமக்காக செய்தவற்றைக் குறித்து குதுகலம் அடைவது ஒரு பக்கம். ஆனால் சிலுவை நமக்குள் என்ன செய்ய வேண்டும் என்று தேவன் தீர்மானித்ததைப் பற்றிக்கொள்வது முற்றிலும் வித்தியாசமானது.

சிலுவை நமக்குள் என்ன செய்ய வேண்டும் என்பதை அநேக சபைகள் பேசுவதில்லை. கல்வாரியின் கிரியையை கவனியாதிருப்பதே சபையின் பெரும்பாலான பிரச்சனைகளுக்கும் காரணம் என்பதே எனது கருத்து ஏனென்றால் அது தனிப்பட்ட விதத்தில் நம்முடன் தொடர்புடையது. சிலுவை *நமக்குள்* சாதிக்க வேண்டியவைகளை நாம் ஏற்றுக்கொள்ளாவிட்டால், நெடுங்காலத்தில், சிலுவை *நமக்காக* சாதித்தவைகளின் பலனை நாம் அனுபவிக்க முடியாது. சிலுவை *நமக்காக* சாதித்த அனைத்து ஆசீர்வாதங்கள் மற்றும் பலன்களை பாதுகாக்கும் வல்லமையாக *நமக்குள்* இருக்கும் சிலுவை உள்ளது.

நமக்குள் செயலாற்றும் சிலுவையின் வல்லமையால் உண்டாகும் ஐந்து செயல்முறை விடுதலைகளைப் பவுல் கலாத்தியரில் முன் வைக்கிறார். அந்த வல்லமையினால் நாம் இவைகளிலிருந்து விடுதலை பெறுகிறோம்:

1. தற்காலத்து பொல்லாத யுகம்
2. நீதியைப் பெறும் வழிமுறையாக நியாயப்பிரமாணம்
3. சுயத்தின் கொடுங்கோன்மை
4. மாம்சம்
5. இறுதியாக, உலகம்

இந்த அதிகாரத்திலும், பின்வருபவைகளிலும், இவ்விடுதலைகளை ஒவ்வொன்றாக தியானிப்போம்.

இந்த யுகத்தின் முடிவு

நாம் விவாதிக்க இருக்கும் முதல் விடுதலை கலாத்தியர் 1:3-4ல் உள்ளது:

> *பிதாவாகிய தேவனாலும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக; அவர் நம்மை இப்பொழுதிருக்கிற பொல்லாத பிரபஞ்சத்தினின்று விடுவிக்கும்படி நம்முடைய பிதாவாகிய தேவனுடைய சித்தத்தின்படியே நம்முடைய பாவங்களுக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்.*

சிலுவையின் மூலமாய், தற்காலத்திலுள்ள பொல்லாத யுகத்திலிருந்து தேவன் நமக்கு விடுதலை அளித்துள்ளார். பெரும்பாலான விசுவாசிகள் இந்த விடுதலையின் அவசியத்தை குறித்து யோசித்ததுகூட இல்லை என்பது எனது யோசனை. நான் இதைச் சொல்வதற்குக் காரணம், பல காலமாக கிறிஸ்தவனாகவும்,

பிரசங்கிக்கிறவனாகவும் இருந்த நானே இதைக் குறித்து யோசித்ததில்லை.

தமிழ் மொழியில், மேற்காணும் சொற்றொடரை *"இப்பொழுதிருக்கிற பொல்லாத பிரபஞ்சம்"* என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. "பிரபஞ்சம்" என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தை, "ஏயான்" (*aion*) என்பதாகும். அதற்கு அடிப்படை அர்த்தம் யுகம் அல்லது ஒரு குறிப்பிட்ட காலக்கட்டம் என்பதே. பெரும்பாலான ஆங்கில மொழிபெயர்ப்புகள் இதை "இப்போதிருக்கிற பொல்லாத *யுகம்*" என்றே மொழிபெயர்க்கின்றன.

ஆகவே, பவுல் *"இப்போதிருக்கிற பொல்லாத யுகம்"* என்று பவுல் கூறும் குறிப்பிட்ட காலத்தில் நாம் வாழ்கிறோம் என்று வேதம் கூறுகிறது. இதற்கு முன் வேறே யுகங்கள் இருந்தன, இதற்குப் பின்னும் யுகங்கள் இருக்கும். ஆனால், அதற்கு அர்த்தம் என்னவென்றால், தற்போதைய யுகம் முடிவுக்கு வரப்போகிறது. தற்போதைய யுகம் முடிவுக்கு வரப்போகிறதென்பதை உணரும்போது, நான் தேவனுக்கு நன்றி கூறுகிறேன் - இருக்கும் நிலையில் இந்த யுகம் என்றென்றும் நிலைக்க வேண்டும் என்று நான் விரும்பமாட்டேன்.

இந்த யுகத்தின் முடிவைக் குறித்து, மத்தேயு 13ல் தனது உவமைகளில் இயேசு தெளிவாக பேசினார். இந்த உவமைகளை நாம் தீர்க்கமாக ஆராயப்போவதில்லை; "இந்த யுகத்தின் முடிவு" என்ற சொற்றொடரைப் பயன்படுத்தும் மூன்று வசனங்களை மட்டும் நான் மேற்கோள் காட்ட விரும்புகிறேன். இயேசு கோதுமை மற்றும் களையைக் குறித்து விளக்கின அவருடைய உவமையிலிருந்து முதல் இரண்டும் எடுக்கப்பட்டுள்ளன:

> *அவைகளை விதைக்கிற சத்துரு பிசாசு; **அறுப்பு உலகத்தின் முடிவு;** அறுக்கிறவர்கள் தேவதூதர்கள்.*
>
> *(மத்தேயு 13:39)*

ஆதலால் களைகளைச் சேர்த்து அக்கினியால் சுட்டெரிக்கிறதுபோல, இவ்வுலகத்தின் முடிவிலே நடக்கும். (மத்தேயு 13:40)

மூன்றாவது வலையைக் குறித்த இயேசுவின் உவமையிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது:

இப்படியே உலகத்தின் முடிவிலே நடக்கும். (மத்தேயு 13:49)

எனவே, நாம் வாழும் இந்த தற்காலத்தின் யுகம் முடிவுக்கு வரபோகிறது என்பதை நாம் மனதில்கொள்வது அவசியம். அது நிரந்தரமானதல்ல.

இந்த யுகத்தின் தேவன்

பவுல் இந்த யுகத்தை “பொல்லாதது” என்று அழைப்பதன் காரணம் 2 கொரிந்தியர் 4:3-4ல் விளக்கப்பட்டுள்ளது:

எங்கள் சுவிசேஷம் மறைபொருளாயிருந்தால், கெட்டுப்போகிறவர்களுக்கே அது மறைபொருளாய் இருக்கும். தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராத படிக்கு இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான்.

‘‘இந்த யுகத்தின் தேவன்’’ என்றழைக்கப்படும் வஞ்சகமான, தீங்கிழைக்கும் பொல்லாதவனால் இந்த யுகம் ஆளப்படுவதால், அதைப் பொல்லாத யுகம் என்று கூறுகிறோம். எண்ணிறந்த மக்களின் மனதைக் குருடாக்கினவன் சாத்தான். இந்த யுகம முடிவுக்கு வரக்கூடாதென்று சாத்தான் விரும்புகிறான் ஏனென்றால் இந்த யுகம் நீடிக்கும்வரை அவன் ஒரு ‘‘தேவன்.’’ இந்த யுகம் முடிவுக்கு

வந்துவிட்டால் அவன் இனி ஒரு தேவனாக இருக்க மாட்டான். எனவே இந்த யுகத்தின் முடிவைத் தாமதிக்க, தனது வல்லமையால் இயன்ற யாவற்றையும் அவன் செய்ய முற்படுகிறான்.

எதிரியின் இந்த தந்திரத்திற்கு, கிறிஸ்தவர்களாகிய நம்முடைய மறுமொழி என்னவாக இருக்க வேண்டும்? சத்தானுக்கு நேர் எதிரிடையாக, இந்த யுகத்தை முடிவுக்குக் கொண்டுவர தன்னால் இயன்ற எல்லாவற்றையும் சபையானது செய்ய வேண்டும். நாம் ஏற்கெனவே இங்கு விவாதித்ததுபோல, சாத்தான் தனது திட்டத்தைக் குறித்து கிறிஸ்தவர்களுடைய மனதைக் குருடாக்கி விடுவானானால், தேவன் எதிர்பார்ப்பது போல, சபையானது இந்த யுகத்தை முடிவுக்குக் கொண்டுவர செய்ய வேண்டியவைகளைச் செய்யாது.

இயேசு தனது சீஷர்களிடம், "*ராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும், அப்போது முடிவு வரும்*" (மத்தேயு 24:14) எனக்கூறினார். பூமியிலுள்ள அனைத்து ஜாதி மக்களுக்கும் தேவனுடைய இராஜ்யத்தின் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படும் வரை இந்த யுகம் முடிவுக்கு வராது. இவ்விதத்தில் சபையானது இந்தப் பொல்லாத யுகத்தை முடிவுக்கு கொண்டுவர செயல்படலாம்.

இம்முடிவை நோக்கி நாம் பிரயாசப்பட வேண்டும். ராஜ்யத்தை அறிவிப்பதையும், சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவை பிரசங்கிப்பதையும் தடுத்து நிறுத்த சாத்தான் தன்னை அர்ப்பணித்துள்ளான் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இனி வரும் யுகம்

எபிரெயர் 6:4-6ல், எபிரெயரின் எழுத்தாளர், தொடர்ச்சியான சில அனுபவங்களைப் பெற்ற மக்களைக் குறித்து எழுதுகிறார். 4ம் வசனம் துவங்கி அவர் எழுதுகிறது:

> *ஏனெனில், ஒருதரம் பிரகாசிப்பிக்கப்பட்டும், பரம ஈவை ருசிபார்த்தும், பரிசுத்த ஆவியைப் பெற்றும்,*

தேவனுடைய நல்வார்த்தையையும் இனிவரும் உலகத்தின் பெலன்களை ருசிப்பார்த்தும்...

பரிசுத்த ஆவியில் நாம் பங்கடைகிறவர்களானவுடன், இனி வரும் யுகத்தின் பெலன்களை ருசிப்பார்க்கிறோம் என்பதை கவனியுங்கள். பரிசுத்த ஆவியில் நமக்கு உண்டாகும் அனுபவத்தால், நாம் தற்காலத்து யுகத்தைவிட்டு உயர்த்தப்படுகிறோம். இனி வரும் யுகத்தில் இருக்கப்போவது எப்படி என்பதை நாம் சிறிதளவில் அனுபவிக்க ஆரம்பிக்கிறோம்.

இக்கருத்தை நான் இன்னும் விளக்கவேண்டும். 1 கொரிந்தியர் 15:44ல், இந்த யுகத்தில் நமக்கிருக்கும் சரீரம் "ஜென்ம" சரீரம் என்று பவுல் கூறுகிறார். அநேக வேத மொழிபெயர்ப்புகள் இதற்கு "இயற்கையான" சரீரம் என்ற வார்த்தையைப் பயன்படுத்துகின்றனர், சிலர் "ஜென்ம சரீரம்" என்று கூறுகின்றனர். ஆனால், கிரேக்கத்தில் "சூக்கிக்காஸ்" (*psuchikos)* என்ற வார்த்தை பயன்படுத்தப்படுகிறது, அதற்கு "ஆத்துமாவுக்கடுத்த" என்பதுதான் சரியான மொழிபெயர்ப்பு.

வேறு விதமாக சொன்னால், நம்முடைய ஆத்துமா தீர்மானிக்கிற பிரகாரம் செயல்படும் சரீரம்தான் நமக்கு உள்ளது. ஆகையால், என் ஆவி ஒன்றைச் செய்ய நினைத்தால், அது என் ஆத்துமாவின் வழியாக தான் செயலாற்ற முடியும்.

தாவீது தன் வாயினால் தேவனைத் துதிக்க விரும்புகிறான், அவன் ஆவி, அவன் ஆத்துமாவுடன் பேசி, "என் ஆத்துமாவே கர்த்தரைத் துதி" என்று கூறினது (சங்கீதம் 103:2). தாவீதின் ஆவி, அவனுடைய ஆத்துமாவின் ஒத்துழைப்பில்லாமல் தேவனைத் துதி செய்ய தொடங்க முடியவில்லை. ஏன்? ஏனென்றால் அவனுக்கு ஒரு ஆத்துமாவுக்கடுத்த மாம்சீக சரீரம்தான் இருந்தது. (இது கடந்த அதிகாரத்தில் நாம் "மாம்சீகம்" என்று பயனப்படுத்தின வார்த்தையின் சற்று வித்தியாசமான பயன்பாடு. அங்கே நாம் "மாம்சீகம்" என்று கூறியது, ஆவியின் வழிகாட்டுதலின்றி சுயமாய் செயல்படும்

ஆத்துமாவின் கிரியையைக் குறித்தது. ஆத்துமா, ஆவிக்குமேல் முதலிடம் கொடுக்காமல், ஆவி தன்னை நடத்த அனுமதிக்க வேண்டும்.)

இனி வரும் யுகத்தில் நமக்கு ஒரு ஆவிக்குரிய சரீரம் இருக்குமென்று பவுல் கூறுகிறார். ஆவிக்குரிய சரீரம் உடையவர்களாக இருப்பதென்றால், நம்முடைய ஆவி நேரடியாக நம்முடைய சரீரத்தை நடத்தும் என்பதே என்னுடைய புரிந்துகொள்ளுதல். நம்முடைய ஆத்துமாவின் வழியாக நாம் செயல்பட அவசியமில்லை. உதாரணத்திற்கு, நான் வேறொரு ஊருக்குப் பிரயாணம் செய்ய தீர்மானித்தால், அப்படியே செய்வேன். அந்தப் பிரயாணத்தின் நன்மை தீமைகளைக் குறித்து நான் என் ஆத்துமாவுடன் விவாதிக்க தேவையில்லை.

இங்கே முக்கிய குறிப்பு என்னவென்றால், நீங்கள் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைப் பெறும்போது, நீங்கள் இனி வரும் யுகத்தின் பலன்களை ருசிப்பார்க்கிறீர்கள். ஆவியானவர் தரும் வரத்தினாலே நீங்கள் அந்நிய பாஷைகளைப் பேசும்போது, உங்கள் ஆவி, நேரடியாக உங்கள் நாவை செயல்படுத்துகிறது. உங்கள் மனம் என்னும் குறுகிய பாதை வழியாக உங்கள் நாவு செல்ல அவசியம் இல்லை. அதனால்தான் அந்நிய பாஷைகளைப் பேசுவது மிக முக்கியமான அனுபவம். நம்மில் அநேகருக்கு, இனி வரும் யுகத்தில் வாழ்வது எப்படி என்பதை அறிந்துகொள்வதற்கு இதுவே முக்கியமான வழிகளில் ஒன்றாகும்.

நான் அந்நிய பாஷைகளைப் பேசும்போது என் மனதை நான் பயன்படுத்தாவிட்டாலும் (1 கொரிந்தியர் 14:14ஐ பார்க்கவும்) என் ஆத்துமா அதற்கு அனுமதி கொடுக்க வேண்டும். என் ஆத்துமா, “இல்லை, நான் அந்நிய பாஷையை பேச விரும்பவில்லை; நான் பேசுவது என்னவென்று புரியவில்லை” என்று கூறினால், என் ஆவி பேச முடியாது. ஆனால் என் ஆத்துமா, என் ஆவிக்கு அடிபணிந்திருக்குமானால், நான் எப்போது அந்நிய பாஷைகளைப்

பேச விரும்பினாலும், பேசலாம். நான் அந்நிய பாஷைகளைப் பேசும்போது, நான் என்ன சொல்கிறேன் என்பது என் மனதிற்கு தெரியாது. ஆனால் பரிசுத்த ஆவியானவர் அதை அருளினதினாலே, அது நல்லது என்பது எனக்குத் தெரியும். நீங்கள் ஆவியில் நிரம்பி பேசும்போது, உங்கள் நாவு செய்ய தீர்மானிக்கப்பட்டதைச் செய்கிறது: அது தேவனை மகிமைப்படுத்துகிறது. பரிசுத்த ஆவியானவர் உங்கள் நாவைக் கட்டுப்படுத்தும் அளவும் நீங்கள் ஒரு தவறான வார்த்தையையும் பேச மாட்டீர்கள்.

தற்காலத்தில் நாம் இனி வரும் யுகத்தை ருசிப்பார்க்கதான் முடியும். ஆனால் இனி வரும் யுகத்தில் வாழ்க்கை முறையே வித்தியாசமானது என்பதை நினைவில் கொள்ளலாம். நம்முடைய ஆவி நம்முடைய சரீரத்தை நேரடியாக கட்டுப்படுத்தப்போகிறது, நம்முடைய ஆத்துமாவும், மனதும் கட்டுப்படுத்துவதினால் நாம் தடைசெய்யப்பட மாட்டோம்.

இந்த யுகத்தின் கவலைகள்

மத்தேயு **13**ன் உவமைகளுக்கு நாம் திரும்பும்போது, தற்போதைய யுகத்திலுள்ள இன்னொரு பிரச்சனையை நாம் காண்கிறோம். மத்தேயு 13:22ல், இயேசு விதைக்கிறவனின் உவமையை விளக்கிக்கொண்டிருக்கிறார். அதைச் செய்கையில், முட்களின் நடுவே விழுந்த விதையைக் குறித்து அவர் பேசுகிறார்:

> *முள்ளுள்ள இடங்களில் விதைக்கப்பட்டவன் வசனத்தைக் கேட்கிறவனாயிருந்தும், உலகக்கவலையும் ஐசுவரியத்தின் மயக்கமும் வசனத்தை நெருக்கிப் போடுகிறதினால், அவனும் பலனற்றுப்போவான்.*

மேல் காணும் வசனம் *"உலகக்கவலை"* என்ற வார்த்தையைப் பயன்படுத்துகிறது - ஆனால் இங்குப் பயன்படுத்தப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையாகிய *"ஏயான்" (aion)* சரியாக மொழிபெயர்க்கப்பட்டால், *"யுகம்"* என்பதாகும். இந்த யுகத்திற்குரிய *"கவலைகள்"* என்னவென்று இயேசு கூறுகிறார். நாம் இந்த யுகத்திற்குரிய கவலைகளால்

முனைக்கப்படும்போது, அது தேவனுடைய வார்த்தையை நமக்குள் பயனற்றுப்போக செய்கிறது. ஏன் ? ஏனென்றால் உலகத்தின் விவகாரங்களில் அதிக முணைப்புடன் இடைபடுவது, தேவனுடைய வார்த்தையை நெருக்கி வெளியேற்றி விடும்.

ரோமர் 12:2ல் பவுல் எழுதுகிறார், *"நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு* (யுகத்திற்கு - கிரேக்கத்தில் "ஏயான்") *ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்."* இந்த யுகத்தின் மக்கள் சிந்திக்கும் பிரகாரம் நாம் சிந்திக்கக்கூடாது. நாம் வித்தியாசமாக சிந்திக்க கற்றுக்கொள்ள வேண்டும். இந்த யுகத்தின் மக்கள் பெரும்பாலும் *சுயத்தை மையமாகக்கொண்டவர்களாக* இருக்கின்றனர். இது உலகளாவிய உண்மை - கிட்டத்தட்ட எல்லோருக்கும் பொருந்தும்.

"இதிலிருந்து எனக்கு என்ன கிடைக்கும் ?" என்பதே இந்த யுகத்தின் மனநிலையாக உள்ளது. ஆனால் மனம் புதிதாக்கப்பட்டவர்கள், தேவன் என்ன விரும்புகிறார் என்பதை சிந்திக்கின்றனர். அவர்கள் வாழ்க்கை இனி மையமாக இருப்பதில்லை. அவர்கள் வாழ்க்கை தேவனை மையமாக கொண்டவைகளாக மாறிவிட்டது.

இறுதியான பகுப்பாய்வில், கிறிஸ்துவின் உண்மையான ஊழியக்காரர்களாக நாம் தற்போதைய யுகத்தை நேசிக்க முடியாது. அப்போஸ்தலனாகிய பவுல், தனது வாழ்க்கையின் முடிவை நெருங்குகையில், தீமோத்தேயுவுக்கு தனது இரண்டாவது நிரூபத்தை எழுதினார். அந்நேரத்தில், பவுல் சிறைச்சாலையில் விசாரனை நடைபெற காத்திருந்தார், மரண தண்டனையும் கொடுக்கப்படக்கூடிய நிலை இருந்தது. அவருக்கு உண்மையாக இருந்த சில உடன் ஊழியர்கள் இருந்தனர், அவர்களில் தேமா என்பவனை அவர் அதிகமாக நம்பியிருந்தார். ஆனால் அவனைக் குறித்துப் பவுல் இந்த

வருத்தம் மற்றும் துயர் நிறைந்த வாக்கியத்தை கூறுகிறார்: *"ஏனென்றால், தேமா இப்பிரபஞ்சத்தின்மேல்* (ஏயான் - யுகம்) *ஆசைவைத்து, என்னைவிட்டுப்பிரிந்து.. .போய்விட்டான்"* (2 தீமோத்தேயு 4:10).

தற்போதைய யுகத்தை நீங்கள் நேசித்தால், தேவனுக்கு உண்மையாய் இருக்க முடியாது. உங்களைச் சில கேள்விகள் கேட்கிறேன்: தற்கால யுகத்தை நீங்கள் எவ்விதத்திலும் நேசிக்கிறீர்களா**?** உங்கள் முட்டைகளை எல்லாம் இந்த யுகத்தின் கூடையில் வைத்துள்ளீர்களா**?** இந்த கேள்வியைச் சிந்திப்பது அவசியம், ஏனெனில் ஒரு நாள், அந்தக் கூடை கீழே விழும், அதிலுள்ள முட்டைகள் எல்லாம் நொறுங்கிப்போகும். தற்காலத்து யுகம் என்றென்றும் நிலைக்கும் என்பது போல் வாழ்கிறீர்களா**?**

இவைகள் ஆழமாக ஆராயும் கேள்விகள் ஆனால் தேவனுக்கு முன் இவைகளை உண்மையுடன் நாம் சந்திக்க வேண்டும். தற்காலத்துப் பொல்லாத யுகத்தின் ஈர்ப்பிலிருந்து விடுதலைபெற இயேசு கிறிஸ்துவின் சிலுவை நம்மை வலுவூட்டுகிறது. அந்த விடுதலையில் நாம் நடைபோடுகிறோமா**?**

அதிகாரம் 10

நியாயப்பிரமாணத்திலிருந்து விடுதலை

பவுல், *''தேவனுக்கென்று பிழைக்கும்படி நான் நியாயப்பிரமாணத்தினாலே நியாயப்பிரமாணத்திற்கு மரித்தேனே''* என்று எழுதுகிறார் (கலாத்தியர் 2:19). சிலுவை அளிக்கும் இரண்டாவது விடுதலை *நியாயப்பிரமாணத்திலிருந்து விடுதலை*. இந்த விடுதலையின் உண்மையைக் குறித்து கிறிஸ்தவர்களை அறிவுறுத்த நான் பல மணி நேரத்தை செலவிட்டுள்ளேன் ஆனால் எந்த அளவு வெற்றி பெற்றுள்ளேன் என்பது கேள்விதான். இந்தக் குறிப்புதான் கிறிஸ்தவர்களுக்கு புரிந்துகொள்வது மிக கடினம் என்பது எனது கருத்து.

நியாயப்பிரமாணத்திற்கு மரித்தல்

''நியாயப்பிரமாணத்தினாலே நியாயப்பிரமாணத்திற்கு மரித்தேனே.'' நியாயப்பிரமாணத்திலிருந்து விடுதலையை இவ்விதமாக பவுல் ஏன் விவரிக்கின்றார்? ஏனென்றால் மரண தண்டனையை நம்மேல் விதித்தது நியாயப்பிரமாணமே. நியாயப்பிரமாணம்தான் நம்மை மரணத்திற்கு உட்படுத்தியது. நாம் மரணத்திற்குள்ளாக்கப்பட்டபோது, நம்முடைய மரணம் நமக்கு நியாயப்பிரமாணத்தின் முடிவாயிற்று.

நியாயப்பிரமாணம் ஒருவருக்கு அளிக்கக்கூடிய இறுதி தண்டனை, அவர்களை மரணத்திற்குள்ளாக்குவதுதான். அது நடந்துவிட்டால், அந்த நபர்கள் நியாயப்பிரமாணத்தில் இருந்து விடுதலை பெற்றுவிட்டார்கள். அவர்கள் ஒரு கொலை செய்தாலும் சரி, அறுவது

கொலைகளைச் செய்திருந்தாலும் சரி. அவர்கள் தூக்கில் இடப்பட்டுவிட்டால், இனி நியாயப்பிரமாணம் அவர்களை ஒன்றும் செய்ய முடியாது.

நாம் ஏற்கெனவே விவாதித்ததுபோல், நியாயப்பிரமாணத்திலிருந்து விடுதலை பெறுவதற்கு ஒரே வழி மரணமே. ஆனால், தேவனுடைய அற்புதமான கிருபை மற்றும் இரக்கத்தால், நம்முடைய “தூக்கிலிடப்படுதல்” இருபது நூற்றாண்டுகளுக்கு முன் நடந்துவிட்டது. இயேசு மரித்தபோது, அவருக்குள் நாமும் மரித்தோம். (கலாத்தியர் 2:20ஐ பார்க்கவும்.) நாம் நியாயப்பிரமாணத்தின் கோரிக்கைகளிலிருந்து விடுதலைபெற, நியாயப்பிரமாணத்தின் இறுதி தண்டனையை இயேசு நம்முடைய சார்பாக செலுத்திவிட்டார்.

நியாயப்பிரமாணம் சிலுவையில் அறையப்பட்டதென்று கொலோசெயர் 2:14 நமக்குச் சொல்லுகிறது. நியாயப்பிரமாணம் சிலுவையைக் கடந்து செயலாற்ற முடியாது. அது உங்களைப் பின்தொடரலாம், உங்களை வேட்டையாடலாம், உங்களை குற்றஞ்சுமத்தலாம், உங்களைத் தண்டிக்கலாம். ஆனால் சிலுவை வரையில்தான் உங்களைப் பின்தொடர முடியும். நீங்கள் சிலுவையின் வழியாய் கடந்து வரும்போது, நியாயப்பிரமாணத்திலிருந்து விடுதலை பெறுகிறீர்கள். நீங்கள் நியாயப்பிரமாணத்திற்கு மரித்துவிட்டபடியால், இனி ஆக்கினைத்தீர்ப்பில்லை. இக்கருத்தை நாம் இந்த அதிகாரத்தில் பின்பு விவாதிக்கலாம்.

நியாயப்பிரமாணம் விசுவாசத்தினால் உண்டானதல்ல

தேவனுக்கென்று பிழைக்கும்படி, நியாயப்பிரமாணத்தினாலே நியாயப்பிரமாணத்திற்கு மரித்தேன் என்று பவுல் கூறுகிறார். பவுல் கூறினதை நீங்கள் பகுப்பாய்வு செய்தால், அர்த்தம் தெளிவாக உள்ளது: நீங்கள் நியாயப்பிரமாணத்திற்கென்று வாழ்ந்தால், தேவனுக்கென்று வாழவில்லை, நீங்கள் தேவனுக்கென்று வாழ்ந்தால், நியாயப்பிரமாணத்திற்கென்று வாழவில்லை. இரண்டு விதத்திலும்

அனுபவிக்க முடியாது; இரண்டையும் ஒன்றிணைக்க முடியாது. இது புதிய ஏற்பாட்டின் மிகத் தெளிவான மற்றும் திரும்ப திரும்ப கூறப்படும் வாக்கியங்களில் ஒன்று. அப்படியிருந்தும் அநேக கிறிஸ்தவர்கள் இந்தக் கோட்பாடை முற்றிலும் அறியாதவர்களாகவே இருக்கின்றனர்.

நியாயப்பிரமாணத்திற்கும் கிருபைக்கும் இடையே உள்ள உறவு, புதிய ஏற்பாட்டின் தீர்க்கமான பிரச்சனைகளில் மிக முக்கியமான ஒன்று என்பதை நான் இரட்சிக்கப்பட்ட உடனே காண ஆரம்பித்தேன். இப்பிரச்சனைக்குத் தீர்வு காண்பது அநேக மக்களுக்கு எளிதான ஒன்றல்ல. தேவன் சிந்திக்கும் பிரகாரம் சிந்திக்காததினாலே எழும் பிரச்சனை இது. இந்த விஷயம் மிகவும் சிக்கலானது அல்ல, ஆனால் நம்முடைய சிந்தனை முறையில் ஒரு பூரண சீர்படுத்துதல் அவசியமாக உள்ளது.

கலாத்தியர் மயக்கப்பட்டதினால், சாபத்திற்குள்ளானதைக் குறித்த வசனத்தின் இறுதியில், பவுல் கூறுகிறார்:

> *நியாயப்பிரமாணத்தினாலே ஒருவனும் தேவனிடத்தில் நீதிமானாகிறதில்லையென்பது வெளியரங்கமாயிருக்கிறது. ஏனெனில், விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே. நியாயப்பிரமாணமோ விசுவாசத்திற்குரியதல்ல; அவைகளைச் செய்கிற மனுஷனே அவைகளால் பிழைப்பான்.*
>
> (கலாத்தியர் 3:11-12)

மோசேயின் நியாயப்பிரமாணத்தை கைக்கொள்வதினால் நாம் நீதிமானாவதில்லை என்பதே பவுலின் பிரதான வாதம். ஆனால் அத்துடன் அவர் நிறுத்திக்கொள்வதில்லை. எந்தச் சட்டத்தையும் கைக்கொள்வதினால் நீங்கள் தேவனிடத்தில் நீதிமானாக முடியாது என்று அவர் கூறுகிறார். அது முற்றிலும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. அது சாத்தியமற்றது. முயற்சித்து உங்கள் நேரத்தை வீணடிக்காதீர்.

நியாயப்பிரமாணத்தை எல்லா நேரத்திலும் உங்களால் கைக்கொள்ள முடியும் என்றால் அப்போது நீங்கள் நீதிமானாக உள்ளீர்கள். ஆனால் நாம் ஏற்கெனவே விவாதித்ததுபோல, இயேசு ஒருவரைத் தவிர, வேறே யாரும் நியாயப்பிரமாணத்தை குறைவற்றதாய் கைக்கொண்டதில்லை. நீங்கள் நியாயப்பிரமாணத்தில் கொஞ்சத்தை சில நேரங்களில் கைக்கொண்டால், அதினால் நீதியை அடைவதில் உங்களுக்கு எந்தப் பலனுமில்லை. நீங்கள் முழு நியாயப்பிரமாணத்தையும், எல்ல நேரத்திலும் கைக்கொள்ள வேண்டும்.

“எப்படியெனில், ஒருவன் நியாயப்பிரமாணம் முழுவதையும் கைக்கொண்டிருந்தும், ஒன்றிலே தவறினால் எல்லாவற்றிலும் குற்றவாளியாயிருப்பான்” (யாக்கோபு 2:10) என்று எழுதும்போது, அப்போஸ்தலனாகிய யாக்கோபு இக்கருத்தை உறுதிப்படுத்துகிறார். எனவே உங்களுக்கு இரண்டு எதிரிடைகள்தான் உள்ளன: ஒன்று நீங்கள் நியாயப்பிரமாணத்தினால் நீதிமானாகிறீர்கள் அல்லது நீங்கள் விசுவாசத்தினால் நீதிமானாகிறீர்கள். நியாயப்பிரமாணம் அல்லது கிருபை. அவைகளைக் கலக்க முடியாது.

ஆபிரகாமின் குடும்பத்திலிருந்து ஒரு சிறிய உவமையைக்கொண்டு பவுல் இந்த சத்தியத்தை விளக்குகிறார். அவர் அடிமைப்பெண் ஆகாரின் மகனான இஸ்மவேலின் உதாரணத்தைக் கொடுக்கிறார். நியாயப்பிரமாணத்தினால் உற்பத்தியாகிறவைகளுக்கு இஸ்மவேல் ஒரு மாதிரியாக இருக்கிறார் ஏனென்றால் நியாயப்பிரமாணம் வழங்கப்பட்ட சீனாய் மலைக்கு ஆகார் ஒப்பிடப்படுகிறாள். சாராளோ, ஆவிக்குரியதற்கு உதாரணமாக இருக்கிறாள் ஏனென்றால் அவள் கிருபையின் பிள்ளையாக இருக்கும் ஈசாக்கை இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் கர்ப்பம் தரித்து, பெற்றெடுத்தாள். (கலாத்தியர் 4:21-31ஐ பார்க்கவும்.)

ஈசாக்கு வந்தவுடன் இஸ்மவேல் வெளியேறவேண்டியதாயிற்று என்பதைப் பவுல் சுட்டிக் காண்பிக்கிறார். அவர்கள் ஒரே குடும்பத்தில் இணைந்திருக்க முடியவில்லை. ஆதியாகமம் 21:10 மேற்கொள் காட்டி

அவர், *"அடிமையானவளையும், அவளுடைய மகனையும் புறம்பே தள்ளு"* (கலாத்தியர் 4:30) என்று அவர் எழுதுகிறார். ஆபிரகாமினிடத்தில் சாராள் இந்த வேண்டுகோளை வைத்தாள், அதை நிறைவேற்றும்படி தேவன் அபிரகாமிடத்தில் கூறினார்.

இந்த வசனத்திலிருந்து இன்னும் ஒரு உட்குறிப்பை கவனியுங்கள்: நீங்கள் இஸ்மவேலை மட்டுமல்ல, ஆகாரையும் புறம்பாக்க வேண்டும். உங்கள் வீட்டில் யாரை வைத்துக்கொள்ள போகிறீர்கள் என்பதை நீங்கள் தேர்வு செய்ய வேண்டும். இஸ்மவேலை வைத்துக்கொள்ள போகிறீர்களா, அல்லது இயற்கைக்கு அப்பாற்பட்ட கிருபையின் பிள்ளையாகிய ஈசாக்குக்கு இடம் உண்டாக்கப்போகிறீர்களா?

தன் சொந்த ஞானத்தாலும் பெலத்தினாலும் ஆபிரகாம் பெறக்கூடிய மிகச் சிறந்தது இஸ்மவேல்தான் - ஆனால் விளைவு போதுமானது அல்ல. அதேபோல், தேவனுடைய நோக்கங்களை நிறைவேற்ற, நம்முடைய ஞானத்திலும், பெலத்திலும் நாம் செய்யக்கூடிய மிகச் சிறந்தது ஒருபோதும் போதுமானாதாக இருக்காது. நாம் தொடர்ந்து முயற்சி செய்யலாம், வேர்வை சிந்தலாம், வேலை செய்யலாம், ஜெபிக்கவும் செய்யலாம். ஆனால், முடிவில் அது போதுமானதாக இருக்காது.

கிருபை வேண்டுமானால் நீங்கள் நியாயப்பிரமாணத்திற்கு வேண்டாம் என்று சொல்ல வேண்டும். நம்மில் அநேகர் இரண்டையும் பற்றிக்கொள்ள விரும்புகிறோம் - கொஞ்சம் கிருபை, கொஞ்சம் நியாயப்பிரமாணம். ஆனால் அது கிரியை செய்யாது என்று தேவன் கூறுகிறார். அவர் ஒரு கலப்படத்தை ஏற்றுக்கொள்ள மாட்டார். நீங்கள் கிருபையை முழுமையாக நம்ப முடியாவிட்டால், நீங்கள் கிருபையை நம்பவே இல்லை என்றுதான் அர்த்தம். கிருபையுடன் நியாயப்பிரமாணத்தை நீங்கள் இணைப்பொருளாக வைக்கவேண்டுமானால், நீங்கள் கிருபையை உண்மையில் அனுபவிக்கவில்லை.

மரணதண்டனை நிறைவேற்றப்பட வேண்டும்

நியாயப்பிரமாணத்திலிருந்து இந்த விடுதலை நமக்கு எப்படி கிடைக்கிறதென்று ரோமர் 6ல் பவுல் விவரிக்கிறார்:

> *நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ்செய்யாதபடிக்கு, பாவசரீரம் ஒழிந்துபோகும்பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம். மரித்தவன் பாவத்துக்கு நீங்கி விடுதலையாக்கப்பட்டிருக்கிறானே.*
>
> (ரோமர் 6:6-7)

இயேசு கிறிஸ்து சிலுவையில் மரித்தபோது நம்முடைய *"பழைய மனிதன்"* அவருடன் அறையப்பட்டான். அது மாற்றப்பட முடியாத ஒரு சரித்திர உண்மை. ஆனால், அதை அறிந்து, விசுவாசிப்பது *நம்மை* மாற்றும். நாம் உண்மைகளைக் கையாள்கிறோம். உலகத்தின் வேறெந்த மதத்தைப்போலவும் அல்லாமல், இராஜ்யத்தின் சுவிசேஷம் சரித்திர உண்மைகளை அடிப்படையாக கொண்டுள்ளது.

சரித்திரத்தில் நடந்த சம்பவங்களை முற்றிலும் அடிப்படையாக கொண்டுள்ள வேறெந்த மதத்தையும் நான் உலகத்தில் அறிந்ததில்லை. மற்ற மதங்கள், சரித்திரத்தின் எந்தக் குறிப்பிட்ட காலத்துடன் இணைக்கப்படாத அமைப்புகள், கோட்பாடுகள் அல்லது வெளிப்பாடுகளாக உள்ளன. ஆனால் சுவிசேஷம் இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை, மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் என்னும் சரித்திர உண்மைகளை அடிப்படையாக கொண்டுள்ளது. (உதாரணத்திற்கு 1 கொரிந்தியர் 15:3-7ஐப் பாருங்கள்.) இது முக்கியமானது, ஏனென்றால் கிறிஸ்துவுடன் நிகழ்ந்த நம்முடைய மரணம் ஒரு சரித்திர சம்பவத்தைச் சார்ந்தது - இயேசுவின் மரணம். *"பழைய மனிதன்"* என்று பவுல் அழைக்கும் அந்தப் பழைய சுபாவம் - ஆதாமின் சுபாவம், கலகக்காரன் - மரணம் அடையும் வரைக்கும், நாம் பாவத்திற்கு அடிமைகளாக இருப்போம்.

நாம் ஆதாமின் சந்ததியாக இருப்பதினால் நாம் சுதந்தரித்த சுபாவம்தான் இந்த பழைய மனிதன் - அல்லது மாம்சம். ஆதாம் கலகம் செய்யும் முன்னே பிள்ளைகளைப் பெற்றெடுக்கவில்லை. ஆகவே, ஆதாமின் சந்ததியார் யாவருக்குள்ளும் ஒரு கலகக்காரனின் தன்மை உள்ளது. இந்தச் சிக்கலுக்கு ஒரே தீர்வுதான் உண்டு, பழைய மனிதனைக் கையாள ஒரே விதம்தான் உண்டு, ஏனென்றால் அவன் உள்ளத்தினால் கலகக்காரன். அது என்ன? தேவனுடைய அந்தத் தீர்வு *மரணதண்டனையை நிறைவேற்றுதல்* ஆகும்.

தேவன் பழைய மனிதனை மேம்படுத்த முற்படுவதில்லை. அவனை அவர் சபைக்கு அனுப்புவதில்லை. அவனுக்குப் பொன்னான சட்டத்தை கற்பிப்பதுமில்லை. அவனை மரணத்திற்கு உட்படுத்துகிறார். நற்செய்தி என்னவென்றால், தேவனுடைய இரக்கத்தினாலே, இந்த மரணம், கிறிஸ்து சிலுவையில் மரித்தபோது நிறைவேறியது.

பாவத்திலிருந்து நீதியான விடுதலை

''மரித்தவன் பாவத்துக்கு நீங்கி விடுதலையாக்கப் பட்டிருக்கிறான்'' என்று பவுல் எழுதும்போது தன் கருத்தை நிறைவுக்குக் கொண்டு வருகிறார். ரோமர் 6:7ன் இந்த மொழிபெயர்ப்பு கிட்டத்தட்ட வேதத்தின் எல்லாப் பதிப்பிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் கிரேக்க உரையிலிருந்து இதை அப்படியே மொழியாக்கம் செய்தால், ''...பாவத்திலிருந்து நீதியாக்கப்பட்டிருக்கிறான்'' என்று வாசிக்க வேண்டும். இறுதி தண்டனையை செலுத்தின உடன் நீதிமானாக்கப்பட்டிருப்பதால், நாம் விடுதலை பெறுகிறோம்.

நாம் மரித்துவிட்டால், நம்மிடம் சொல்வதற்கு நியாயப்பிரமாணத்திற்கு ஒன்றுமில்லை. நமக்கு விரோதமாக அது இனி ஒன்றும் செய்ய முடியாது. எனவே நியாயப்பிரமாணத்தின் ஆதிக்கத்திலிருந்து வெளிவர, மரணம் ஒன்றே வழியாக உள்ளது. பாவத்தின் ஆதிக்கத்திலிருந்து வெளிவரவும் அதுவே ஒரே வழி.

இந்த சத்தியத்தை ரோமர் 6:14ல் பவுல் விரிவுரை அளிக்கிறார்:

“நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால், பாவம் உங்களை மேற்கொள்ளமாட்டாது.” நீங்கள் நியாயப்பிரமாணத்தின் கீழ் இருக்கிறீர்களா அல்லது கிருபையின் கீழ் உள்ளீர்களா? நீங்கள் இரண்டின் கீழும் இருக்க முடியாது. நீங்கள் நியாயப்பிரமாணத்தின் கீழ் இருந்தால், கிருபையின் கீழ் இல்லை. நீங்கள் கிருபையின் கீழ் இருந்தால், நியாயப்பிரமாணத்தின் கீழ் இல்லை. நீங்கள் நியாயப்பிரமாணத்தின் கீழ் இருந்தால், பாவம் உங்களை ஆளுகை *செய்யும்* என்று 14ம் வசனத்தில் பவுல் தெளிவாக சுட்டி காண்பிக்கிறார். இந்த உணர்வு மக்களை வியப்படையச் செய்கிறது, ஆனால் அது செயலாற்றும் விதம் அப்படிதான்.

பூரண விடுதலை

ரோமர் 7:5ல், ஏன் அப்படி இருக்கிறதென்று பவுல் விளக்குகிறார்:

> *நாம் மாம்சத்திற்கு உட்பட்டிருந்த காலத்தில் நியாயப்பிரமாணத்தினாலே தோன்றிய பாவ இச்சைகள் மரணத்திற்கு ஏதுவான கனிகளைக் கொடுக்கத்தக்கதாக நம்முடைய அவயவங்களிலே பெலன்செய்தது.*

“நியாயப்பிரமாணத்தினாலே தோன்றிய பாவ இச்சைகள்... நம்முடைய அவயவங்களிலே பெலன்செய்தது” என்பதை கவனியுங்கள். பவுல் இதைக் குறித்து ரோமர் 7:7-8ல் தனிப்பட்ட முறையில் பேசுகிறார். அங்கே, “*இச்சியாதிருப்பாயாக* என்ற கட்டளையைச் சந்திக்கும்வரை இச்சை என்பது என்னவென்று எனக்குத் தெரியாது. ஆனால் கட்டளை பிறந்தவுடனே இச்சை எனக்குள் எழும்பிற்று.”

எல்லோருக்கும் இந்த அனுபவம் உண்டு. ஏதோ ஒன்றைச் செய்ய வேண்டாம் என்று நமக்குச் சொல்லப்பட்டவுடன், அப்போதுதான் அதைச் செய்ய வேண்டும் என்ற வாஞ்சை நம்மீது ஆதிக்கம் செலுத்த ஆரம்பிக்கிறது. நம்முடைய சுய முயற்சிகளை நாம் சார்ந்திருக்கும்

வரை அந்தப் பாவம் நியாயப்பிரமாணத்தினாலே தூண்டப்படுகிறது.

அப்படியிருந்தும் பவுல் ரோமர் 7:6ல் கூறுகிறார்:

> *இப்பொழுதோ நாம் பழைமையான எழுத்தின்படியல்ல, புதுமையான ஆவியின்படி ஊழியஞ்செய்யத்தக்கதாக, நம்மைக் கட்டியிருந்த நியாயப்பிரமாணத்துக்கு நாம் மரித்தவர்களாகி, அதினின்று விடுதலையாக்கப்பட்டிருக்கிறோம்.*

இங்குக் குறிப்பிடப்பட்டுள்ளதைக் குறித்து தெளிவுள்ளவர்களாக இருப்போம். பவுல் இங்கு அரசாங்க சட்டங்களைக் குறித்துப் பேசவில்லை. நியாயப்பிரமாணத்திலிருந்து விடுதலை என்றால், நாம் அரசாங்கத்தின் சட்டங்களை முறிக்கலாம் என்று அர்த்தமல்ல. உண்மையைச் சொன்னால், கிறிஸ்தவர்கள் சட்டத்தை கைக்கொள்ளும் குடிமக்களாய் இருக்க வேண்டுமென்று பவுல் கூறுகிறார். மாறாக, இவ்வசனத்தில், தேவனிடம் நீதியைப் பெறுவதற்கு நியாயப்பிரமாணத்தை ஒரு வழிமுறையாக பயன்படுத்துவதைக் குறித்துப் பவுல் பேசுகிறார். அதுவே இந்த முழு அதிகாரத்தில் கருப்பொருள் - நாம் கண்டடைந்த அற்புதமான சத்தியம் இதோ: நியாயப்பிரமாணத்திலிருந்து சிலுவை நமக்குப் பூரண விடுதலை அளிக்கிறது.

மரணம் நம்மை விடுவிக்கிறது

ரோமர் 7ன் ஆரம்ப வசனங்களில், நியாயப்பிரமாணத்திலிருந்து நாம் பெறும் விடுதலையை விவரிக்க, பவுல் திருமணமான ஒரு பெண்ணின் உதாரணத்தைப் பயன்படுத்துகிறார். அவள் கணவன் உயிரோடிருக்கும்போது, வேறு ஒருவனை அவள் திருமணம் செய்தால், அவள் விபச்சாரியாவாள். ஆனால் அவள் கணவன் மரித்துவிட்டால், அவள் வேறொருவனைத் திருமணம் செய்ய விடுதலை பெற்றவளாவாள்.

இதை நமக்குப் பயன்பாட்டில் பவுல் கொண்டுவரும் விதம் என்னவென்றால், நாம் முதல் மணமுடித்த அந்தக் கணவன், ஜென்ம சுபாவமாகும். நியாயப்பிரமாணத்தின் கீழ் வருவது, ஒரு திருமண சடங்கைப்போல், ஜென்ம சுபாவத்துடன் நம்மைக் கட்டி வைக்கிறது.

நியாயப்பிரமாணம் மாம்சத்தின் மூலம் கிரியை செய்வதால், நியாயப்பிரமாணத்தின் உடன்படிக்கை, அதற்குக் கீழ்ப்படிவதற்கு நம்மைச் சுய திறமையைச் சார்ந்துக்கொள்ள நிற்பந்திக்கிறது. எனவே, நாம் நியாயப்பிரமாணத்தின் கீழ் இருந்தால், நாம் மாம்சத்துடன் திருமணம் செய்துள்ளோம். ஜென்ம சுபாவம் உயிருடன் இருக்கும்வரை, நாம் நியாயப்பிரமாணத்துடன் கட்டப்பட்டிருக்கிறோம், வேறொன்றைத் திருமணம் செய்ய முடியாது. ஆனால் சிலுவையில் நம்முடைய மாம்சீக சுபாவம் மரணத்திற்குட்பட்டது. எனவே நாம் இப்போது இன்னொருவரை மணந்துகொள்ள விடுதலை பெற்றுள்ளோம் - அவர்தான் உயிர்த்தெழுந்த கிறிஸ்து.

நாம் மாம்சத்தைத் திருமணம் செய்தபோது, நாம் மாம்சத்தின் விளைவுகளைப் பெற்றெடுத்தோம். இப்போதோ நாம் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவை மணந்துகொண்டபடியால், நாம் பெற்றெடுப்பது ஆவியின் விளைவுகளாக இருக்கின்றன.

2 கொரிந்தியர் 3:3ல் பவுல் இவ்வாக்கியத்தைக் கூறுகிறார்:

> *ஏனெனில் நீங்கள் எங்கள் ஊழியத்தினால் உண்டாகிய கிறிஸ்துவின் நிருபமாயிருக்கிறீர்கள் என்று வெளியரங்கமாயிருக்கிறது; அது மையினாலல்ல, ஜீவனுள்ள தேவனுடைய ஆவியினாலும்; கற்பலகைகளிலல்ல, இருதயங்களாகிய சதையான பலகைகளிலேயும் எழுதப்பட்டிருக்கிறது.*

பவுலால் சொல்ல முடியும்: "என் இறையியலை நீங்கள் அறிய விரும்பினால் கொரிந்துக்குப் போங்கள். அதை நீங்கள் அங்கு நான் ஊழியம் செய்தவர்களுடைய வாழ்வில் எழுதப்பட்டிருப்பதைக்

காண்பீர்கள். கொரிந்துவில், ஒருகாலத்தில் விபச்சாரிகளாக, வேசிகளாக, விபச்சார தரகர்களாக, ஓரினச்சேர்க்கையாளர்களாக, குடிகாரர்களாக மற்றும் பணம் பறிப்பவர்களாக இருந்தவர்கள், இப்போது தெய்வபக்தியுள்ள வாழ்க்கை வாழ்வதைக் காண்பீர்கள். அதுதான் என் இறையியல். அவர்கள்தான் என் நிருபங்கள்."

நம்முடைய இருதயங்களில் எழுதப்பட்டது

2 கொரிந்தியர் 3:3ல், நியாயப்பிரமாணம் மற்றும் கிருபைக்குள்ள வித்தியாசத்தின் மையத்தைத் தொடுகிறார். "இதைச் செய்," "இதைச் செய்யாதே" என்று கூறும் புறம்பான கற்பலகைகளைக் கொண்டது நியாயப்பிரமாணம். அதற்கு நாம் "சரி. இதைச் செய்கிறேன், இதைச் செய்யமாட்டேன்" என்று பதில் கூறுகிறோம். ஆனால், தேவனுடைய சட்டத்திற்கு அடிப்பணியாத ஒரு கலகக்காரன் நமக்குள் இருப்பதால் நாம் தவறாமல் தோற்றுப்போகிறோம்.

மாறாக, கிருபை என்பது முற்றிலும் வித்தியாசமானது. கிருபை என்பது நமக்குப் புறம்பே ஒன்றைத் தூக்கிப்பிடித்து, இதன்படி செய் என்று கூறுவதல்ல. அதற்குப் பதில், நம்மில் கிரியை செய்கின்ற பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால், கிருபையானது தேவனுடைய சட்டங்களை நம்முடைய இருதயங்களில் எழுதுகிறது. நம்முடைய இருதயத்தில் ஒன்றிருக்கும்போது, அப்படிதான் நாம் வாழ்வோம். நம்முடைய இருதயத்தை ''எல்லாக் காவலோடும்'' காத்துக்கொள்ளும்படி சாலமோன் கூறுகிறார், ஏனென்றால் ஜீவனுக்கேதுவானது எல்லாம் அதினின்று புறப்படுகிறது. (நீதிமொழிகள் 4:23ஐ பார்க்கவும்.)

இப்புத்தகத்தில் நான் அறிவுறுத்த விரும்பும் யாவையும் நான் உங்கள் இருதயங்களில் நேரடியாக எழுத முடியாது. அதை நான் அச்சிடத்தான் முடியும் - அது உங்களுக்குப் புறம்பான ஒன்று. ஒரு வேளை நீங்கள் அதைப் புரிந்துகொள்ளலாம் அல்லது புரிந்துகொள்ளாமலும் போகலாம். ஆனால், பரிசுத்த ஆவியானவரோ இந்தச் செய்தியை உங்கள் வாழ்வை மாற்றும் விதத்தில் இந்தச்

செய்தியை உங்கள் இருதயத்தில் எழுதக்கூடியவராக இருக்கிறார். அதேபோல், நம்முடைய சுய முயற்சியினாலோ, இறையியலாலோ, ஊழியத்தினாலோஒரு நபரையும் மாற்ற முடியாது. ஆனால் பரிசுத்த ஆவியானவர் கிரியை செய்வாரானால், நாம் யாருக்கு ஊழியம் செய்கிறோமோ, அவர்களுடைய இருதயத்தில் அவர் எழுத, அவர்கள் மாற்றப்படுவார்கள். அதுதான் வித்தியாசம்; நியாயப்பிரமாணம் புறம்பானது, கிருபை உள்ளானது.

ரோமர் **8:14**ல் பவுல் எழுதுகிறார், *"மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்."* நீங்கள் மறுபிறப்பு அடைந்துவிட்டால், தேவனுடைய முதிற்சியடைந்த குமாரனாகவோ, குமாரத்தியாகவோ மாறுவதற்கு ஒரே வழி பரிசுத்த ஆவியினாலே நடத்தப்படுவதுதான். முதிற்சிக்கு வேறெந்த பாதையும் இல்லை.

வரைப்படமா, வழிகாட்டியா?

பின் வருவது, பரிசுத்த ஆவியானவர் நம் வாழ்வில் எப்படி கிரியை செய்கிறார் என்பதைக் குறித்த ஒரு விளக்கப்படம். தேவன் உங்களை பார்த்துச் சொல்கிறார், ''நான் உன்னை ஒரு பயணத்திற்கு அனுப்புகிறேன், உனக்கு இரண்டு தேர்வுகள் உள்ளன: குறைவற்ற ஒரு வரைப்படத்தை நீ பெறலாம் அல்லது தனிப்பட்ட ஒரு வழிகாட்டியைப் பெறலாம்."

வரைப்படம் நியாயப்பிரமாணம்; தனிப்பட்ட வழிகாட்டி பரிசுத்த ஆவியானவர். நீங்கல் இளைமையான, பலமான, ஆரோக்கியமான ஒரு நபர், பல்கலைக்கழகத்திலிருந்து இரண்டு பட்டங்களைப் பெற்றவர். எனவே நீங்கள் தேவனைப் பார்த்து சொல்கிறீர்கள், "வரைப்படத்தை எனக்குத் தாரும், வரைப்படங்களை வாசிக்க எனக்குத் தெரியும்; நான் வந்துவிடுவேன்."

இரண்டு நாட்கள் கழித்து, நடு இரவில் கடுமையான மழை பெய்கிறது, காரிருளில், நீங்கள் ஒரு செங்குத்தான சரிவின் விளிம்பில்

நிற்கிறீர்கள். வடக்கு, கிழக்கு, தெற்கு அல்லது மேற்கு, எந்தத் திசையை நோக்கி நிற்கிறோம் என்று தெரியவில்லை. அந்த அவல நிலையில், "நான் உதவி செய்யட்டுமா?" என்று ஒரு மென்மையான குரல் கேட்கிறது.

அது பரிசுத்த ஆவியானவரின் குரல், நீங்கள் உடனே "பரிசுத்த ஆவியானவரே, நீர் எனக்குத் தேவை. உதவி செய்யும்!" என்று கூறுகிறீர்கள்.

பரிசுத்த ஆவியானவர் உங்களை அந்தக் குழப்பத்திலிருந்து வெளியே நடத்துகிறார். நீங்கள் சாலைக்கு வருகிறீர்கள், பொழுது விடிகிறது, சூரியன் உதிக்கிறது, நீங்கள் யோசிக்கிறீர்கள், "நான் ஒரு முட்டாள். இவ்வளவு பயப்பட தேவையில்லை. மறுபடியும் வரைப்படத்தை பார்க்கலாம்."

நீங்கள் மறுபடியும் வரைப்படத்தை விரிக்கிறீர்கள், அப்படிச் செய்யும்போது, இனி உங்கள் வழிகாட்டி அங்கே இல்லை. எனவே, வரைப்படத்தைக்கொண்டு முன்னேறுகிறீர்கள், சில நாட்களுக்குள் சேற்றில் சிக்கிக்கொள்கிறீர்கள். நீங்கள் எடுக்கும் ஒவ்வொரு அடியும் உங்களை இன்னும் ஆழமாக மூழ்கடிக்கிறது. நீங்கள் சொல்கிறீர்கள், *இப்போது நான் என்ன செய்யட்டும்? நான் திரும்ப வழிகாட்டியிடம் கேட்க முடியாது.*

ஆனால் அவரோ உங்களிடம் திரும்பி, "நான் மறுபடியும் உதவட்டுமா" என்று கூறுகிறார்.

இது உண்மையில் கிறிஸ்தவ வாழ்வின் கதை. எத்தனை முறை வரைப்படத்திற்குத் திரும்புகிறோம் - சட்டங்கள் மற்றும் கோட்பாடுகளைக் கொண்ட நியாயப்பிரமாணம் - வழிகாட்டியை எப்போதுதான் பெறப்போகிறோம்? நியாயப்பிரமாணத்தை பின்பற்றாவிட்டால் தவறானதைச் செய்வோம் என்ற பயம் உங்களுக்கு இருக்கலாம். ஆனால் ஒரு வாக்குத்தத்தத்தை குறித்து நான் உங்களுக்கு உறுதியளிக்கிறேன்: *தவறானதை செய்ய பரிசுத்த*

ஆவியானவர் உங்களை ஒருபோதும் நடத்த மாட்டார். நீங்கள் உண்மையிலேயே பரிசுத்த ஆவியானவரால் நடத்தப்பட்டால், எப்போதும் சரியானதையே செய்வீர்கள்.

சிலுவையில் கிறிஸ்துவின் மரணத்தினால், தேவன் நியாயப்பிரமாணத்தின் கடமைகளிலிருந்து நம்மைத் தப்புவிக்கிறார். நம்முடைய பழைய மனிதன் கிறிஸ்துவுடன் அறையப்பட்டான் - இது ஒரு சரித்திர உண்மை. *"தேவனுக்கென்று பிழைக்கும்படி நான் நியாயப்பிரமாணத்தினாலே நியாயப்பிரமாணத்திற்கு மரித்தேனே"* (கலாத்தியர் 2:19) என்று கூறும்போது, பவுல் இதைக் குறிப்பிட்ட மற்றும் தனிப்பட்ட ஒன்றாக்குகிறார். சிலுவையினால் நாம் நியாயப்பிரமாணத்திலிருந்து விடுதலை பெற்றபடியால், பவுலின் வாக்கியத்தை எடுத்து, அதை நம்முடைய அறிக்கையினால், நமக்குரியதாய் மாற்ற நமக்கு விடுதலை உண்டு.

அடுத்த அதிகாரத்திற்குச் செல்லும் முன், இந்த வல்லமையான வாக்கியத்தை நாம் சத்தமாக அறிக்கை செய்யலாம்: "தேவனுக்கென்று பிழைக்கும்படி நான் நியாயப்பிரமாணத்தினாலே நியாயப்பிரமாணத்திற்கு மரித்தேன்."

இப்போது ஆழ்ந்த பெருமூச்சு விட்டு, "பிதாவாகிய தேவனே, உமக்கு நன்றி" என்று கூறுங்கள்.

அதிகாரம் 11

சுயத்திலிருந்து விடுதலை

கடந்த இரண்டு அதிகாரங்களில், சிலுவை நம்மைத் தற்காலத்து பொல்லாத யுகம் மற்றும் நியாயப்பிரமாணத்தின் கோரிக்கைகளில் இருந்து எப்படி விடுதலை செய்கிறதென்று கண்டோம். கலாத்தியர் 2ல் நாம் ஆராயும் பகுதியில், உடனே பவுல் சிலுவையினால் உண்டாகும் மூன்றாம் விடுதலையை முன்வைக்கிறார். இது மகத்துவமான ஒன்று. அது *நம்முடைய "சுயத்திலிருந்து" விடுதலை.*

> *கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்.* (கலாத்தியர் 2:20)

நம்முடைய பழைய தற்பெருமையின் கொடுங்கோன்மைகளிலிருந்து சிலுவை நம்மை விடுவிக்கிறது. ''நான்'' என்பதற்கான லத்தீன் வார்த்தைதான் *''தற்பெருமை.''* தற்பெருமையின் கொடுங்கோன்மையிலிருந்து விடுதலை பெறுவது, கலாத்தியரில் கூறப்பட்டுள்ள எந்த விடுதலைக்கு சமமான முக்கியத்துவம் பெற்றது. கிரேக்கத்தில், *''நான் அறையப்பட்டேன்''* என்று மூற்று காலம் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதன் அர்த்தம் என்னவென்றால், கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டபோது நம்முடைய மரணம்

நிகழ்ந்ததென்றாலும், அது எப்போதோ சரித்திரத்தில் நடந்த ஒன்று மட்டுமல்ல. மாறாக அது தொடர்ந்து நம்முடைய நிலையாக இருக்கும் ஒன்றைக் குறிக்கின்றது. நான் நிரந்தரமாக மற்றும் தொடர்ச்சியாக கிறிஸ்துவுடன் அறையப்பட்டிருக்கிறேன்; "நான்" என்பதன் முடிவிற்கு வந்துவிட்டேன்.

இலட்சியம், பெருமை, மற்றும் சுயநலம்

நம்முடைய சுயத்தின் முடிவிற்கு நம்மைக்கொண்டுவர, சில நேரங்களில் தேவன் மிகக் கடினமான பாதையைப் பயன்படுத்த வேண்டியதாக இருக்கிறதென்பதை, கிறிஸ்துவில் உங்கள் சகோதர சகோதரிகளுடன் நீங்களும் கண்டடைந்திருக்கலாம். இதை நாம் முன்பு விவாதித்திருக்கிறோம். பலரைப் போல நீங்களும் கலக்கமும் வருத்தமுமடைந்து, "தேவனே என்னுடன் என்ன செய்கிறீர்?" என்று தேவனோடு முறையிட்டிருக்கலாம். இதற்குப் பதில் மிக எளியது: கலாத்தியர் 2:20 நம்முடைய வாழ்க்கையில் மெய் என்று விளங்கும் இடத்திற்கு அவர் நம்மைக் கூட்டிக்கொண்டு வருகிறர். நான் கிறிஸ்துவுடன் அறையப்பட்டுவிட்டால் "நான்" என்பதின் முடிவுக்கு வந்துவிட்டோம்.

நம்முடைய நோக்கங்களுக்காக, இந்தப் புத்தகத்தில் "நான்" என்பதைப் *பெருமை* (அதாவது, அகந்தை அல்லது ஆணவம் என்ற அர்த்தத்தில்), *தன்னலம், இலட்சியம்* மற்றும் *சுயநலம்* என்று அர்த்தம் சொல்வேன். கிறிஸ்தவ ஊழியத்தினுள் இன்று இருக்கும் பொதுவான பிரச்சனைகள் இவைகளே. நான் எதிர்மறையாக இருக்க விரும்பவில்லை ஆனால் நான் உட்பட, ஊழியத்தில் இன்று இப்படிப்பட்ட போக்குகளுக்கு ஒருவர் கூட விதிவிலக்கில்லை என்றே கூறுவேன். தன் ஜனங்களுக்கு ஊழியம் செய்ய, தேவனால் அழைக்கப்பட்ட ஒவ்வொருவரும் இந்த மூன்று தொடர்புடைய ஆபத்துக்களைக் குறித்து தொடர்ந்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும்: பெருமை, தன்னலம், இலட்சியம் மற்றும் சுயநலம். (பெருமை மற்றும் தன்னல இலட்சியத்தைக் குறித்து நான் இங்கு பேசும்போது,

சுய மரியாதையைக் குறித்தோ அல்லது நியாயமாய் நாம் சொந்தமாய் சாதித்தவைகள் அல்லது குடும்ப அங்கத்தினர்கள் சாத்தித்தவைகளில் சந்தோஷம் கொள்வதைக் குறித்தோ பேசவில்லை. அல்லது சேவை செய்யத் தூண்டும் ஆரோக்கியமான இலட்சியத்தைக் குறித்தும் பேசவில்லை. நான் இங்குக் குறிப்பிட விரும்புவது மற்றவர்களை உறுதிப்படுத்தி சேவிப்பதற்குப் பதிலாக, அவர்களைப் புறக்கணிக்கும் அதிகப்படியான அகங்காரம் அல்லது சுயத்தில் மெய்மறந்து கவனம் செலுத்துதலைக் குறித்தே பேசுகிறேன் என்பதைத் தயவுசெய்து புரிந்துகொள்ளுங்கள்.)

பெரும்பாலான ஊழியர்களைப்போல, நானும் பல்வேறு விதமான மக்கள் மற்றும் அவர்கள் பிரச்சனைகளை எதிர்கொண்டுள்ளேன். அநேக சந்தர்ப்பங்களில் நான் சந்திக்கும் மக்கள், தங்கள் பிரச்சனைகளை விட்டு ஓடிக்கொண்டிருக்கிறார்கள். தங்கள் கணவன் அல்லது மனைவியிடமிருந்தோ, வேலையிலிருந்தோ, ஏதோ கஷ்டமான சூழ்நிலையிலிருந்தோ அவர்கள் ஓடிக்கொண்டிருக்கலாம். நான் கண்டுப்பிடித்தது இதோ. அநேக நேரங்களில் உண்மையான பிரச்சனை, நாம் விட்டு ஓட முடியாத ஒன்று. அது நாம் எங்குச் சென்றாலும் நம்முடன் நாம் எடுத்துச்செல்லும் ஒன்று - *நாம்தான்*.

நாம் எல்லாரும் பெருமை, தன்னலமான இலட்சியம் மற்றும் சுயநலத்தை எதிர்கொள்ள வேண்டும். நாம் அதை எப்படி எதிர்கொள்வது? "நான்" என்ற பிரச்சனையிலிருந்து விடுபட ஒரே வழி சிலுவையின் மூலம்தான்.

கிறிஸ்தவர்கள் மத்தியில் பெருமைதான் பிரதான குற்றவாளி என்ற முடிவிற்கு நான் வந்துள்ளேன். கிறிஸ்தவ வாழ்வில், பெருமையினால் அன்றி யாரும் தவறிப் போவதில்லை - எண்ணிறந்த கிறிஸ்தவர்கள் பல்வேறு விதமான தவறுகளுக்குள் செல்வதை நான் காண்கிறேன். பிரபஞ்சத்தின் சரித்திரத்தில் முதல் பாவம் பெருமைதான். சுவாரசியம் என்னவென்றால், அந்த முதல் பாவம் உலகத்தில் நடைபெறவில்லை. தேவனுடைய மகிமை மற்றும் நித்தியத்தின் பூரண வெளிச்சத்தில்,

அது பரலோகத்தில் நிகழ்ந்தது. பெருமை மிகவும் வெளியரங்கமாக மற்றும் பரவலாக காணப்படும் ஒன்றாக இருக்கிறதென்பது, பயத்தை ஊட்டும் சிந்தையாக உள்ளது.

தேவனுடைய சமுகத்தையே பெருமை தகர்த்து நுழைய முடியும் என்றால், இங்குப் பூமியில் அது தகர்த்து உள்ளே நுழைவது இன்னும் எவ்வளவு எளிது**?** ஒரு காலத்தில் ஒருவர் என்னிடம் இப்படியாக சொன்னார் - அது மனதில் வைக்கத்தக்க ஒன்று: "பெருமை என்பது ஒரு பாவம், அதைக் குறித்து ஒருபோதும் சாத்தான் உங்களை குற்றப்படுத்த மாட்டான்."

பெருமையின் முக்கியமான அவதாரங்களில் ஒன்று சுயநலம். என்னுடைய பின்னணியினால், சுயநலம் என்னும் பிரச்சனையை நான் ஓரளவு புரிந்துகொண்டுள்ளேன். நான் ஒற்றைப் பிள்ளை, ஆகவே சகோதர சகோதரிகளுடன் வாழ கற்றுக்கொள்ளாதவன். எனக்கு நல்ல மூளை இருந்தது, பள்ளியிலும், கல்லூரியிலும் எப்போதும் வெற்றியுள்ளவனாக இருந்தேன். அடிப்படியாக, செய்யும் எல்லாவற்றிலும் முதன்மையாக இருக்க வேண்டும் என்பதே எனது எதிர்ப்பார்ப்பு - இருப்பத்தைந்து வயது வரை முற்றிலும் என்னையே நான் சார்ந்துகொண்டேன். வரம்புகளுக்குள் நான் ஒரு நல்ல வேலையைச் செய்தேன்.

1941ல் ஓர் இரவில், தேவன் தம்மை எனக்கு வெளிப்படுத்தி, என்னை மாற்ற ஆரம்பித்தார், அந்த மாற்றம் என்னை முற்றிலும் திசைமாறச்செய்தது. அந்தப் புதிய ஆரம்பத்திலிருந்து நான் ஒரு முழு திருப்பத்தை செய்து, முற்றிலும் வித்தியாசமான திசையில் அப்போதிலிருந்து சென்றுகொண்டிருக்கிறேன்.

என் திறமைக்கு அப்பால்

என் வாழ்வின் திசையை முற்றிலும் தேவன் மாற்றினதைக் கண்டு, தேவனுக்கு நல்லதோர் நகைச்சுவை உணர்வு உண்டென்று அங்கிகரிக்கிறேன். இரட்சிக்கப்பட்ட ஐந்து ஆண்டுகளுக்குள்,

எருசலேமில் சிறுவர் இல்லம் நடத்தும் ஒரு டேனிஷ் பெண்மணியை நான் திருமணம் செய்தேன். எனக்கு ஒரு மனைவி கிடைத்தது மட்டுமல்ல, கூடவே எட்டு மகள்களும் ஒரே நாளில் கூட கிடைத்தனர்! எனக்குப் பெண்கள் என்றால், தூரத்திலுள்ள ஒரு விசித்திர ஓட்டம்போல் இருந்தனர்; என்னால் அவர்களைப் புரிந்துக்கொள்ள முடியவில்லை. எனவே எட்டுப் பெண்களுக்குத் தகப்பனாக இருக்க என்னைவிட குறைவான தகுதி உள்ளவனைக் கண்டுப்பிடிக்க நீங்கள் வெகுதூரம் தேட வேண்டியதாக இருந்திருக்கும். இந்த நிகழ்வுக்கு முன்பு என்னுடைய சுயசார்பை தேவன் எதிர்கொண்டார். அவர் வேண்டுமென்றே, என் பின்னணியில் இருக்கும் எதையும் சார்ந்துகொள்ள முடியாத ஒரு நிலையில் போட்டதுபோல இருந்தது!

நான் எப்படிப்பட்டவராய் இருந்தேன் என்பதை நான் விவரிக்கட்டும். ஒரு பிரச்சனையை எதிர்கொள்ளும் போதெல்லாம் என்னுடைய முதல் எதிர்வினை எப்போதும், ''இதைக் குறித்து *நான்* என்ன செய்யப்போகிறேன்'' என்பதாகதான் இருந்தது. தேவனுடைய கிருபையால், என் தீர்வு முக்கியமல்ல என்று அறியும் ஸ்தலத்திற்கு நான் வந்துவிட்டேன். மாறாக, *"தேவனுடைய தீர்வு என்ன?"* என்று கேட்பதே சிறந்ததென்று கற்றுக்கொண்டுள்ளேன். அந்த இடத்திற்கு வர வெகு காலம் சென்றதென்று ஒப்புக்கொள்வேன்.

நான் ஊழியத்தில் இருப்பதன் காரணம், தேவன் என்னை இங்கு வைத்துள்ளார். அவருக்கு என்னை இங்கு வைத்திருக்க பிரியமாய் இருக்கும் வரை, நான் தொடருவேன். அவருக்கு வேலை முடிந்து விட்டால், நான் செல்ல ஆயத்தம் - எதையும் பிடித்துக்கொண்டு நான் இருக்கவில்லை. தேவனுடைய கிருபையால், என்னை என்னிடமிருந்து விடுதலை செய்யும் சிலுவையின் வல்லமையை நான் அனுபவித்துள்ளேன்

எதிர்மாறான ஊக்கம்

பிலிப்பியர் 2:3-4ல், சுய-மையம் என்பதற்கு நேர் எதிர்மாறான நடத்தையின் சித்திரத்தை முன் வைக்கிறார்.

ஒன்றையும் வாதினாலாவது வீண் பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள். அவனவன் தனக்கானவைகளை அல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக.

''ஒன்றையும் வாதினாலாவது வீண் பெருமையினாலாவது செய்யாமல்…'' இந்தச் சட்டத்தைப் பின்பற்றினால், தற்போது சபையில் நடக்கும் எத்தனை நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டியதாக இருக்குமென்று நான் சிந்திக்கிறேன். தன்னலமான இலட்சியத்தாலும், அங்கிகரிக்கப்பட வேண்டும் என்ற வாஞ்சையினாலும் எவ்வளவு ஊழியம் ஊக்கம் பெறுகிறது? இதை விமர்சிப்பதற்காக நான் சொல்லவில்லை ஆனால் தன்னலமான இலட்சியமும், கர்வமும் சபையின் வாழ்வைக் கெடுக்கும் பிரச்சனைகளாக உள்ளன. இலட்சியம் மற்றும் கர்வத்தை எதிர்கொள்ளும் ஒரே வழி சிலுவையின் மூலம்தான். இதைத் தவிர வேறு வழியில்லை.

முந்தைய இரண்டு வசனங்களில் தனிப்பட்ட இலட்சியத்திற்கு மாற்று வழியைப் பவுல் கூறுகிறார்:

ஆதலால் கிறிஸ்துவுக்குள் யாதொரு ஆறுதலும், அன்பினாலே யாதொரு தேறுதலும், ஆவியின் யாதொரு ஐக்கியமும், யாதொரு உருக்கமான பட்சமும் இரக்கங்களும் உண்டானால், நீங்கள் ஏக சிந்தையும் ஏக அன்புமுள்ளவர்களாயிருந்து, இசைந்த ஆத்துமாக்களாய் ஒன்றையே சிந்தித்து, என் சந்தோஷத்தை நிறைவாக்குங்கள்.

அன்பு, ஐக்கியம், நேசம் மற்றும் இரக்கம் என்பவைகள் அழகான உணர்வுகள் - இவைகள் நமது சபைகளில் செழிப்பதைக் காண நாம் எல்லாரும் வாஞ்சிப்போம். ஆனால், முதலில் இத்தன்மைகள்

சுயநலம் மற்றும் சுயமையம் என்பவைகளோடு ஒவ்வாதவை என்பதை நாம் உணர வேண்டும்.

பிலிப்பியர் 2ன் முதல் 4 வசனங்களில், பவுல் நேர் எதிர்மாறானவைகளை முரண்படுத்தி காண்பிக்கிறார். 1ம் மற்றும் 2ம் வசனங்கள் (அன்பு, ஐக்கியம், நேசம் மற்றும் இரக்கம்) நாம் அனுபவிக்க விரும்புபவை. ஆனால் 3ம் மற்றும் 4ம் வசனங்கள் (தன்னலமான இலட்சியம் மற்றும் பெருமை/அகந்தை) நம்மிலும், மற்றவர்களிலும் நாம் அடிக்கடி அனுபவிப்பவை. சிலுவைக்கு நாம் வந்து ‘‘நான்’’ என்பதின்மேல் தேவனுடைய தீர்ப்பை அங்கிகரிக்கும்வரை, இப்பிரச்சனைகளுக்குத் தீர்வு இல்லை. சிலுவையைத் தவிர இவைகளை எதிர்கொள்ள வேறு வழியில்லை.

காலத்தின் அடையாளம்

2 தீமோத்தேயு 3ல், கடைசி நாட்களில் மனித குணம் மற்றும் நடத்தை எப்படி இருக்கும் என்பதைக் குறித்து பவுல் ஒரு தெளிவான சித்திரத்தை வரைகிறார். இந்த யுகத்தின் முடிவு நெருங்கும்போது, மனித கலாச்சாரத்தின் தன்மையாய் இருக்கபோகும் பதினெட்டு குறிப்பிட்ட நெறிமுறை மற்றும் ஒழுக்க குறைபாடுகளை அவர் பட்டியலிடுகிறார்.

சில சகாப்தங்களுக்கும் மேல் நான் வாழ்ந்தபடியால், பல காலத்திற்கு முன் காரியங்கள் எப்படி இருந்ததென்று என்னால் நினைவுகூற முடியும். இரண்டு உலக மகா யுத்தங்களுக்கும் இடையே இங்கிலாந்து நாட்டில் வளர்ந்தேன். பிரிட்டன் எந்த விதத்திலும் ஒரு கிறிஸ்தவ நாடு அல்லவென்றாலும், அடிப்படையில் சட்டத்தை மதிக்கும் சமூகம் என்றே சொல்வேன். ஆனால், இப்போதுள்ள பிரிட்டிஷ் இளைஞர்களோடு அந்நாட்களில் எப்படி இருந்தது என்று பேசும்போது, நான் உண்மையைச் சொல்கிறேன் என்பதை அவர்களால் நம்ப முடியவில்லை.

என் ஊழியத்தின் ஆரம்ப நாட்களில், 1947ல் நான் ஸ்வீடன் நாட்டிற்கு முதன் முறை சென்றேன். அக்காலத்தில், நான் சென்றிருந்த எல்லா தேசங்களிலும், மிகுந்த தெய்வ-பயமுள்ள தேசமாக ஸ்வீடனை கருதினேன். தெய்வ பயத்தை தெருக்களில் உணர முடிந்தது. ஞாயிறு காலையில், சபைக்குள் செல்ல மக்கள் தெருக்களில் வரிசையில் நிற்பார்கள். ஜனங்களை முற்றிலும் நேர்மையானவர்களாயும், கடமை தவறாதவர்களாயும் அடிப்படையில் நம்ப முடிந்தது.

1983ல், நான் மீண்டும் ஸ்வீடன் சென்றபோது, அந்நாட்டைச் சேர்ந்த ஒரு இளம் கிறிஸ்தவ பத்திரிக்கையாளர் என்னைப் பேட்டி கண்டார். அவர் என்னுடைய பின்னணியைக் குறித்துக் கேட்டார். நான்கு சகாப்தங்களுக்கு முன் ஸ்வீடனைக் குறித்த என் நினைவுகளை அவனுடன் நான் பகிர்ந்துகொண்டபோது, தன்னுடைய நாட்டைதான் விவரிக்கிறேன் என்பதை அவனால் நம்ப முடியவில்லை. ஸ்வீடனில் தார்மீகம் மற்றும் ஒழுக்கம் அந்த அளவிற்கு வேகமாகவும் தீவிரமாகவும் சரிந்திருந்தது.

இதே சீரழிவு உலகம் முழுவதும் நடக்கிறதென்று நான் சொல்ல வேண்டும்; அது அதிதீவிரமாக நடைபெறுகிறது. நாம் தற்காலத்தில் காண்பது, 2 தீமோத்தேயுவில் பவுலால் வர்ணிக்கப்பட்டது. வேதம் தெளிவாக பேசுகிறது, அது ஒருபோதும் கற்பனையான சிந்தனை கொள்வதில்லை. அதின் வாக்குத்தத்தங்கள் எத்தனை உண்மையோ அதே அளவிற்கு அதின் எச்சரிப்புகளும் உண்மையே. பின் வரும் பகுதியை நீங்கள் வாசிக்கையில், நம்முடைய தற்கால கலாச்சாரத்தில், நீங்கள் வாசிப்பவைகளில் எத்தனை ஏற்கெனவே வெளிப்பட்டுள்ளது என்பதைச் சிந்தியுங்கள்.

> *மேலும், கடைசிநாட்களில் கொடியகாலங்கள் வருமென்று அறிவாயாக. எப்படியெனில், மனுஷர்கள் தற்பிரியராயும், பணப்பிரியராயும், வீம்புக்காரராயும், அகந்தையுள்ளவர்களாயும், தூஷிக்கிறவர்களாயும், தாய் தகப்பன்மாருக்குக் கீழ்ப்படியாதவர்களாயும்,*

> *நன்றியறியாதவர்களாயும், பரிசுத்தமில்லாதவர்களாயும், சுபாவ அன்பு இல்லாதவர்களாயும், இணங்காதவர்களாயும், அவதூறு செய்கிறவர்களாயும், இச்சையடக்கம் இல்லாதவர்களாயும், கொடுமையுள்ளவர்களாயும், நல்லோரைப் பகைக்கிறவர்களாயும், துரோகிகளாயும், துணிகரமுள்ளவர்களாயும், இறுமாப்புள்ளவர்களாயும், தேவப்பிரியராயிராமல் சுகபோகப்பிரியராயும், தேவபக்தியின் வேஷத்தை தரித்து அதின் பெலனை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்கள்; இப்படிப்பட்டவர்களை நீ விட்டு விலகு.*
>
> (2 தீமோத்தேயு 3:1-5)

"கொடிய காலங்கள்" என்பதற்கு இன்னொரு மொழிபெயர்ப்பு ''அழுத்தத்தின் காலங்கள்.'' அந்தப் பயன்பாடு ஆச்சரியமானது ஏனென்றால் ஐம்பது ஆண்டுகளுக்கு முன் மன அழுத்தத்தைக் குறித்து அதிகமான விவாதம் இருந்தது. இன்று மருத்துவர்கள் கூறுவது, எல்லா வியாதிகளுக்குப் பின்னணியில் மன அழுத்தம் உள்ளதென்று. எனவே கடந்த அரை நூற்றாண்டில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டுள்ளது, கொடிய காலங்களுக்கான காரணம் பொருளாதாரம், அணுசக்தி பெருக்கம் அல்லது தீவிரவாதமும் அல்ல. காரணம் மனிதர்களினுள் வாசமாய் இருக்கிறது,

"தற்பிரியர்"

மேலே பவுல் பட்டியலிடும் தன்மைகளில் எத்தனை நமது தற்காலத்து கலாச்சாரத்தில் வெளியரங்கமாய் இருக்கின்றன ? இப்பிரச்சனைகள் எந்த ஒரு தேசத்திற்கும் கட்டுப்பட்டவை என்று சொல்ல முடியாது. அவைகள் பூமியெங்கும் உள்ளன, அவைகளின் வேர் முதல் வாக்கியத்தில் கூறப்பட்டுள்ளது: *"மனுஷர் தற்பிரியராய் இருப்பார்கள்"* (2 தீமோத்தேயு 3:2). தற்பிரியம் (சுய-கவனம் அல்லது கர்வம் என்ற அர்த்தத்தில்) மற்ற எல்லா பிரச்சனைகளுக்கும்

வழிவகுத்து கொடுக்கின்றது. பவுல் இப்பட்டியலில் கூறுபவர்கள் கிறிஸ்தவர்கள் அல்லவென்று நாம் யோசிக்க தூண்டப்படலாம். ஆனால் அவர்களைக் குறித்து பவுல் குறிப்பாக கூறும் வாக்கியம் *"தெய்வபக்தியின் வேஷத்தை தரித்து..."* **(2 தீமோத்தேயு 3:5)**

கிறிஸ்தவம் அல்லாத ஒரு மதத்திற்கு *"தெய்வபக்தி"* என்ற வார்த்தையைப் பவுல் ஒருபோதும் பயன்படுத்தியிருக்க மாட்டார். மிகத் தெளிவாக, இதிலுள்ள மக்கள் கிறிஸ்தவத்தின் ஒரு தோற்றத்தைக் கொண்டுள்ளனர். ஆனால் அதின் வல்லமையை மறுதலிக்கின்றார்கள். அதின் வல்லமையை அவர்கள் மறுதலிக்கும்போது, சுயநலம் கொண்ட மக்களை மாற்றக்கூடிய வல்லமை கொண்டவரை அவர்கள் மறுதலிக்கின்றனர். அந்த வல்லமை என்ன**?** அது சிலுவையின் வல்லமை. சுயத்திலிருந்து விடுதலை பெற அந்த வல்லமையை நோக்கிப் பார்ப்பதை விட்டுவிட்டு, அவர்கள் சுய உதவி திட்டங்களை, சட்டங்களின் பட்டியல்கள், மனோத்தத்துவம் போன்றவற்றைச் சார்ந்து கொள்கின்றனர்.

கிறிஸ்தவர்கள் மரியாதைக்குரியவர்களாக இருப்பது எளிது. அவர்கள் போதை வஸ்துக்கள், மது, தவறான பாலியல் உறவு மற்றும் வெளிப்படையான பாவத்திலிருந்து விலகி இருக்கலாம். கடன்களைச் சரியாக செலுத்தலாம். அவர்கள் நல்ல சபை அங்கத்தினர்களும், போக்குவரத்து சட்டங்களைக் கூட தகர்க்காத சட்டத்தை மதிக்கும் குடிமக்களாக இருக்கலாம். ஆனாலும், அவர்கள் சுயத்தை மிகவும் மையப்படுத்துகிறவர்களாக இருக்கலாம். இப்படிப்பட்ட மக்கள் தெய்வபக்தியின் ஒரு தோற்றத்தைக் கொண்டுள்ளனர், ஆனாலும் அவர்கள், தங்களை மாற்றக்கூடிய சிலுவைவின் வல்லமையை மறுதலிக்கிற அல்லது எதிர்க்கிறவர்களாக இருக்கின்றனர். சுயத்தை எதிர்கொள்ளும் வரை நாம் தீவிரமாக மாற்றப்பட்டவர்கள் அல்ல.

வேரை கையாளுதல்

தீவிரமான என்ற வார்த்தை லத்தீன் வார்த்தையாகிய "ராடிக்ஸ்" (*radix)* என்ற வார்த்தையிலிருந்து உருவானது, அதற்கு அர்த்தம்

"வேர்." தீவிரமான என்பது வேர் வரைக்கும் செல்வதாகும். யோவான் ஸ்நானகன், சுவிசேஷத்தையும், இயேசுவையும், *"இப்பொழுதே கோடரியானது மரங்களின் வேர் அருகே வைத்திருக்கிறது. ஆகையால் நல்ல கனிகொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும்"* (மத்தேயு 3:10) என்ற வாக்கியத்துடன் அறிமுகம் செய்து வைத்தார்.

மனுகுலத்தை எதிர்கொண்ட மிகத் தீவிரமான செய்தி, தேவனுடைய ராஜ்யத்தின் சுவிசேஷமே. அது அடிப்படையான அல்லது வேராக இருக்கும் விஷயங்களை எதிர்கொள்கிறது - அவைகளில் பிரதானமானது சுயநலம், அல்லது சுய அன்பு. அந்த வேரை வெட்டியெடுக்கக்கூடிய ஒரே கோடரி சிலுவைதான்.

நான் பிசாசுகளைத் துரத்தி விடுதலை அளிக்கும் ஊழியத்தில் 1960ல் ஈடுப்பட ஆரம்பித்தபோது, நான் நிக்கோட்டின், மது மற்றும் போதை வஸ்துக்களின் அடிமைத்தனங்களாகிய வெளிப்படையான பாவங்களோடு பணியாற்ற ஆரம்பித்தேன். வெகு சீக்கிரத்தில், இவையெல்லாம் பெரிய கிளைகளில் வளரும் சிறு கிளைகள் என்பதைக் கண்டுப்பிடித்தேன். உதாரணத்திற்கு, பெரிய கிளைகளில் ஒன்று விரக்தி. ஒவ்வொரு அடிமைத்தனமும் ஒரு விரக்தியிலிருந்து வளருகிறது. நீங்கள் முதலில் விரக்தியை எதிர்கொள்ளாவிட்டால், அந்த அடிமைத்தனத்தின் பெரிய அடிப்படை பிரச்சனையை நீங்கள் உண்மையில் தீர்க்கவில்லை.

விடுதலையின் ஊழியத்தில், என் பங்கேற்பு அதிகரித்தபோது, நான் பெரிய கிளைகளை எதிர்கொள்கிறேன். ஆனால் மரத்தின் அடிவேர் வரை சென்றடையவில்லை என்று உணர்ந்தேன். நீங்கள் அநேக கிளைகளை வெட்டலாம், ஆனால் அடித்தண்டு துண்டிக்கப்படாவிட்டால், மரம் வளர்ந்துகொண்டேதான் இருக்கும். அதே கிளைகள் மீண்டும் வளரும்.

இறுதியில், வேரை எதிர்கொள்ள வேண்டும் என்பதைத் தேவன் எனக்குக் காண்பித்தார் - அதில் சுய அன்பு, சுய நலம் மற்றும் சுய

மயம் என்பவைகள் இருந்தன. வேரை நாம் எதிர்கொள்ளும் வரை, தேவன் நமக்காக வைத்திருக்கும் சுவிசேஷத்தின் பலன்களை நாம் அனுபவிக்க முடியாது. சுய-அன்பும் கிறிஸ்துவின் தன்மையும் எதிர்மாறானவைகள். சுய-அன்பு மரிக்காவிட்டால்தான் கிறிஸ்துவின் தன்மை நமக்குள் தனது இடத்தை எடுக்கும்.

சுயத்தை மறுதலிக்கும் செயல்தொடர்

இப்படிப்பட்ட தனிப்பட்ட பிரச்சனைகளை எதிர்கொள்வதில், தங்களைக் குறித்து யதார்த்தமாய் இருந்து, தங்கள் ஆவிக்குரிய தன்மை மிகையாய் மதிப்பிடாமலிருக்க நான் எப்போதும் மக்களை ஊக்குவிப்பதுண்டு. எவரையும் குற்றஞ்சுமத்துவது எனது நோக்கமல்ல ஏனென்றால் தேவன் கிருபையும், இரக்கமும், பொறுமையும் உள்ளவர். ஆனால் அதே நேரத்தில், நீங்கள் இருக்கும் ஆவிக்குரிய நிலையை அறியாமல், உயர்ந்திருக்கிறேன் என்று உங்களையே வஞ்சித்துக்கொள்ளாமல் இருப்பதும் மிக முக்கியம். எவ்வளவு சுய-அன்பு, சுய-நலம், மற்றும் சுய-மையம் உங்கள் வாழ்வில் இன்னமும் ஆதிக்கம் செலுத்துகிறது என்பதை ஆராய்வது அவசியம். அந்தப் பகுதிகளை அளந்து பார்த்தல், ஆவிக்குரிய நிலையில் நீங்கள் எங்கே இருக்கிறீர்கள் என்பதற்கான பதிலை உங்களுக்குக் கொடுக்கும்.

மத்தேயு **16:24-25**ல், இயேசு தம்மைப் பின்பற்றுவதற்கான முதல் படிகளை வெளிப்படுத்தினார்:

> *அப்பொழுது, இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி: ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன். தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்துபோவான்; என்னிமித்தமாகத் தன் ஜீவனை இழந்து போகிறவன் அதைக் கண்டடைவான்."*

நீங்கள் இயேசுவைப் பின்பற்ற விரும்பினால், அத்தியாவசியமான

முதல் படி *சுயத்தை மறுதலித்தல்தான்*. சுயத்தை மறுதலிக்க வேண்டும் என்று இயேசு கூறும்போது, என்ன அர்த்தத்தில் அதை சொல்கிறார்? மறுதலித்தல் என்றால் "இல்லை" என்று சொல்வது. எனவே, நீங்கள் இயேசுவை பின்பற்ற விரும்பினால், உங்கள் சுயத்திற்கு "இல்லை" என்று சொல்வதே முதல் படியாகும்.

மூல பாஷையாகிய கிரேக்கத்தில், *ஆத்துமாவை மறுதலித்தல்* என்று சொல்லப்பட்டுள்ளது. பொதுவாக சொன்னால், ஆத்துமா என்பதற்கு மூன்று அம்சங்கள் உண்டு: சுய சித்தம், அறிவாற்றல் மற்றும் உணர்ச்சிகள். சுய சித்தம், "எனக்கு வேண்டும்" என்று கூறுகிறது; அறிவாற்றல், "நான் நினைக்கிறேன்" என்று கூறுகிறது; உணர்ச்சிகள் "நான் உணர்கிறேன்" என்று கூறுகிறது.

எனவே, உங்களை நீங்களே மறுதலிக்கும்போது, "நான் விரும்புவது அல்ல, தேவனுடைய சித்தமே" என்று கூறுகிறீர்கள். "நான் நினைப்பதல்ல, தேவன் கூறுவதே." "நான் உணர்வதல்ல, பரிசுத்த ஆவியானவர் உணர்த்துவதே." இம்மூன்று பகுதிகளிலும் நம்மை நாமே மறுதலிக்க வேண்டும். இப்படி நாம் சுயத்தை மறுதலித்தால், இயேசுவைப் பின்தொடர ஆரம்பிக்கலாம்.

உங்கள் சிலுவையை எடுத்துக்கொள்ளுதல் இரண்டாவது படி என்று இயேசு சொல்கிறார். தேவன் சிலுவையை வலுக்கட்டாயமாய் நம்மீது வைப்பதில்லை. இயேசு தாமே தம் சிலுவையை எடுத்துக்கொண்டார். ஒரு தனிப்பட்ட சிலுவையின் இரண்டு பொருள் விளக்கங்கள் இதோ. முதலாவது, சிலுவை என்பது உங்கள் சித்தமும், தேவனுடைய சித்தமும் குறுக்கிடும் இடம். இரண்டாவதாக, உங்கள் சிலுவை என்பது, உங்கள் சுய சித்தம் மரணமடையும் இடம்.

மறுபடியும், உங்கள் சிலுவை எடுத்துக்கொண்டு அதை தழுவிக்கொள்வதும் உங்கள் தீர்மானம். நீங்கள் அதைச் செய்ய வற்புறுத்தப்படுவதில்லை. நீங்கள் இந்தப் படியை நிராகரிக்கலாம். ஆனால், இயேசுவைப் பொறுத்தவரை, அதைச் செய்யாமல் நீங்கள் *அவரைப் பின்பற்றுவதில்* மூன்றாவது படிக்குச் செல்ல முடியாது.

அவருக்கு நீங்கள் பின் செல்ல வேண்டுமானால், முதலாவது நீங்கள் உங்களையே மறுதலிக்க வேண்டும். பின்பு உங்கள் சிலுவையை எடுத்துக்கொள்ள வேண்டும் - சுய அன்புக்கும், சுய மையத்திற்கும் நீங்கள் மரிக்கும் இடம் இதுவே.

தேவன் நம் ஒவ்வொருவருக்கும் ஒரு குறிப்பிட்ட சிலுவையை வைத்துள்ளார். இயேசுவைப் போலவே, அதை எடுத்துக்கொள்வதா இல்லையா என்பது உங்களது தீர்மானம். ஆனால் இந்த முடிவை எடுக்காமல் நீங்கள் முன் செல்ல முடியாது என்பது உண்மை.

இந்தப் படிகள் அனைத்தையும் எடுத்த பின், பவுல் பிலிப்பியர் **4:13**ல் சொன்னதுபோல நாமும் சொல்ல ஆரம்பிக்கலாம், *"என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு."* இவ்வசனத்தை இவ்வாறாக மொழிபெயர்க்க விரும்புகிறேன்: "என்னை உள்ளாக வலுவூட்டுபவரால் எல்லாம் செய்ய என்னால் கூடும்." சுய வாழ்வில் செயலாற்றும்வரை அவருடைய வல்லமையை நீங்கள் பெற முடியாது. தேவனுடைய கிருபையால், சிலுவை நமக்கு சுய மையம் என்னும் கொடுங்கோளான்மையிலிருந்து விடுதலை அளித்துள்ளது.

சிலுவையின் மூலம் பெற்ற நமது மாபெரும் விடுதலையை அங்கிகரித்து, முந்தின அதிகாரத்தின் முடிவில் நாம் செய்ததை மீண்டும் செய்யலாம்: ஒரு ஆழ்ந்த விடுதலையின் பெருமூச்சு விட்டு, "நன்றி பிதாவாகிய தேவனே!" என்று கூறலாம்.

அதிகாரம் 12

மாம்சத்திலிருந்து விடுதலை

நமது வாழ்வில், சிலுவை அளிக்கும் நான்காவது விடுதலை *''மாம்சம்''* என்று வேதம் அழைக்கும் ஒன்றிலிருந்து அளிக்கப்பட்டுள்ளது. கலாத்தியர் **5:24**ல் பவுல் எழுதுகிறார், *"கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள்."*

ஒரு கலகக்காரனின் தன்மை

வேதாகமத்தில் *"மாம்சம்"* என்று கூறும்போது, அது நம்முடைய சரீரத்தைக் குறித்துப் பேசவில்லை என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். "மாம்சம்" என்பது, நீங்களும் நானும் ஒரு இயற்கையான சரீரத்தில் பிறந்தபோது பெற்ற *சுபாவம்*. அது அடிப்படையாக ஒரு கலகக்காரனின் சுபாவம் ஆகும். அதற்கு தேவனுடைய சித்தத்திற்குப் புறம்பான சகல விதமான விருப்பங்களும், உணர்வுகளும் உண்டு.

''கிறிஸ்துவினுடையவர்கள் மாம்சத்தை சிலுவையில் அறைந்துள்ளார்கள்..." என்று பவுல் சொன்னதைக் கவனியுங்கள்.

இயேசு கிறிஸ்துவினுடையவர்கள் பாப்டிஸ்டு, கரிஸ்மாட்டிக் அல்லது கத்தோலிக்கேயர் போன்ற ஒரு சபைப்பிரிவையோ, குறிப்பிட்ட மதப்பிரிவைச் சார்ந்தவர்களோ அல்ல. மற்ற மக்களிலிருந்து, கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தை சிலுவையில் அறைந்தவர்களாக வேறு பிரிக்கப்படுகின்றனர்.

1 கொரிந்தியர் 15:23ல், பவுல் உயிர்த்தெழுதலில் உட்படுத்தப்பட்ட நபர்கள் யார் என்று கூறும்போது, *"கிறிஸ்துவினுடையவர்கள்..."*

என்று குறிப்பிடுகிறார். கிறிஸ்துவினுடையவர்களின் மிக முக்கிய குறியீடு என்னவென்றால் அவர்கள் மாம்சத்தை சிலுவையில் அறைந்துள்ளவர்கள். இதை சாராம்சமாக கூற வேண்டுமானால், கிறிஸ்து, *''மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்த''* கிறிஸ்தவர்களுக்காகதான் திரும்ப வருகிறார்.

பல ஆண்டுகளுக்கு முன் எங்கள் சபையில் இருந்த ஒரு பெண்ணின் ஜெபத்தை நான் நினைவுகூறுகிறேன். அவர்கள் எப்போதும் செய்யும் ஒரு ஜெபம், "ஆண்டவரே நீர் வரும் நேரத்தில் நாங்கள் ஆயத்தமாகுவது என்பது ஆயத்தமாகுவதற்கு மிகவும் தாமதமான நேரம் என்பதை நினைவுகூற எங்களுக்கு உதவி செய்யும்" என்பதே.

அதை நான் ஒருபோதும் மறந்ததில்லை. ஆண்டவருடைய வருகைக்கு ஆயத்தப்படுதலை கடைசி நிமிடத்திற்கு நாம் விட்டுவிட முடியாது. கடைசி நிமிடம் மிகவும் தாமதமாகி விடும். நாம் ஏற்கெனவே மாம்சத்தை எதிர்கொண்டிருக்க வேண்டும்.

நேரடி எதிர்ப்பில்

மாம்ச சுபாவம், தேவனுடைய சித்தத்திற்கும், வழிகளுக்கும் நேர் எதிர்ப்பில் உள்ளது. ரோமர் 8ல் *''மாம்ச சிந்தை தேவனுக்கு விரோதமான பகை''* என்று பவுல் கூறுகிறார். "மாம்சம்" என்பதின் ஆங்கில வார்த்தை *''கார்னாலிஸ்''* என்ற லத்தீன் மொழி வேரிலிருந்து வருகிறது.

> *அப்படியென்றால், மாம்சசிந்தை தேவனுக்கு விரோதமான பகை; அது தேவனுடைய நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்படியாமலும், கீழ்ப்படியக்கூடாமலும் இருக்கிறது. மாம்சத்துக்குட்பட்டவர்கள் தேவனுக்குப் பிரியமாய் இருக்கமாட்டார்கள்.* (ரோமர் 8:7-8)

மாம்ச சுபாவத்தினால் ஆட்கொள்ளப்பட்ட எவரும் தேவனுக்கு பிரியமாய் இருக்க முடியாது. நாம் எவ்வளவு வேண்டுமானாலும் முயற்சி செய்யலாம், நாம் எவ்வளவு வேண்டுமானாலும் மத வைராக்கியம் கொண்டிருக்கலாம் ஆனால் மாம்சத்திலிருந்து தோன்றும் எதுவும் தேவனுக்கு ஏற்றதாய் இருக்காது.

இந்தச் சத்தியத்தை கலாத்தியர் 5:17ல் பவுல் மறுபடியும் முன் வைக்கிறார்:

> *மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது; நீங்கள் செய்ய வேண்டுமென்றிருக்கிறவைகளைச் செய்யாதபடிக்கு, இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிறது.*

நம்முடைய இயற்கையான, மாம்ச இச்சைகள் தேவனுடைய ஆவியானவரின் சித்தத்திற்கும் வழிகளுக்கும் மாறானவைகள். இந்தத் தகவல் உங்களுக்குப் புதிதாக இருக்கலாம், எனவே நன்கு கவனியுங்கள்.

நம்முடைய இயற்கையான, மாம்சீக விருப்பங்கள், தேவனுடைய ஆவியானவரின் சித்தத்திற்கும், வழிகளுக்கும் எதிர்மறையானவைகள். இது உங்களுக்குப் புதிய தகவலாக இருக்கலாம், எனவே இதை நன்றாக குறித்துக்கொள்ளுங்கள். நீங்கள் தேவனுக்காக முழுமையாக வாழும்படி, ஆவிக்குரிய நல்லெண்ணத்தோடு தேவனை அணுகலாம். உங்களை அர்ப்பணிக்க முற்படலாம். நீங்கள் சபையின் பலிபீடம் வரை சென்று, அதற்கேற்ற நல்ல ஜெபத்தையும் செய்யலாம். “அவ்வளவுதான். இப்போது நான் தேவனுக்காக இதைச் செய்யப் போகிறேன், அதைச் செய்யப் போகிறேன்” என்று நீங்கள் சொல்லிக்கொள்ளலாம்.

ஆனால் சில வாரங்கள் சென்றவுடன், என்னவெல்லாம் செய்ய வேண்டும் என்றும், எப்படி இருக்க வேண்டும் என்று நினைத்தேனோ, அதை விட்டு இவ்வளவு தூரம் எப்படி சென்றேன் என்று

நினைத்துக்கொண்டிருப்பீர்கள். அதற்கான விளக்கம் இதோ: "*மாம்சம் ஆவிக்கு விரோதமாக போராடுகிறது.*" உங்களுக்குள் தேவனுடைய ஒரு பகைஞன் வேலை செய்து கொண்டிருக்கிறது - உங்கள் ஜென்ம சுபாவம். அந்த எதிரியை சிலுவையினால் எதிர்கொள்ள வேண்டும். "*மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்துபோடும்*" வரை, நாம் கிறிஸ்தவ வாழ்வை வெற்றிகரமாக வாழ முடியாது (கலாத்தியர் **5:24**).

நான் மட்டும்தானா?

பவுலுக்கும் இதே பிரச்சனை இருந்ததென்று அறிவது உங்களுக்கு உற்சாகம் அளிக்கக்கூடும். மாம்ச சுபாவத்திற்கு விரோதமான போராட்டம், ஒரு சில பெலவீனர் மட்டும் அனுபவிக்கும் ஒன்றல்ல. அது எல்லா மனிதருக்கும் உலகளாவிய பிரச்சனை. ரோமர் 7ஐ வாசித்தால், மாம்சத்துடனான பவுலின் தனிப்பட்ட போராட்டங்களைக் காணலாம். அர்ப்பணிப்புள்ள கிறிஸ்தவர்கள் - குறிப்பாக தேவன் அதிகம் பயன்படுத்த விரும்பும் சிலர் - அதிகபட்சமான போராட்டங்களைச் சந்திக்கின்றனர் என்பது என்னுடைய பார்வை.

நீங்கள் இரட்சிக்கப்பட்டு, தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெற்று, ஆவியின் அபிஷேகம் பெற்று, அந்நிய பாஷைகளைப் பேசினால், உங்களுக்கு எந்தப் பிரச்சனையும் இருக்காது என்ற மனநிலையை அநேக கிறிஸ்தவர்கள் சொந்தப்படுத்திக்கொண்டுள்ளனர். அது அப்படி அல்ல என்று நீங்கள் கண்டறிந்ததுண்டா? கிறிஸ்தவர்கள் இப்படி விசுவாசிப்பது உண்மையாய் இருக்க வேண்டும் என்று விரும்புகிறேன், ஆனால் அது அப்படி அல்ல என்று அறிந்திருக்கிறேன். அல்லது, எனக்கு அப்படியாக இருந்ததில்லை. அது ஏன் அப்படி இப்பதில்லை என்ற காரணத்தைக் கண்டுபிடிக்கும் அளவிற்கு நான் ஒரு போதகராக இருந்துள்ளேன். அந்தக் காரணம் - மாம்சம் - எளிதான மற்றும் தெளிவானது - ஏனென்றால் மாம்சம் தேவனுடைய சத்துருவாக இருக்கிறது.

ரோமர் 7:15ல் தனது சொந்த அனுபவத்தைக் குறித்துப் பவுல் கூறும் காரியம் இதோ:

> *எப்படியெனில், நான் செய்கிறது எனக்கே சம்மதியில்லை; நான் விரும்புகிறதைச் செய்யாமல், நான் வெறுக்கிறதையே செய்கிறேன்.*

இந்த அனுபவத்தில் பவுல் விசித்திரமானவராக இருந்தாரா? இல்லை. நம்மெல்லாரையும் குறித்து இது உண்மையே. பவுலின் இந்தத் தடுமாற்றம் மற்றவர்களுக்கே உரியது என்று நாம் யாரையும் விரல் நீட்ட முடியாது. நாமெல்லாரும் கண்ணாடியில் பார்த்து, இது எனக்கும் பொருந்தும் என்றுதான் சொல்ல வேண்டும். இது ஏன் நடக்கிறதென்று பவுல் விளக்குகிறார். காரணம்? "*மாம்சசிந்தை தேவனுக்கு விரோதமான பகை: அது தேவனுடைய நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்படியாமலும், கீழ்ப்படியக் கூடாமலும் இருக்கிறது*" (ரோமர் 8:7).

மதம் உதவுவதில்லை

இந்தச் சிக்கலை மதத்தால் தீர்க்க முடியாது என்பது அநேகருக்கு ஆச்சரியத்தைத் தரும். பரிசுத்த ஆவியின் கிரியைக்கு எதிர்மறையாக மதம், மாம்சத்தை அடக்குவதற்காக சில சட்டங்களைப் பயன்படுத்தும் ஒரு அமைப்பாக உள்ளது. மதம் மாம்சத்தை பக்தியுள்ளதாக்கலாம் ஆனால், அது மாம்சத்தை தேவனுக்குப் பிரியமானதாய் மாற்றும் வல்லமை கொண்டதல்ல. பக்தியுள்ளவர்கள் மாம்சத்தை அடக்க மட்டும்தான் செய்கிறார்கள். வெளியரங்கமாய் மாம்சத்தை ஒழுங்காக செயல்பட கட்டாயப்படுதுகிற அவர்கள், உள்ளான மனநிலையில் இன்னமும் கலகக்காரராகவே இருக்கின்றனர்.

கலாத்தியர் 5:19-21ல், கலாத்தியர் மத்தியில் பரவலாக செயல்பட்ட சட்டவாதம் மற்றும் மாம்சீகத்தின் விளைவுகளைப் பட்டியலிடுகிறார்:

> *மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன அவையாவன: விபசாரம், வேசித்தனம், அசுத்தம்,*

> *காமவிகாரம், விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் முதலானவைகளே; இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை என்று முன்னே நான் சொன்னதுபோல இப்பொழுதும் உங்களுக்குச் சொல்லுகிறேன்.*

இப்பகுதியில் கூறப்பட்ட மாம்சத்தின் கிரியைகளை நீங்கள் ஆய்வு செய்தால், அவைகள் நான்கு வகைகளுக்குள் அடங்கும்:

முதலாவது, பாலியல் ஒழுக்கக்கேடு. இதில் விபசாரம், வேசித்தனம், அசுத்தம் மற்றும் காமவிகாரம் அடங்கும். பாலியல் ஒழுக்கக்கேடு மாம்சத்தின் கிரியையின் மிக முக்கியமான செயல்பாடு என்று அநேகர் நம்புகின்றனர். சிலர் இதை மட்டும் எதிர்கொண்டால் போதும் என்றும் நம்புகின்றனர். ஆனால் பாலியல் ஒழுக்கக்கேடு மட்டும் பெரிய பிரச்சனை ஆகாது.

இரண்டாம் பகுதி மாந்திரீகம் ஆகும். இது விக்கிரக ஆராதனை மற்றும் செய்வினையை உள்ளடக்கும், அல்லது ஒரு ஆங்கில மொழிபெயர்ப்பு கூறுவது போல, இது "*பில்லிசூனியம்*" ஆகும். இவை அனைத்தும் தெளிவான மாம்சத்தின் கிரியைகள் ஆகும். ஆனால் மாம்சீகம் இச்செயல்களில் ஈடுபடும்போது, அது பிசாசின் அடிமைத்தனத்திற்கு கதவைத் திறந்து கொடுக்கிறது.

விக்கிரக ஆராதனை மற்றும் பில்லிசூனியத்திற்கான ஆரம்ப ஊக்கம், மாம்ச சுபாவத்தில் நாட்டப்பட்டுள்ளது. மற்றவர்களைக் கட்டுப்படுத்தி, தன் விருப்பப்படி செயல்பட வைக்கும் மனுகுலத்தின் ஒரு வழிமுறை தான் பில்லிசூனியம். மற்றவர்களைக் கட்டுப்படுத்தும் எந்த முயற்சியும், பில்லிசூனியத்தின் ஆரம்பமாக இருக்கிறது. அந்தச் செயல் தொடரும்போதும், இன்னும் ஆழமாகும் போதும், அது

பேய்த்தனமாக மாறுகிறது.

மாம்சத்தின் கிரியைகளின் பட்டியலில் மூன்றாவது மற்றும் மிக பெரியதான பட்டியல், தவறான மனநிலைகளும் உறவுகளுமாகும். பவுல் இதில், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள், மற்றும் பொறாமைகளை பட்டியலிடுகிறார். இவைகள் பல தவறான மனநிலைகள் மற்றும் தவறான உறவுகளின் விவரிப்பாகும். விபச்சாரம் வேசித்தனம் எந்த அளவிற்கு மாம்சத்தின் பாவங்கள் ஆகுமோ, இவைகளும் அதே அளவிலான பாவங்கள் என்பதை நாம் உணர வேண்டும். பொதுவாக, பக்தியுள்ள மக்கள் இவைகளைக் கண்டுகொள்ள மாட்டார்கள் அல்லது இவைகள் தவறல்ல என்று கூட விட்டுவிடுவார்கள் - ஆனால் அதே நேரத்தில் எல்லா பாலியல் ஒழுக்கக்கேடுக்கும் எதிர்த்து நிற்பார்கள்.

கடைசி பிரிவு, ''சுய விருப்பத்திற்கு இடமளித்தல்'' என்று அழைக்கப்படும். இப்பகுதியில், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் "முதலானவைகள்" அடங்கும். இப்பழக்கங்கள் எப்படி பிரிக்கப்பட்டாலும் சரி, அது முக்கியம் அல்ல. ஒரு விதத்தில் பார்த்தால், இவை அனைத்தும் நம்முடைய மாம்ச சுபாவத்தின் வெவ்வேறு வெளிப்பாடுகள் ஆகும், சிலுவையினால் மட்டுமே இவைகளை எதிர்க்கொள்ள முடியும். இந்த அதிகாரத்தின் ஆரம்பத்தில் நான் கூறியவாறு, சிலுவையின் வல்லமை நம்மில் கிரியைசெய்து, மாம்சத்திலிருந்து விடுதலை அளிப்பதற்காக தேவனுக்கு நன்றி!

எல்லா பிரிவினைக்கும் காரணம்

மாம்சத்தினால் உண்டாகும் இன்னொரு பிரச்சனைக்கு கவனத்தைத் திருப்பி, 1 கொரிந்தியர் 3ல் சபையில் உண்டாகும் பிரிவினைகளுக்கான காரணத்தைப் பவுல் சுட்டிக்காண்பிக்கிறார் - ஜென்ம சுபாவம். சிலுவையின் மூலம் நாம் ஜென்ம சுபாவத்தை எதிர்கொள்ளும் வரை, கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் எப்போதும்

பிரிவினைகள் உண்டாயிருக்கும். கொரிந்திய கிறிஸ்தவர்களுக்கு பவுல் எழுதுகிறார்:

> *பொறாமையும் வாக்குவாதமும் பேதகங்களும் உங்களுக்குள் இருக்கிறபடியால், நீங்கள் மாம்சத்துக்குரியவர்களாயிருந்து மனுஷமார்க்கமாய் நடக்கிறீர்களல்லவா? ஒருவன் நான் பவுலைச் சேர்ந்தவனென்றும், வேறொருவன் நான் அப்பொல்லோவைச் சேர்ந்தவனென்றும் சொல்லுகிறபடியால் நீங்கள் மாம்சத்துக்குரியவர்கள் அல்லவோ?* (1 கொரிந்தியர் 3:3-4)

கொரிந்தியர் ஜென்ம சுபாவமுள்ளவர்கள் அல்லது மாம்சத்துக்குரியவர்கள் என்பது பவுலுக்கு எப்படி தெரியும்? அவர்களுக்குள் பிரிவினைகளும் போராட்டங்களும் இருந்ததே, அவர்கள் மாம்சத்தில் செயல்படுகின்றனர் என்பதைக் காண்பிக்க போதுமானதாக இருந்தது. மேலும், சிலர் "நான் பவுலைச் சேர்ந்தவன்" என்றும், மற்றவர்கள் "நான் அப்போல்லோவைச் சேர்ந்தவன்" என்றும் கூறிக்கொண்டிருந்தபடியால், அவர்களுக்குள் பிரிவினைகள் இருந்ததை அவர் அறிந்திருந்தார்.

நாம் கிறிஸ்துவைப் பின்பற்றாமல், மனித தலைவர்களை பின்பற்றுவதினால் பிரிந்திருக்கும் வரை, நாம் ஜென்ம சுபாவம் உள்ளவர்களாய் இருக்கிறோம். பவுலைப் பின்பற்றுவது சரி, அப்போல்லோவைப் பின்பற்றுவது தவறு என்று பவுல் சொல்லவில்லை. எந்த ஒரு மனிதத் தலைவரிடமும் பிரிவினைவாத விசுவாசத்தில் ஈடுபடுவது தவறு என்று அவர் கூறினார்.

இன்றும் கிறிஸ்தவர்களுக்குள் சிலர் "நான் லூத்தரை சார்ந்தவன்," அல்லது ''நான் வெஸ்லியைச் சார்ந்தவன்,'' அல்லது ''நான் கால்வினைச் சார்ந்தவன்," அல்லது ஏதோ ஒரு போதகர் அல்லது விசேஷித்த போதனை போதிப்பவரைச் சார்ந்தவர் என்று சொல்லுவார்கள். ஒரு தனி நபருக்கோ, போதனைக்கோ தங்கள்

முதல் அர்ப்பணிப்பைச் செலுத்தும் எந்தக் கிறிஸ்தவரும் இப்பிரிவுக்குள் வருகின்றனர்.

உபதேசம்தான் பிரிவினைக்குக் காரணம் என்று பலர் நினைக்கின்றனர். அது உண்மை அல்ல. மாம்சீகம்தான் பிரிவினையை உண்டாக்குகிறது. மாம்சீகமாக சரீரத்தைப் பிரிக்க உபதேசத்தைப் பயன்படுத்த முடியும். ஆனால், கிறிஸ்துவின் சரீரத்தில் பிரிவினைக்கு முக்கிய காரணம் மாம்சம்தான் - அதற்கு ஒரே தீர்வு சிலுவை மட்டுமே.

தேவனுடைய தீர்வைப் பயன்படுத்துதல்

மாம்சத்துடனான இத்தொடர் பிரச்சனைகளுக்குத் தேவனுடைய தீர்வு என்ன**?** பவுல் அதை ரோமர் **6:6**ல் தெளிவாக கூறுகிறார்:

> *நாம் இனி பாவத்துக்கு ஊழியஞ் செய்யாதபடிக்கு, பாவசரீரம் ஒழிந்துபோகும்பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம்.*

நியாயப்பிரமாணத்திலிருந்து விடுதலை என்ற முந்தைய அதிகாரத்தில் நாம் குறிப்பிட்டதுபோல, தேவனுடைய தீர்வு மரணதண்டனை மட்டுமே. இயேசுவின் மரணத்தோடு நம்மை நாம் இணைத்துக்கொள்ளும்போது, இந்த ஏற்பாடை தேவன் நமக்குச் செய்துள்ளார். ஆனால் இதில் மிகப்பெரிய சவால் இதோ: தேவன் நமக்குக் கொடுத்திருக்கும் தீர்வைப் பயன்படுத்த நாம் கற்றுக்கொள்ள வேண்டும்.

கிறிஸ்து தனது பங்கை நிறைவேற்றிவிட்டார், ஆனால் அவருடைய கிரியையோடு, அதின் பயன்பாட்டை நாம் கூட்டிச் சேர்க்க வேண்டும். 1 பேதுரு **4:1-2**ல் சில பிரயோஜனமான குறிப்புகளை நாம் காண்கிறோம்:

> *இப்படியிருக்க, கிறிஸ்து நமக்காக மாம்சத்திலே பாடுபட்டபடியால், நீங்களும் அப்படிப்பட்ட சிந்தையை ஆயுதமாகத் தரித்துக்கொள்ளுங்கள். ஏனென்றால்*

மாம்சத்தில் பாடுபடுகிறவன் இனி மாம்சத்திலிருக்கும் காலம்வரைக்கும் மனுஷருடைய இச்சைகளின்படி பிழைக்காமல் தேவனுடைய சித்தத்தின்படியே பிழைக்கத்தக்கதாகப் பாவங்களை விட்டோய்ந்திருப்பான்.

நம்மில் அநேகருக்கு வியப்பைத் தரும் ஒரு கோட்பாட்டை பேதுரு இங்கு முன்வைக்கிறார்: *"மாம்சத்தில் பாடுபடுகிறவன்... பாவங்களை விட்டோய்ந்திருப்பான்."* பல காலத்திற்கு அந்த வாக்கியத்தைக் குறித்து நான் சிந்தித்தேன். என்னுடைய நினைவுகள் இப்படியாக் இருந்தன: *இயேசு எனக்காக பாடுப்பட்டிருப்பாரானால், நான் ஏன் பாடுபட வேண்டும்?* இயேசு அதற்கான ஏற்பாடை செய்துவிட்டார் ஆனால் அதைப் பயன்படுத்துவது நமது பொறுப்பு என்பதைக் காண தேவன் எனக்கு உதவி செய்தார்.

கலாத்தியர் **5:24**ன் படி *''கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தை சிலுவையில் அறைந்தவர்கள்''* என்பதை நினைவுகூறுங்கள். தேவன் நம்மைச் சிலுவையில் அறைவதில்லை. நாம்தான் அதைச் செய்ய வேண்டும் - எப்படிப் பார்த்தாலும், சிலுவையில் அறைதல் என்பது வேதனையுள்ளதுதான். நம்முடைய மாம்ச சுபாவத்தை சிலுவையில் அறைய, நாம் என்ன செய்ய வேண்டும்**?** நம்முடைய பொல்லாத, கலகம் நிறைந்த விருப்பங்கள் மற்றும் மனநிலைகளைப் பிடித்து, அவைகளைச் சிலுவையில் ஆணியடிக்க வேண்டும்.

வேதாகமத்தின் ஆணிகளை நீங்களும் நானும் எடுத்து, நமக்குள் இருக்கும் கலகக்காரனைக் கொல்ல, நமது கால் கரங்கள் வழியாக அவைகளைச் செலுத்த வேண்டும். நீங்களும், நானும்தான் செய்ய வேண்டும். அது நமக்காக செய்யப்பட மாட்டாது. வேதனையுள்ளதுதான் - ஆனால் பாவத்தை விட்டு வெளியேரும் ஒரே வழியும் அதுவே.

ஒரு செயல்முறை உதாரணம்

இக்கோட்பாடை புரிந்துகொள்ள எளிதாக்கும் ஒரு உதாரணம் இதோ. இருவது வயது நிரம்பிய, அர்ப்பணிப்புள்ள ஒரு இளம் கிறிஸ்தவ பெண்ணை எடுத்துக்கொள்ளுங்கள். நல்ல விசுவாசிகளின் ஐக்கியத்தில் அங்கத்துவம் கொண்டுள்ளாள். அவளுடைய போதகர் தெய்வ பக்தியுள்ள மனிதன், அவளுடைய ஆத்துமாவைக் குறித்து அக்கரைக்கொண்டவர்.

காலப்போக்கில், அர்ப்பணிப்புள்ள கிறிஸ்தவர் அல்லாத ஒரு மனிதனுடன் உணர்ச்சிப்பூர்வமாக இணைகிறாள். அவளைத் திருப்தி செய்ய மட்டுமே அந்த மனிதன் அவளுடன் சபைக்குச் செல்கிறார். ஆனால் அவன் உண்மையில் தன் வாழ்வை இயேசுவுக்கு அர்ப்பணித்ததே இல்லை. அந்தப் பெண்ணின் போதகர், அந்த மனிதனுடன் தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டாம் என எச்சரித்துள்ளார் ஏனென்றால் அவர் அர்ப்பணிக்கப்பட்ட கிறிஸ்தவன் அல்ல, எனவே அந்த உறவு சரியாக நிலைநிற்குமா என்பதை உறுதியாக கூற முடியாது.

இப்போது, அவளுக்கு இரண்டு தீர்வுகள் இருக்கின்றன, இரண்டுமே வேதனையுள்ளவைதான். அவள் தன் போதகரின் ஆலோசனையை ஏற்றுக்கொண்டு, தன் சொந்த உணர்ச்சிகளையும் ஆசைகளையும் சிலுவையில் அறையலாம். அப்படிப்பட்ட நிலையில் அவள், “நான் அவனை நேசிக்கிறேன் ஆனால் அது முக்கியமானது அல்ல, நான் திருமணம் செய்துகொள்ள விரும்புகிறேன், ஆனால் அதுவும் முக்கியமான காரியம் அல்ல. நான் தனிமையாய் இருப்பதை குறித்துப் பயப்படுகிறேன், ஆனால் அதுவும் முக்கியமானது அல்ல” என்று சொல்லுவாள்.

அந்த ஒவ்வொரு அசைவுகளும், மனநிலைகளும் சிலுவையில் அறையப்பட வேண்டும். அது அவளுக்கு வேதனையாக இருக்கலாம், ஆனால் அந்த வேதனை என்றைக்கும் இருக்காது. சில காலம் சென்ற பின்பு, மகிமையான விடுதலை உண்டு. அந்த சம்பவத்திற்கு

ஒரு சந்தோஷமான முடிவை நாம் திட்டமிடலாம்: காலம் செல்ல, அந்த மனிதன் கிறிஸ்துவிடம் வருகிறார், அந்தப் பெண் அவரையே திருமணம் செய்துகொண்டு, பின் எப்போதும் சந்தோஷமாக வாழ்ந்தார்கள். நாம் எல்லாரும் விரும்பும் சந்தோஷமான முடிவு அதுதான். ஆனால் அந்த மனிதன் என்ன செய்கிறானோ இல்லையோ, அந்த இளம் பெண் தன் விருப்பங்களைச் சிலுவையில் அறைய நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்போதுதான் அவள் விடுதலையாக இருப்பாள்.

ஒரு வேளை அவள் தன் ஆசைகளை சிலுவைக்கு கொண்டுவரவில்லை என்று வைத்துக்கொள்வோம் - அவள் தன் மனநிலைகளை, விருப்பங்களை மற்றும் உணர்ச்சிகளை சிலுவையில் அறையவில்லை. அந்த மனிதனைத் திருமணம் செய்கிறாள், பதினைந்து ஆண்டுகள் சென்று, மூன்று பிள்ளைகளும் ஆன நிலையில், வேறொருத்திக்காக இவளை விட்டுச் செல்கிறான் என வைத்துக்கொள்வோம். அப்பொழுது, அவள் தன் வாழ்க்கையின் துணிக்கைகளைப் பொறுக்கிக்கொண்டு, தனக்கு கணவன் இல்லாமலும், பிள்ளைகளுக்கு தகப்பன் இல்லாமலும் அவள் குடும்பத்தைக் கையாள வேண்டிய நிலை வரும்.

இந்த முடிவு இன்னும் அதிக வேதனையுள்ளது. அந்த வேதனை அதிக காலம் நிலைத்திருக்கிறது. இந்த விளைவின் முடிவில், அவள் தவறை உணர்ந்து, சுய-சித்தமுள்ளவளாகவும், சுயத்தை திருப்தி செய்பவளாகவும் இருந்து விட்டேன் என்பதை உணர்ந்து கொள்வாள். அவள் தன் மாம்சத்திற்கு இடமளித்து, சிலுவையை ஏற்றுக்கொள்ளவில்லை.

ஒருமுறை இந்த உதாரணத்தை விசுவாசிகளின் ஒரு கூட்டத்தில் நான் கொடுத்தபோது, முன் வரிசையில் அமர்ந்திருந்த ஒரு பெண், “என் கதையை அப்படியே சொன்னீர்கள்” என்று கூறினாள். அவள் அப்போதுதான் விவாகரத்து பெற்றிருந்தாள், அவள் கணவன் அவளை ஆறு பிள்ளைகளுடன் விட்டுச் சென்றான். எல்லா விவாகரத்துக்களும்

இந்த காரணத்தினால்தான் உண்டாகிறதென்று நான் சொல்லவில்லை. ஆனால் அநேக கிறிஸ்தவ திருமணங்கள் சந்தோஷமற்று இருப்பதற்குக் காரணம் மாம்சத்தை சிலுவையில் அறையாததுதான்.

உங்களிடம் என் சவால் இதோ: வேதனையாக தோன்றும் தேவனுடைய தீர்வை நீங்கள் ஏற்றுக்கொள்ளப் போகிறீர்களா (உண்மையில் உங்கள் மிகப் பலமான ஆசைகள், விருப்பங்கள் மற்றும் உணர்ச்சிகளை நிராகரிப்பது வேதனையுள்ளதுதான்)? அல்லது சிலுவையை நிராகரித்து, அதின் விளைவுகளைச் சந்தித்து பாடுப்படப்போகிறீர்களா? இவைகள் காலப்போக்கில் இன்னும் வேதனையை அளிக்கும். இந்த தீர்மானத்தைத்தான் நாம் செய்ய வேண்டும்.

நீங்கள் எடுக்கக்கூடிய ஒரு படி

இந்த அதிகாரத்தை நாம் முடிவுக்குக் கொண்டு வரும் அத்தருணத்தில், உங்கள் இருதயத்துக்குள் ஏதோ ஒரு எழுச்சி ஏற்படலாம். நான் இப்போது விவரித்த அதே சூழ்நிலையை உங்கள் வாழ்வில் நீங்கள் சந்தித்துக்கொண்டிருக்கலாம். அது ஒரு காதல் சிக்கலாக இருக்க தேவையில்லை - ஆனால் மாம்சம் ஜெயம்பெற்றுக்கொண்டிருக்கும் உங்கள் வாழ்வின் ஏதோ ஒரு பகுதியாக அது இருக்கலாம். அந்த மாம்சீக ஆசைகளையும் மனநிலைகளையும் சிலுவையில் அறைய துவங்கும் நொடி இதுவாக இருக்கலாம்.

அந்தச் செயல்தொடரை ஆரம்பிக்க ஆயத்தமா என்று உங்களையே கேட்டுக்கொள்ளுங்கள். நாம் இப்போது செய்யப்போகும் ஜெபத்தினால் அந்தப் பிரச்சனை முழுவதுமாக தீர்வு பெறாமல் இருக்கலாம். ஆனால் நான் முதல் படிகளை எடுத்து வைக்க ஆயத்தம் என்று நீங்கள் ஆண்டவரிடம் சொல்லலாம். அதற்காக என்னுடன் இந்த ஜெபத்தில் இணைவீர்களா?

ஆண்டவரே, நான் எதிர்கொள்ள வேண்டிய ஒரு பகுதியை உமது விரலால் சுட்டிக் காண்பிக்கிறீர். இந்த நொடியில் எனக்கு உதவி செய்யும். இந்தக் காரியத்தை உமது சிங்காசனத்தின் முன் நான் கொண்டுவருகிறேன். உமது சமூகத்தில் அதை என்னவென்று அறிக்கைசெய்கிறேன்: உம்மோடு இருக்கும் உறவின் பாதையில் தடுக்கலாய் இருக்கும் மாம்சத்தின் கிரியை என்று ஒப்புக்கொள்கிறேன். விசுவாசத்தினால், அதைச் சிலுவையில் வைத்து, அதைத் தியாகம் செய்யவும் விட்டுவிடவும் முதலாம் ஆணியை அடிக்கின்றேன். அப்படிச் செய்யும்போது, இந்த அதிகாரத்தில் நான் கற்றுக்கொண்ட சத்தியத்தை நான் அறிக்கையிடுகிறேன்: உம்முடையவர்கள் தங்கள் மாம்சத்தையும், அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்துள்ளார்கள். விசுவாசத்தினால், இயேசு கிறிஸ்துவின் சிலுவை என் வாழ்வில் இந்த மற்றும் எந்த மாம்சத்தின் கிரியையிலிருந்தும் விடுதலையை வழங்கும் என்று அறிக்கையிடுகிறேன்.

ஆமென்.

அதிகாரம் 13

உலகத்திலிருந்து விடுதலை

நாம் ஆராயப்போகும் ஐந்தாவது மற்றும் இறுதி விடுதலை உலகத்திலிருந்து விடுதலை. பவுல் இந்த விடுதலையை இவ்வாறு விவரிக்கிறார்:

> *நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையுங்குறித்து மேன்மை பாராட்டாதிருப்பேனாக; அவரால் உலகம் எனக்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறது, நானும் உலகத்திற்குச் சிலுவையில் அறையுண்டிருக்கிறேன்.* (கலாத்தியர் 6:14)

முதலாவது *''உலகம்''* என்பது இவ்வசனத்தில் எப்படி பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை நாம் வரையரை செய்ய வேண்டும். ''உலகப்பிரகாரமான'' என்ற வார்த்தையை கிறிஸ்தவர்கள் பல நேரங்களில் சக-கிறிஸ்தவர்களை விமர்சிக்கவும், கிறிஸ்தவர்கள் அல்லாதவர்களைக் குற்றப்படுத்தவும் பயன்படுத்துகின்றனர். ஆனால் அது தேவனுடைய நோக்கமும் அல்ல, விருப்பமும் அல்ல. "உலகம்" என்பதற்கு ஒரு நல்ல, செயல்படக்கூடிய வரையறை இதுவாக இருக்கும் என நான் நம்புகிறேன்: *உலகம் என்பது இயேசு கிறிஸ்துவின் நீதியுள்ள அரசாட்சியை மறுக்கும் ஒரு சமூக ஒழுங்கு அல்லது வாழ்க்கை முறையாகும்.* இயேசு தேவனால் ஏற்படுத்தப்பட்ட மனுகுலத்தின் ஆளுநராகவும் அதிபதியாகவும் இருக்கிறார் என்பதை இவ்வாக்கியமானது மிகுந்த முக்கியமான கருத்தாக அங்கிகரிக்கின்றது.

எனவே உலகம் என்பது இயேசுவின் நீதியுள்ள அரசாட்சியை மறுக்கும் ஒரு அமைப்பு, அல்லது மனநிலை. உலக மக்கள் பக்தியுள்ளவர்களும், நல்லவர்களும், மதிப்புக்குரியவர்களாகவும் இருக்கலாம். ஆனால் இயேசுவின் இறையாண்மைக்கு தடையற்ற அர்ப்பணிப்பைக் குறித்து அவர்களுக்கு நாம் சவால் விடும்போது, சுய-சித்தம் மற்றும் கலகம் நிறைந்த ஒரு மனநிலை வெளிவரும். அதுதான் *உலகம்*.

உலகத்தை விட்டு அழைக்கப்பட்டவர்கள்

மேல் காணும் சூழ்நிலையில், புதிய ஏற்பாட்டிலிருந்து, உலகம் என்பதற்கான பொருள் விளக்கத்தைக் குறித்த சில சத்தியங்கள் இதோ. யோவான் 15:18-19ல், "உலகம்" என்ற வார்த்தையை தன் சீஷர்களுடன் பேசுகையில் இயேசு ஆறு முறை கூறுகிறார்:

> *உலகம் உங்களைப் பகைத்தால், அது உங்களைப் பகைக்கிறதற்குமுன்னே என்னைப் பகைத்ததென்று அறியுங்கள். நீங்கள் உலகத்தாராயிருந்தால், உலகம் தன்னுடையதைச் சிநேகித்திருக்கும்; நீங்கள் உலகத்தாராயிராதபடியினாலும், நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்து கொண்டபடியினாலும், உலகம் உங்களைப் பகைக்கிறது.*

இந்த உலகத்திலிருந்து இயேசு நம்மைத் தெரிந்தெடுத்திருக்கிறார். புதிய ஏற்பாட்டின் கிரேக்கத்தில் *"சபை"* என்பதற்கு *"எக்லீசியா"* என்ற வார்த்தை பயன்படும், அதற்கு *"வெளியே அழைக்கப்பட்ட ஒரு கூட்ட மக்கள்"* என்று அர்த்தம். சபையைப் பொருத்த வரையில், அது உலகத்திலிருந்து வெளியே அழைக்கப்பட்ட மக்களின் கூட்டம். நாம் உலகத்தில் இருக்கலாம் அல்லது சபையில் இருக்கலாம். ஆனால் நாம் இரண்டிலும் இருக்க முடியாது. இவை ஒன்றை ஒன்று பரஸ்பரம் தவிர்க்கும்.

அப்போஸ்தலனாகிய யோவான் உலகத்தின் கவர்ச்சி மற்றும் ஈர்ப்பை குறித்து எழுதுகிறார்:

> *உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்பு கூறாதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்பு கூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை. ஏனெனில், மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகள் எல்லாம் பிதாவினால் உண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினால் உண்டானவைகள்.* (1 யோவான் 2:15-17)

உலகத்தை நேசிக்கிறீர்களா? உலகத்தை நாம் நேசிக்கிறோமா இல்லையா என்பதுதான் இந்த யுகத்தின் பெரும் கேள்வி. நம்மில் அநேகருக்குக், குறிப்பாக இளமையில், உலகத்தை நேசிக்க பெரும் சோதனை உண்டாகிறது. நமக்குக் கொடுக்க உலகம் அதிகமானதை வைத்திருக்கிறது என்று தோன்றும். ஆனால் உலகத்தின் கவர்ச்சியெல்லாம் வெறும் மினுக்குத்தான்; அதில் உண்மை என்பது இல்லை.

நமக்கு வயது செல்ல செல்ல, உலகத்தை நேசிப்பது பெரும் பிரச்சனை அல்ல, ஆனால் உலகத்திலிருந்து நாம் பெற்றுக்கொண்டவைகளை அதிகம் நேசிக்கிறோம் - ஒரு விசேஷ கார், ஒரு பெரிய வீடு, அல்லது ஒரு பெரிய அலமாரி நிறைய துணிகள். அந்த உடமைகளின் பக்கம் நம்மை ஈர்க்கும் சக்தி வாய்ந்த ஏதோ ஒன்று இருக்கிறது.

இன்னும் வயது சென்ற முதிர்ந்தவர்கள் ஓர் அளவு உலகத்தை குறித்து ஏமாற்றம் அடைந்து விடுகின்றனர். ஆனால் அந்த முதிர் வயதிலும் உலகத்தைக் குறித்த ஒரு சக்திவாய்ந்த ஈர்ப்பு நம்மைப் பற்றிக்கொண்டுதான் இருக்கிறது. நம் மனதையும் உணர்ச்சிகளையும் பற்றிக்கொள்ள, உலகத்தின் வல்லமையைப் பெலப்படுத்தும் நம்முடைய அறிவாற்றல், உணர்ச்சி, தத்துவம், அல்லது மத பின்னணியில் இருக்கும் ஏதோ ஒன்று அது.

உலகத்தின் ஈர்ப்பை மேற்கொள்ளுதல்

உலகத்தின் ஈர்ப்புக்கு விரோதமாக நாமெல்லாரும் (நானும் உட்பட) போராடுகிறோம். இதை எதிர்கொள்ள நான் பயன்படுத்தும் ஒழுங்குகளில் ஒன்று - நான் உலக குப்பையினால் என் மனதை நிரப்பிக்கொள்வதில்லை. என் மனதிற்கு ஏதோ ஒன்று ஆரோக்கியமற்றது என்று தோன்றினால், அதற்கு என் மனதை நான் அடைத்து, முற்றிலும் தவிர்த்து விடுவேன். என் மனதில் எந்த குப்பையையும் சுமக்க எனக்கு விருப்பம் இல்லை. ஒழுக்கக்கேடு மற்றும் சிற்றின்பங்களில் ஈடுப்படாத பல கிறிஸ்தவர்கள், அறிவாற்றல் குப்பையைச் சுமக்கின்றனர். அவ்விதமாக உலகம் அவர்கள் வாழ்வை இன்னமும் பற்றிக்கொண்டிருக்கிறது.

நாம் முன்பு வாசித்த யோவானின் முதல் நிரூபத்தில், நாம் உலகத்தையும் பிதாவாகிய தேவனையும் ஒரே நேரத்தில் நேசிக்க முடியாது என்று அப்போஸ்தலன் கூறுகிறார். நாம் தேர்ந்தெடுக்க வேண்டும் - ஏனென்றால் உலகத்தில் உள்ளதெல்லாம் பிதாவாகிய தேவனால் உண்டானது அல்ல. நம்முடைய கவனத்தை ஈர்க்கும் இவ்வுலகத்தின் முறைமையில், யோவான் மூன்று விதமான குறிப்பிட்ட சோதனைகளைக் குறிப்பிடுகிறார் : *"மாம்சத்தின் இச்சை, கண்களின் இச்சை மற்றும் ஜீவனத்தின் பெருமை"* (1 யோவான் 2:16).

ஏதேன் தோட்டத்தின் முதன்மையான சோதனையில், இம்மூன்று சோதனைகளும் இருந்தன. மரத்தின் கனி ஆகாரத்திற்கு நல்லதாக இருந்தது: அது புசிப்பதற்கு மாம்சத்துக்கு நல்லதாக இருந்தது. கனி பார்வைக்கு நலமாக இருந்தது: அது கண்களுக்கு இன்பமாக இருந்தது. ஒருவரை ஞானியாக்க அந்த கனி விரும்பப்படத்தக்கதாக இருந்தது: ஜீவனத்தின் பெருமைக்கு வழிவகுத்தது. (ஆதியாகமம் 2:15-17; 3:1-7ஐ பார்க்கவும்.) ஜீவனத்தின் பெருமை தந்திரமானது. "என் வாழ்க்கையை நானே பார்த்துகொள்வேன். எனக்குத் தேவன் தேவை இல்லை" என்று கூறுகிறது.

பொல்லாப்பு செய்ய வேண்டும் என்ற வாஞ்சையிலிருந்து ஆதாம் ஏவாளின் பாவம் முளைக்கவில்லை. உண்மையில், அந்தச் சோதனை - தந்திரமாக மற்றும் வல்லமையாக - நன்மையான ஒன்றாகதான் இருந்தது: தேவனைப்போல் நன்மை தீமையை அறிய. அந்த வாஞ்சை தன்னில்தானே தவறானது அல்ல. ஆனால், கீழ்ப்படியாமையில் ஆதாம் ஏவாளுக்கு, அது அவர்களுடைய பாவத்தின் சாராம்சமாக இருந்தது - என்னவென்றால் *தேவனிடமிருந்து சுயாதீனமாக இருக்க வேண்டும்* என்ற வாஞ்சை. அந்த வாஞ்சைதான் ஜீவனத்தின் பெருமை. தேவனை சார்ந்து கொள்வதை எதிர்க்கும் எந்த எண்ணமும் நமக்குள் இருக்குமாயின், நமக்குள் ஜீவனத்தின் பெருமை இன்னும் நிலைத்திருக்கிறது என்பதே அர்த்தம்.

யோவான் சொல்கிறார்: *"உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம்; தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்"* (1 யோவான் 2:17). இது மிகவும் ஆச்சரியமான வாக்கியம். இவ்வுலகிலுள்ள அனைத்தும் அநித்தியமானது - அது நிலைக்காது. ஆனால் உலகத்தின் காரியங்களைத் துறந்து, தேவனுடைய சித்தத்துடன் நம்முடைய சித்தத்தை நாம் முழுமையாக வரிசைப்படுத்திக்கொண்டால், ஒன்றும் நம்மைத் தோற்கடிக்க முடியாது, ஏனென்றால் தேவனுடைய சித்தத்தை எதுவும் தோற்கடிக்க முடியாது.

நமக்கு முன் இருக்கும் தேர்வுகள் இதோ: நாம் உலகத்தில் உளன்று, அதின் வேதனைகளை அனுபவிக்கலாம். அல்லது உலகத்திற்கு நம்முடைய முதுகைத் திருப்பி, தேவனுடைய சித்தத்துடன் நாம் ஒருங்கிணைந்து, அசைக்கப்படாத, மூழ்கடிக்கப்படாத, தோற்கடிக்கப்படாதவர்களாய் மாறலாம்.

1 யோவான் 5:19ல் அப்போஸ்தலன் ஒரு பெரிய அறிக்கையை செய்கிறார்: "நாம் தேவனால் உண்டாயிருக்கிறோம் என்றும், உலகம் முழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறதென்றும் அறிந்திருக்கிறோம்." மூல கிரேக்கத்தில், அந்த வசனத்தின் கடைசி பகுதி எளிதாக

கூறப்பட்டுள்ளது. ''...உலகம் முழுவதும் பொல்லாதவனுக்குள் இருக்கிறது" என்று கூறுகிறது. பொல்லாதவன் சாத்தான். உலகம் முழுவதும் சாத்தானின் ஆதிக்கத்தின் கீழ் உள்ளது.

வெளிப்படுத்தல் 12:9ல், சாத்தான் *"பெரிய வலுசர்ப்பம்," "பழைய பாம்பு," "பிசாசு"* (அவதூறு செய்கிறவன்), மற்றும் *"சாத்தான்"* (எதிராளி), *"உலகம் முழுவதையும் மோசம்போக்குகிறவன்"* என்று அழைக்கப்படுகிறான். உலகம் முழுவதும் சாத்தானின் வஞ்சகத்தின் கீழ் உள்ளது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். மேலும் தேவனையும் உலகத்தையும் ஒரே நேரத்தில் நாம் நேசிக்க முடியாது என்பதை நாம் நினைவுகூற வேண்டும். யாக்கோபு எழுதுகிறார்:

> *விபசாரரே, விபசாரிகளே, உலகசிநேகம் தேவனுக்கு விரோதமான பகையென்று அறியீர்களா? ஆகையால் உலகத்துக்குச் சிநேகிதனாயிருக்க விரும்புகிறவன் தேவனுக்குப் பகைஞனாகிறான்.* (யாக்கோபு 4:4)

ஐந்தாவது அணி

இயேசு சொன்னார், *"இந்த உலகத்தின் அதிபதி வருகிறான், அவனுக்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை"* (யோவான் 14:30). இவ்வாக்கியத்தோடு இணைந்து, நான் ஒரு எடுத்துக்காட்டைக் கொடுத்து இந்த அத்தியாயத்தை முடிவுக்குக் கொண்டுவர விரும்புகிறேன். "நமக்குள்" பிசாசுக்கு ஏதாகிலும் உண்டா என்ற கேள்வியை நம்மை நாமே கேட்டுக்கொள்ள வேண்டும். அல்லது, வேறு விதமாக கூறினால், எதிரியோடு ஒத்துழைக்கும் ஒரு ஐந்தாவது அணி நமக்குள் இருக்கிறதா?

"ஐந்தாம் அணி" என்ற பதத்தின் ஆரம்பம் மிகவும் சுவாரசியமானது. 1936க்கும் 1939க்கும் இடையில், ஸ்பெயின் நாட்டில் உள்நாட்டுப் போர் நடந்தது. ஜெனரல் எமிலியோ மோலா என்பவர் பத்திரிக்கையாளர் ஒருவரிடம், தனக்கு பட்டணத்தைப் பிட்டிக்க நான்கு அணிகள் இருப்பதாகவும், அவைகள் பட்டணத்தைப் பிடிக்க மேட்ரிட் நகரை

நோக்கி நடைபோட்டுக்கொண்டிருப்பதாகவும் கூறினார். தம்மைப் பின்பற்றுகிற ஒரு "ஐந்தாவது அணி" பட்டணத்திற்குள் இருந்து தனக்கு ஆதரவாக எதிரியின் அணியை பெலவீனப்படுத்தும் என்றும் கூறினார்.

அதேபோல், சபை ஒருபோதும் வெளியிலிருந்து தோல்வி அடையாது. நீங்களும் நானும் வெளியிலிருக்கும் எந்த வல்லமைகளாலும் தோற்கடிக்கப்படுவதில்லை. ஆனால், நமக்குள்ளேயே ஒரு "ஐந்தாவது அணி" இருக்குமாயின், அதுதான் நம்மைத் தோல்வி அடையச் செய்யும். இயேசு கிறிஸ்து, "உலகத்தின் அதிபதிக்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை (எந்த ஐந்தாவது அணியும் இல்லை)" என்று கூறினார். இது நம்மைக் குறித்தும் உண்மையாக இருக்க வேண்டும்.

கப்பல் மற்றும் கடலைக் குறித்த ஒரு சிறிய உவமை இந்த உண்மையைத் தெளிவாக விளக்குகிறது:

கடலில் இருக்கும் கப்பல் சரியான இடத்தில் உள்ளது. ஆனால் கடல் கப்பலுக்குள் இருந்தால் அது தவறாகதான் முடியும்.

இதற்கான பயன்பாடு என்ன**?** உலகத்திலிருக்கும் சபை சரியான இடத்தில்தான் உள்ளது ஆனால் உலகம் சபைக்குள் வந்துவிட்டால் அது முற்றிலும் தவறாக இருக்கும். கடல், கப்பலுக்குள் வரும்போது கப்பல் மூழ்கும். உலகம் சபைக்குள் வரும்போது, சபை மூழ்கிப்போகும். உலகத்தின் பிடியிலிருந்து நம்மை விடுவித்து, விடுதலையை கொண்டுவரக்கூடிய ஒரே தீர்வு சிலுவைதான்.

கலாத்தியரில் விவரிக்கப்பட்டுள்ள, சிலுவையினால் உண்டாகும் ஐந்து அடிப்படை விடுதலைகள் இதோ:

பொல்லாத தற்காலத்து உலகத்திலிருந்து

நீதியைப்பெறும் வழியாக, நியாயப்பிரமாணத்திலிருந்து

சுயத்திலிருந்து

மாம்சத்திலிருந்து

உலகத்திலிருந்து

சிலுவையின் மூலம் நம்முடைய விடுதலைகளை உறுதிசெய்தல்

சிலுவை நமக்கு அளிக்கும் விடுதலைகளை உறுதிசெய்து இந்த அதிகாரத்தை முடிவுக்கு கொண்டுவருவது நலமாய் இருக்குமென நம்புகிறேன். இது கடந்த சில அதிகாரங்களில் நாம் கற்றுக்கொண்டவைகளை செயல்முறை விதத்தில் அப்பியாசித்தல் ஆகும். இப்புத்தகத்தில் முன்பு இரண்டு அறிக்கைகளைச் செய்தோம். அவைகள் இரண்டையும் மறுபடியும் அறிக்கை செய்து நம்முடைய விடுதலைகளை உறுதி செய்வோம் - கல்வாரியில் இயேசு நமக்காக சம்பாதித்த ஒவ்வொரு விடுதலையும். அவைகளைச் சத்தமாக கூறி, சிலுவையின் மூலம் சாத்தான் மீது இயேசு பெற்ற முழு வெற்றியையும் பிரகடணம் செய்வோம்.

இரத்தத்தின் வல்லமையை அறிக்கை செய்தல்

இயேசுவின் இரத்தத்தினால், நான் சாத்தானுடைய கையிலிருந்து மீட்கப்பட்டுள்ளேன்.[1]

இயேசுவின் இரத்தத்தினால், என பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்பட்டன.[2]

இயேசுவின் இரத்தத்தினால் நான் தொடர்ந்து பாவத்திலிருந்து சுத்திகரிக்கப்பட்டுகொண்டே இருக்கிறேன்.[3]

இயேசுவின் இரத்தத்தினால், நான் பாவமே செய்யாததுபோல், நீதிமானாக்கப்பட்டிருக்கிறேன்.[4]

இயேசுவின் இரத்தத்தால் நான் சுத்திகரிக்கப்பட்டு, பரிசுத்தமாக்கப்பட்டு, தேவனுக்கென்று பிரித்துவைக்கப் பட்டுள்ளேன்.[5]

இயேசுவின் இரத்தத்தினால் நான் தேவனுடைய பிரசன்னத்திற்குள் வர தைரியம் கொண்டுள்ளேன்.[6]

இயேசுவின் இரத்தத்தினால் நான் சாத்தானின் கிரியை மேற்கொள்கிறேன்.[7]

இயேசுவின் இரத்தம், பரலோகத்தில் எனக்காக தொடர்ந்து தேவனிடத்தில் பரிந்து பேசிக்கொண்டிருக்கிறது.[8]

[1]எபேசியர் 1:7; 1 பேதுரு 1:19. [2]எபேசியர் 1:7.
[3]1 யோவான் 1:7. [4]ரோமர் 5:9.
[5]எபிரெயர் 13:12. [6]எபிரெயர்10:19
[7]வெளிப்படுத்தல் 12:11 [8]எபிரெயர் 12:24

வெளிப்படுத்தல் 12:11ன் சத்தியங்களை அறிக்கை செய்தல்

இரண்டாவது அறிக்கை வெளிப்படுத்தல் 12:11ஐ அடிப்படையாக கொண்டது.

என் சரீரம் பரிசுத்த ஆவியானவரின் ஆலயம்; மீட்கப்பட்டு, சுத்திகரிக்கப்பட்டு, இயேசுவின் இரத்தத்தினால் பரிசுத்தமாக்கப் பட்டது. என் அவையவங்கள் அனைத்தும், தேவனுடைய சேவைக்கும், அவருடைய மகிமைக்கும் அற்பணிக்கப்பட்ட நீதியின் ஆயுதங்கள். பிசாசுக்கு என்னில் இடம் இல்லை, என் மேல் அதிகாரம் இல்லை, எனக்கு விரோதமான தீர்க்கப்படாத கூற்றுக்கள் ஒன்றுமில்லை. மரணமே நேரிடுகிறதாய் இருந்தாலும், என் ஜீவனையும் பாராமல், ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும், என்னுடைய சாட்சியின் வசனத்தினாலும், சாத்தானை மேற்கொள்கிறேன். என் சரீரம் தேவனுக்குரியது, தேவனும் என் சரீரத்திற்குரியவர்.

இந்த அறிக்கைகளைத் தொடர்ந்து செய்வதை நான் பரிந்துரைப்பேன். சிலுவையில் சாத்தான் மீது இயேசு பெற்ற வெற்றியை அப்பியாசிக்க இது சிறந்த செய்முறை வழியாகும். இவ்விதத்தில் உங்களுக்கு உதவும் விதமாக, இவ்விரண்டு அறிக்கைகளையும் இப்புத்தகத்தின் முடிவில் தனிப்பட்ட பகுதியில் இவைகளை நீங்கள் காணலாம். அது பயன்படுத்த எளிதாக இருக்கும்.

அதிகாரம் 14

சிலுவையின் அண்டை வருவது

என் வாழ்வின் சிலுவையின் கிரியையின் ஓர் உதாரணத்தோடு இப்புத்தகத்தை நான் நிறைவுக்குக் கொண்டுவர விரும்புகிறேன். இந்த உதாரணம் மற்றும் அதிகாரத்தின் இறுதியிலுள்ள ஜெபம், இரண்டும் சிலுவையை நம்முடைய தேவைகளுக்காக பயன்பாட்டில் கொண்டுவருவது எவ்வளவு செயல்முறையானது என்பதை விளங்கப்பண்ணும்.

கிறிஸ்துவுடனான எனது சந்திப்பு

1941ம் ஆண்டின் கோடைக்காலத்தில், பிரிட்டிஷ் ராணுவத்தில் நான் லான்ஸ் கார்போரலாக பணியாற்றுகையில், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுடன் எனக்கு ஒரு வியத்தகு தனிப்பட்ட அனுபவம் உண்டானது. அந்நேரத்தில் நான் மிகுந்த குழப்பத்தில் இருந்த ஒரு நபர். நான் தத்துவத்தின் மாணவனாக இருந்து தத்துவ கோட்பாடுகளைக் குறித்து சோர்ந்துபோனேன். சுருக்கமாக சொன்னால், வாழ்க்கைக்கான பதில்களைத் தேடி, அவைகளை எங்கும் கண்டடையாமல் இருந்தேன்.

ஆனால், இயேசு கிறிஸ்துவுடன் ஏற்பட்ட அந்த ஒரே சந்திப்பில், என் முழு வாழ்க்கையின் போக்கும் தீவிரமாகவும், நிரந்தரமாகவும் மாற்றப்பட்டது. அந்தச் சந்திப்பு ஏற்பட்டு, அடுத்த நாள் காலை தொடங்கி, நான் முற்றிலும் வித்தியாசமான நபரானேன். நான் குறைவற்றவன் அல்ல என்பதை மனதில் வைத்துக்கொள்ளுங்கள். உண்மையில், அன்றிலிருந்து நான் முற்றிலும் மாற்றப்பட்டேன்.

“கல்வாரியின் கிரியையை சிந்தித்துப்பார்”

அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு, ராணுவம் என்னை எகிப்து, லிபியா மற்றும் சூடான் தேசங்களின் வனாந்திரங்களுக்குள் அனுப்பியது. நான் வனாந்திரத்தில் இருந்தபோது, அந்நாட்களிலும் அக்காலநிலையிலும் மருத்துவர்களால் குணமாக்க முடியாத ஒரு தோல் நோயால் பாதிக்கப்பட்டேன். அதின் விளைவாக, சரியாக ஓர் ஆண்டை நான் எகிப்தின் ராணுவ மருத்துவமனைகளில் செலவழித்தேன்.

பல மாதங்களாக நான் மருத்துவமனையில் இருந்தபோது, இரட்சண்ய சேனையின் ஒரு பெண் பிரிகேடியர் ஜெனரல் என்னைச் சந்திக்க வந்தார்கள். அவர்களை விசித்திரமானவர்களாய் மாற்றினது என்னவென்றால் அவர்கள் அந்நிய பாஷை பேசும் ஒரு இரட்சண்ய சேனை பிரிகேடியர்! அவர்கள் தனது முழு இரட்சண்ய சேனை உடையுடன் மருத்துவமனைக்குள் வீரநடை போட்டு, செவிலியரை கவர்ந்து, தன்னுடன் நான் வெளியே சென்று, தன் காரில் உட்கார்ந்து ஜெபிக்க அனுமதி பெற்றுக்கொண்டார்கள். ஜெபிக்க விரும்புகிறீர்களா என்றெல்லாம் என்னைக் கேட்கவில்லை. நாம் ஜெபிக்கபோகிறோம் என்ற முடிவை எடுத்தார்கள்!

ஒக்லோஹோமாவில் இருந்து தன்னுடன் அந்தப் பெண் பிரிகேடியர் ஜெனரல் அழைத்து வந்திருந்த ஒரு பெண்ணுடன் நான் காரின் பின் இருக்கையில் அமர்ந்தேன். நாங்கள் சற்று நேரம் ஜெபித்துக்கொண்டிருந்தோம், திடீரென்று என் பக்கத்தில் அமர்ந்திருந்த அந்த இளம் பெண், அந்நிய பாஷைகளைப் பேச தொடங்கினாள். அவள் அந்நிய பாஷைகளைப் பேசினதுடன், அதிர ஆரம்பித்தாள்.

கவனிக்கத்தக்க விதத்தில் அவள் அதிர்ந்துகொண்டிருந்தாள், அப்போதுதான் நானும் அதிர்ந்துகொண்டிருக்கிறேன் என்பதை உணர்ந்தேன். அது மட்டுமல்ல காரிலுள்ள அனைவரும் அதிர்ந்துகொண்டிருந்தனர். அதற்குப்பின் அந்தக் கார் முழுவதும்

அதிர்வதை உணர்ந்தேன்! கார் நின்றுகொண்டிருந்தது, அதின் இயந்திரமும் இயங்கவில்லை - ஆனால் கரடுமுரடான சாலையில் வேகமாக செல்லும்போது ஏற்படும் அதிர்வுக்கு ஒத்திருந்தது. உடனே, இதை எல்லாம் தேவன் என்னுடைய பயனுக்காக செய்கிறார் என்பதை உள்ளுணர்வாக உணர்ந்தேன். ஒக்லஹோமாவிலிருந்து வந்த அந்த இளம் பெண் அந்நிய பாஷையில் பேசின பிற்பாடு அதின் வியாக்கியானத்தை ஆங்கிலத்தில் சொன்னாள். அவள் சொன்ன அனைத்தும் எனக்கு நினைவில் இல்லை ஆனால் என்னுடைய உணர்வில் எரிந்து பதிந்ததுபோல் இரண்டு வாக்கியங்கள் இருந்தன, அவைகள் இன்றும் அங்கேயே உள்ளன. அவ்வார்த்தைகள் என்னுடன் பேசப்பட்டவை என்பதை நான் அறிந்திருந்தேன். அவள் சொன்னது:

கல்வரியின் கிரியையை சிந்தித்துப்பார். ஒரு குறைவற்ற கிரியை - எல்லா விதத்திலும் குறைவற்றது, எல்லா அம்சத்திலும் குறைவற்றது.

கிரேக்கம் படித்ததினால், என் மனது உடனே கிரேக்க புதிய ஏற்பாட்டிற்கும், இயேசு சிலுவையில் பேசின இறுதி வார்த்தைகளுக்கும் சென்றது: *"முடிந்தது!"* (யோவான் 19:30). உண்மையில் அந்த மொழிபெயர்ப்பு குறைவுள்ளதுதான் ஏனென்றால் அங்குள்ள வினைச்சொல் பூரண காலத்தில் உள்ளது. சரியாக மொழிபெயர்த்தால், கிரேக்க வினைச்சொல்லின் பூரண காலத்தால், அதற்கு அர்த்தம், ஒன்றைப் பூரணமாய் அல்லது நிறைவாய் செய்தல் என்று அர்த்தமாகும். எனவே "நிறைவாய் நிறைவேற்றப்பட்டது" அல்லது "முழுவதுமாய் முடிந்தது" என்று சொல்லலாம்.

இந்த இளம் பெண் "ஒரு குறைவற்ற கிரியை - எல்லா விதத்திலும் குறைவற்றது, எல்லா அம்சத்திலும் குறைவற்றது" என்று சொன்ன போது, உடனே அது *"முடிந்தது"* என்ற இயேசுவின் வாக்கியத்தை பரிசுத்த ஆவியானவர் எனக்கு விளக்குகிறதை அறிந்தேன்.

அங்கேயே, அப்போதே தேவன் எனக்குக் காண்பிக்கும் உண்மையை உணர்ந்தேன். என்னுடைய தேவைக்கான பதில், எனக்காக இயேசு சிலுவையில் செய்த செயலில் அடங்கியிருக்கிறது

என்பதை அவர் எனக்குத் தெரிவித்துக்கொண்டிருந்தார். அதையும் கடந்து, என் வாழ்வில் எழும்பக்கூடிய எல்லாத் தேவைகளும், கல்வாரி சிலுவையில் இயேசுவின் பலியால் சந்திக்கப்பட்டது. அது எல்லா விதத்திலும் நிறைவாய் இருந்தது. தேவை என்னவாக இருந்தாலும் பிரச்சனையில்லை. அது ஆவிக்குரியதாக, சரீரப் பிரகாரமானதாக, பொருளாதாரமாக, தற்காலத்திற்கானதாக அல்லது நித்தியத்திற்கானதாக இருக்கலாம் - எல்லாம் அதற்குள் அடங்கும். எந்தக் கோணத்திலிருந்து நான் சிலுவையைப் பார்த்தாலும், - அது பூரணமாய் இருந்தது.

அந்தக் காரை விட்டு நான் வெளியே வந்தபோது, உள்ளே செல்லும்போது எந்த அளவிற்கு வியாதிப்பட்டிருந்தேனோ, அதே நிலையில்தான் வெளியே வந்தேன். ஆனால், தேவன் என் தேவைக்கான பதிலை எங்கு கண்டுப்பிடிப்பது என்பதைக் காண்பித்துவிட்டார். மருத்துவமனையில் அடுத்த மூன்று அல்லது ஐந்து மாதங்களுக்கு, பரிசுத்த ஆவியானவர் செய்ய சொன்னதைச் செய்தேன்: *நான் கல்வாரியின் கிரியையை சிந்தித்துப் பார்த்தேன்*.

இயேசு சிலுவையில் என் பாவங்களை மட்டும் அல்ல, என் வியாதிகளையும் சுமந்தார் என்று நான் போதுமான நம்பிக்கை அடைந்தபோது, அவருடைய தழும்புகளால் சுகமானேன். (ஏசாயா 53:5ஐ பாருங்கள்.) இந்த சத்தியத்தை நான் அப்பியாசித்தவுடன் மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்டேன். மூன்று மாதங்களுக்குள் பூரண சுகம் பெற்றேன். சிலுவையில் இயேசு எனக்காக செய்ததை நான் அறிந்துகொள்ளும் வரை மருத்துவமனையை விட்டு வெளியேறுவது தேவனுக்கு விருப்பம் இல்லாதிருந்தது.

அதேபோல், உங்கள் வாழ்க்கையில் என்ன தேவை இருந்தாலும் கவலையில்லை. உங்கள் பிரச்சனை என்ன என்பது பொருட்டல்ல. நீங்கள் எதற்காக ஜெபிக்கிறீர்கள் என்பது பொருட்டல்ல. இது தனிப்பட்டது, சொந்தமானதா அல்லது முழு சபையையும், முழு

தேசத்தையும், முழு உலகத்தையும் உட்படுத்துகிறதா என்பதும் பொருட்டல்ல. உங்களையும், உங்கள் தேவையையும் சிலுவை என்னும் ஒரே போதுமான, பூரணமான அடிப்படையில்தான் தேவன் சந்திப்பார். சிலுவையின் மூலம் தேவனிடம் வருவது ஒருபோதும் வீணாகாது, ஏனென்றால் எல்லா தேவை, எல்லா சூழ்நிலை மற்றும் எல்லா பிரச்சனையும் சிலுவையினால் சந்திக்கப்பட்டுள்ளது.

ஒரு பூரண கிரியை

இப்புத்தகத்தை வாசித்து, வசனம் உங்கள் இருதயத்தோடு பேச நீங்கள் அனுமதித்து, இயேசுவின் சிலுவையை நான் போதுமான அளவு புரிந்துகொண்டதில்லை என்று நீங்கள் உணர்ந்திருப்பீர்களானால், தேவன் நமக்கு உதவி செய்யும்படி கேட்டுக்கொள்ளும் பின் வரும் ஜெபத்தில் என்னோடு இணைந்துகொள்ள உங்களை அழைக்கிறேன். பிதாவாகிய தேவன் அற்புதமான இரக்கமுள்ளவர். சிலுவையின் மூலம் ஆசீர்வாதத்தின் ஸ்தலத்திற்குள் நாம் அடி எடுத்து வைக்க வேண்டும் என்று அவர் நமக்காக காத்திருக்கிறார்.

பிதாவே, சிலுவைக்காக நன்றி. நீர் உம்முடைய அளவற்ற ஞானத்தினாலும் இரக்கத்தினாலும் என்னுடைய பாவத்திற்கான பரிகாரத்தை செய்திருக்கிறீர். இயேசுவை எனக்காக அனுப்பி, என்னை உம்மோடு மீண்டும் உறவில் சேர்த்துக்கொண்டதற்காக நன்றி.

சிலுவையை என் கவனத்தின் மையத்தில் நான் வைக்க தவறி மற்ற கவலைகள் இந்த மிக முக்கியமான சத்தியத்தை வெளியேற்ற இடம்கொடுத்த நேரங்களுக்காக என்னை மன்னியும். இந்த ஜெபத்தினால் என் தேவைகள் யாவற்றையும் சந்திக்கும் வழிமுறையாக நான் சிலுவையை தேர்ந்தெடுக்கிறேன். இதைக் கோட்பாடாக புரிந்துகொள்ளும் நிலையில் இருந்து, வாழ்வில் அதை அனுபவிக்கும் நிலைக்கு என்னைக்கொண்டுசெல்லும். சிலுவையை என் வாழ்வின் எல்லாப் பகுதிக்கும் நான் பயன்படுத்தட்டும். உமக்கு நான்

விட்டுக்கொடுக்கும்போது சிலுவையின் முழுமையை அறிந்துகொள்ளச் செய்யும்.

ஆவியில் ஆரம்பம் செய்து மாம்சத்தில் முடிவு பெறுதல் என்ற “கலாத்திய பிரச்சனைக்கு” என் கண்களை திறந்தமைக்காக நன்றி. சிலுவையில் இயேசு செய்தவற்றின் மூலம் மட்டும் சந்திக்கப்பட கூடியவைகளுக்காக நான் மனித ஞானத்தையும் முயற்சியையும் தேடினதற்காக என்னை மன்னியும். என்னையே நான் சார்ந்துகொள்ளும் இந்தப் போக்கு, என் வாழ்வில் ஒரு பிரச்சனை என்பதை உணர்ந்து நான் மனந்திரும்புகிறேன். இந்த ஜென்ம சுபாவத்திற்குரிய வாழ்க்கை முறையை நான் நிராகரித்து, உம்முடைய பரிசுத்த ஆவியினால் நடத்தப்பட தேர்ந்தெடுக்கப்படுகிறேன். நான் விடுதலை மற்றும் ஆசீர்வாதத்திற்குள் மீண்டும் பிரவேசிக்க எனக்கு நீர் ஏற்படுத்தின வழிக்காக நன்றி.

பிதாவே, நான் சாபத்திலிருந்து விடுப்பட நீர் இயேசுவை சிலுவையில் சாபமாக்கிவிட்டீர் - நான் பரிசுத்த ஆவியின் நிறைவான ஆசீர்வாதத்திற்குள் மீண்டும் வர இதைச் செய்தீர். சிலுவையின் மூலம் வழங்கப்பட்ட மகிமையான விடுதலைகளின் புரிந்துகொள்ளுதல் மற்றும் பயன்பாட்டில் வளர எனக்கு இது உதவி செய்யும்:

தற்காலத்து பொல்லாத யுகத்திலிருந்து விடுதலை
நீதியைப் பெறும் வழியாக நியாயப்பிரமாணத்தில் இருந்து விடுதலை
சுயத்திலிருந்து விடுதலை
மாம்சத்திலிருந்து விடுதலை
உலகத்திலிருந்து விடுதலை

இந்த இடையூறுகள் ஒவ்வொன்றிலுமிருந்து என்னை விடுவியும் என்று இயேசுவின் நாமத்தில் கேட்கிறேன். பரிசுத்த ஆவியினால் என்னைப் புதிதாய் மீண்டும் நிரப்பும். சிலுவையின் கிரியையை சிந்திக்க நான் என்னை அர்ப்பணிக்கிறேன்: அந்தப் பூரணமான கிரியை - எல்லா விதத்திலும், அம்சத்திலும்.

என் ஜெபத்தை அந்த வார்த்தையின் அறிக்கையோடு நான் முடிக்கிறேன்: *"நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தே அல்லாமல் வேறொன்றையும் குறித்து மேன்மை பாராட்டாதிருப்பேனாக."* ஆமென்.

எழுத்தாளரைப் பற்றி

டெரிக் பிரின்ஸ் (1915 -2003) இந்தியாவில் பிரிட்டிஷ் பெற்றோருக்கு பிறந்தவர். கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தின் ஈட்டன் மற்றும் கிங்ஸ் கல்லூரிகளில் கிரேக்கம் மற்றும் லத்தீன் மொழிகளின் அறிஞராக பயிற்சி பெற்றார். பட்டம் பெற்றதும், அவர் கிங்ஸ் கல்லூரியில் பண்டைய மற்றும் நவீன தத்துவத்தில் ஃபெலோஷிப் (பேராசிரியர் பதவிக்கு சம நிலை) பெற்றார். கேம்பிரிட்ஜ் மற்றும் எருசலேமில் உள்ள எபிரெய பல்கலைக்கழகத்தில் பிரின்ஸ் எபிரெய, அரமிய மொழிகளையும் தற்காலத்து மொழிகளையும் கற்றுக்கொண்டார். ஒரு மாணவனாக அவர் தத்துவவாதி மற்றும் சுயமாய் அறிவிக்கப்பட்ட அஞ்ஞானியாகவும் இருந்தார்.

இரண்டாம் உலக மகா யுத்தத்தின்போது பிரிட்டிஷ் மருத்துவப் பிரிவில் பணியாற்றிய பிரின்ஸ் வேதத்தை ஒரு தத்துவ படைப்பாக வாசிக்க ஆராம்பித்தார். இயேசு கிறிஸ்துவோடு ஏற்பட்ட ஒரு வல்லமையான நேர்முக அனுபவத்தால் அவர் இரட்சிக்கப்பட்டு சில நாட்களுக்குள்ளாகவே பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தையும் பெற்றார். இந்த அனுபவத்திலிருந்து இரண்டு முடிவுகளை அவர் செய்தார்: ஒன்று, இயேசு கிறிஸ்து உயிரோடு இருக்கிறார்; இரண்டாவது, வேதாகமம் உண்மையான, அர்த்தமுள்ள, தற்காலத்திற்கும் ஏற்ற புத்தகம். இந்த முடிவுகள் அவருடைய வாழ்வின் முழு பாதையையும் மாற்றி அமைத்தது. அவர் வேதத்தை ஆராய்ந்து அதைத் தேவனுடைய வார்த்தையாக போதிக்க ஆரம்பித்தார்.

1945ல் எருசலேமில் ராணுவத்திலிருந்து விடுவிக்கப்பட்ட அவர், அங்கு சிறுவர் இல்லம் நடத்திக்கொண்டிருந்த லிடியா கிரிஸ்டென்ஸன் என்பவரைத் திருமணம் செய்துகொண்டார்.

திருமணத்தினால், லிடியா தத்தெடுத்திருந்த எட்டு பெண் பிள்ளைகளுக்கு அவர் தகப்பனானார் - ஆறு யூத, ஒரு பாலஸ்தீன அரபியர் மற்றும் ஒரு ஆங்கிலேய குழந்தை. 1948ல் இஸ்ரவேல் தேசத்தினுடைய மறுப்பிறப்பை அவர்கள் குடும்பமாக கண்டனர். 1950ன் கடைசியில், கென்யா நாட்டில், ஆசிரியர் பயிற்சி கல்லூரியின் முதல்வராக பணியாற்றிய போது, இன்னொரு மகளை அவர்கள் தத்தெடுத்தனர்.

1963ல் பிரின்ஸ் குடும்பம் அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு குடிபெயர்ந்து, சீயாட்டில் நகரில் ஒரு சபைக்குப் போதகர்களாக பணியாற்றினர். 1973ல் அமெரிக்காவுக்காக பரிந்துமன்றாடுபவர்கள் என்ற குழுவின் நிறுவனர்களில் ஒருவராக பிரின்ஸ் இருந்தார். *ஜெபம் மற்றும் உபவாசத்தின் மூலம் சரித்திரத்தை உருவாக்குதல்* என்ற அவருடைய புத்தகம் உலகம் முழுவதும் கிறிஸ்தவர்களை தட்டி எழுப்பி தங்கள் அரசாங்கங்களுக்காக ஜெபிக்க வேண்டிய பொறுப்பை உணர்த்தியுள்ளது. மறைமுகமாக நடந்த இப்புத்தகத்தின் மொழிபெயர்ப்புகள்தான் சோவியட் யூனியன், கிழக்கு ஜெர்மனி மற்றும் செக்கோஸ்லோவாக்கியா தேசங்களில் கம்யூனிஸ்ட் ஆட்சிகள் கவிழ்ந்து போவதற்கு காரணமாக இருந்தன என அநேகர் கருதுகின்றனர்.

லிடியா பிரின்ஸ் 1975ல் மரித்தார். 1978ல் பிரின்ஸ் ரூத் பேக்கர் என்ற பெண்மணியைத் திருமணம் செய்துகொண்டார். தன் முதல் மனைவியைப் போலவே, இரண்டாம் மனைவியையும் எருசலேமில் அவர்கள் கர்த்தருக்கு ஊழியம் செய்துகொண்டிருக்கையில் சந்தித்தார். 1998 டிசம்பர் மாதம் எருசலேமில் ரூத் அவர்கள் மரித்தார்கள், அவர்கள் 1981லிருந்து அங்கு வசித்து வந்தனர்.

98 வயதில் 2003ல் மரிக்கும் சில ஆண்டுகளுக்கு முன் வரை தேவன் அழைத்த ஊழியத்தில் பிரின்ஸ் நிலைத்திருந்து, உலகத்தை சுற்றி வந்து தேவனுடைய சத்தியத்தை பகிர்ந்து வந்தார் - அவர் வியதிப்பட்டவர்களுக்காக ஜெபித்து, தீர்க்கதரிசன பார்வையுடன் உலகத்தின் நிகழ்வுகளை வேதத்திலிருந்து சுட்டிக் காண்பித்தார். சர்வ தேச அளவில் வேத பண்டிதராகவும் ஆவிக்குரிய தகப்பனாகவும் அங்கிகரிக்கப்பட்ட டெரிக் பிரின்ஸ் ஆறு கண்டங்களையும் அறுபது ஆண்டுகளையும் கடந்த ஒரு போதக ஊழியத்தை நிறுவினார். அவர் எண்பது புத்தகங்களின் எழுத்தாளரும், 600 ஒலிப்பதிவு செய்யப்பட்ட போதனைகள் மற்றும் 100க்கும் மேற்பட்ட ஒளிப்பதிவு செய்யப்பட்ட செய்திகளின் காரணர். இவைகளில் பல நூற்றிற்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிப்பெயர்க்கப்பட்டுள்ளன. பாரம்பரிய சாபங்கள், இஸ்ரவேலின் வேதாகம முக்கியத்துவம் மற்றும் பிசாசுகளைப் பற்றிய இரகசியங்களை உடைத்து காண்பிக்கும் போதனைகளின் முன்னோடியாக விளங்கினார்.

1979ல் ஆரம்பிக்கப்பட்ட பிரின்ஸின் ரேடியோ நிகழ்ச்சி 12க்கும் மேற்ப்பட்ட மொழிகளில் மொழிப்பெயர்க்கப்பட்டு அநேகருடைய வாழ்வை மாற்றுகின்றது. வேதத்தையும் அதின் போதனைகளையும் தெளிவான மற்றும் எளிய முறையில் விவரிக்கும் அவருடைய முக்கிய வரமானது அநேக லட்சக்கணக்கானோரின் வாழ்வில் விசுவாசத்தின் அடித்தளம் அமைய உதவியுள்ளது. சபை பாகுபாடற்ற, பிரிவுசாரா அவருடைய அணுகுமுறை எல்லா இன மற்றும் மத பின்னணியிலிருந்து வந்தவர்களுக்கும் அவருடைய போதனையைச் சமமாக ஏற்றதாகவும், பிரயோஜனமானதாகவும் நிறுத்தியுள்ளது. அவருடைய செய்திகள் பூகோளத்தின் பாதியையும் எட்டியுள்ளதென்று மதிப்பிடப்படுகிறது.

“அறுபது ஆண்டுகளுக்கு முன் தேவன் என் மூலம் ஆரம்பித்த இந்தப் பணி, இயேசு வரும் வரை தொடர வேண்டும் என்பது என்னுடைய வாஞ்சை - அது ஆண்டவரின் வாஞ்சையும் கூட என நம்புகிறேன்” என்று 2002ல் அவர் கூறினார்.

"இயேசு திரும்பி வரும் வரை" என்ற ஆணையின் படி,சர்வதேச டெரிக் பிரின்ஸ் ஊழியங்கள் 140க்கும் மேற்பட்ட தேசங்களிலுள்ள விசுவாசிகளை டெரிக்கின் போதனைகளைக்கொண்டு தொடர்ந்து சந்தித்து வருகிறது. உலகெங்குமுள்ள டெரிக் பிரின்ஸ் ஊழியங்களின் 45 அலுவலகங்கள் மூலம் இந்தப் பணி தொடருகிறது. ஆஸ்திரேலியா, கனடா, சீனா, ஃபிரான்ஸ், ஜெர்மனி, நெதர்லேண்ட்ஸ், நியூசீலாந்து, நார்வே, ரஷியா, தென் ஆப்பிரிக்கா, ஸ்விட்ஸர்லாந்து, இங்கிலாந்து மற்றும் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் பிரதான அலுவலகங்கள் உள்ளன. இவைகளைக் குறித்தும், உலகத்தின் இதர பகுதிகளில் உள்ள தற்காலத்து தகவல்களை அறிய www.derekprince.org என்ற இணையதளத்தை சென்று பாருங்கள்.

சிலுவையைப் பற்றிய அறிக்கைகள்

இயேசுவின் இரத்தத்தின் வல்லமையை அறிக்கை செய்தல்

இயேசுவின் இரத்தத்தினால், நான் சாத்தானுடைய கையிலிருந்து மீட்கப்பட்டுள்ளேன்.[1]

இயேசுவின் இரத்தத்தினால், என பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்பட்டன.[2]

இயேசுவின் இரத்தத்தினால் நான் தொடர்ந்து பாவத்திலிருந்து சுத்திகரிக்கப்பட்டுகொண்டே இருக்கிறேன்.[3]

இயேசுவின் இரத்தத்தினால், நான் பாவமே செய்யாததுபோல், நீதிமானாக்கப்பட்டிருக்கிறேன்.[4]

இயேசுவின் இரத்தத்தால் நான் சுத்திகரிக்கப்பட்டு, பரிசுத்தமாக்கப்பட்டு, தேவனுக்கென்று பிரித்துவைக்கப் பட்டுள்ளேன்.[5]

இயேசுவின் இரத்தத்தினால் நான் தேவனுடைய பிரசன்னத்திற்குள் வர தைரியம் கொண்டுள்ளேன்.[6]

இயேசுவின் இரத்தத்தினால் நான் சாத்தானின் கிரியை மேற்கொள்கிறேன்.[7]

இயேசுவின் இரத்தம், பரலோகத்தில் எனக்காக தொடர்ந்து தேவனிடத்தில் பரிந்து பேசிக்கொண்டிருக்கிறது.[8]

[1]எபேசியர் 1:7; 1 பேதுரு 1:19.
[2]எபேசியர் 1:7.
[3]1 யோவான் 1:7.
[4]ரோமர் 5:9.
[5]எபிரெயர் 13:12.
[6]எபிரெயர்10:19
[7]வெளிப்படுத்தல் 12:11
[8]எபிரெயர் 12:24

வெளிப்படுத்தலின் சத்தியங்களை அடிப்படையாகக்கொண்டு அறிக்கை செய்தல்

என் சரீரம் பரிசுத்த ஆவியானவரின் ஆலயம்; மீட்கப்பட்டு, சுத்திகரிக்கப்பட்டு, இயேசுவின் இரத்தத்தினால் பரிசுத்தமாக்கப்பட்டது.

என் அவையவங்கள் அனைத்தும், தேவனுடைய சேவைக்கும், அவருடைய மகிமைக்கும் அற்பணிக்கப்பட்ட நீதியின் ஆயுதங்கள்.

பிசாசுக்கு என்னில் இடம் இல்லை, என் மேல் அதிகாரம் இல்லை, எனக்கு விரோதமான தீர்க்கப்படாத கூற்றுக்கள் ஒன்றுமில்லை.

மரணமே நேரிடுகிறதாய் இருந்தாலும், என் ஜீவனையும் பாராமல், ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும், என்னுடைய சாட்சியின் வசனத்தினாலும், சாத்தானை மேற்கொள்கிறேன்.

என் சரீரம் தேவனுக்குரியது, தேவனும் என் சரீரத்திற்குரியவர்.